வரு.74 இல. 45 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் වාරමන්ජරී
28 பக்கங்கள் 100/-
2022 நவம்பர் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை November 06 Sunday, 2022
















ஐ.நா.காலநிலை மாற்ற மாநாடு;

## ஜனாதிபதி ரணில் இன்று எகிப்து நோக்கி பயணம்

லோரன்ஸ் செல்வநாயகம்



எகிப்தில் ஷாம் எல் சீக் நகரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை காலநிலை மாற்றம் தொடர்பான COP 27 (Conference of the Parties) உலக மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று அதிகாலை எகிப்து பயணமானார்.

இந்த மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 07, 08 ஆம் திகதிகளில் உரையாற்றவுள்ளார்.

06

எனது காலத்தில் எவரும் கை வைக்க முடியாது;

## கடலட்டை பண்ணைகளை சட்டரீதியாக மாற்றுங்கள்

குறுகிய நோக்கில் சிலர் என அமைச்சர் டக்ளஸ் எச்சரிக்கை



மக்களுக்கு வளமான வாழ்வாதாரத்துடன் எதிர் காலத்தை ஏற்படுத்தும் நோக்கோடு முன்னெடுக்கப்படும் கடலட்டைப் பண்ணைசெயற்பாடுகளை கடற்றொழில் அமைச்சராக நான் இருக்கும் வரையில், குறுகிய நோக்கங்களுக்காக எவராலும் தடுத்து நிறுத்த முடியாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாச்சிக்குடா மற்றும் இரணைதீவு பகுதியில் (04) நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தன்னுடைய காலப் பகுதிக்குள்ளேயே,

06

## கிராம உத்தியோகத்தர்களுக்கு விரைவில் பொலிஸ் அதிகாரம்

அரசாங்கம் விசேட கவனம் செலுத்த தீர்மானம்

பொலிஸ் அதிகாரத்தை கிராம உத்தியோக ஸ்தர்களுக்குவழங்குவது தொடர்பில் அரசாங்கம் விசேட கவனத்தை செலுத்தியுள்ளது. இதுவரை பொலிஸ் நிலையத்தின் சிறிய முறைப்பாடுகள் பிரிவின் பொறுப்பதிகாரி தீர்த்து வைத்த சிறிய முறைப்பாடுகளை தீர்த்து வைப்பது தொடர்பிலே தீர்மானிக்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக கிராம உத்தியோகஸ்தர்கள் சமாதான அதிகாரிகளாக வலுவூட்டப்படவுள்ளனர். இதன் மூலம் கிராம உத்தியோகத்தர்களுக்கு இருக்கும் பொலிஸ் அதிகாரத்தை நடைமுறைப்படுத்த அவர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர்.

நாடு முழுவதுமுள்ள 14,000 கிராம உத்தியோகத்தர்கள் இந்த பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதால், 14,000 பேரை பொலிஸ் சேவைக்கு இணைத்துக்கொண்டமைக்கு அது ஈடாகுமென அரசாங்கம் நம்புகிறது. இதன் போது பொலிஸ்

06

புட்டபர்த்தி சாயி இல்ல தலைவருக்கு

## தமிழ்,ஆங்கில பஜனை நூல்கள் கையளிப்பு



கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தால் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்பட்ட சாயி பஜனை

06

பொதுப்போக்குவரத்தை பயன்படுத்தும் பயணிகளுக்கு நன்மை;

## ரயில்வே திணைக்களம் அதிகார சபையாகிறது



சாதகமான பேச்சுவார்த்தைகள் முன்னெடுப்பு

கே.அசோக்குமார்

எக்காரணம் கொண்டும் ரயில்வே திணைக்களம் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

பொதுப் போக்குவரத்தை பயன்படுத்தும் பயணிகளுக்கு நன்மை பயக்கும் விதத்தில் ரயில்வே திணைக்களத்தை ஒரு அதிகார சபையாக மாற்றுவதற்கான சாதகமாக பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.

ரயில்வே திணைக்கள ஊழியர்களதும், முகாமைத்துவம் மற்றும் அனைத்து தொழிற்சங்கங்களினதும் கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டு ஊழியர்களின் ஓய்வூதியம் உட்பட நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இந்த அதிகாரசபை திட்டத்தை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தை மேலும் நன்மை பயக்கும்

06

வேகக்கட்டுப்பாட்டை இழந்த அதிசொகுசு பஸ்;

## வவுனியா - நொச்சிமோட்டையில் நள்ளிரவு கோர விபத்து






வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி வந்த அதி சொகுசு பஸ் வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட

06

யாழ்.பல்கலை சித்த மருத்துவ பீடத்தைச் சேர்ந்த நாவலப்பிட்டி மாணவி ஒருவரும் உயிரிழப்பு



கொரோனா போன்று தொற்றும் நோயல்ல;

## மிக நெருங்கிய தொடர்புகளால் மட்டுமே குரங்கம்மை பரவ வாய்ப்பு

வீணான அச்சம் தேவையில்லை என்கிறார் Dr.அசேல



நெருங்கிய தொடர்பு மூலம் குரங்கம்மை நோய் பரவும் என்பதால் அது குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. எனவே, இலங்கையிலிருந்து இவ்வாறான தொற்றுக்குள்ளான ஒருவர் பதிவாகியிருப்பதால் அது குறித்து அச்சம் கொள்ளத்

06

ஆசிரியர்களின் ஆடை தொடர்பான கருத்து

## கல்வி அமைச்சரின் முடிவு பெரும் வரவேற்புக்குரியது

சர்வதேச இந்து மத பீடம் அறிக்கை





ஆசிரியர்கள் , மாணவர்களுக்கான இந்த பாரம்பரிய ஆடைகளில் கடைசி வரை நான் மாற்றங்களை கொண்டு வரப்போவதில்லையென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதிபடக் கூறியிருப்பது

06

## சமஷ்டி முறையில் தீர்வு முயற்சி; தமிழ் தலைமைகள் ஓரணியில்

அமைச்சர் நிமாலின் கருத்துக்கு சுமந்திரன் MP பதில்





வடக்கு, கிழக்குத் தமிழரின் தலைவர்கள் தங்களுக்குள் கட்சிகள், அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே ஒரே வழி என் பதில் மிக உறுதியாகவும், ஒருமித்த நிலைப்பாட்டிலும் உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் கருத்துக்கு

06

## எங்கள் கருத்து...

### வீண்பழி சுமத்தும் வியாபார தந்திரம்!

நாட்டில் சமையல் எரிவாயு மற்றும் பெற்றோல் ஆகியவற்றுக்கு தற்போது மீண்டும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. சமையல் எரிவாயு நிலையங்கள் பலவற்றில் எரிவாயுவை தற்போது பெற்றுக் கொள்ள முடியாதிருக்கின்றது. 'எரிவாயுக் கப்பல் இன்றும் வந்துசேரவில்லை' என்று பதிலளிக்கின்றார்கள்.

'கையிருப்பில் இருந்த எரிவாயு விற்றுத் தீர்ந்து விட்டது' என்று மற்றொரு எரிவாயு நிலையத்தில் பதிலளிக்கப்படுகின்றது. 'எரிவாயுவின் விலை குறைக்கப்படப் போகின்றது. அதனால் நாங்கள் புதிதாக எரிவாயு சிலிண்டர்களைக் கொள்வனவு செய்யவில்லை' என்று மேலும் சில விற்பனை நிலையங்களில் பதிலளிக்கப்படுகின்றது.

இவ்வாறு வெவ்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. மொத்தத்தில் கூறுவதானால், எரிவாயுவைப் பெற்றுக் கொள்வதென்பது இயலாத காரியமாகியிருக்கின்றது. கொழும்பு நகரில் மாத்திரமன்றி, நாட்டின் ஏனைய இடங்களிலும் எரிவாயுவுக்குப் பற்றாக்குறையே நிலவுகின்றது.

எரிவாயுவின் நிலைமை இவ்வாறிருக்க, பெற்றோலுக்கும் இதுபோன்ற பற்றாக்குறையொன்றே சமீப நாட்களாக நிலவுவதைக் காண முடிகின்றது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களின் வரிசை நீண்ட நாட்களுக்குப் பின்னர் மீண்டும் தென்படுகின்றது. பல இடங்களில் எரிபொருள் நிலையங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. முன்னைய நெருக்கடி நிலைமை மீண்டும் உருவாகி விடுமோ என்ற அச்சம் எமக்கு ஏற்படுகின்றது.

06

CWC ஒரு கட்சி; TPA என்பது கூட்டணி

## இரு கட்சிகளும் சங்கமமா? எவ்வித உண்மையும் இல்லை

சில ஊடகங்களுக்கு புரியவில்லை மனோ ஆதங்கம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஒரு கட்சி, நாம் கூட்டணி. தமிழ் முற்போக்குக் கூட்டணி எந்தக் கட்சியுடனும் சங்கமமாகாது.அது வேறு இது வேறு. இரண்டையும் இணைக்க கூடாதென பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஒரு சில ஊடகங்கள் குறிப்பிடுவதை போல் இலங்கை தொழிலாளர்

06

03 மாத கைக்குழந்தை உட்பட

## தமிழகத்தில் மேலும் 10 இலங்கையர் தஞ்சம்

திருச்சி ஷாஹுல் ஹமீட்,மன்னார் குறூப் நிருபர்



இலங்கையிலிருந்து மூன்று மாத கைக்குழந்தையுடன் மூன்று குடும்பத்தை சேர்ந்த 10 பேர் அகதிகளாக நேற்று

06

எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில்;

## தேசப்பிரியவுக்கு புதிய பதவியை வழங்கிய அரசு



தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவராக மஹிந்த தேசப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தலைமையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லைகளை நிர்ணயிப்பது

06

பிரான்ஸ் நிறுவனம் ஒன்றுக்காக

## இலங்கையில் தயாரித்த கப்பல் வெள்ளோட்டம்



இலங்கையின் கப்பல் நிர்மாணத்துறையின் மற்றுமொரு அத்தியாயத்தை குறிக்கும் வகையில், கொழும்பு கப்பல்துறை நிறுவனம் Colombo Dockyard

06

## எரிபொருள் பவுஸர் கவிழ்ந்து சாரதி பலி

புஸ்ஸலாவை பகுதியில் அனர்த்தம்




ஹற்றன் சுழற்சி நிருபர்

புஸ்ஸலாவை, எல்பொட தோட்டப் பகுதியில் நேற்று அதிகாலை எரிபொருள் பவுஸர் (சிபேட்கோ)

06

## அதிக விலைக்கு ஐந்து முட்டைகள் விற்பனை

வர்த்தகருக்கு ஒரு இலட்சம் அபராதம்



ஐந்து முட்டைகளை விற்பனை செய்த வர்த்தகர் ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இச் சம்பவம் தென்னிலங்கையில் நடந்துள்ளது.ஐந்து முட்டைகளை அதிக விலைக்கு விற்ற வீரகெட்டிய வர்த்தர் ஒருவருக்கே இவ்வாறு ஒரு இலட்சம் ரூபாய் தண்டப்பணம்

06

## TPA செயலாளராக Prof.விஜயசந்திரன்?

ம.ம.மு கோரிக்கை முன்வைத்துள்ளதாக தகவல்



தமிழ் முற்போக்கு கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவியை, பேராசிரியர் விஜய சந்திரனுக்கு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச் செயலாளராக பதவி வகித்த

06

# பூவரசி, Arc நிறுவனங்கள் இணைந்து நடத்தும் தமிழ் சங்கின் கலை இலக்கிய விருது விழா

## அதிதிகள்



பிரதம விருந்தினர்
யாழ் மாநகரசபை முதல்வர்
**மணிவண்ணன்**



தலைமை IDM கம்பஸ்
தலைவர்
**டாக்டர் வி.ஜனகன்**



கௌரவ விருந்தினர்
புரவலர்
**ஹாசிம் உமர்**



கௌரவ விருந்தினர் யாழ்
அரச அதிபர்
**கணேசபிள்ளை மகேசன்**

பூவரசி, Arc நிறுவனங்கள் இணைந்து நடாத்தும் தமிழ் சங்கின் கலை இலக்கிய விருது விழா எதிர்வரும் 12.11.2022 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள கிறீன் க்றாஸ் மண்டபத்தில் இடம் பெற உள்ளது. தமிழ் சங்கின் ஆண்டு விழாவினை முன்னிட்டு உள்நாட்டு கலைஞர்களுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்பட்டு, வெற்றிபெற்றவர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் கலை இலக்கிய விருதுகளுக்கும் திறமையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். குறிப்பாக வாழ்நாள் சாதனையாளர்களாக ஈழத்து இசைவாணன் கண்ணன் மாஸ்டரும் ஆய்வறிஞரும், எழுத்தாளருமான அருணா செல்லத்துரை, எழுத்தாளர் மலர் அன்னை, பூபால சிங்கம் புத்தகசாலை உரிமையாளர் ஸ்ரீதரசிங் ஆகியயோர் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

நிகழ்வுக்கு IDM கம்பஸ் தலைவர் டாக்டர் வி.ஜனகன் தலைமை தாங்குகிறார்.

இவர்களுக்கு விழாவில் பொற்கிழியும் வழங்கப்பட உள்ளது. பிரதம விருந்தினர்களாக யாழ் மாநகரசபை முதல்வர் மணிவண்ணன், லயன் சௌமா ராஜரட்ணம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ் அரச அதிபர் கணேசபிள்ளை மகேசன், புரவலர் காசிம் உமர் மற்றும் Arc நிறுவன அதிபர் விஜிதரன் பொன்னுத்துரை ஆகியோரும் சிறப்பு விருந்தினர்கள் வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீகஜன், ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயளாளர் உமா சந்திரா பிரகாஷ், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், ஊடக ஆளுமை மதன் வாசன், திரைப்பட இயக்குனர் ஈழவாணி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ்விழாவில் நடனம், நடிப்பு, இசை போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதோடு, ஈழவாணி இயக்கிய மூக்குத்திபூ திரைப்படத்தின் முன்னோட்டமும், முதல்பார்வை சுவரொட்டியும் வெளியிடப்பட உள்ளன.





## வாழ்நாள் சாதனையாளர்கள்













































# தெவட்டகஹா பள்ளிவாசலில் வருடாந்த தமாம் வைபவம்

குவலயம் போற்றும் குதுபுல் அக்தாப் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அன்னவர்களின் ஞாபகார்த்த தமாம் மஜ்லிஸ் இன்று (06. 11. 2022) காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். இந்நிகழ்வில் ஆன்மீகத் தலைவர்கள், உலமாக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் கலந்து சிறப்பிப்பதோடு தாய் நாட்டின் சுபீட்சத்திற்காக விஷேட பிரார்த்தனையும் இடம்பெறும். புனித மௌலித் பாராயணத்தைத் தொடர்ந்து மாதிஹுர் ரஸூல் குழுவினரால் கஸீதா நிகழ்ச்சியும் மிக விமரிசையாக நடைபெறும்.இவ்வைபவத்தில் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு தெவட்டகஹா பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ரியாஸ் ஸாலி தெரிவித்தார்.







நிர்மலாஞ்சலி நடனக்கல்லூரி அதிபர் நாட்டிய பூர்ணா கலைச்செல்வி நிர்மலா ஜோனின் மாணவி ஜால்யா தினேலியின் அரங்கேற்றம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மருதானை எல்பிஸ்டனில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட நாட்டிய கலாசிகாமணி கலாநிதி சுபாஷனி பத்மநாதன் உரையாற்றுவதையும் மாணவி ஆசிரியரை கௌரவிப்பதையும் கலந்துகொண்ட அணிசேர் கலைஞர்கள், பார்வையாளர்களையும் படங்களில் காணலாம்.



யாழ். காங்கேசந்துறை தையிட்டி பிரதேசத்திலுள்ள தமிழ் கலவன் பாடசாலையில் மணவர்களுக்கான சத்துனவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. கனடாவைச் சேர்ந்த மல்ரி மீடியா ஊடக நிறுவனத்தின் ஊழியர்களின் பங்களிப்பில் இலங்கைக்கான நிர்வாக பொறுப்பதிகாரி சாமஸ்ரீ, தேசமானிய நா.தனேந்திரனினால் இப் பொருட்கள் வழங்கப்பட்டன. (படம்: வேலணை குறூப் நிருபர்)




# மாணவர்களிடையே அதிகரித்துள்ள எச்.ஐ.வி தொற்று!



இலங்கையில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களாக ஐம்பது மாணவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அண்மையில் வெளியான செய்தியொன்று பல மட்டங்களதும் அவதானத்தைப் பெற்றது. இது தொடர்பில் எச்.ஐ.வி குறித்த இந்நாட்டின் அதிகாரபூர்வ நிறுவனமாக விளங்கும் பாலுறவு தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய நிலையத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது, 'இவ்வருடத்தின் முதலிரு காலாண்டுகளிலும் 15 முதல் 24 வயதுக்கு இடைப்பட்ட 50 பேர் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். நாம் மாணவர்கள் என்ற பிரிவில் உள்ளடக்குவது பல்கலைக்கழக மாணவர்கள், உயர்கல்வி நிலையங்களில் கல்வி கற்பவர்கள், தொழில் பயிற்சி நிலையங்களில் கற்பவர்கள் உள்ளிட்டோராவர். அவ்வாறான 14 பேர் தான் இக்காலப்பகுதிக்குள் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டிருக்கின்றனர்' என்று தெரிவிக்கப்பட்டது.

15 முதல் 30 வயதுக்கு இடைப்பவர்களில் இத்தொற்று அதிகரித்திருக்கிறது. இவ்வருடத்தின் முதலிரு காலாண்டுகளிலும் இவ்வயது மட்டத்தைச் சேர்ந்த 90 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர் என்று அந்நிறுவனத்தின் மருத்துவ அதிகாரியொருவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

இவ்வாறான அதிகரிப்பு முன்பு அவதானிக்கப்படவில்லை. இது இத்தொற்று பரவுதலில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பின் வெளிப்பாடா? அல்லது தொற்றுக்கு உள்ளாகியுள்ளவர்கள் அடையாளம் காணப்படுவதில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பா? என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் எனவும் தெரிவித்திருக்கின்றார் அந்த மருத்துவ அதிகாரி.

என்றாலும் எச்.ஐ.வி தொற்று தவிர்ப்பு தொடர்பிலான முன்னெச்சரிக்கையும் விழிப்புணர்வும் இன்றியமையாததும் தொடர்ந்தும் பேணப்பட வேண்டியதுமான விடயமாக விளங்குகின்றது.

1980 இல் எச்.ஐ.வி வைரஸ் தொற்று முதலில் அடையாளம் காணப்பட்டதும் உலகம் பெரிதும் பீதியடைந்தது. இத்தொற்றுக்கு உள்ளானவர்கள் சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். பல துன்புறுத்தல்களுக்கும் முகம் கொடுத்தார்கள். ஆனால் இவ்வைரஸ் குறிக்கப்பட்ட சில வழிகளாலேயே ஒருவரில் இருந்து மற்றொருக்கு தொற்றும். அவற்றில் முறைகேடான பாலியல் தொடர்பு, ஓரின சேர்க்கை, ஊசி மூலம் போதைப்பொருள் ஏற்றல் என்பனவே முக்கிய மார்க்கங்கள். அத்தோடு எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவரின் குருதியை சுகதேகிக்கு வழங்கும் போதும் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணித் தாயிலிருந்து குழந்தைக்கும் இவ்வைரஸ் கடத்தப்பட முடியும். மற்றப்படி எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவருடன் கைலாகு கொடுப்பதாலோ அவருடன் ஒன்றாக வாழ்வதாலோ அவர் பாவித்த உணவுப் பாத்திரங்களில் சாப்பிடுவதாலோ பரவாது. காலப்போக்கில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்கள் எதிர்கொண்ட துன்புறுத்தங்களும் சமூக விலக்கங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின.

> உலக சுகாதார ஸ்தாபனம், இலங்கை தேசிய பாலுறவு தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுக்கான தேசிய நிலையம் என்பவற்றின் இலங்கையிலும் உலகலாவிய ரீதியிலும் எச்.ஐ.வி/எயிட்ஸின் தற்போதைய நிலவரம் குறித்த தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது

ஆன போதிலும் ஆரம்பம் முதல் இற்றைவரையும் உலகில் 40.1 மில்லியன் மக்களின் உயிர்களை காவு கொண்டும் கூட உலகளாவிய ரீதியில் பாரிய பொதுச்சுகாதாரப் பிரச்சினையாகவே எச்.ஐ.வி/எயிட்ஸ் விளங்குகின்றது. கடந்த வருடம் (2021) கூட இத்தொற்றின் விளைவாக 06 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உயரிழந்துள்ளதோடு 1.5 மில்லியன் பேர் இத்தொற்றுக்கு உள்ளாகியும் உள்ளனர்.

இத்தொற்றுக்கென இற்றைவரையும் விஷேட சிகிச்சை முறை கிடையாது. ஆனால் இத்தொற்று தவிர்ப்பு, அடையாளம் காணல், சிகிச்சை மற்றும் பராமரிப்பு என்பன செயற்றிறன் மிக்க வகையில் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதன் பயனாக முகாமைத்துவம் செய்யக்கூடிய ஒரு தொற்று என்ற நிலையை இது அடைந்துள்ளது. அதன் விளைவாகவே 2021ஆம் ஆண்டின் இறுதியில் 38.4 மில்லியன் பேர் இத்தொற்றுக்கு உள்ளான போதும் தொடர்ந்தும் உயிர் வாழக்கூடியவர்களாக இருந்தனர். அவர்களில் மூன்றிலிரண்டு பங்கினர் ஆபிரிக்கப் பிராந்திய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர்.

இத்தொற்றுக்கு உள்ளான முதலாவது நபர் ஐக்கிய அமெரிக்காவில் 1981இல் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து அதனைத் தவிர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒவ்வொரு நாடும் முன்னெடுத்தன.

இருந்த போதிலும் நாடுகளது எச்.ஐ.வி தவிர்ப்பு நடவடிக்கைகளையும் கடந்து இவ்வைரஸ் தொற்று ஒவ்வொரு




நாட்டிலும் பதிவாகவே செய்தது. அந்த பின்னணியில் இலங்கையில் முதலாவது எச்.ஐ.வி தொற்றாளர் 1986இல் அடையாளம் காணப்பட்டார். அவர் ஒரு வெளிநாட்டு பிரஜையாக இருந்தார். அது சற்றே ஆறுதலான செய்தியாக இருந்தது. ஆனால் அந்த ஆறுதல் நீடித்து நிலைக்கவில்லை. ஏனெனில் மறு வருடமே அதாவது 1987இல் இத்தொற்றுக்கு உள்ளான உள்நாட்டவர் அடையாளம் காணப்பட்டார். அதனைத் தொடர்ந்து இத்தொற்று இந்நாட்டில் பதிவாக ஆரம்பித்தது.

அந்த வகையில் அன்று தொடக்கம் இவ்வருடத்தின் (2022) இரண்டாவது காலாண்டு அதாவது ஜுன் மாதம் நிறைவடையும் வரையும் 4677 பேர் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 3600 பேர் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக சமூகத்தில் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களில் 2487 பேர் இத்தொற்றுக்கென தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுக்கொள்கின்றனர்.

மேலும், இந்நாட்டில் இத்தொற்றுக்கு உள்ளானவர்களில் 1500 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் எச்.ஐ.வியினால் மரணித்தவர்களின் எண்ணிக்கை 609 என்றும் எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டபோதும் வேறு காரணிகளால் நேர்ந்த மரணங்கள் 37 ஆகவும் இற்றைவரையும் பதிவாகியுள்ளதாக பாலுறவு தொற்று நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் இந்நாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களாக ஆண்கள் தான் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனால் இத்தொற்றின் விளைவான மரணங்களுக்கும் அவர்கள் தான் அதிகளவில் உள்ளாகின்றனர். அத்தோடு இந்நாட்டில் 15 முதல் 49 வயதுக்கு இடைப்பட்ட பாலியல் செயலூக்கம் கொண்டவர்கள் தான் இத்தொற்றின் அச்சுறுத்தலுக்கு பெரிதும் முகம் கொடுக்கின்றனர்.

என்றாலும், இந்நாட்டில் ஓரினச் சேர்க்கையாளர்கள் மத்தியில் இத்தொற்று உள்ளானவர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் நிலை கடந்த சில வருடங்களாக ஏற்பட்டிருக்கிறது. அத்தோடு பாதுகாப்பற்ற ஆண், பெண் பாலுறவு மூலமும் பாலியல் தொழிலில் ஈடுபடுபவர்கள் மத்தியிலும் இத்தொற்றின் அதிகரிப்பை அவதானிக்கக்கூடியதாக உள்ளது என்று பாலுறவு நோயியல் தொடர்பான மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அந்த வகையில் இவ்வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியிலும் மொத்தம் 273 பேர் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இது கடந்த வருடங்களை விடவும் இத்தொற்றுக்கு உள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்துகின்றது.

இந்நாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளானவர்களாக இனம் காணப்பட்டுள்ளவர்களில் போதைப்பொருள் பாவனையாளர்களும் உள்ளனர். ஊசி மூலம் போதைப்பொருள் பாவனையில் ஈடுபடுபவர்களும் இருக்கின்றனர்.

- **15–30 வயதுக்கு இடைப்பட்ட 90 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்**
- **இவ்வாறான அதிகரிப்பு இதற்கு முன்பு அவதானிக்கப்படவில்லை**
- **விழிப்புணர்வின் அவசியம் பரவலாக உணரப்பட்டுள்ளது**

ஆனால் அவர்களுக்கு எந்த வழியின் ஊடாக இத்தொற்று ஏற்பட்டுள்ளது என்பதை சரியாக அடையாளம் காண முடியாத நிலை காணப்படுகிறது. ஏனெனில் இவர்களில் முறையற்ற பாலியல் தொடர்பில் ஈடுபடுபவர்களும் உள்ளனர்.

இந்நிலையில் இலங்கையின் எச்.ஐ.வி பரவுதல் தொடர்பில் பல மட்டங்களதும் அவதானம் ஈர்க்கப்பட்டுள்ளது. எனினும் இத்தொற்றைத் தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். குறிப்பாக சுய பாதுகாப்பும் தவிர்ப்பும் தான் இதற்கு பெரிதும் உதவக்கூடியதாககும்.

அதனால் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகி இருக்கலாம் என்ற சந்தேகம், ஐயம் எவருக்காவது ஏற்பட்டால் பாலுறவு தொற்று நோய்கள் தொடர்பான கிளினிக்குகளில் பரீட்சித்து சிகிச்சை பெற்றுக்கொள்ள முடியும். பரீட்சிப்பு முற்றிலும் இலவசமாகவே மேற்கொள்ளப்படுகிறது.

அத்தோடு சிகிச்சையும் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. எச்.ஐ.வி தொற்றுக்கு உள்ளனாவர்கள் சமூகத்தில் இருந்தபடியே சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நிலையும் காணப்படுகிறது.

ஆகவே நம்பிக்கையானவர்களுடன் மாத்திரம் பாலியில் ரீதியிலான தொடர்பை பேண வேண்டும் பாதுகாப்பற்ற பாலுறவுகளில் இருந்து முற்றிலும் விலகிக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் எச்.ஐ.வி தொற்றின் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுப்பதை தவிர்த்துக் கொள்ள முடியாது.



மர்லின் மரிக்கார்...

---

## கெப்பிட்டிகொல்லாவ பிரதேசத்தில்

# யானை - மனித மோதலில் பலியான பொலிஸ் சார்ஜன்!


சார்ஜன்

யானை மனித மோதல்களின் காரணத்தினால் நாளுக்கு நாள் இழக்கப்படும் மனித உயிர்களின் எண்ணிக்கை சொற்பமானதல்ல. அதே போன்று கொல்லப்படும் காட்டு யானைகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதையும் காண முடிகின்றது. இவற்றிற்கான தீர்வுகள் சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து இதுவரையில் கிடைக்கவேயில்லை.

காட்டு யானைகளின் தாக்குதல்களினால் உயிரிழப்போரின் குடும்பம் நிர்க்கதி நிலைக்குள்ளாவது கண்கூடு. யானைகளின் நடமாட்டத்தை தடுக்க யானை அகழிகள் மற்றும் மின்சார வேலிகள் அமைத்து யானைகளளுக்குத் தடைகளை ஏற்படுத்திய போதும் அது வெற்றியளிக்கவில்லை. காட்டு யானைகளின் தாக்குதல்களினால் உயிரிழப்புக்கள் ஏற்படும் போது கிராம மக்கள் கோபம் அடைகின்றனர். அதனால் ஏற்படும் இன்னல்களுக்கும் அழிவுகளுக்கும் பஞ்சமில்லை.

கெப்பிட்டிகொல்லாவ காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு அடிக்கடி உள்ளாகும் பிரதேசமாகும். அதன் சில கிராமங்களும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. காட்டு யானைகள் கூட்டமாக ஊருக்குள் நுழைந்து விவசாய நிலங்களை அழித்துச் சேதப்படுத்துவதனால் பிரதேசவாசிகள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். இதற்கான தீர்வுகள் இதுவரைக்கும் இல்லை.


யானை தாக்கி கொல்லப்பட்ட கிராமவாசி

கெப்பிட்டிகொல்லாவ, ரம்பகெட்டுவெவ பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் கடந்த 31ம் திகதி இரவு காட்டு யானையின் தாக்குதலினால் உயிரிழந்துள்ளார். ரம்பகெட்டுவெவ, தித்தகோனேவ பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்தவராகும். 50 வயதுடைய பீ. குணசிங்க என்பவர் இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலினால் உயிரழந்தது தித்தகோனேவ கிராமத்தையே சோகத்திற்குள்ளாக்கியது. அந்நபர் ஒரு அப்பாவித் தொழிலாளியாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பான தகவல் கெப்பிட்டிகொல்லாவ பொலிஸாருக்கு கிடைத்ததைத் தொடர்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. உயிரிழந்த குணசிங்க கடந்த 31ம் திகதி இரவு



7.15 மணியளவில் கெப்பிட்டிகொல்லாவ நகரிலிருந்து பஸ் ஒன்றில் வந்து ரம்பகெட்டுவெவ சந்தியில் இறங்கியுள்ளதோடு, ரம்பகெட்டுவெவ குறுக்கு வீதியில் தனது வீட்டை நோக்கி கால்நடையாக சென்றார். அந்த குறுக்குத் தெருவில் 20 மீற்றர் தூரம் நடந்த போது எதிர்பாரா விதமாக காட்டு யானையின் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அந்தத் தாக்குதலில் குணசிங்க சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பான செய்தியை கிராம மக்கள் அறிந்ததும், அந்த இடத்திற்கு இளைஞர்கள், முதியவர்கள், பெண்கள், ஆண்கள் என எல்லோரும் விரைந்தனர். விரைந்து சென்று எதிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். இதன்போது அவ்விடத்தில் டயர்களை எரித்து, தீப்பந்தங்களை ஏற்றிய ஆர்ப்பாட்டக்காரர்கள், கெப்பிட்டிகொல்லாவ பதவிய பிரதான வீதியைக் வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு, சம்பந்தப்பட்ட தரப்பினருக்குத் தமது கடும் எதிர்ப்பையும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கெப்பிட்டிகொல்லாவ பொலிஸ் நிலையத்தின் பிரதான பொலிஸ் பரிசோதகர் சமில ரத்நாயக்கா உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழுவினர் அவ்விடத்திற்குச் சென்றனர். இதன்போது பிரதேச மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் மோதல் உருவானது. நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதான பொலிஸ் பரிசோதகர் சமில ரத்நாயக்காவினால் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரைத் தாக்கியுள்ளனர். இந்தத் தாக்குதலின் போது அவ்விடத்திற்கு வந்திருந்த பொலிஸ் குழுவைச் சேர்ந்த சார்ஜன் ஒருவரின் தலையின் மீதும் பலமாகத் தாக்கப்பட்டதால் சாஜன் அவ்விடத்திலேயே நிலத்தில் வீழ்ந்துள்ளார். பின்னர் உடனடியாக அவர் அங்கிருந்த ஏனைய பொலிஸாரினால் கெப்பிட்டிகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இவ்வாறு கெப்பிட்டிகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பொலிஸ் சார்ஜன் சுனில் உடனடியாக அங்கிருந்து மேலதிகச் சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அங்கு அவர் உயிரிழந்துள்ளார். பின்னர் அவரது சடலத்தை அருகிலுள்ள வைத்தியசாலையான மதவாச்சி தள வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு அநுராதபுரம் வைத்தியசாலை பணியாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டனர். கெப்பிட்டிகொல்லாவ பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸ் சார்ஜன் 12601 அகன்புலிகே சுனில் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

- **காட்டு யானை தாக்குதலில் கிராமவாசி ஒருவரும் உயிரிழப்பு**
- **சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காகச் சென்ற சார்ஜன் சுனில், ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில் பலி**
- **காட்டு யானைகளின் தாக்குதலினால் கெப்பிட்டிகொல்ல பிரதேசத்தில் ஐவர் உயிரிழப்பு!**
- **நிலைமையினைக் கட்டுப்படுத்த பொலிஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.**
- **ஆர்ப்பாட்டத்தின் போது தடிகளால் தாக்கியவர் யார்?**

சார்ஜன் சுனிலின் கொலை தொடர்பில் கடந்த முதலாம் திகதி காலை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து கெப்பிட்டிகொல்லாவ பொலிஸாரினால் இந்தக் கொலை மற்றும் ஆர்ப்பாட்டத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்தார்கள். கைது செய்யப்பட்ட இளைஞர்களிடையே கெப்பிட்டிகொல்லாவ ஸ்ரீ போதிருக்காராமய விகாரையைச் சேர்ந்த 29 வயதுடைய தேரர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பிட்டிகொல்லாவ பிரதேசத்தில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக இருந்துள்ளது. இவ்வாறு காட்டு யானைகளின் தாக்குதல்களினால் வீடுகள், விவசாயச் செய்கைகள் மற்றும் மனித உயிர்கள் என பல்வேறு இழப்புகள் கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளன. இது தொடர்பில் பல தடவைகள் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு கிராம மக்கள் அறிவித்துள்ளனர். எனினும் தினம் தினம் இடம்பெற்று வரும் காட்டு யானைகளின் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்தனவே தவிர அதற்கான தீர்வுகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரால் முடியாமலேயே போயுள்ளது. இதன் பெறுபேறாக கடந்த ஒன்றரை மாதக் காலப்பகுதியினுள் காட்டு யானைகளின் தாக்குதலினால் ஐந்து மனித உயிர்கள் பலியாகியுள்ளன.

கெப்பிட்டிகொல்லாவ பிரதேசத்தில் கொலையான பொலிஸ் சார்ஜன் சுனில், 54 வயதுடைய, வாரியபொல, மல்வானை பிரதேசத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையாவார். 22 மற்றும் 14 வயதுகளையுடைய இரு பிள்ளைகளின் தந்தையான சார்ஜன் சுனில், கடைசியாக தனது வீட்டுக்குச் சென்றது கடந்த செப்டெம்பர் மாதமே என அவரது மனைவியான ஷிரோமா குமாரி குறிப்பிட்டுள்ளார்.


சார்ஜனின் மனைவி

தனது கணவரின் மரணச் செய்தி கேட்டு அழுது புலம்பிக் கொண்டிருந்த ஷிரோமா குமாரி மேலும் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு கூறினார்,

“எனது கணவர் கடைசியாக வீட்டுக்கு வந்து சென்றது எமது மூத்த மகனின் பிறந்த தினத்தன்றாகும். தனக்கு விடுமுறை இல்லை என என்னிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறினார். அவர் கடந்த 27ம் திகதி வீட்டுக்கு வர ஆயத்தமாக இருந்தார். கண்காணிப்பு நடவடிக்கைக்குச் செல்லவேண்டியதால் வர முடியவில்லை. முதல்நாள்தான் கண்காணிப்பு முடிந்ததாகவும் சொன்னார். இரவு நான் பேசும் போது, பொலிஸ் நிலையத்தில் ஏடுகளைப் பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். பார்த்து முடிந்ததும் வீட்டுக்கு வருவதற்குப் புறப்பட இருப்பதாகவும் கூறினார். இதற்குள்தான் இந்த துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(18 ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.ஜி. உபேபால
தமிழில்: எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)






# சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான எனது திட்டங்கள் மீது வீண்விமர்சனங்கள்!

## சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே அளித்த பேட்டி

**சுற்றுலாத்துறையை மேம்படுத்தக் கூடிய வகையில் இலங்கை மக்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார். இலங்கைக்கு வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் 'டூவர்னிவல்' நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

**கே: ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள், கொவிட்–19 தொற்றுநோய் மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடி சூழ்நிலைக்கு முன்னர் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடமாக இலங்கை காணப்பட்டது. குறுகிய காலத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த உத்தேசித்துள்ள திட்டங்கள் அல்லது முயற்சிகள் யாவை?**

பதில்: 2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர், சுற்றுலாத்துறை வெகுவாகப் பாதிப்படைந்தது. கடந்த சில ஆண்டுகளாக அது முற்றிலும் ஸ்தம்பிதமடைந்துள்ளது. கொவிட்19 தொற்று மற்றும் வேறு சில சிக்கல்கள் காரணமாக கடந்த ஆண்டு இது முற்றிலும் முன்னேற முடியாதவாறு ஸ்தம்பித்துள்ளது. இருந்தபோதும், சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்காக நான் கடுமையாக உழைத்து வருகிறேன். இந்தியாவுடன் இணைந்து ஒரு 'டூவர்னிவல்' ஏற்பாடு செய்யத் தொடங்கியுள்ளேன், அதாவது 'நாங்கள் உங்களை இலங்கைக்கு வரவேற்கிறோம்' என்று தொனிப் பொருளில் இது முன்னெடுத்துச் செல்லப்படும்.

உண்மையில், இதனை ஆரம்பத்தில் மாலைதீவுடன் இணைந்து முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அதனை ஏற்பாடு செய்பவர் என்னைச் சந்தித்து, இலங்கையிலும் இதனைச் செய்ய விரும்புவதாகக் கூறினார். பெங்களூரில் நடைபெற்ற ஆரம்பவிழாவில் என்னை அழைத்திருந்தார்கள். அங்கு மாலைதீவின் சுற்றுலாத்துறை அமைச்சரையும், கர்நாடக திரையுலகினரையும், நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தவர்களையும் சந்தித்தேன். அதனைத் திருப்பி இலங்கைக்கு முதலில் கொண்டு வர முடிந்தது.

இலங்கைக் கலைஞர்களுடன் பிரபல இந்திய மற்றும் தென்னிந்திய கலைஞர்கள் இணையும் முதல் சுற்றுப்பயண கச்சேரியை டிசம்பர் 08 ஆம் திகதி தொடங்க திட்டமிட்டுள்ளோம். டிசம்பர் 8 ஆம் திகதி யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் முதல் இசைநிகழ்ச்சியுடன் அதைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளேன். நாம் ஒரு நாட்டு மக்கள் என்ற எண்ணத்துடன் வடக்கு, கிழக்கு, தெற்குடன் இணைந்து செயற்பட வேண்டும். எனவே, சமூகங்களை ஒன்றிணைத்து வடக்கு மற்றும் கிழக்குக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு நான் முயற்சித்தேன். எனவே, முதலில் யாழ்ப்பாணம் செல்ல முடிவு செய்துள்ளேன். வடக்கு, கிழக்கிலும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதே எனது திட்டம். அது புறக்கணிக்கப்பட்ட ஒரு பகுதி. இது இலங்கையின் ஒரு பகுதியாகும்.

முதல் டூவர்னிவல் கச்சேரி டிசம்பர் 08 அன்று துரையப்பா ஸ்டேடியத்தில் நடைபெறவுள்ளது, அது மிகப்பெரிய இசைநிகழ்ச்சியாக இருக்கும். டூவர்னிவல் இந்தியாவில் இருந்து சுமார் 10,000 சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் முயற்சியாகும். இந்த நிகழ்விற்காக அவர்கள் இலங்கைக்கு வருவதற்கு மட்டுமல்ல, இலங்கையின் அழகைச் சுற்றிப் பார்ப்பதற்கான தொகுப்புக்களையும் நாம் உருவாக்குவோம். டிசம்பர் 9 ஆம் திகதி கொழும்பில் எங்கள் கலைஞர்களுடன் இரண்டாவது இசை நிகழ்ச்சியைத் திட்டமிடுகிறோம். இந்த நிகழ்வோடு ஒரே நேரத்தில் டிசம்பர் 9 முதல் 11 வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வர்த்தகக் கண்காட்சியையும் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். ஏற்றுமதி நோக்கங்களுக்காக இலங்கை எதை வழங்குகிறதோ அதை அறிமுகப்படுத்தும் வாய்ப்பை எங்கள் மக்களுக்கு வழங்குவதன் மூலம் இந்தியாவும் இலங்கையும் தங்கள் வர்த்தகத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்பை வழங்கும். இலங்கையிலும் இந்திய வர்த்தகர்கள் இருப்பார்கள். டிசம்பர் 10 ஆம் திகதி ஆர். பிரேமதாச மைதானத்தில் இலங்கை மற்றும் இந்தியக் கலைஞர்களுடன் கிரிக்கெட் போட்டியை நடத்துகிறோம்.

டிசம்பர் 8 முதல் 21 வரை சுற்றுலாவுக்கான உலக அழகிப் போட்டி கூட கூட இங்கே இருக்கும். அந்த 80 நாடுகளும் இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும். ஸ்பெயினைச் சேர்ந்த சுற்றுலாவுக்கான உலக அழகி தற்போது இலங்கையில் இருக்கிறார். அவர் சிறிய போட்டிகள் நடத்தப்படவுள்ள பகுதிகளுக்குச் சென்று வருகிறார். அதுவும் நான் அடைந்த பெரியதொரு சாதனையாகும்.

**கே: சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு நீங்கள் பல புதிய திட்டங்களை அறிவித்துள்ளீர்கள், அவற்றில் இரவுக் களியாட்டங்களை மேம்படுத்துவதற்கான முன்மொழிவு பல பிரிவினரால் விமர்சிக்கப்பட்டது. இந்த முன்மொழிவின் பின்னணி என்ன?**

பதில்: நான் இரவு களியாட்டங்களைப் பற்றிப் பேசும்போது, மக்கள் அதை மிகவும் தவறாக எடுத்துக் கொண்டனர். இரவு வாழ்க்கை என்றால் இரவு பொருளாதாரம் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் இரவு பொருளாதாரம் பற்றி பேசுகிறேன். உலகில் எல்லா இடங்களிலும் வளர்ந்த ஒவ்வொரு நாடும் இரவுப் பொருளாதாரத்தைக் கொண்டுள்ளது. ஏனெனில் 70 வீத வருமானம் இரவுப் பொருளாதாரத்தின் மூலமும் 30 வீத வருமானம் பகல் பொருளாதாரத்தின் மூலமும் பெறப்படுகிறது. இலங்கையில் நாங்கள் இரவு 10 மணிக்கு வெளியே நடக்கும்போது, அது இருட்டாக இருக்கிறது, எதுவும் திறக்கப்படவில்லை, அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்பது எங்களுக்குத் தெரியும். இரவு 10 மணிக்கு மேல் மருந்தகம் திறக்கப்படுவதில்லை. இலங்கையில் ஒரு பனடோல் கூட இரவில் கிடைக்காது. எனவே, இதுபோன்ற ஒரு நாடு ஒருபோதும் வளர்ச்சியடையாது, வருமானத்தை ஈட்ட முடியாது. நான் பேசுவது இரவு வாழ்க்கை கலகலப்பாக இருக்க வேண்டும் என்றுதான்.

இரவு நேரக் களியாட்ட வாழ்க்கை என்றால் சிலர் கசினோ பொழுது போக்குக்காக வருகின்றனர், சிலர் இரவு விடுதிகளில் இசை மற்றும் நடனத்திற்காக வருகிறார்கள், சிலர் பாங்கொக், சிங்கப்பூர் மற்றும் மலேசியா போன்ற தெரு உணவுகளை அனுபவிக்க வருகிறார்கள். இந்த நாடுகளில் உணவுடன் கூடிய இரவு நேரக் கடைகள் காணப்படுகின்றன. தேங்காய்ச் சிரட்டையில் சிறிய ஆபரணத்தை தயாரிக்கும் எமது மக்களுக்கு ஒரு கடையை திறந்து வெளிநாட்டினர் அப்பொருட்களை வாங்குவதற்கு ஒரு வாய்ப்பை இது வழங்கும். இதுபோன்றதொரு இரவுநேர வாழ்க்கையைத்தான் நான் பேசுகிறேன். இருந்தபோதும் இதனை சிலர் விமர்சிக்கின்றனர் என்பது மிகவும் துரதிர்ஷ்டமானது.

**கே: மேற்குலக சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில் இந்தியா, சீனா, ஜப்பான் மற்றும் இதுபோன்ற பிற நாடுகளில் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க ஏதேனும் முயற்சிகள் உள்ளதா?**

பதில்: ஆம். தற்போது நான் இந்தியாவில் கவனம் செலுத்தி வருகிறேன். ஏறக்குறைய 1.5 பில்லியன் மக்கள்தொகை கொண்ட நமது அண்டை நாடான இந்தியாவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க முடிந்தால் அது மிகவும் முக்கியமானது மற்றும் விமானக் கட்டணம் மிகக் குறைவு. நமது கலாசாரத்திற்கும் இந்திய கலாசாரத்திற்கும் இடையில் நாம் ஊக்குவிக்கக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. எதிர்காலத்தில் இன்னும் தொடர்புகள் ஏற்படவுள்ளன. தற்போது இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. ஆயிரக்கணக்கான இந்திய சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு அழைத்து வர முயற்சிக்கிறேன்.

நாங்கள் ஜப்பானை இலக்காகக் கொண்டுள்ளோம், ஏனெனில் அந்நாட்டில் ஏராளமான உயர்தரப் பயணிகள் உள்ளனர். அவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மத மற்றும் கலாசார நோக்கங்களுக்காக பயணிக்கின்றனர். இப்போது இலங்கையில் கலாசாரம் மற்றும் மதம் என்று வரும்போது வழங்குவதற்கு நிறைய விஷயங்கள் கிடைத்துள்ளன. சூரியனையும், கடலையும், மணலையும் விற்றுவிட்டு, சீகிரியா, தம்புள்ளை, அனுராதபுரத்தைக் காட்டுவதை மட்டும் தான் நாம் செய்து வருகிறோம்.

சுற்றுலாத் தலங்களில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அலைக்கழிக்கப்படும் மோசடி முற்றிலும் தவறானது. இது தொடர்பில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து எனக்கு நிறைய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவர்கள் இலங்கைக்கு வந்து இந்த இடங்களைப் பார்வையிடத் தயங்குகிறார்கள். சுற்றுலாப் பயணிகள் சூரியக் குளியல் அல்லது கடலுக்குச் செல்ல விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் செல்லும் ஒவ்வொரு இடத்திற்கும் நாங்கள் அதிக கட்டணம் வசூலிக்கிறோம்.

நாம் பொருளாதார நெருக்கடியில் இருக்கலாம், ஆனால் நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை சுமைக்கு உள்ளாக்கப் போகிறோம் என அர்த்தம் கொள்ளக் கூடாது. இதுபோன்ற சூழ்நிலைகளால் அவர்கள் இலங்கைக்கு வராது வேறு நாடுகளுக்குச் செல்ல வாய்ப்புக்கள் அதிகம். முதலில் இந்த மோசடிகள் நிறுத்தப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு சுதந்திரம் வழங்க வேண்டும்.

**உல்லாசப்பயணத்துறையை அபிவிருத்தி செய்வதாயின் இலங்கை மக்களின் மனோநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்**

**கே: தற்போதைய பொருளாதார நிலைமைக்கு மத்தியிலும் இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பையும் வசதியையும் உறுதிப்படுத்த போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? உதாரணமாக, சுற்றுலா வாகனங்களுக்கு போதுமான எரிபொருள் மற்றும் ஹோட்டல்களில் ஜெனரேட்டர்களுக்கு போதுமான டீசல் கிடைக்கின்றதா?**

பதில்: மின்சாரம் துண்டிக்கப்படும் போது ஜெனரேட்டர்கள் இயங்குவதற்கு டீசல் இல்லை என ஹோட்டல் உரிமையாளர்களிடம் இருந்து எனக்கு புகார் வந்துள்ளது. எனவே, வெளிப்படையாக இது ஒரு பெரிய பிரச்சினை மற்றும் நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டிய ஒன்று. எனவே, இந்த நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க வேண்டுமானால், இந்த மக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

சுற்றுலா ஹோட்டல்களின் ஜெனரேட்டர்களுக்கு டீசல் ஒதுக்கீட்டை வழங்க வேண்டும் என்று சில பரிந்துரைகளை கொண்டு வர உள்ளேன். இல்லையெனில், எரிபொருள் மற்றும் மின்சாரம் இல்லாமல் இந்த தற்போதைய சூழ்நிலையை அவர்களால் தொடர முடியாது. இடையூறு அற்ற வகையில் மின்சாரம் பெறுவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். முதலில் ஜெனரேட்டர்கள் இல்லாமல் நாம் முன்னேற வேண்டிய வழி இதுதான். முழு நாட்டிற்கும் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கான வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். சூரியப் படல முறைமை இதற்கு ஒரு வழி. இயற்கை நமக்கு வழங்கியதை நாம் ஏன் பயன்படுத்துவதில்லை? நாங்கள் அதைச் செய்வதில்லை. நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு கியூ ஆர் கோர்ட் மற்றும் பாஸ்களை வழங்கியுள்ளோம். அதற்கு கட்டணம் செலுத்தி எரிபொருள் அனுமதிச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, இது மிகவும் தோல்வியுற்ற விஷயம்.

(17ஆம் பக்கம் பார்க்க)




# எரிபொருள் சிக்கலைத் தீர்ப்பதாயின் விவேகமான தீர்மானங்களே அவசியம்

இலங்கை எரிபொருள் தேவைக்காக பெட்ரோலியத்தை இறக்குமதி செய்கின்றது. இறக்குமதி செய்யப்படும் எரிபொருளில் நூற்றுக்கு 60 வீதம் போக்குவரத்துக்காகவே பயன்படுத்தப்படுகிறது. இலங்கையின் இறக்குமதி செலவினத்தில் நூற்றுக்கு 25 வீதமளவில் எரிபொருள் இறக்குமதிக்காகவே ஒதுக்கப்படுகின்றது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பெட்ரோலியத்தின் ஒரு பகுதி மின்சார உற்பத்திக்காகவும்பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் அமெரிக்க டொலரில் கொடுப்பனவு செய்து ரூபாவில் விற்பனை செய்யும் தொழில்துறை இதுவாகும்.

டொலரை சம்பாதிக்காத பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் ரூபா வர்த்தகத்திலும் அதிக நட்டம் அடையும் அரச தொழில்முனைவாகும். சர்வதேசத்தில் அடிக்கடி நிகழும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் விலையானது கூடிக் குறையும். அந்த ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்றவாறு முடிவுகளை எடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

நீண்ட காலமாக மன்னார்வளைகுடா ஆழ்கடலில் உள்ள கனிம எண்ணெய் வளம் மற்றும் எரிவாயு வளங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டுள்ளன. எண்ணெய் அகழ்வுக்காக பெரும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. பல நிறுவனங்கள் அதில் ஈடுபட்டதோடு, பொருளாதார நன்மை அற்றதென ஆரம்பகட்ட ஆய்வுகள் மூலம் தெரிய வந்ததன் காரணமாக அம்முயற்சி கைவிடப்பட்டது.

தற்போதுள்ள பொருளாதாரத்தை விட பாரிய கட்டமைப்பொன்றைத் தயாரித்தால் நன்மைகள் கிடைக்கும். பெட்ரோலியத்தை இறக்குமதி செய்து வாழ்வதற்குப் பதிலாக எரிபொருளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் முறை குறித்து கவனம் செலுத்துதல் நல்லது. இலங்கை சர்வதேச வர்த்தக மத்திய நிலையமாகும். கொழும்பு , ஹம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்கள் சர்வதேச கடல் பாதைக்கு அண்மையில் அமைந்துள்ளன. வங்காள விரிகுடாவை ஒட்டிய நாடுகளுக்கு எரிசக்தி மத்திய நிலையமாக மாறக்கூடிய சந்தர்ப்பம் இலங்கைக்கு உள்ளது.

துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் எண்ணெயை களஞ்சியப்படுத்தல், சுத்திகரித்தல் மற்றும் விநியோகித்தல் நாட்டில் மேற்கொள்ளக்கூடிய தொழில் துறைகளாகும். திருகோணமலை அதற்கு மிகவும் பொருத்தமானது. கனிம எரிபொருள் பாவனை குறையக் கூடும் என்பது சர்வதேசத்தின் கணிப்பாக உள்ளது. சூரிய சக்தி, காற்றாலை, திரவ ஹைட்ரஜன் போன்ற பசுமை உற்பத்திகள் மீது ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனாலும் புதைபடிவ எரிபொருள் முற்றாக கைவிடப்பட மாட்டாது.

இந்தியாவின் எண்ணெய் சுத்திகரிப்பு தேவையின் பற்றாக்குறை நூற்றுக்கு 20வீதமாக உள்ளதோடு, 2040 ஆம் ஆண்டளவில் அது இரண்டு மடங்காக அதிகரிக்கும் எனக் கூறப்படுகின்றது. சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட் போன்ற நாடுகளுடன் புதிய கலந்துரையாடல்களை இந்தியா ஆரம்பித்துள்ளது. இந்தியா அந்நாடுகளின் எண்ணெயை விலைக்கு வாங்குவதற்கு எதிர்கால தேவையை கருத்தில் கொண்டு புதிய எண்ணெய் சுத்திகரிப்பு மத்திய நிலையங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது.

இந்தியா விலைக்கு வாங்கும் மசகு எண்ணெயை இலங்கையில் சுத்திகரித்து குழாய் வழியாக இந்தியாவுக்கு அனுப்ப முடியும். அண்மையில் ஐக்கிய அரபு எமிரேட் இராச்சியம் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதோடு, 6 மில்லியன் எண்ணெய் பரல்கள் தொகுதியை மங்களூரில் களஞ்சியப்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. பிராந்திய நாடுகளில் நிலையான விலைக்கு பெட்ரோலிய எண்ணெயை வழங்குவதற்காக பின்பற்றக்கூடிய மூலோபாய முறையின் ஒரு பகுதியாக இதனை கருத முடியும். அச்சந்தர்ப்பத்தை இலங்கையும் பெற்றுக் கொள்ள முடியும்.

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் மற்றும் வாயு அகழ்வு சந்தர்ப்பத்துக்கான பல படிகள் உள்ளன. சுத்திகரிப்பு, குழாய் பாதை, துறைமுக வசதி என்பவற்றை மேம்படுத்தினால் மன்னாரில் இருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுவை பெறுவதற்கு முதலீட்டாளர்களுக்கு ஆர்வம் ஏற்படும். அவ்வாறான பாரிய முதலீடுகளுக்கு நாடுகளுக்கு இடையே நம்பிக்கை முக்கியமாகும். கொள்கையளவில் நாடுகள் இணைந்து மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஒன்றாக செயல்படக் கூடிய சந்தர்ப்பங்கள் நாடுகளுக்கிடையே உறவினை உறுதிப்படுத்தும்.

முத்தரப்பு தொடர்புகள் அண்மைக் காலத்தில் புதிதாக ஏற்பட்ட கட்டமைப்பாகும். தெரிவு செய்யப்பட்ட துறைகளுக்காக மூன்று நாடுகள் ஒன்றாக இணையும். இந்தியா, ஜப்பான், ஐக்கிய அரபு எமிரேட் மற்றும் இஸ்ரேலுக்கு இடையே தற்போது இவ்வாறான முத்தரப்பு ஒத்துழைப்பு உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் இன்னும் பல நாடுகள் இணையும். இந்தியாவில் பாரிய மக்கள் தொகையைக் கொண்ட வர்த்தக சந்தை மற்றும் போட்டி ரீதியாக வளர்ச்சி அடையும் பொருளாதார சந்தர்ப்பத்தை தமதாக்கிக் கொள்ள நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. அண்டைய நாடாக நாம் அதன் முக்கியத்துவம் மற்றும் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் குறித்து ஆராயாமல் இருப்பது பிரச்சினையே.

இலங்கை மனிதவளம், சிறந்த சுகாதார வசதி என்பவற்றைக் கொண்டுள்ளது. இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதார கொள்கைகளை நன்மைகளாகச் சுட்டிக்காட்டலாம். திறமையான தொழிலாளர்கள் நாட்டை விட்டு சென்று வேறு நாடுகளில் சந்தர்ப்பங்களைத் தேடுகிறார்கள். ஏனைய நாடுகளுக்கு முன்னர் முடிவுகளை எடுக்கும் திறன் காணப்பட்டால் புதிய தொழில்துறை தொழில்முனைவுகளை இலங்கையில் உருவாக்க முடியும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பல காலமாக தீர்க்கப்படாமல் இருந்த சிக்கலான பிரச்சினைகளுக்கு இந்த புதிய தோற்றத்தின் மூலம் விடை கிடைக்கும்.

தமிழ் அரசியல்வாதிகள் அழுத்தம் கொடுக்கும் சில நிறைவேற்ற முடியாத பிரச்சினைகளுக்கு முன்னால் மக்களை வெற்றி கொள்வதற்கு கைவிடப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கைகளை உயிர்ப்பித்தல் மிகவும் முக்கிய நடவடிக்கையாகும். வடக்கு மற்றும் தெற்கில் தொழில் முனைவோருக்கு முதலீட்டு சந்தர்ப்பங்கள் கிடைக்கும். மாகாண சபைகளுக்கு வருமானத்துக்கான வழி ஏற்படுவதோடு அது கவனம் செலுத்தப்படாத பிரதேசங்களுக்கு கிடைக்கும் பொன்னான சந்தர்ப்பமாகவும் அமையும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## ஜனாதிபதி ரணில் இன்று...

இலங்கையில் உருவாக்கப்படவுள்ள காலநிலை மாற்றம் தொடர்பான செயலகம் தொடர்பாகவும் இலங்கை உட்பட சர்வதேச ரீதியிலான காலநிலை மாற்றம் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரது உரையின்போது கருத்துக்களை முன்வைப்பார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எகிப்துக்கான விஜயத்தின் போது, எகிப்திய ஜனாதிபதி எப்டெல் பெட்டா சிஸி மற்றும் அந்நாட்டு பிரதமர் மொட்டாபா மெட்பௌலி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

நான்கு தினங்களுக்கான விஜயத்தை மேற்கொள்ளும் ஜனாதிபதி எதிர்வரும் 10 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்,ஆங்கில பஜனை...

நூல்களை சாயி நிலைய பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகனின் சார்பில், சாயி மகளிர் சங்கத் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகநாதன், வட இந்தியாவிலுள்ள புட்டபர்த்தி சத்ய சாயி பாபா அறங்காவலர் சபைத் தலைவர் சாயி ஸ்ரீ ரத்ணாகாரரிடம் (4) வைபவரீதியாக கையளித்த போது.

## தமிழகத்தில் மேலும்...

சனிக்கிழமை (5) காலை தனுஷ்கோடியை சென்றடைந்துள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடி கடல் வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக சென்றடைந்துள்ளனர்.

இதேபோன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை (4) இரவு யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஜஸ்டின் அவரது மனைவி அனுஷ்யா அவரது மூன்று மாத குழந்தை, மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ஜெயக்குமார்,அவரது மனைவி யோகேஸ்வரி அவரது இரு மகள்கள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த புஷ்பம் மற்றும் அவரது மகன் பிரபாகரன் மற்றும் உட்பட மூன்று குடும்பத்தை சேர்ந்த 10 பேர் மன்னாரிலிருந்து படகில் புறப்பட்டு நேற்று சனிக்கிழமை (05) அதிகாலை 01 மணியளவில் தனுஷ்கோடியையடுத்த நடுதிட்டு பகுதியில் இறங்கினர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் கரையோர பொலிசார் இலங்கைத் தமிழர்களை மீட்டு விசாரணை நடத்தினர்.

விசாரணைக்கு பின் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி முதல் நேற்று வரை இலங்கையிலிருந்து 198 இலங்கை தமிழர்கள் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கடலட்டை பண்ணைகளை...

கடலட்டைப் பண்ணைகள் அனைத்தையும் சட்ட ரீதியானவையாக மாற்றிக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாச்சிக்குடா மற்றும் இரணைதீவு பகுதியில் கடலட்டைப் பண்ணைகளை அமைத்துள்ளவர்களில் சுமார் 80 பண்ணையாளர்களுக்கு பூநகரிப் பிரதேச செயலகத்தினால் பண்ணைகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பாக மாவட்டத்துக்கான பொறிமுறையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதற்கமைய, கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட சமூக சீர்கேடுகளை கட்டுப்படுத்த விசேட குழு ஒன்றை, உருவாக்கி அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்த குழு அமைக்கப்படவுள்ளது.

உணவுப் பாதுகாப்பையும், போஷாக்கையும் உறுதிப்படுத்தும் வகையில் விவசாய நடவடிக்கைகளை ஊக்குவிப்பது மற்றும் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் தீர்வு காணப்படுமென தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வன பாதுகாப்பு மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் போன்றவற்றினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

## தேசப்பிரியவுக்கு புதிய...

தொடர்பாக 05 பேர் கொண்ட தேசிய எல்லை நிர்ணய குழுவொன்றை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நியமித்துள்ளார்.

இந்த குழுவை நியமித்து அதிவிசேட வர்த்தமானி ஒன்றையும் பிரதமர் நேற்று வெளியிட்டுள்ளார்.

இதன்படி தேசிய எல்லை நிர்ணய குழுவின் தலைவராக மஹிந்த தேசப்பிரிய செயற்படவுள்ளதுடன் உறுப்பினர்களாக ஜயலத் ஆர்.வி.திஸாநாயக்க, திருமதி டபிள்யூ.எம்.எம்.ஆர். அதிகாரி, கே. தவலிங்கம், ஐ.ஏ.ஹமீத் ஆகியோர் செயற்படவுள்ளனர்.

## TPA செயலாளராக...

சந்திரா சாப்டர், தனது பதவியை அண்மையில் இராஜினாமா செய்தார்.

இதனால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கே மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளராக செயற்படும் பேராசிரியர் விஜயசந்திரனை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டணியின் செயலாளர் பதவி ஆரம்பத்தில் மலையக மக்கள் முன்னணிக்கே வழங்கப்பட்டது.

லோரன்ஸ் பொதுச் செயலாளராக செயற்பட்டார். அவர் பதவி விலகிய பின்னர் சந்திரா சாப்டர் நியமிக்கப்பட்டார்.இந்நிலையிலேயே செயலாளர் பதவியை மலையக மக்கள் முன்னணி மீண்டும் கோரியுள்ளதாக அறியமுடிகின்றது.

## இலங்கையில் தயாரித்த...

பிரான்ஸுக்காக கப்பல் ஒன்றை கட்டியுள்ளது.

100 மீற்றர் நீளம் கொண்ட இந்தக் கப்பல் கடலுக்குள் கேபிள் இடுதல் மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்காக பயன்படுத்தப்படுகிறது.

கொழும்பு கப்பல்துறை நிறுவனத்தால் பிரான்ஸ் நிறுவனம் ஒன்றுக்காக உருவாக்கப்பட்ட இக் கப்பலின் வெள்ளோட்ட விழா கொழும்பு துறைமுகத்தில் நடைபெற்றது.

ஜப்பான் மற்றும் பிரான்ஸ் தூதுவர்களின் பங்கேற்புடன் கப்பல் சம்பிரதாயபூர்வமாக வெள்ளோட்டமிடப்பட்டது. பிரான்ஸிலுள்ள ஒரெஞ்சு மரைன் நிறுவனத்துக்காக மிக உயர்ந்த தரத்தில் உருவாக்கப்பட்ட இந்த கப்பலை அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி பாராட்டினார்.

கொவிட்19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வலுவாக நிற்கும் திறனை இது நிரூபிப்பதாக கொழும்பு கப்பல்துறை நிறுவனத்தின் தலைவர் ஹிதேகி தனகா தெரிவித்தார்.

ஜப்பானிய தனியார் நிறுவனத்துடன் இணைந்து இலங்கை அரச நிறுவனங்களில் 35% பங்குகளை வைத்திருக்கும் கொழும்பு கப்பற்துறை (Colombo Dockyard) நிறுவனம், 05 தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை கப்பல் நிர்மாணத்துறையின் சர்வதேசமயமாக்கலுக்கு பங்களித்து வருகின்றது.

## கிராம உத்தியோகத்தர்களுக்கு...

அதிகாரத்துக்கு இணையான அதிகாரத்தை கிராம உத்தியோகத்தர்களுக்கு வழங்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

கீழ் மட்டத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை இந்த பணித் தொடர்பில் வலுவூட்ட பொலிஸ் திணைக்களத்தின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதாக அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இனிவரும் காலங்களில் ஒருவரது தேசிய அடையாள அட்டை காணாமல் போகும் சந்தர்ப்பத்தில் அது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வேண்டிய அவசியமில்லை. கிராம உத்தியோகத்தரிடம் அது தொடர்பாக முறைப்பாட்டை செய்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அத்துடன் கிராங்களில் நடக்கும் சிறிய சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகளை பொலிஸ் நிலையத்துக்கு செல்லாது கிராம உத்தியோகத்தரிடம் முறைப்பாடு செய்ய சந்தர்ப்பம் கிடைக்கும்.

இந்த நடவடிக்கையால், மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு செல்லும் சந்தர்ப்பங்கள் குறையும்.

கிராம உத்தியோகத்தர்களை வலுவூட்டுவதற்காக அரச நிர்வாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்திடம் யோசனை ஒன்றை முன்வைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்திடமிருந்து இதற்காக முதல் கட்டமாக 8.5 மில்லியன் ரூபா நிதி கிடைக்க உள்ளதாகவும் அந்த சிரேஷ்ட அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். திருநெல்வேலியில் வாள் வெட்டு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியிலுள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றின் பாதுகாப்பு உத்தியோகஸ்தர் மீது வன்முறை கும்பல் ஒன்று வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அச்சுவேலி பத்தமேனி பகுதியை சேர்ந்த சதீஸ்குமார் சிந்துஜன் என்பவர் மீதே வாள் வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் , விடுதியின் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றைய தினம் சனிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய வன்முறை கும்பலே தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பி சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தாக்குதலில் காயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அதிக விலைக்கு ஐந்து...

விதிக்கப்பட்டுள்ளது. ஒரு முட்டை 60 ரூபாய் என்றடிப்படையில் ஐந்து முட்டைகளுக்கு 300 ரூபாய் அறவிட்டுள்ளார்.

## எரிபொருள் பவுஸர்...

கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

திருகோணமலை, 05 ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான எஸ்.பி. துசிந்த (வயது 43) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையிலிருந்து கம்பளை –புஸ்ஸலாவை எல்பொட தோட்டத்திலுள்ள தேயிலை தொழிற்சாலைக்கு தேவையான 6600 லீற்றர் டீசலை வழங்கிவிட்டு, கம்பளை நோக்கி திரும்பும் வழியிலேயே அதிகாலை 2 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. பௌசரில் எஞ்சியிருந்த டீசல் வெளியேறி பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொருள் பௌசருக்குள் சாரதியும், உதவியாளரும் இருந்துள்ளனர். சாரதி சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.உயிரிழந்தவரின் சடலம் புஸல்லாவை, வகுவப்பிட்டிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால், வீதியல் ஏற்பட்ட வழுக்கல் தன்மையால் சாரதியின் கட்டுப்பாட்டைமீறி வாகனம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. குறித்த பௌசரில் 13200 லீற்றர் டீசல் இருந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.இவ் விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை புஸ்ஸலாவ – புரட்டொப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில்வே திணைக்களம்...

சேவையாக முன்னெடுத்துச் செல்வதற்காக சிறந்த முகாமைத்துவ கட்டமைப்புக்குள் அதிகார சபையாக மாற்றுவது மிகவும் பயன் தரத் தக்கதென ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்க தரப்பிலும் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இங்கு எக்காரணம் கொண்டும் ரயில்வே திணைக்களம் தனியார் மயப்படுத்தப்படமாட்டாதென்றும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் கடந்த 03 ஆம் திகதி அமைச்சர் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்தே அமைச்சர் வாரமஞ்சரிக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தனிப்பட்ட குறிக்கோள்களின்றி பொதுப் போக்குவரத்துக்கு முக்கியத்துவமளித்து எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ரயில்வே திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொழிற்சங்கங்கள், ஆளணியினர் ஆகியோரின் கருத்துக்களை கேட்டறிந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் முக்கியத்துவம் பற்றியும் அமைச்சர் இங்கு சுட்டிக் காட்டினார்.

அமைச்சருடனான சந்திப்பில் கலந்துகொண்ட தொழிற்சங்கத்தினரும் ரயில்வே திணைக்களத்தில் தற்போதுள்ள நெருக்கடிகளை தீர்த்துக்கொள்வதற்கு இந்த யோசனை பயனுள்ளதாக அமையுமென்றும் தெரிவித்துள்ளனர்.

அமைச்சருடனான பேச்சுவார்த்தையில் ரயில்வே பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் உள்ளிட்ட அனைத்து தொழிற்சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்

## வவுனியா நொச்சிமோட்டையில்...

மூவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், 16 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்தில் பஸ் சாரதியான கோவிலடி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எஸ்.சிவரூபன் (வயது 32), யாழ். பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீடத்தில் கல்வி பயின்ற 23 வயதான இராமகிருஷ்ணன் சயாகரி என்ற மாணவியும்.

தம்பசிட்டி, பருத்தித்துறையைச் சேர்ந்த இராமலிங்கம் நிதர்சன் (வயது 24) ஆகியோரே பலியானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ் விபத்து நேற்று (05) நள்ளிரவு 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி வந்த இரண்டு அதி சொகுசு பஸ்கள் ஒன்றையொன்று முந்திச் சென்று வேகமாக பயணித்துக் கொண்டிருந்தன. இதன்போது ஒரு அதி சொகுசு பஸ் வவுனியா, நொச்சிமோட்டை பாலத்துடன் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. குறித்த விபத்தில் பஸ் சாரதி மற்றும் பெண் ஒருவர் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், 16 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்த 16 பேரில் 04 பேர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குளான பஸ்சின் பின்னால் வந்த மற்றைய அதி சொகுசு பஸ் விபத்துக்குள்ளான பஸ்சுடன் மோதுவதை தடுக்கும் வகையில் அதன் சாரதி செயற்பட்டதனால், பாலத்தின் மறுபுறத்தில் வீதியை விட்டு விலகி வாய்க்கால் பகுதிக்குள் சென்றது. அந்த அதி சொகுசு பஸ்சில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இவ் விபத்து தொடர்பில் வவுனியா மற்றும் ஓமந்தைப் பொலிசார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். விபத்துக்குள்ளான இரண்டு பஸ்களையும் பாரம் தூக்கியின் துணையுடன் இராணுவத்தினர் மீட்கும் நடவடிக்கையில் நேற்று காலை (05) ஈடுபட்டனர்.

இதன் காரணமாக ஏ 09 வீதிப் போக்குவரத்து இரண்டு மணி நேரத்துக்கு மேல் தடைப்பட்டிருந்ததுடன் நொச்சி மோட்டை பாலத்தின் இரு மருங்கிலும் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்றதையும் அவதானிக்க முடிந்தது.

## கல்வி அமைச்சரின் முடிவு

நிச்சயமாக இந்து மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறதென்பதுடன் சர்வதேச இந்து மத பீடமும் அதனை வரவேற்பதாக சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அரசாங்க அலுவலக அதிகாரிகள் அணியும் ஆடைகள் போல அவர்கள் விரும்பியவாறு அணியும் வண்ணம் இருப்பது போன்று பாரம்பரியமாக தங்களது உடைகளுடன் ஆசிரியர்கள் தமது பணிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட அவர்களுக்கும் அவர்கள் விரும்பிய வண்ணம் ஆடைகள் அணிய வேண்டும் என்ற கருத்தை ஆசிரியர் சங்கம் முன் வைத்திருந்தது.

நிச்சயமாக இது வரவேற்கத்தக்க விடயமல்ல. கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆசிரியர்களுக்கான இந்த பாரம்பரிய ஆடைகளில் கடைசி வரையும் நான் மாற்றங்களை கொண்டு வரப்போவதில்லை என்று அடித்துக் கூறியிருப்பது நிச்சயமாக இந்து மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

அதாவது இந்த பாரம்பரிய உடையானது ஆசிரியர்களுக்கு ஒரு தனித்துவமான கௌரவத்தையும் அதேபோன்று மாணவர்களுக்கு ஒரு தலைமைத்துவ உணர்வையும் அது எடுத்துக்காட்டுகின்றது. அதே வேளையில் ஒவ்வொரு மத ரீதியான பாடசாலைகள் உள்ளன.

அவர்கள் தங்கள் தங்கள் மதங்களைச் சார்ந்த பாடசாலைகளில் அவர்களது மதம் சார்ந்த அறிவுறுத்தல்களுக்கு அமைய அத்தகைய ஆடைகளை அணிந்து செல்கின்றார்கள்.

எனவே யாரும் விரும்பிய ஆடைகளை அணியலாமென்றால் அது சிலவேளை இத்தகைய மத ரீதியாக இயங்கும் பாடசாலைகளுக்கு கூட ஒரு பாதிப்பை ஏற்படுத்தி இது ஒரு இன விரிசலை ஏற்படுத்தக் கூடியவாறு இருக்கும்.

எனவே ஒரு கண்ணியமான பாரம்பரியமிக்க குறிப்பாக மத விழுமியங்களைச் சார்ந்த இந்த ஆடைகளை அணிந்து ஆசிரியர்கள் பணியில் ஈடுபடுவதே சாலச் சிறந்தது அது தொடர வேண்டும்.

இவ்வாறு கல்வியமைச்சரினால் தெரிவிக்கப்பட்ட ஆணித்தரமான கூற்றுக்கு இந்து மக்களும் பக்க பலமாக இருப்பார்களென சர்வதேச இந்து மத பீடத்தின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

# எங்கள் கருத்து

## வீண்பழி சுமத்தும் வியாபார தந்திரம்!

எரிவாயு மற்றும் திரவஎரிபொருள் கப்பல்களின் வருகை குறைந்து விட்டதாக அரச தரப்பிலிருந்து தகவல்கள் வெளியாகவில்லை. அவ்வாறிருக்கையில், சமையல் எரிவாயுவுக்கும் பெற்றோலுக்கும் திடீரென்று பற்றாக்குறை தோன்றியமைக்கான காரணங்கள் குறித்து ஆராயப்பட்டு அந்த உண்மை மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவது அவசியம். இல்லையேல் நாட்டு மக்கள் அரசை நோக்கியே சுட்டுவிரல் நீட்டுவார்கள் என்பது நிட்சயம்.

எரிவாயுவுக்கும் பெற்றோலுக்கும் அரசாங்கம் விரைவில் மேலும் விலையைக் குறைக்கப் போகின்றதென்ற செய்திகள் சமீப தினங்களாக மக்கள் மத்தியில் உலவி வருகின்றன. எரிபொருட்களின் விலைகள் திடீரெனக் குறைக்கப்படுமாக இருந்தால், பொதுமக்களுக்கு அது நன்மையளிக்குமென்தில் ஐயமில்லை. ஆனால் அவற்றை கையிருப்பில் வைத்திருக்கும் வியாபாரிகள் நஷ்மடைவார்கள் என்பது தெரிந்த விடயம்.

இவ்வாறான நஷ்டத்தை தவிர்ப்பதற்காகவே பெற்றோலையும் எரிவாயுவையும் விற்பனையாளர்கள் புதிதாக கொள்வனவு செய்வதைத் தவிர்த்தார்கள் என்றொரு தகவல் உலவுகின்றது. எனவேதான் எரிபொருட்களுக்கு திடீரென்று பற்றாக்குறையொன்று உருவெடுத்தது என்று வெளியாகியுள்ள அத்தகவலின் உண்மைத்தன்மை அறியப்பட வேண்டும்.

விலைகள் உயரப் போகின்றன என்று தெரியவந்ததும் வியாபாரிகள் பொருட்களைப் பதுக்குவது என்பது எமது நாட்டில் காலம்காலமாக இருந்து வருகின்ற கலாசாரம். அது வியாபாரிகள் சமூகத்தில் பழகிப் போன இயல்பாகும். ஆனால் விலைகள் குறையப் போகின்றன என்பதற்காக கையிருப்பையே காலியாக வைத்திருப்பதென்பது மற்றொரு புதிய வியாபார கலாசாரமாகவே தெரிகின்றது.

எது எவ்வாறாக இருந்த போதிலும், அத்தியாவசியப் பொருட்களுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு முடிவு காணப்பட வேண்டியது அவசியம். இல்லையேல் அரசாங்கம் வீண்பழியையே சுமக்க வேண்டியிருக்கும்.

## சமஷ்டி முறைத் தீர்வு முயற்சி;...

பதிலடி கொடுக்கும் வகையிலேயே பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தலைவர்கள் பிளவுபட்டிருக்கின்றார்களென்று சாக்குப் போக்குக் கூறி, சமாளிப்பதை விடுத்து, சமஷ்டித் தீர்வுக்கு வழி ஏற்படுத்துங்கள்.

தமிழ்த் தலைமைகள் வெவ்வேறு கட்சிகளில் வெவ்வேறாகப் பிரிந்து நிற்கலாம். அவர்களின் அணுகுமுறைகள், போக்குகள் வேறுபடலாம். ஆனால், தேசிய இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலேயே தீர்வு என்பதில் அவர்கள் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளனர். இந்நிலையில், தமிழ் தலைமைகளிடையே பிளவு, வேறுபாடு, கருத்து முரண்பாடு, குத்துவெட்டு என்று சாக்குப் போக்குச் சொல்லி விடயத்தைச் சமாளிப்பதை விடுத்து, தமிழ் தலைமைகளின் இந்த ஒன்றுபட்ட நிலைப்பாட்டை கவனத்தில் எடுத்து, அதில் பொதிந்துள்ள நீதி, நியாயத்தைப் புரிந்து கொண்டு, விரைந்த தீர்வுக்கு முன்வாருங்கள். அத்துடன் காலத்தை இழுத்தடித்துச் சாக்குப் போக்குக் கூறிச் சமாளிப்பதை நிறுத்த வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இரு கட்சிகளும் சங்கமமா? எவ்வித...

காங்கிரஸோடு தமிழ் முற்போக்குக் கூட்டணி சங்கமமென்று கூறுவதில் எவ்வித உண்மையும் கிடையாது. அவர்கள் கட்சி ரீதியாக ஒரு நிகழ்வுக்கு எம்மை அழைத்தனர். நாம் சென்று வந்தோம் அவ்வளவுதான் என்றார்.

மலையக மக்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றை தீர்க்க நாம் ஒரு போதும் பின்னிக்கப் போவதில்லை. மக்களின் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர அவர்களோடு நாமும் எம்மோடு அவர்களும் இணைந்து செயற்படுவதொன்றும் தவறில்லையே. அதே நேரம் இரண்டு கட்சிகளும் சங்கமமென்று கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. குழப்பமும் கிடையாது. நிகழ்வுக்கு வைபவ ரீதியாக எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. நாம் கூட்டணி ரீதியாக சென்று வந்திருந்தோம். அவ்வளவுதான் அதை தவிர அந்த கட்சியும் இந்த கட்சியும் இணைந்து செயல்படுவதாக கூறுவதில் எவ்விதமான உண்மைகளும் கிடையாதென திட்டவட்டமாக கூறினார்.

## மிக நெருங்கிய தொடர்புகளால்...

தேவையில்லையென்றும் கொரோனா தொற்று போன்ற வைரஸ் தொற்று நோயல்ல என்றும் தனிமைப்படுத்தல், விமான நிலையத்தை மூடுதல், கடைகளை மூடுதல் என்பன அவசியமில்லையென்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் (04) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நோய்க் கட்டுப்பாட்டு முறை சரியான முறையில் அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும், அதனால் குரங்கம்மை தொற்றுள்ள நபரை விரைவாக அடையாளம் காண முடிந்ததாகவும் வைத்தியர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

நெருங்கிய தொடர்பு மூலம் மட்டுமே குரங்கம்மை நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவுமென்றும், அது பல்வேறு வழிகளில் ஏற்படலாமென்றும் அவர் கூறினார். இந்த நோய் சிக்குன் குனியா போன்றது. இவ்வாறான வைரஸ் பாதிப்புகள் அவ்வப்போது ஏற்படும். எனினும், இந்நோய் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறும், தேவையான சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறும் சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அத்துடன் சந்தேகத்திற்கிடமான நோயாளிகளை சுகாதார திணைக்களம் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன,

இலங்கையில் முதல் குரங்கம்மை நோயாளி பதிவாகினார். 19 வயதுடைய நபரரான இவர், நவம்பர் 01ஆம் திகதி வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளார். சந்தேகம் ஏற்பட்டதால், மருத்துவர்கள் அவரது மாதிரிகளை 02 ஆம் திகதி மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு அனுப்பி, அந்த நபரை மருத்துவமனையில் அனுமதிக்க ஏற்பாடு செய்தனர். மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், நோயாளிகுரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டது. தற்போது மருத்துவக் கண்காணிப்பில் அவர் நலமுடனுள்ளார். அவருடன்நெருங்கிப் பழகியவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதற்காக மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளுக்கான அனைத்து வசதிகளும், மருந்துகளும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ளன.

குரங்கம்மை நோயாளிகள் பற்றிய செய்திகளை வெளியிடும் போது அவர்களின் பெயர்கள் மற்றும் கிராமங்கள், சேருமிடங்கள் உள்ளிட்ட தனிப்பட்ட தகவல்களை வெளியிடுவதைத் தவிர்க்குமாறு அனைத்து ஊடகங்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்த தவறு கொவிட்19 தொற்று காலத்திலும் செய்யப்பட்டது. இதனால் நோயாளிகள் மருத்துவ பரிசோதனைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வாறு நடக்கக்கூடாது. சந்தேகத்துக்கிடமான நோயாளி இருந்தால், அருகிலுள்ள வைத்திய நிலையத்துக்கு செல்ல வேண்டும். உங்கள் அடையாளத்துக்குச் சிக்கலாக இருக்கும் எந்தத் தகவலையும் நாம் ஊடகங்களுக்கு வழங்க மாட்டோமென்றும் தெரிவித்தார்.

“இந்த ஆண்டு மே மாதத்தில் இந்த வைரஸ் உலகில் பரவத் தொடங்கியது. இது ஐரோப்பா மற்றும் பிற நாடுகளில் பரவி தற்போது குறைந்து வருகிறது. தெற்காசிய நாடுகளை பொருத்தவரை, இதுவரை 23 நோயளிகள் பதிவாகியுள்ளனர். இவர்களில் ஒரு நோயாளி மரணித்துள்ளார். உலகளவில் இதுவரை 73,434 நோயாளிகள் பதிவாகியுள்ளனர், அதில் 29 நோயாளிகள் மட்டுமே இறந்துள்ளனரென்றும் அவர் தெரிவித்தார்.



# மலையகத்தின் மறுமலர்ச்சிக்கான குரல்கள் வெறும் வாக்கு வங்கியை இலக்கு வைத்ததா?

**மலையக அரசியல் மறுமலர்ச்சியடையும் புதிய சூழல் தயார்படுத்தப்படுகிறது. அரசியல் உரிமைக்காகப் போராடுவதா அன்றாட உழைப்புக்காகப் போராடுவதா? இந்தளவுக்கு இம்மக்களின் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. காலனித்துவ ஆட்சிதொட்டு காலாகாலமாக ஏமாற்றத்துக்குப் பழகிப்போன இம்மக்கள், இனி எதிர்கொள்ள எந்தச் சவால்களும் இல்லை. இந்த இருநூறு வருடங்களில் எதிர்கொள்ளாதவை எவையும் இல்லை.**

"பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக கொண்டுவரப்பட்ட இவர்களை இலங்கையிலா குடியேற்றுவது? இவர்களைக் கொண்டுவந்த வெள்ளையர்களே வெளியேறிவிட்டனர், இவர்களுக்கு என்ன வேலை இங்கு?" இவ்வாறான கோணங்களில்தான், இம்மலையக மக்கள் நோக்கப்படுகின்றனர்.

இந்நோக்குகளை நீக்கத்தான் 1950 காலப் பகுதியில், சௌமியமூர்த்தி தொண்டமான் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை ஸ்தாபித்தார். இதனால் காந்தி, நேரு காலத்தில் இந்திய, இலங்கை காங்கிரஸ் என்று ஆரம்பமான இவர்களது உரிமைக்குரல் பின்னர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக தனித்துவம் பெற்றது.

'நாட்டுக்காக உழைக்க வந்தோம், இப்போது சமூகத்துக்காக ஆளப்போகிறோம்", இந்தப் பாணியில்தான் தமிழ் முற்போக்கு கூட்டணி உழைக்கப் புறப்படுகிறது. இந்தப் புறப்படுகை வீச்சுடையதாக இருப்பதற்காக மலையக அரசியலின் உந்துசக்திகள் எல்லாம் ஒன்றுபட்டுள்ளன. ஜீவன் தொண்டமான், பழனி திகாம்பரம் இன்னும் இராதாகிருஷ்ணன் ஆகியோருக்கிடையில் அண்ணன், தம்பி உறவுகள் பரிமாறுமளவுக்கு அந்நியோன்யம் அதிகரித்துள்ளது.

மலையகப் பல்கலைக்கழகம், குடும்பத்துக்கொரு காணித்துண்டு, கிலோக்கொழுந்துக்கு இத்தனை ரூபா, ஏன்? குடியிருக்க ஒரு வீடு, இதுபோன்ற முன்னேற்றத் திட்டங்கள் எல்லாம் "சீசன்" வியாபாரங்களாகிவிட்டன. இதற்குப்பிறகாவது மலையக குமரர்களின் கட்சிகள் ஒன்றுபடுவதில்லையா?

உழைப்பின் வியர்வைத் துளிகளுக்கேற்ற ஊதியம் கிடைக்காமல் இருநூறு வருடங்கள் போராடுவதென்பது, எந்த ஜென்மத்திலும் எமது தலையெழுத்துக்களாக இல்லாதிருக்க முதலில் நாம் பிரார்த்திப்போம். இந்தப்பிரார்த்தனைகளுடன்மலையகத்தின் இன்றைய அரசியல் புறப்பாடுகளும் பலனளிக்க குன்றத்துக் குமரனை வேண்டுவோம்.

கண்ணுக்குக் குளிர்ச்சியும் மனதுக்கு மகிழ்ச்சியும் அறிவுக்கு அற்புதத்தையும் அள்ளித்தரும் அழகுமிகு குன்றங்கள் குவிந்துள்ள இடம் மலையகம். மலைச்சாரல்களில் வழிந்தோடும் நீரும் மரங்களின் சாயல்களில் மயங்கும் மாலையும் கதிரவனின் ஒளியில் தெளியும் பொழுதுகளும்தான் உல்லாசப் பயணிகளை இங்கு வர உற்சாகப் படுத்துகிறது. பறவைகளின் பாடல்களும் பட்சிகளின் ரீங்காரமும் மற்றும் பசுமையின் ஊடுருவல்களுமே இங்கு வருவோரை வரவேற்கிறது.

இத்தனை வசந்தமிகு பிரதேசமிது. வசந்தம் மட்டுமா? நமது நாட்டை வாழவைக்கும் பொருளாதாரத்தின் முதுகெலும்பும் இதுதான். ஆனால், வளர்ச்சியின்றி உள்ளது.





கறுவா, ஏலம், கராம்பு, இறப்பர் மற்றும் தேயிலை உட்பட வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதிகளும் உல்லாசத்துறையும் அந்நியச் செலாவணியின் அரைவாசியை உழைக்கிறது. இந்த உழைப்புக்காக சிந்தப்படும் பல இலட்சம் பேரின் வியர்வைத்துளிகள்தான் மலையக மலைச்சாரல்களில் வழிந்தோடுகின்றன. தேசியப் பொருளாதாரத்தின் முதுகெலும்பான இத் தேசத்தவர்கள், ஒரு தேசியத்துக்குள்ளும் உள்வாங்கப்படாது முதுகெலும்பிழந்துள்ளனர். வானைத் தொடும் குன்றங்களையுடைய இம்மக்கள், வாழ்வதற்கு குடிசை கூட இல்லாதுள்ளனர். "பொன்னோடு வந்து, கறியோடு பெயர்வர்" என்ற வரலாற்றுப் பதிவுகள், வாசனைத் திரவியங்களின் வியாபாரத்துக்கான சான்றுகளாகவும் உள்ளன. எனவேதான், உழைப்பாளர்களாக மட்டுமில்லாமல், ஆட்சியில் உரிமை கோரவும் புறப்பட்டுள்ளது மலையக அரசியல்.

மதுபான போத்தல்களுக்கும் விலைபோகும் விடயங்களுக்கும் பணத்துக்கு பணியும் மனநிலைக்கும் மலையக வாக்குகள் சோரம் போகவே கூடாது. இந்தச் சோரம்போதல் கலாசாரம் இல்லாது ஒழிய, ஏட்டிக்குப் போட்டியான அரசியல் ஒழிவது அவசியம். இதுதான், இப்போது ஒழிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் தேசிய முன்னணி (திகாம்பரம்), மலையக மக்கள் முன்னணி (ராதாகிருஷ்ணன்), ஜனநாயக மக்கள் முன்னணி (மனோகணேசன்), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (ஜீவன்தொண்டமான்) கட்சிகள் ஒன்றிணைந்தால் போட்டி அரசியலுக்கு இடமிருக்காது. போட்டி அரசியலின் விலகலுடன் பொறாமை அரசியலும் விடைபெற்றுவிடும்.

இவையில்லாத மலையகத்தில் நிதானம் பிறக்கும். வாக்குகளின் சக்தி தெரியவரும். சமூகம் மற்றும் சமவாழ்வு என்ற சிந்தனை வளரும். இவ்வாறானதொரு முன்னேற்றத்தை நோக்கிய புறப்பாடுகள்தான், மலையகத்தின் இருநூறுவருட இன்னல்களுக்கு இனிப்பான செய்தியைத் தரும். இந்த இனிப்பு வெறும் வார்த்தைகளில் இருத்தலாகாது.

இரட்டைக்குழல் துப்பாக்கி, இனியும் இல்லை வேறுபாடு, மலையகத்தின் மறுமலர்ச்சி என்றெல்லாம் தற்போது ஒலிக்கத் தொடங்கியுள்ள வார்த்தைகள் வாக்குகளுக்காக இருத்தலாகாது. மாறாக குன்றத்துப் பிறப்புக்களின் குல வாழ்வுக்காக இருக்கட்டும்.

**சுஐப் எம்.காசிம்...**

# ஆட்சி மாற்றமும் தேர்தலும் என்ன மந்திரக் கோலா?

## எல்லாவற்றுக்குமான பரிகாரத்தைத் தர?

**“ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டிவிடும்” என்று எதிர்க்கட்சிகள் சொல்கின்றன. எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் என்று சொல்லப்படுவோராலும் அப்படித்தான் கூறப்படுகிறது. ஏறக்குறைய இது ஒரு பொது நம்பிக்கையாகவே வளர்க்கப்பட்டுள்ளது.**

இதற்குக் காரணமும் உண்டு. ராஜபக்ஷக்கள் நேரடியாகப் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலும் அவர்களுடைய அதிகாரப் பிடியிலிருந்து ஆட்சி மாறவில்லை. இன்னும் பொதுஜன பெரமுனவே ஆட்சியில் செல்வாக்குச் செலுத்துகிறது. அதாவது ராஜபக்ஷவினரே நிழல் ஆட்சி செய்கின்றனர். ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக இருந்தாலும் அவரால் பொதுஜன பெரமுனவை – ராஜபக்ஷக்களைக் கடந்து சுயாதீனமாக எந்தத் தீர்மானத்தையும் எடுக்க முடியாத சூழலே நிலவுகிறது. இதனால்தான் அமைச்சரவையிலும் அரசியல் தீர்மானங்களிலும் பொதுஜன பெரமுனவின் செல்வாக்குத் தொடர்கிறது.

ரணில் விக்கிரமசிங்க தட்டாமல் முட்டாமல் ஒருவாறு சாதுரியமாக – கெட்டித்தனமாக ஆட்சியைக் கொண்டு போகிறார் என்பது உண்மையே. இது எப்போது, எங்கே முட்டும் என்று சொல்ல முடியாது. “நித்திய கண்டம். தீர்க்க ஆயுள்” என்று சொல்வார்களே, அதைப் போல இந்த ஆட்சிக்கு எப்பொழுது, என்ன நடக்கும் என்று தெரியாமல் தத்தளிக்கும் நிலையே உண்டு. இதை மீறிச் செயற்படக் கூடிய பலம் இன்னும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உருவாகவில்லை. பொதுஜன பெரமுனவைக் கட்டுப்படுத்துவதற்கே அனைத்துக் கட்சிகளின் ஆதரவோடு தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தார். ஆனால் அது சாத்தியமற்றுப் போனது.

இவ்வாறான சூழலில்தான் “உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்” என்று ஆளும் தரப்பைத் தவிர, அனைத்துக் கட்சிகளும் கூட்டாகக் கேட்கின்றன. அதாவது இனி நடக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலை ஒரு சர்வரோக நிவாரணியாக இவை பார்க்கின்றன அல்லது அப்படிக் காட்ட முற்படுகின்றன. அரகலய போராட்டத் தரப்பினரும் இதையே வலியுறுத்துகின்றனர்.

ஆனால், இந்த ஆட்சி கலைக்கப்பட்டுப் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால், அதற்குப் பிறகு உருவாகும் ஆட்சி சர்வரோக நிவாரணியாக அமையுமா? அல்லது அதுவும் வெறுமனே ஆள் மாற்றம் – தலைமை மாற்றம் என்ற அளவில் சுருங்கிக் கிடக்குமா? எனக் கேட்க வேண்டியுள்ளது.

ஏனென்றால், நாடு பல வகையிலும் மிக மோசமான நெருக்கடி நிலைக்குத்தள்ளப்பட்டிருக்கின்ற இந்தச் சூழலிலும் கூட, உண்மையான பிரச்சினை என்ன? இது எதனால், எப்படி ஏற்பட்டது? என்பதைப் பற்றிப் பகிரங்கமாகப் பேசுவதற்குப் பலரும் தயங்குகின்றனர். ஆதார அடிப்படைப் பிரச்சினையைத் தந்திரமாகத் தவிர்த்து விட்டு, ராஜபக்ஷக்களினால்தான் நாட்டுக்கே பேரழிவு ஏற்பட்டது என்று சுருக்கிக் காட்ட முற்படுகின்றனர். நாட்டை முடக்க நிலைக்குக் கொண்டு வந்ததில் ராஜபக்ஷக்களுக்குக் கூடுதல் பொறுப்புண்டு. அதை மறுக்க முடியாது. அதைப்போல இதுவரையில் ஆட்சியிலிருந்தோருக்கும் அப்போதெல்லாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதரவளித்தோருக்கும் பொறுப்புண்டு. எனவே அனைவரும் இதில் தமது பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

> **இவ்வளவுக்கும் மிக வளமான நாடு நமது. விவசாயச் செய்–கைக்குரிய இயற்கை வளமும் கால நிலைப் பொருத்தமும் மிகச் சிறப்பாக உள்ள நாடு. உலகில் உள்ள அனைவரும் நம்முடைய நாட்டைப் பார்த்து ஆசைப்படுகிறார்கள். இந்த நாட்டைச் சரியாக நிர்வகித்திருந்தால் இன்று எவ்வளவு பெரிய வளர்ச்சியை எட்டியிருக்க முடியும்! உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உருவாக்கியிருக்கலாம். மெய்யாகவே ஆசியாவின் ஆச்சரியமாக இருந்திருக்கும்.**

ஆனால், இதில் நேர்மையாக யாரும் செயற்படுவதாகக் காணமுடியவில்லை. காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கான வழிமுறைகளைப் பற்றி இதுவரையில் ஒருவர் கூட, ஒரு கட்சி கூட தங்கள் பக்கத்தில் உள்ள திட்டம் என்ன, நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றிப் பேசக் காணோம்.

முக்கியமாக இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு? அதை எப்படிக் காண்பது? எவ்வளவு கால எல்லைக்குள் காண்பது? அதற்கான வழிமுறை என்ன? என்பதைக் குறித்து இதுவரையிலும் யாருமே பேசவில்லை.

இவ்வளவுக்கும் இனப்பிரச்சினை எழுபது ஆண்டுகளுக்கு மேலாக நாட்டைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறது. இதைப்பற்றிப் பேசாத நாட்களுண்டா? பேசாத கட்சிகள், தலைவர்கள், ஊடகங்கள் உண்டா? இதைத் தீர்ப்பதற்கென்று கடந்த அறுபது ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த அத்தனை அரசாங்கங்களும் முயற்சி எடுத்தன. அல்லது அப்படிக் காண்பித்தன. இருந்தும் இன்னும் அது தீர்க்கப்படவேயில்லை.

பதிலாக இந்தப் பிரச்சினை மேலும் மேலும் விரிவடைந்து பல புதிய பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது. இனப்பிரச்சினையோ முன்னரை விட உச்சமான கொதிநிலையை அடைந்துள்ளது. அத்துடன் உள்நாட்டுப் பிரச்சினை என்ற நிலையைக் கடந்து இப்பொழுது சர்வதேச ரீதியாகப் பேசப்படுகின்ற தலையீடுகளைச் செய்கின்ற அளவுக்கு வளர்ந்துள்ளது.

இனப்பிரச்சினையினால் எத்தனை உயிர்கள் மாண்டுள்ளன? எத்தனை அருமையான மனிதர்களை இழந்திருக்கிறோம்? மனித இழப்பு என்பது தேசத்தின் வளங்களில் ஒன்றாகும். அருமையான வளம். பிற நாடுகள் ஆற்றலுள்ளோரைப் பல வழிகளிலும் தமது நாட்டுக்குள் உள்ளீர்க்கின்றன. அப்படி உள்ளீர்த்துப் பயனடைகின்றன. ஆனால், நாம் அந்த வளத்தை அழித்துப் புதைக்கிறோம். யுத்தத்தினால் எத்தனை கோடி ரூபாய் பெறுமதியான சொத்துகளையும் இயற்கை வளத்தையும் அழித்திருக்கிறோம்?

இன்றைய பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணங்களில் ஒன்று யுத்தச் செலவீனமாகும். இப்பொழுது கூட பெருமளவு நிதி பாதுகாப்புத் தரப்புக்கே செலவழிக்கப்படுகிறது. இந்தச் சிறிய நாட்டுக்கு இது தாக்குப் பிடிக்க முடியாதது என்று பொருளாதார நிபுணர்கள் தொடர்ந்தும் எச்சரிக்கின்றனர்.

இப்படியெல்லாம் இருந்தும் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும். அதிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் யாருக்கும் வரவில்லை.

ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் எல்லாம் சரியாகி விடும் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்கிறார்கள். இது சுத்த ஏமாற்றன்றி வேறென்ன? இவ்வாறுதானே ஒவ்வொரு ஆட்சியின்போதும் சொல்லப்படுகிறது – வாக்குறுதி அளிக்கப்படுகிறது. தேர்தல் வெற்றிக்குப் பிறகு, நடைமுறை வேறாகி விடுகிறது.

ஆகவே இது வெறுமனே அதிகாரப் போட்டியே தவிர, வேறில்லை என்பது மிகத் தெளிவானது. இதற்காக தேர்தல் வரக்கூடாது, இந்த ஆட்சி மாறக்கூடாது என்று இங்கே நாம் வாதிடவில்லை. மாற்றுத் தீர்மானங்கள், தீர்வுக்கான வழிமுறைகள் பற்றிய தெளிவும் உறுதிப்பாடும் இல்லாமல் வெறுமனே ஆட்சி மாறுவதால் – தலைகள் மாறுவதால் எந்தப் பயனும் ஏற்படாது. அது வழமையைப் போல தலைகள் – ஆட்கள் – கட்சி மாறுவதாக மட்டுமே அமையும்.

> **நமக்கு முன்னே உள்ள எந்தப் பிரச்சினைக்கும் நாம் தீர்வு காண்பதில்லை. பதிலாக அவற்றைப் பேசிப் பேசியே பராமரித்துக் கொள்கிறோம்.**

இரண்டரைக் கோடி மக்கள் வாழும் நாட்டில் 25 லட்சம்பேர் நாளாந்த உணவுக்கே அல்லற்படுகிறார்கள். அதாவது, பத்தில் ஒரு பங்கினர் பசியாலும் பிணியாலும் துன்பப்படுகிறார்கள். இது வெட்கக் கேடில்லையா? இதையிட்டு எத்தனை பேருக்கு கவலை உண்டு?

இவ்வளவுக்கும் மிக வளமான நாடு நமது. விவசாயச் செய்கைக்குரிய இயற்கை வளமும் கால நிலைப் பொருத்தமும் மிகச் சிறப்பாக உள்ள நாடு. உலகில் உள்ள அனைவரும் நம்முடைய நாட்டைப் பார்த்து ஆசைப்படுகிறார்கள். இந்த நாட்டைச் சரியாக நிர்வகித்திருந்தால் இன்று எவ்வளவு பெரிய வளர்ச்சியை எட்டியிருக்க முடியும்! உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உருவாக்கியிருக்கலாம். மெய்யாகவே ஆசியாவின் ஆச்சரியமாக இருந்திருக்கும்.

ஆனால், எல்லோருமாகச் சேர்ந்து ஆசியாவின் கண்ணீர்த்துளியாக அல்லவா இலங்கையை மாற்றி வைத்திருக்கின்றனர். இலங்கை சுதந்திரம் பெற்றபோது அந்நியச் செலாவணி மிக உச்சத்தில் இருந்தது என்று சொல்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. உண்மையும் அதுதான். அதற்குப் பிறகு அந்த நிலையைத் தலைகீழாக்கியது யார்? நமது அருந்தலைவர்கள் தானே! இனவெறி போதையாகித் தலைக்குள் புழுக்கத் தொடங்கியவுடன் நமக்குக் கண்ணும் தெரியவில்லை. மண்ணும் புரியவில்லை. அதனால்தான் தலைவர்கள் தவறாகச் செயற்படும் போதெல்லாம் அதைக் காணாமலே இருந்தோம். இப்போதும் அப்படித்தான் இருக்க முற்படுகிறோம்.

இப்பொழுது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு உலகமெல்லாம் பிச்சைப் பாத்திரம் ஏந்துகின்ற போது கூட இனவாதத்தைக் கைவிட வேண்டும். ஜனநாயகத்தைச் செழிப்பூட்ட வேண்டும். ஐக்கியத்தை உருவாக்க வேண்டும். ஊழலை ஒழிக்க வேண்டும். அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். பன்மைப் பண்பாட்டுக்கு இடமளிக்க வேண்டும் என்ற எண்ணம் வரவில்லை.

உலகில் ஒவ்வொரு நாடும் ஜனநாயக விழுமியச் செழிப்பை உண்டாக்கி, வளர்ச்சியில் முன்னேறிச் சென்று கொண்டிருக்கின்றன. ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கின்ற நாடுகள் அழிவில் சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கின்றன. இந்த வேறுபாட்டை, இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, நம் நாட்டில் ஜனநாயகத்தை விருத்தியாக்க வேண்டும் என்றோ, மக்களுக்கான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்றோ யாரும் சிந்திக்கக் காணோம்!

இந்தத் தவறுகள்தான் நெருக்கடிகளைத் தொடராக உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. மீளவும் அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் வீதிக்கு இறங்கத் தொடங்கியுள்ளனர். கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைக் கோரி, ஜனநாயக அடிப்படைகளை வலியுறுத்தி, கட்டற்ற அதிகாரத்துக்கு எதிராகத் தெருவிலே முழக்கமிடுகிறார்கள். இந்தப் போராட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் படைகளை நிறுத்துகிறது. இதனால் அமைதியின்மை உருவாகிறது.

உள்நாட்டு நெருக்கடி அமைதியின்மையையே எப்போதும் உருவாக்கும். அமைதியின்மை நாட்டின் வருவாயைப் பாதிக்கும். குறிப்பாக சுற்றுலாத் துறைக் கடுமையாகப் பாதிக்கும். முதலீடுகளைப் பாதிக்கும். மக்களுடைய உழைப்பு நேரத்தையும் உழைப்புச் சக்தியையும் பாதிக்கும்.

நாடு இன்னும் டொலர்ப் பற்றாக்குறையிலிருந்து மீளவேயில்லை.

இப்போது கூட மசகு எண்ணெயுடன் வந்திருக்கும் கப்பல் ஒன்று 44 நாட்களாகக் கடலில் தரித்து நிற்கிறது. தாமதக்கட்டணம் மட்டும் 99 கோடி ரூபாய் செலுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. இந்தக் கட்டணம் மக்களுக்கு மேல்தானே செலுத்தப்படப்போகிறது. இந்தளவுக்கு யதார்த்தம் நம்முடைய அடிப்பக்கத்தைச் சுட்டாலும் நமக்குப் புத்தி வரவில்லை. அந்தளவுக்கு இனவாதத்திலும் (கட்சி) தலைமைத்துவ விசுவாசத்திலும் பைத்தியக்காரத்தனமாக ஊறிப்போய் கிடக்கிறோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)



**கருணாகரன்...**

# பொருளாதார நெருக்கடியை சாதகமாக பயன்படுத்தும் சமூகவிரோத கும்பல்கள்!

**கொவிட் தொற்று ஆபத்திலிருந்து ஓரளவுக்கு வெளியே வந்துள்ள எமது நாடு பாரிய பொருளாதாரச் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில், தற்போது பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**

குறிப்பாக அதிகரித்துள்ள பணவீக்கம் காரணமாக பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளது. அக்குடும்பங்கள் அன்றாட செலவுகளை எதிர்கொள்ள முடியாத நிலைமைக்குச் சென்றுள்ளன. இதுபோன்ற காரணிகள் பலரை சமூகச் சீரழிவு நடவடிக்கைகளுக்குள் தள்ளிவிட்டுள்ளன. பிரதானமாக போதைப் பொருள் பயன்பாடு பற்றிய சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அதிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளமை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்தும் வந்துகொண்டே இருக்கின்றன.

மக்கள் எதிர்கொள்ளும் தற்போதைய சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் சமூகவிரோத கும்பல்கள், நாட்டின் எதிர்காலமாக விளங்கக் கூடிய அடுத்த தலைமுறையினை போதைக்கு அடிமையாக்குவதற்கு முயற்சித்துள்ளன. பாடசாலைகளுக்கு அண்மித்த பகுதிகளில் போதைப்பொருட்களை விற்பனை செய்யும் சம்பவங்கள் நாட்டின் பல இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன.

குறிப்பாக 'ஐஸ்' என்ற போதைப் பொருளே தற்பொழுது பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகம் பயன்படுத்தப்படுவதாகப் பொலிஸார் தரப்பில் கூறப்படுகிறது. கொழும்பு நகரம் உள்ளிட்ட பிரதான நகரங்களில் காணப்படும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் இந்தப் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இதனைத் தடுப்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியிருப்பதுடன், உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிப்புரை விடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

கொழும்பு நகரில் குறைந்த வருமானம் பெறும் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் பலர் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பது அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், அங்குள்ள மாணவர்களுக்கு பாடசாலையில் உணவு வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து, பாடசாலை நேரம் முடிவடைந்த பின்னரும் அவர்களைப் பாடசாலையிலேயே வைத்திருந்து தலைமைத்துவப் பயிற்சிகள் போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறியிருந்தார்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் உள்ள சிறிய பெட்டிக்கடைகளில் போதைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் வெளிவருகின்றன.



## போதைப்பொருள் பாவனையை ஒழிப்பது அரசினால் மாத்திரம் சாத்தியமாகின்ற காரியமல்ல; பெற்றோர், சமூகநலன்விரும்பிகள் போன்ற அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டும்!



டொபி போன்ற போர்வையில் இவை வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த பொலிஸாரை களமிறக்கினாலும் பெற்றோர் மற்றும் பாடசாலையின் அயல்வாசிகள் என அனைவரும் கூட்டுப் பொறுப்புடன் செயற்பட்டாலேயே இக்குற்றச்செயலைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்தப் போதைப்பொருள் பாவனை யாழ் மாவட்டத்திலும் சடுதியாக அதிகரித்திருப்பது அண்மைக் காலமாக வெளிச்சத்துக்கு வந்துள்ளது. கடந்த காலங்களில் இந்தியாவிலிருந்து கடத்தி வரப்பட்ட கேரள கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் அதிகளவில் கைப்பற்றப்பட்டிருந்த போதும், தற்பொழுது 'ஐஸ்' என்ற போதைப்பொருளே அதிகம் பயன்படுத்தப்படுவதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக யாழ் மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இது அதிகரித்துள்ளது.

பல தசாப்தங்கள் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி அதிலிருந்து ஓரளவு தலை நிமிர்ந்து வந்து கொண்டிருக்கும் நிலையில், இதுபோன்ற சமூகவிரோத செயல்களால் அங்குள்ள அடுத்த தலைமுறை மீண்டும் பாதாளத்துக்குள் தள்ளப்படும் நிலைமை ஏற்பட்டிருப்பதாகப் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான சமூகவிரோத செயற்பாடுகளைத் தடுப்பதற்கு அதிகாரம் படைத்தவர்கள் நடவடிக்கை எடுப்பது ஒருபுறம் இருக்க பெற்றோருக்கும் இதில் முக்கிய வகிபாகம் உள்ளது என்பதை யாரும் மறுதலிக்க முடியாது. போதைப்பொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்த சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அப்பால் சமூகத்தின் கூட்டுப்பொறுப்பும் பிரதிபலிக்கப்பட வேண்டும்.

மறுபக்கத்தில் நாட்டில் தற்பொழுது அதிகரித்துள்ள ஐஸ் எனப்படும் போதைப் பொருளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் சட்டத்திலும் திருத்தம் கொண்டுவந்துள்ளது. போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டத்தில் குறித்த போதைப்பொருளையும் உள்ளடக்கி அதற்குரிய தண்டனைகளை நிர்ணயிப்பதற்கு ஏற்ற வகையில் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. கடந்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் குறித்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்காலத்தில் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகளால் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

> **பாடசாலை மாணவர்களை இலக்கு வைக்கும் போதைப்பொருள் மாபியாக்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்திருத்தம்!**

நாட்டில் தற்பொழுது காணப்படும் அசாதாரணமான சூழல் மற்றும் மக்கள் மத்தியில் காணப்படும் பொருளாதார நெருக்கடி என்பவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதற்கு போதைப்பொருள் வியாபார மாபியாக்கள் முயற்சிக்கின்றன. நாட்டில் தளம்பல் நிலைமை ஏற்படும்போது அவற்றை சமூகவிரோதக் கும்பல்கள் கடந்த காலங்களிலும் பயன்படுத்திக் கொண்டுள்ளதைக் காண முடிந்தது. அதேபோன்றதொரு நிலைமையையே அவர்கள் மீண்டும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இந்தப் போதைப்பொருள் பாவனை பாடசாலை மாணவர்கள் மத்தியில் மாத்திரமன்றி கூலித்தொழிலாளர்கள் உள்ளிட்ட தரப்பினர் மத்தியிலும் அதிகம் காணப்படுகிறது. விசேடமாக மாநகரசபைகள் மற்றும் நகரசபைகளில் பணியாற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பலர் காலையில் வேலைக்கு வரும்போதே போதைவஸ்து பயன்படுத்திவிட்டு வருவதாகவும், இதனால் அவர்களிடமிருந்து உரிய முறையில் வேலைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் நாட்டில் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்தும் உரிய சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாது போகும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. அதேபோன்று, போதைப்பொருள் பயன்பாட்டின் காரணமாக கொள்ளை, கொலை, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட சமூகவிரோத செயல்களும் அதிகரிக்கும் ஆபத்து உள்ளது. இந்த நிலைமையை மாற்றி நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல அனைத்துத் தரப்பினரும் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது முக்கியம்.

**பி.ஹர்ஷன்...**

---

# உலகின் மூன்றாவது பொருளாதார வல்லரசாக உயரவிருக்கும் இந்தியா!

**உலகின் பொருளாதார வல்லரசுகளில் மூன்றாவது இடத்தை இந்தியா விரைவில் அடைந்துவிடுமென்று பொருளாதார நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. தற்போது பிரிட்டனை பின்தள்ளியபடி இந்தியாவின் பொருளாதாரம் உலகில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியுள்ளமை சமீபத்திய ஆய்வில் தெரியவந்தது. இந்தியாவைப் பொறுத்தவரை இது பெரும் வெற்றியாகும்.**

இது குறித்து இந்தியாவின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் விர்மாணி கூறும்போது “உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி 5 ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறிய தருணம் மிகவும் முக்கியமானது. தற்போதைய தருணம் இந்தியா மீதான உலக நாடுகளின் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்தியாவின் பொருளாதாரம் இப்போது மிகவும் வலுவாக இருக்கின்றது. இதே நிலைமை தொடரும் பட்சத்தில் 2030 ஆம் ஆண்டில் உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 3 ஆவது இடத்தைப் பிடிக்கும்” என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2021 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் இந்தியாவின் பொருளாதாரம் பிரிட்டனை விட வளர்ச்சி அடைந்தது. இதையடுத்து உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்திலிருந்து 5 ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறியுள்ளது.

இது குறித்து இந்தியாவின் மூத்த பொருளாதார நிபுணரான சரண்சிங் கூறுகையில், “இது பெருமைக்குரிய தருணம். நாம் சிறப்பான வளர்ச்சியை அடைந்து வருகிறோம். சர்வதேச செலாவணி நிதியம் இந்தியாவை வேகமாக வளரும் நாடு என்று தொடர்ச்சியாகக் கூறி வருகிறது. 2027 இல்இந்தியாவின் ஜி.டி.பி பிரிட்டனைவிட பெரும் அளவில் உயர்ந்திருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. உலக நாடுகள் பொருளாதார தேக்கநிலையை எதிர்கொண்டு வரும் நிலையில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது” என்று குறிப்பிட்டார்.

கடந்த 2021 ஆம் ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில் இந்தியாவின் பொருளாதாரம் பிரிட்டனை விட வளர்ச்சி அடைந்தது. இதையடுத்து உலகின் பெரிய பொருளாதார நாடுகளின் பட்டியலில் 6 ஆவது இடத்திலிருந்து 5 ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறியது.



இது குறித்து முன்னாள்தலைமைப் பொருளாதார ஆலோசகர் அரவிந்த் விர்மாணி கூறும்போது, “உலகின் பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி 5 ஆவது இடத்துக்கு இந்தியா முன்னேறிய தருணம் மிகவும் முக்கியமானது. தற்போதைய தருணம் இந்தியா மீதான உலக நாடுகளின் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்தும். இந்தியாவின் பொருளாதாரம் இப்போது மிக வலுவாக இருக்கிறது. இதே நிலை தொடரும்பட்சத்தில் 2030 ஆம் ஆண்டில் உலகின் பெரிய பொருளாதார நாடுகளில் இந்தியா 3 ஆவது இடத்தைப் பிடிக்கும்” என்று குறிப்பிட்டார்.

இது குறித்து மூத்த பொருளாதார நிபுணரான சரண் சிங்கூறுகையில், “இது பெருமைக்குரிய தருணம். நாம் சிறப்பான வளர்ச்சியை அடைந்து வருகிறோம். சர்வதேச செலாவணி நிதியம் இந்தியாவை வேகமாக வளரும் நாடு என்று தொடர்ச்சியாகக் கூறி வருகிறது. 2027 இல் இந்தியாவின் ஜி.டி.பி பிரிட்டனைவிட பெரும் அளவில் உயர்ந்திருக்கும் என்று கணிக்கப்பட்டிருக்கிறது. உலக நாடுகள் பொருளாதார தேக்கநிலையை எதிர்கொண்டு வரும் நிலையில் இந்தியாவின் பொருளாதாரம் வளர்ந்து வருகிறது” என்றார்.

கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா பரவல் காரணமாக இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்தும் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வந்தன. குறிப்பாக பல நாடுகளின் பொருளாதார வளர்ச்சி சரிவை சந்தித்தது. இந்தியாவும் பொருளாதார சரிவைக் காணலாம் என பொருளாதார நிபுணர்கள் கணித்திருந்தனர். ஆனால் அந்த எதிர்வுகூறலையெல்லாம் முறியடித்தபடி உலக பொருளாதாரத்தின் ஐந்தாவது இடத்துக்கு வந்துள்ளது இந்தியா.

உலக நாடுகளைப் போல இந்தியாவின் பொருளாதாரமும் சீர்குலைந்து, சரிவை நோக்கிச் செல்வதாக இந்தியாவின் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டினர். ஆனால் இந்தியாவின் பொருளாதாரம் உறுதியான நிலையில் உள்ளமை இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. உலகில் மிக வேகமாக பொருளாதாரம் வளரும் நாடுகளில் இந்தியா முன்னணியில் உள்ளதாக பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் கணித்துள்ளன.

பிரிட்டனை பின்னால் தள்ளிவிட்டு உலகின் 5ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா வளர்ந்துள்ளது என்று சந்தை ஆய்வு நிறுவனமான ப்ளூம்பெர்க் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவு இதற்கான ஒரு உதாரணமாகும். இந்த தகவலானது சர்வதேச நாணய நிதியத்தின் தரவு மற்றும் historic exchange rates அடிப்படையில் உறுதி செய்யப்பட்டு வெளியிடப்பட்டதாகும்.

இந்தியா சுதந்திரம் அடைந்ததன் நூற்றாண்டு விழா கொண்டாடப்படவிருக்கும் எதிர்வரும் 2047 ஆம் ஆண்டில் இந்தியா பொருளாதாரத்தில் மிகப்பெரும் வளர்ச்சியடைந்த நாடாக மாற வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி கூறியிருந்த நிலையில், இந்தியாவின் பொருளாதாரம் சார்ந்த விஷயத்தில் இன்றைய நிலைமையானது முக்கிய மைல்கல்லாக பார்க்கப்படுகிறது.

## 2030ஆம் ஆண்டில் சாத்தியமாகுமென பொருளாதார நிபுணர்கள் கணிப்பு

2022ஆம் ஆண்டு நிலைவரப்படி, இந்தியாவின் மக்கள் தொகை 1.41 பில்லியனாகவும், பிரிட்டன் மக்கள் தொகை 68.5 மில்லியனாகவும் உள்ளது. அதாவது இந்தியாவின் மக்கள் தொகை இங்கிலாந்தை விட 20 மடங்கு அதிகமாக உள்ளது. இந்த இடைவெளியை விரைவில் சரிசெய்ய முடியாது.

தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அந்த நாட்டின் மக்கள்தொகையால் வகுக்கப்படுவதன் மூலம் கிடைப்பதாகும். மக்கள் தொகை அடிப்படையில் இது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால் தற்போது இந்தியரின் சராசரி வருமானம் மிகவும் குறைவாக உள்ளது.

குறைந்த தனிநபர் வருமானம் பெரும்பாலும் அதிக அளவிலான வறுமையைக் குறிக்கும். 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், தீவிர வறுமையில் பிரிட்டனின் பங்கு இந்தியாவை விட கணிசமாக அதிகமாக இருந்தது. ஆனால் இன்று வறுமையைக் கட்டுப்படுத்துவதில் இந்தியா மாபெரும் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. தாய், குழந்தை பிறப்பு, குழந்தைகளின் ஆரோக்கியம், தொற்று நோய், மருத்துவ சேவை உள்ளிட்டவற்றில் பிரிட்டனுடன் ஒப்பிடும்போது இந்தியா 2005 இல் இருந்து முன்னேற்றம் கண்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## வறுமை ஒழிப்பில் இந்தியா துரித வளர்ச்சி; எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுகள் முறியடிப்பு!

**எஸ்.சாரங்கன்...**

**இலங்கை பல்வேறு பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் இன்றைய சூழ்நிலையில், அரசியல் கட்சிகள் தமது நலன் சார்ந்த வழமையான அரசியல் போக்கிலிருந்து விடுபட்டு மக்கள் பற்றிச் சிந்திக்கும் நிலைமை இன்னமும் ஏற்படவில்லை. நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் கட்சி அரசியல் தீவிரமடைந்திருப்பதால் எவ்வொரு கட்சியும் தம்மை அரசியல்ரீதியில் பலப்படுத்துவதற்கான செயற்பாடுகளுக்கே அன்று முதல் இன்றுவரை முன்னுரிமை அளித்து வருகின்றன.**




# கூட்டமைப்புக் கட்சிகளுக்கிடையே தீவிரமடைந்து வரும் முரண்பாடுகள்!

## 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கான வாக்கெடுப்பில் வெளிப்பட்ட அரசியல் பிளவு!

இலங்கையைப் பொறுத்தவரையில் பல தசாப்தங்களாக சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரு பெரும் கட்சிகள் மாறிமாறி ஆட்சிசெய்து வந்த நிலையில், அண்மித்த சில வருடங்களாக 'பொதுஜன பெரமுன' என்ற புதிய கட்சியும் ஆட்சி அதிகாரத்தை நடத்தி வருகின்றது. தென்னிலங்கையை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கட்சிகளின் செயற்பாடுகள் அமைந்திருக்கும் நிலையில் வடக்கு, கிழக்கில் உள்ள சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் செயற்பாடுகளும் நாட்டின் அரசியல் பாரம்பரியத்துக்கு விதிவிலக்காக அமையவில்லை.

மத்திய அரசாங்கத்தில் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அழுத்தங்களை வழங்குவதை விடுத்து, தமக்கிடையிலான முரண்பாடுகள் மற்றும் தனிப்பட்ட ஒருசில நபர் சார்ந்த செயற்பாடுகளைப் பற்றிப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதையும் பார்க்க முடிகிறது.

குறிப்பாக தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தரப்புகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாகக் விளங்குகிறது. இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய மூன்று கட்சிகளை உள்ளடக்கிய கூட்டணியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் காணப்படுகின்ற போதும், அது இன்னமும் பதிவு செய்யப்பட்ட கூட்டணி அல்ல என்பது அனைவரும் அறிந்த விடயம். இதனால் மூன்று கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பொதுவான கூட்டணியின் கீழ் செயற்பட்டாலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரிலேயே பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இந்தக் கூட்டணியின் தலைவராகவும் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் மூத்த அரசியல்வாதியான இரா.சம்பந்தன் செயற்பட்டு வருகின்றார். இந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் நிலவி வந்த சூழலில், இரா.சம்பந்தன் சுகவீனமுற்றுள்ள நிலையில் கூட்டணிக்கான தலைமைப் பதவிக்கு வெற்றிடமொன்று ஏற்பட்டிருப்பது உணரப்பட்டுள்ளது.

சரியானதொரு தலைமைத்துவம் இன்னமும் முடிவு செய்யப்படாத நிலையில் அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கிடையில் கூட்டுப் பொறுப்புடன் முடிவுகளை எடுப்பதில் சில மனக்கசப்புக்கள் ஏற்படத் தொடங்கியிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு சில விடயங்களில் அக்கட்சிகளுக்கிடையேயான முரண்பாடு வெளிப்படையாகத் தெரியவந்துள்ளது. அண்மையில் நடைபெற்ற 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கான வாக்கெடுப்பு விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வாக்களித்திருந்த விதம் இதற்கு சிறந்ததொரு உதாரணமாக அமைகிறது.

கடந்த 20 மற்றும் 21ஆம் திகதி ஆகிய இரு தினங்களிலும் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கான விவாதம் நடைபெற்றது. இதில் எவ்வாறு வாக்களிப்பது என்பது பற்றி கூட்டமைப்பினருக்கிடையில் முன்கூட்டியே தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்தப் பின்னணியில் 21ஆம் திகதி காலை பாராளுமன்றக் குழு கூடிய போது, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குறித்த திருத்தத்துக்கு எதிராக சபையில் உரையாற்றியதால், அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் அல்லது வெளிநடப்புச் செய்ய வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டைக் கூறியிருந்தார்.

இருந்தபோதும் எஞ்சிய உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் மேற்படி அரசியலமைப்புத் திருத்தம் தமிழ் மக்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதாலும், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை, முல்லைத்தீவு குருந்தூர் விகாரை விவகாரம் உள்ளிட்டவற்றில் சாதகமான தீர்வுகளை வழங்குவதாக உறுதியளித்திருப்பதாலும் வாக்கெடுப்பில் ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என்று கூறியுள்ளனர்.





மறுபக்கத்தில், 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் தமிழ் மக்களுக்கு எவ்வித தீர்வும் வழங்கப்படவில்லையென்பதால் தான் நடுநிலை வகிக்கப் போவதாகப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கூறியிருந்தார்.

இவ்வாறு மாறுபட்ட கருத்துகள் காணப்பட்ட நிலையில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படாது அக்கூட்டம் முடிவடைந்துள்ளது. இறுதியில் நடைபெற்ற வாக்கெடுப்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது வெளியேறிச் சென்ற நிலையில், எஞ்சியிருந்த ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் அதாவது சிறிதரன் உட்பட ஆறு பேரும் அரசியலமைப்புப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் இல்லாத நிலையில், ஒன்றுகூடி முடிவெடுக்காது ஒருசிலர் மாத்திரம் தன்னிச்சையான முடிவுகளை எடுத்து அதனைக் கூட்டமைப்பின் நிலைப்பாடு எனக் காண்பிப்பதற்கு முயற்சிக்கப்படுவதாக உறுப்பினர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

**தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அடுத்த தலைமைத்துவம் இன்னமும் முடிவு செய்யப்படாத நிலையில், அக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் மத்தியில் கூட்டுப் பொறுப்புடன் முடிவுகளை எடுப்பதில் மனக்கசப்புகள்!**

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் இதுபற்றிய நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராகச் செயற்படும் எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்காது தனது தனிப்பட்ட கருத்தைக் கூறிவிட்டு அதனை கூட்டமைப்பின் நிலைப்பாடு எனக் காண்பிப்பதற்கு முயற்சிக்கின்றார் என்ற குற்றச்சாட்டு சிறிதரனால் முன்வைக்கப்பட்டது.

புதிய அரசியலமைப்பின் ஊடாகத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கிறது என்ற அறிவிப்பு சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட தனிப்பட்ட கருத்தே அன்றி ஏனையவர்களுடன் கலந்துரையாடி எடுக்கப்பட்ட நிலைப்பாடு அல்ல என்றும் சிறிதரன் அந்தச் செவ்வியில் கூறியிருந்தார்.



தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக உள்ள இரா. சம்பந்தன் சுகவீனமுற்றுள்ள சூழ்நிலையில் கூட்டணியில் உள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள் அவருடன் கலந்துரையாடி பொதுவான முடிவுகளை எடுப்பதற்கான அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும். அதனை அவர்கள் செய்ய வேண்டும். அத்தோடு கூட்டணியாகச் செயற்படுகின்ற போது, பெரும்பான்மையானவர்கள் மேற்கொள்ளும் தீர்மானத்துடன் அனைவரும் ஒத்துப்போகாவிட்டால் எதிர்காலத்தில் ஒரே கூட்டணியாகச் செயற்படுவதில் சிக்கல்கள் காணப்படும் என்பதையும் அவர் வெளிப்படையாகக் கூறியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே இவ்வாறான கருத்து முரண்பாடுகள் காணப்பட்ட போதும், இரா. சம்பந்தனின் அனுபவம் மிகுந்த தலைமைத்துவத்தின் காரணமாக அனைவரையும் அரவணைத்து கட்டுக்கோப்பாகக் கொண்டு செல்ல அவரால் முடிந்தது. ஒரு சில விடயங்களில் அவர் கடுமையான நிலைப்பாடுகளை எடுத்தாலும், பங்காளிக் கட்சிகளை அரவணைத்துச் செல்லும் விடயத்தில் ஒருசில உத்திகளை அவர் கையாண்டு வந்தார் என்றே கூற வேண்டும். எனவே, கூட்டணியாகத் தொடர்ந்தும் முன்னேறிச் செல்வதாயின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் தமக்கிடையில் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும்.

மறுபக்கத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையேயே கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா செயற்படுகின்றபோதும், கடந்த பொதுத் தேர்தலில் அவரால் வெற்றிபெற முடியாது போனது.

அது மாத்திரமன்றி, தமிழரசுக் கட்சியின் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் தலைவர் முரண்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. எனவே கட்சிக்குள் ஒற்றுமையை நிலைநாட்டி ஒரே அரசியல் கூட்டணியாகச் செயற்படுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படாவிட்டால் தமிழர்கள் சார்பில் மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்கவோ அல்லது பேரம் பேசுவதற்கோ வலுவான சக்தி கிடைக்காதுபோய் விடும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமன்றி ஏனைய தமிழ் அரசியல் தரப்புக்களும் ஒற்றுமையுடன் ஒரே அணியாக இணைந்து செயற்படுவதே தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகளை இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான பலமாக அமையும். தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அரசியல் தீர்வாக இருக்கட்டும், ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வாக இருக்கட்டும், அனைத்தும் ஒரேமாதிரியானவை என்பதால் அவற்றைப் பெற்றுக் கொடுக்க தமிழ் அரசியல்வாதிகள் பிரிந்து நின்று செயற்பட வேண்டிய தேவைப்பாடு கிடையாது.

**‘தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமன்றி ஏனைய தமிழ் அரசியல் தரப்புக்களும் ஒற்றுமையுடன் ஒரே அணியாக இணைந்து செயற்படுவதே தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வுகளை இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான பலமாக அமையும். அரசுடன் பேரம் பேசுவதற்கான சக்தியையும் தரும்’**

தமக்குள் பொதுவான இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு சுயஇலாப அரசியலைக் கைவிட்டு தமது மக்களுக்காக ஒற்றுமைப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட வேண்டும். தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுடன் கூடிய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி அனைத்து மக்களுக்கும் பொதுவான பல பிரச்சினைகள் உள்ளன. இவற்றுக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்காவிட்டாலும் தற்காலிக தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காவது தமிழ் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டியது காலத்தின் தேவையாகும் என்பதுதான் தமிழ் மக்களின் வேண்டுகோள் ஆகும்.

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்துக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் இடையேயும் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றன. தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா செயற்படுகின்ற போதும், கடந்த பொதுத் தேர்தலில் அவரால் வெற்றிபெற முடியாது போனது. தமிழரசுக் கட்சியின் ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்பாடுகள் தொடர்பில் கட்சியின் தலைவர் முரண்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன**



தொகுப்பு
சுப்ரமணியம் சுரேந்திரன்

# உரிமையிழந்து தவிக்கும் மலையக தொழிற்சங்க உத்தியோகத்தர்கள்



தொழிற்சங்கம் என்றதொரு பாரிய சமுத்திரத்துக்குள்ளே எல்லோராலும் இலகுவாக கடமையாற்ற முடியாது. இத்துறையில் பணியாற்றுவதெற்கென பல விசேட தகைமைகளை குறிப்பிட்ட நபர்கள் கொண்டிருக்க வேண்டியது அவசியமான விடாயமாகும்.

இதுவரை காலமும் மலையகம் சார்ந்த தொழிற்சங்கங்களிலே கடமையாற்றும் தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் அனைவருமே சிறந்த கல்விமான்களாகவும் மும்மொழி தேர்ச்சி பெற்றவர்களாகவும் சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவர்களாகவும் தோட்ட தொழிலாளர்களோடு நேரடி தொடர்பில் இருப்பவர்கள் என்பதும் குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயமாகும்.

மேலும் தோட்ட நிர்வாகங்கள் உடன் சிறந்த முறையில் விவாதித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறமைசாலிகள் என்பதையும் ஞாபகமூட்ட வேண்டும் .

இவ்வாறான உத்தியோகத்தர்களின் வாழ்க்கை நிலைமையை நோக்குவோமானால் அது மிகவும் பரிதாபத்துக்குரிய விடயமாகவே காணப்படுகிறது.

பலரின் பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கும் இவர்களுக்கு தமது வாழ்க்கை நிலைக்கு குரல் கொடுக்க எந்த ஒரு அமைப்பும் இதுவரை அமைக்கப்படவில்லை. மிகவும் குறைந்த சம்பளத்தில் கடமை புரிகின்ற ஊழியர்கள் எம் நாட்டில் இருப்பார்களேயானால் அவர்கள் தொழில்சங்க பிரதிநிதிகளே. சொந்த வீடோ, நிலமோ கிடையாது. தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைக் கூட பெற்றுக் கொடுக்கும் வாய்ப்புகள் மிகமிக அரிதாக உள்ளது.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழிற் சார்ந்த உரிமைகளையும் அவர்கள் எதிர்நோக்கும் பல்வேறான சவால்களுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் பிரதான நிறுவனமாக விளங்குவது தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் தொழில் சங்கம் என்பதை யாராலும் மறுக்க முடியாது.




மலையகத்தின் பல்வேறுப் பகுதிகளிலும் தொழிலாளர்களின் பிரச்சினைகளை இனங்காணும் வகையிலும் தொழிலாளர்களோடு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தும் வகையிலும் பல்வேறு தொழிற்சங்கங்களின் மாவட்ட காரியாலயங்கள் மாநில காரியாலயங்கள் என நிர்வாக ரீதியாக பல தொழிற்சங்கங்கள் இயங்கிக் கொண்டிருப்பதை எம்மால் காண முடிகின்றது.

இவ்வாறான தொழிற்சங்க காரியாலயங்களில் கடமையாற்றும் தொழிற்சங்க உத்தியோகஸ்தர்கள் அச்சங்கங்களின் தலைமைகளால் நேர்முகப்பரீட்சை ஊடாக நியமனம் செய்யப்படுகின்றார்கள்.

அவ்வாறு நியமனம் பெற்றுக் கொள்பவர்களின் அயராத உழைப்பினாலும் திறமையினாலும் தொழிலாளர்களின் தொழில் பிரச்சினைகளை தீர்க்கப்படுவதன் காரணமாகவே தான் தொழில் சங்கங்களின் வளர்ச்சி காலம் காலமாக சிறப்பாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதை மையமாகக் கொண்டே தொழிற்சங்க தலைமைகள் அரசியல் ரீதியாக தங்களின் நிலையை தக்க வைத்துக் கொள்வதோடு தமது எதிர்கால அரசியல் நகர்வுகளுக்ும் இந்த தொழிற்சங்கங்களின் வாயிலாகவே தான் மக்களின் ஏகோபித்த வரவேற்பையும் தனதாக்கி கொள்கின்றனர். இவ்வாறான அரசியல் தலைமைகளின் மக்கள் தொடர்புக்கு இந்த தொழிற்சங்க உத்தியோகத்தர்களே பிரதான காரணமாக இருப்பதை மறுக்க முடியாது.

ஒரு தொழில் சங்கம் அதிக அங்கத்தினர்களை இணைத்து அதன் மூலம் சந்தா என்றொரு நிதியினை அறவிட்டு அதன் மூலமாக பாரிய நிதி வளங்களை கொண்டு இருக்குமேயானால் அதற்கு மூல காரணமாக காணப்படுபவர்கள் அடிமட்டத்தில் தொழில் புரிகின்ற தொழிற்சங்க உத்தியோகத்தர்களே.

மலையகப் பகுதிகளில் கடமையாற்றும் சில தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் தெரிவித்த கருத்துக்கள்,..

,..பதுளை மாவட்டத்தை சேர்ந்த சிரேஷ்ட தொழிற்சங்க உத்தியோகத்தர் ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

தொழிற்சங்க தலைமைகள் கோடிக்கணக்கான சந்தாப் பணம் கிடைத்த காலத்திலும் கூட எமது வாழ்க்கை தரத்தை உயர்த்த எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாதது வேதனைக்குரிய விடயமாகும்.

தலைமைகள் இது குறித்து கவனம் செலுத்தியிருந்தால் அவர்களின் அமைச்சு பதவிகளின் ஊடாக எவ்வளவோ உதவிகள் செய்து கொடுத்திருக்கும் முடியும். மேலும் தொழிற்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கு வீடு,காணி பெற்றுக் கொடுக்க வேண்டுமென போராடுகின்ற எமக்கு இதுவரைக்காலமும் மேற்குறிப்பிட்ட எவ்வித வசதிகளும் கிட்டவில்லை.

தொழிற்சங்கமே வாழ்க்கை என நம்பியிருந்த எம்மைப்போன்ற பலர் இன்று தமது குடும்ப சுமைகளை தீர்க்க முடியாமலே தமது கடைசிக்காலத்தில் உயிரை விட வேண்டியுள்ளது.இந்த நெருக்கடிமிக்க சூழலிலும் இதே நிலை தான் காணப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

மேலும் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்.

எனக்கு தற்போது 65 வயது. சுமார் 25 வருடக்காலமாக தொழிற்சங்கத்திலே தான் கடமையாற்றுகிறேன். இத்தனை காலமும் மிக குறைவான ஊதியமே கிடைக்கப் பெறுகிறது. சம்பள உயர்வோ வேறு எதும் சலுகைகளோ எமக்கு கிடையாது. பிள்ளைகளுக்காக ஒரு சொந்த வீட்டைக்கூட எம்மால் அமைத்துக்கொள்ள முடியாத பாவியாக வாழ்கின்றோம். இந்த தொழிலை விட்டு வெளியே வர முடியவில்லை. எமது தொழிற்சங்க தலைமைகள் எம் தொடர்பாக எவ்வித கரிசனைகளையும் காட்டுவதில்லை அவர்கள் நினைத்தால் எமது வறுமையை போக்க முடியும். எமது தொழிலாளர்களின் உரிமைகள், பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முழுமையாக நேரடி தொடர்பை பேணுபவர்கள் நாம் தான். ஆனால் எமது நிலை மிக வேதனைக்குறியது.

தொழிற்சங்க உத்தியோகத்தர்கள் தமது உரிமைகளையும் சலுகைகளையும் கேட்டு போராடினால் தொழில் சங்க தலைமைகளால் இவர்கள் பதவியிலிருந்து தூக்கி எறியப்படும் நிலைதான் காணப்படுகிறது. இவ்வாறு தூக்கி எறியப்பட்ட தொழிற்சங்க போராளிகளும் மலையகத்தில் ஏராளம் காணப்படுகின்றனர்.

இந்நிலைமை இவ்வாறு இருக்க தற்போது தோட்ட கம்பனிகளால் செக்ரோல் மூலமாக அறவிடப்பட்டு தொழிற்சங்கங்களுக்கு அனுப்பப்படுகின்ற சந்தாப்பணமும் நிறுத்தப்பட்டுள்ளது இதன் காரணமாக தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாமல் பல காரியாலயங்கள் மூடப்பட்டு வருவதையும் பல உத்தியோகத்தர்கள் வேலை இன்றி பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கோடிக்கணக்கில் சந்தாப்பணம் கிடைத்த போதும் இவர்கள் மேல் கரிசனை காட்ட மறுத்த தலைமைகள் சந்தாப்பணம் நிறுத்தப்பட்ட பின்பு நடந்துக் கொள்ளும் மனநிலையில் புதிதாய் என்ன மாற்றம் வரப்போகிறது.

தமது வாழ்நாள் முழுவதையும் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்கும் தொழிற்சங்க தலைமைகளுக்குமே அர்ப்பணிக்கும் மலையகத்தின் ஏராளமான தொழிற்சங்க உத்தியோகத்தர்களின் வாழ்க்கை நிலை மேற்கூறிய வகையில் மிக மோசமான நிலையிலே காணப்படுகிறது.

---

## தொழிற்சங்கம், அரசியல்வாதிகளால் தோட்ட தொழிலாளர்கள் உரிய பயன்களை பெறாதமையே வரலாறு....

# செயற்பாடுகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்

சி.ப.சீலன்

நீர்வளமும் நிலவளமும் மிக்க இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ஆங்கிலேயரினால் தென்னிந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் காலடிவைத்து அடுத்த வருடத்துடன் இரு நூற்றாண்டுகள் பூர்த்தியாகிறது.

இன்டர்நெட் யுகம் என அழைக்கப்படும் இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும் தோட்டத் தொழிலாளர்களில் ஏறத்தாழ முப்பது சதவீதத்தினர் இன்னும் ஆங்கிலேயரினால் கட்டப்பட்ட லயன் அறைகளில் பல்வேறு அசௌகரியங்களுடன் வாழ்கிறார்கள்.

உண்மையை உள்ளது உள்ளபடி குறிப்பிடின் இந்த நாட்டில் மிகவும் ஒடுக்கப்பட்ட சமூகமாக தமது உழைப்புக்கேற்ற ஊதியத்தை பெறாதவர்களாக காணியுரிமை, வீட்டுரிமை அற்றவர்களாக அரச சலுகைகளையோ உரிமைகளையோ பெறாதவர்களாக அவ்வப்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பவர்களாக இந்த நாடெங்கும் உள்ள தேயிலை, இறப்பர், தென்னைத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரதிநிதித்துவப்படுத்தும் பல தொழிற்சங்கங்களும் அரசியல் கட்சிகளும் இருந்தபோதிலும் தோட்டத் தொழிலாளர்கள் அவற்றினால் உரிய பயன்களை பெறாதமையே வரலாறு.



தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும்தொழில்ரீதியானபிரச்சினைகளுக்கு தோட்டத் தொழிற்சங்கங்கள் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதில்லை. தோட்டத் தொழிலாளர்கள் அரசியல் ரீதியாக எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அவர்கள் அரசியல் ரீதியாக பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகள் பெற்றுக் கொடுக்காதமையே வரலாறு.



முன்னைய காலங்களில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் அவர்களின் சேமநலன் தொடர்பான விடயங்களுக்கு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி ஆகிய தொழிற்சங்கங்களுக்கும் இடையே கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக கடந்த 29.01.2021 அன்று கூட்டு ஒப்பந்தம் கைவிடப்பட்டு தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிர்ணய சபை மூலம் தீர்மானிக்கப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால் பெருந்தோட்டக் கம்பனிகளில் சில கம்பனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக ஆயிரம் ரூபாவை வழங்க பல்வேறு நிபந்தனைகளை முன் வைத்து குறைந்த மூலதனத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கி வருவதை அறியக் கூடியதாக உள்ளது.

கொவிட் தொற்று ஏற்பட்டு இந்த நாட்டின் பல துறைகள் முடக்கப்பட்டிருந்த வேளைகளில் தோட்டத் தொழிலாளர்கள் மாத்திரமே கடமையில் ஈடுபட்டு தமது உழைப்பின் மூலம் அந்நிய செலாவணியை நாட்டுக்கு பெற்று தந்தனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் இந்த நாட்டின் பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டபோதிலும் தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பின் மூலமே நாட்டிற்கு அந்நிய செலாவணி கிடைத்தது. உண்மை இவ்வாறு இருந்தபோதிலும் தட்டிக்கேட்க யாரும் இல்லை என்பதனா லோ என்னவோ அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான பங்களிப்பை சிறிதேனும் கருத்திற் கொள்ளாமல் அவர்களின் வாழ்க்கை மேன்மேலும் பாதிக்கக் கூடிய விதத்தில் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மாவையே உணவுக்காக பயன்படுத்துகின்றனர். மண்ணெண்ணெய் பயன்பாடும் அதிகமாகும். கோதுமை மாவின் விலை இன்று வானளாவ உயர்ந்துள்ளது. மண்ணெண்ணெய் இன்று காண முடியாத பொருளாக்கப்பட்டுள்ளது.



இந்த நாடு இன்று அதன் வரலாற்றில் முன்னொருபோதும் சந்தித்திராத பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. புள்ளி விபரங்களின் படி நுவரெலியா மாவட்டத்தில் நூற்றுக்கு அறுபது சிறுவர்கள் குறைந்த எடையுள்ளவர்களாக உள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் 14.6 வீதம் மந்த போசணை உள்ள நிலையில் அது நுவரெலியா மாவட்டத்தில் 21.9 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

மேலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பெருந்தோட்டங்களில் மேலதிக வருமானத்தை பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் வாய்ப்புகள் வழங்கப்பட்டாததனால் அவர்களின் வாழ்க்கை அதல பாதாளத்திற்குச் சென்றுள்ளது.

நாடளாவிய ரீதியில் இயற்கை அனர்த்தங்கள், மின்சார ஒழுக்குகள், சிறுத்தைகளின் தாக்குதல் போன்ற அனர்த்தங்களில் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் அவ்வாறான செய்திகளை கேட்டும் கேட்காதது போன்றும் பார்த்தும் பார்க்காதது போன்று தோட்டத் தொழிலாளர்களை தொழிற்சங்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் பிரதிநிதித்துவப்படுத்தும் தோட்டத் தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் செயல்படுகிறார்கள்.

தொழிற்சங்கவாதிகளும் மலையக அரசியல்வாதிகளும் தோட்டத் தொழிலாளர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகளுக்கும் மலையக அரசியல்வாதிகள் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் ரீதியான பிரச்சினைகளுக்கு அவ்வப்போது தீர்வு காணாததனாலேயே தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் அனுமனின் வாலைப் போன்று நீண்டு கொண்டிருக்கிறது.

மலையக அரசியல்வாதிகள் கட்சி வேறுபாடுகளை புறந்தள்ளிவிட்டு இந்த நாட்டில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களில் தோட்டத் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் அல்லாதோரின் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றிற்கான தீர்வுகளை காண முன்வர வேண்டும்.

அரச நிதி ஒதுக்கீட்டுக்கு உட்படாத விடயங்களை தோட்டத் தொழிற்சங்கவாதிகளும் மலையக அரசியல்வாதிகளம் கருத்தொருமித்து ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு மேலதிக வருமானத்தை பெறக்கூடிய விதத்திலும் அரச சலுகைகள், நிவாரணங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளவும் வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எனவே தூங்குபவர்கள் போன்று பாசாங்கு செய்வதை விடுத்து சமூக நலனில் கரிசனை கொண்டு சகல தரப்பினரும் இனிவரும் காலங்களில் செயல்பட முன்வரவேண்டும். எதிர்காலத்தில் இந்த நாட்டில் நடைபெறவுள்ள தேர்தல்களில் அரசியல்வாதிகளுக்கு உரிய பாடம் கற்பிக்க இந்த நாட்டு மக்கள் தவறமாட்டார்கள். பொறுமைக்கும் எல்லையுண்டு.

எல்லோரையும் எல்லா நாட்களிலும் ஏமாற்ற முடியாது. இதை தொழிற்சங்கவாதிகளும் அரசியல்வாதிகளும் இனிமேலாவது புரிந்து கொள்ள வேண்டும்.

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# தாமதமாகும் மீட்சிக்கான கால எல்லை




**சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் பெறுமதியான நிதிவசதியைப் பெற்றுக் கொள்ளும் இலங்கையின் முயற்சிகள் மேலும் காலதாமதமாகும் நிலை தோன்றியுள்ளதாக அறிய முடிகிறது. ஏற்கெனவே காலம் கடந்து போயுள்ள நிலையில் மேற்படி நிறுவனத்துடன் ஆளணிமட்டத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகள் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து முறையான விரிவுபடுத்தப்பட்ட கடன் வசதியொன்றை வழங்கும் ஒப்பந்தம் முறையாகக் கைச்சாத்திடப்பட வேண்டும். ஆனால் அதற்குரிய முன்நிபந்தனையாக கடன் மறுசீரமைப்புக்கு கடன் வழங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்னும் உத்தரவாதத்தை வழங்குமாறு நிபந்தனை விதிக்கப்பட்டது. இந்நிபந்தனையே பேச்சுவார்த்தைகள் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாத நிலைக்கு தள்ளியுள்ளது. அதில் இலங்கைக்கு இருபக்க கடன்களில் பெரும் பகுதியை வழங்கியுள்ள சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் உத்தரவாதம் மிக முக்கியமானது.**

இலங்கை இந்தியாவுடனும் ஜப்பானுடனும் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை ஏற்கெனவே ஆரம்பித்துள்ளது. இவ்விரு நாடுகளும் இலங்கையின் தற்போதைய படுமோசமான பொருளாதார மந்த நிலையில் இலங்கைக்கு உதவும் வகையில் சாதகமான முடிவுகளை எடுக்கும் என நம்பப்படுகின்றது. ஆனால் இதில் முக்கியமான ஒரு பங்காளரான சீனா சாதகமான சமிக்ஞைகளைத் தரவில்லை என சர்வதேச ஊடகங்கள் கூறுகின்றன. இலங்கை உத்தியோகபூர்வமாக இது பற்றி தெளிவாக எதையும் தெரிவிக்கவில்லை. ஆனால் சீனா தற்போது தனது காங்கிரஸ் கட்சியின் இருபதாவது மாநாட்டை நடத்தும் வேலைப்பளுவில் இருப்பதால் கொழும்பின் கோரிக்கைக்கு இது வரையில் பதிலளித்து பேச்சுவார்த்தைக்கு திகதிகள் எதனையும் இன்னும் தரவில்லை எனத் தெரிய வருகிறது. இதனால் 2022 இன் டிசம்பர் மாதத்தில் IMFஇன் கடனைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலான இலங்கையின் முயற்சிகள் வெற்றிபெறவில்லை எனக் கூறலாம். 2022 டிசம்பரின் பின்னர் IMF இன் பணிப்பாளர் சபையின் அடுத்த கூட்டம் 2023 மார்ச் மாதத்திலேயே கூடவுள்ளது. எனவே IMFஇன் கடனுதவிகள் 2023 மார்ச் மாதத்திற்கு முன்பாகக் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்றே கூறலாம்.

2022 ஜூன் மாத இறுதியில் இலங்கையின் வெளிநின்ற கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 143.7 சதவீதமாக அதிகரித்துள்ளது. இதில் இருபக்கக் கடன்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 20.4 சதவீதமாகும். இலங்கை ரூபாவின் தொடர்ச்சியான பெறுமானத் தேய்வு நாட்டில் நாளாந்தம் அதிகரித்துச் சென்ற பணவீக்க நிலைமைகள் விரிவடைந்து செல்லும் வரவு செலவுத்திட்டக் குறைநிலை மற்றும் நாட்டின் ஆழமாகச் செல்லும் பொருளாதார மந்த நிலை என்பன ஒருங்கிணைந்து வெளிநின்ற கடன்கள் அதிகரிக்கக் காரணமாகியுள்ளன. எனவே IMF உடனான கடன் வசதியைப் பெற்றுக்கொள்ள கால தாமதமாகும் ஒவ்வொரு வினாடியும் இலங்கை பொருளாதார மந்த நிலையில் இருந்து மீட்சி பெறுவதற்கான கால எல்லையை மேலும் தாமதப்படுத்திக்கொண்டே செல்வதுடன் இப்போதுள்ள நெருக்கடியின் தாக்கமும் வீச்சும் மேலும் தீவிரமடையும் அபாய நிலை அதிகரிக்கும்.

IMF இன் கடனுதவி 2023 மார்ச் வரையில் கால தாமதமாகுமாயின் அது வரையில் தாக்குப்பிடித்து உயிர்வாழ்வதற்கு இலங்கைக்கு மேலும் 850 மில்லியன் டொலர்கள் தேவைப்படுமென்றும் கூறப்படுகிறது. சீனா தயவு செய்யுமாயின் கொவிட் காலத்தில் தனது பிரஜைகள் சுற்றுலாப்பயணிகளாக இலங்கைக்கு விஜயம் செய்வதைத் தடுக்கும் முடிவை மறுபரிசீலனை செய்து அதிகரித்த சுற்றுலாப் பயணிகள் உள்வருகைகள் மூலமாக டொலர் உழைப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் நாட்டில் அரச எதிர்ப்பு நடவடிக்கைகளும் போராட்டங்களும் வலுப்பெறுமாயின் ரணில் விக்கிரமசிங்ஹ முன்னர் ஒரு பேட்டியில் கூறியிருந்ததன் படி போராட்டத்தைப் பார்க்கவும் கோஷங்களை எழுப்பவும் ஆர்வமுடைய ஒரு சில சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வரக் கூடும். மாறாக தமது ஓய்வை நிம்மதியாகக் கழிக்கவிரும்பும் எவரும் இங்கு வரமாட்டார்கள். இலங்கை எந்தக் கத்து கத்தி வாங்கோ வாங்கோ என்று கூப்பிட்டாலும் நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவாவிட்டால் சுற்றுலாத்துறை விரிவாக்கம் சாத்தியமில்லை.

> ஒரு சிலருடைய மகிழ்ச்சிக்காக மக்களையும் நாட்டையும் கைவிட்டுவிட முடியாது.

இன்றைய சூழ்நிலையில் அதிகரித்துள்ள விலை மட்டங்களை குறைக்கிறோம் என்று மக்களுக்கு காட்ட வேண்டிய தேவை உள்ளது. அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு ஆட்கள் ஒன்று சேராமல் தடுப்பதற்கும் மக்கள் மத்தியில் ஆகா பொருள்களின் விலைகள் குறைகின்றன என்று நிம்மதிப் பெருமூச்சு விடவும் இவை தேவைப்படுகின்றன. தற்போது எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் நிலவும் தட்டுப்பாடு வர்த்தகர்களின் முறையற்ற கொள்வனவுகளால் ஏற்பட்டதென்று காட்டவேண்டிய தேவை உள்ளது. டொலர் தட்டுப்பாடு காரணமாக நாட்டுக்கு வந்த எண்ணெக்கப்பல்கள் வாரக் கணக்கில் காத்து நிற்பதும் தாமதக்கட்டணங்கள் செலுத்தப்படுவதும் தொடர்ந்து நடக்கிறது.

> நாட்டின் பொருளாதாரம் முடங்கிச் செல்லும் நிலையில் புத்திசாலித்தனமான பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்க வேண்டியது கட்டாயமாகும்

மறுபுறம் 2023 ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் விரைவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள வரிஅதிகரிப்புகள் காரணமாக ஏற்கெனவே முடங்கிப்போயுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் உள்ளிட்ட கைதொழில் மற்றும் வியாபாரத்துறையினர் எதிர்நோக்கும் நிச்சயமற்ற வியாபார சுழல் நிலை மோசமாக மாறிவருகிறது. ஒருபுறம் அரசாங்கத்திற்கு ஆட்சி நடத்தப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக வரியை அதிகரித்தால் வியாபாரம் குறைந்து முடங்கும் நிலை உருவாகிறது. நாட்டின் பொருளாதாரம் முடங்கிச் செல்லும் நிலையில் புத்திசாலித்தனமான பொருளாதாரத் தீர்மானங்களை எடுக்க வேண்டியது கட்டாயமாகும் ஒரு சிலருடைய மகிழ்ச்சிக்காக மக்களையும் நாட்டையும் கைவிட்டுவிட முடியாது. தாமதமாகும் மீட்சிக்கான கால எல்லை



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# இம்ரான்கான் மீதான துப்பாக்கிச்சூடும் பாகிஸ்தானின் வன்முறை அரசியலும்

**தென்னாசியாவில் 1947இல் உதயமான பாகிஸ்தான் அரசியல், இராணுவ கட்டமைப்பினால் வடிவமாகியுள்ள வரலாற்றை கொண்டுள்ளது. இந்தியாவையும் இந்துமதத்தையும் எதிர் கொள்ளவும் பாகிஸ்தானிய தேசத்தை பாதுகாக்கவும் இராணுவமே அவசியம் என்ற நிலையை அந்த நாட்டு மக்களுக்கு ஆட்சியாளர் வெளிப்படுத்தினர். அத்தகைய சூழலை ஆட்சியாளர்கள் ஊக்குவித்தனர். இந்தியாவும் பாகிஸ்தானும் உருவாக்கப்பட்ட போதே அத்தகைய நிலை தோற்றம் பெற்றுள்ளது. அதனால் இராணுவத்தை ஊக்குவிக்கும் மரபும் அதனோடு கூடவே வன்முறைக்கான மரபும் வளர்ச்சியடைய வழிவகுத்தது. பாகிஸ்தானின் அரசியல் கலாசாரம் வன்முறையையும் இராணுவத்தையும் ஒன்றாக இணைத்துக் கொண்டதுடன், ஜனநாயக ஆட்சியாளர்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில், அடிக்கடி மோதல் ஏற்பட்டது. அதன் நீட்சியாகவே முன்னாள் பிரதமர் இம்ரான்கான் பேரணியொன்றில் கலந்து கொள்ளும் போது துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இக்கட்டுரையும் பாகிஸ்தானின் வன்முறைக் கலாசாரத்திற்கு அடிப்படையாக அமைந்த அம்சங்களை விளங்கிக் கொள்ள முயலுகிறது.**

பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்த வலியுறுத்தி இம்ரான்கானும் அவரது கட்சியான பிடிஐ த் தொண்டர்களும் பேரணிநடத்தி வந்தனர். ஆறு நாட்களாக நடந்த பேரணி பஞ்சாப் மாகாணத்தின் வஜிராபாத் சென்றடைந்த போதே இத்தகைய வன்முறை நிகழ்ந்தது. இம்ரான்கான் தனது பிரசார வாகனத்தில் இருந்த போது அடையாளம் தெரியாத நபரொருவரால் இயந்திரத் துப்பாக்கி மூலம் சுடப்பட்டு காயமடைந்துள்ளார். இத்தாக்குதலுக்கு பின்னால் ஆட்சி செய்யும் அரசாங்கம் இருப்பதாகவும் பிடிஐக் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர். பாகிஸ்தான் அரசாங்கம் இராணுவத்தை தாக்குதலுக்கு பயன்படுத்தியுள்ளதாகவும் அரசாங்கம் இத்தாக்குதலுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் அக்கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர். ஆனால், பாகிஸ்தானைப் பொறுத்தவரை அதன் நீண்ட வரலாறு முழுவதும் இராணுவத்தின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்டு ஆட்சி அதிகாரத்தை ஜனநாயவாதிகள் இழந்துவருகின்றனர். பாகிஸ்தானின் ஜனநாயகம் அர்த்தமற்றதாக மட்டுமன்றி வன்முறைக் கலாசாரத்தின் முழுவடிவமாக காணப்படுகிறது. இதற்கு பின்னாலுள்ள காரணங்களை தேடுவது அவசியமானது.

முதலாவது, இஸ்லாம் என்பது சமாதானமானது என வரையறுக்கப்பட்டாலும், அதனை உலகத்தின் ஆதிக்க சக்திகளும் இஸ்லாமிய மேலாதிக்க சக்திகளும் வன்முறையின் வடிவமாக மாற்றியுள்னர். அதன் பிரதிபலிப்பாகவே பாகிஸ்தானின் அரசியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதற்குப் பலமான அடிப்படையை இந்தியாவின் அணுகுமுறை ஏற்படுத்திக் கொடுத்ததுடன் அதனை தொடர்ச்சியாக பேணவும் முனைகிறது. இந்தியா, பாகிஸ்தானின் எதிரி நாடு மட்டுமல்ல, அதன் வளர்ச்சியையும் பாதுகாப்பையும் கேள்விக்குரியதாக்கி வருகிற நாடாகவும் காணப்படுகிறது. ஏறக்குறை 1947 முதல் அதனையே பாகிஸ்தான் தனது உணர்வாகவும் கொண்டுள்ளது. இதனால் வன்முறையை உணர்வாகவும் செயலாகவும் கொண்டிருக்கும் பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக அத்தகைய நகர்வை முதன்மைப்படுத்தி வருகின்றனர். ஆனால் அத்தகைய வன்முறைக்குள் இறுதியில் பாகிஸ்தானின் அரசியல் மட்டுமல்லாது, ஆட்சியாளர்களின் இருப்பும் காணாமல் போவதைக் காண முடிகிறது. குறிப்பாக அலி பூட்டோவும், பெனாசீர் பூட்டோவும் கொல்லப்பட்டது போல் இராணுவவாதியான சியா உல் ஹக்கும் அவ்வாறான வன்முறையாலேயே கொல்லப்பட்டார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இரண்டாவது, இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரத்துக்குப் பின்னர் பல போர்களை எதிர்கொண்டன. காஷ்மீரை மீட்டெடுக்கும் முயற்சியில் இரு நாடுகளும் 1947, 1956,1965 இலும் பங்களாதேஷ் பிரிவினைக்காக 1971 இலும் கார்கிலில் 1998 இலும் பாரிய போர்களை எதிர்கொண்டு அழிவுகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தன. இரு நாட்டுக்குமான போர்களில் பாகிஸ்தானே அதிக இழப்பையும் அழிவையும் சந்தித்தது. மீள



முடியாத நெருக்கடிக்குள் பாகிஸ்தானின் இருப்பு விளங்கியதுடன் பொருளாதாரம் அனைத்தும் பாரிய பாதிப்பினை எதிர்கொண்டது. பாகிஸ்தானின் தேசிய பொருளாதாரத்தின் 28 சதவீத ஒதுக்கீடாக ஆரம்பத்தில் காணப்பட்ட இராணுவச் செலவானது படிப்படியாக குறைந்தாலும் தற்போது 4 சதவீதத்திற்கும் அதிகமாக இராணுவத்திற்கு ஒதுக்கப்படுகிறது. இராணுவத்தின் ஒதுக்கீடு குறைந்தாலும் இராணுவ ரீதியான வளர்ச்சியும் ஆயுத தளபாடங்களின் குவிப்பும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதற்கு இந்தியா மீதான அச்சமே பிரதாக காரணமாகக் கொள்ளப்படுகிறது. பாகிஸ்தான் இந்தியாவிடம் எதிர்கொண்ட தோல்விகளும் அதற்கு எதிரான நகர்வுகளும் தொடர்ச்சியாக வன்முறையை தூண்டுகிறது. அதன் நடவடிக்கையில் ஒன்றாகவே அணுவாயுத தயாரிப்பில் பாகிஸ்தானின் வெளிப்பாடு சாத்தியமானது.

மூன்றாவது, பாகிஸ்தானின் புவிசார் அமைவிடமானது இராணுவ முக்கியத்துவத்தை மட்டும் கொள்ளாது இஸ்லாமிய நாடுகளின் நிலத் தொடர்ச்சியையும் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கான தரைத் தோற்றத்தையும் பிரதிபலிக்கின்றது. வன்முறைக்கான நிலத் தோற்றத்தைக் கொண்ட இஸ்லாமிய நாடுகளது அரசியலை பாகிஸ்தானும் கொண்டுள்ளது. பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஈரான் மற்றும் துர்க்மெனிஸ்தான் போன்ற நாடுகளை எல்லையாகக் கொண்டிருப்பதனால் இஸ்லாமிய கலாசாரத்தை அரசியலிலும் இராணுவத்திலும் கடைப்பிடிக்க முனைகிறது. அத்தகைய இயல்புகளைக் கொண்ட பிராந்திய நாடுகளது பண்பாட்டினைப் பின்பற்றும் பாகிஸ்தான் உண்மையான இஸ்லாத்தின் இயல்புகளை நிராகரித்துவிட்டு இஸ்லாமிய மேலாதிக்க சக்திகளது இயல்பினை பின்பற்றி வருகிறது. அதுவே வன்முறைக்கும் மோதலுக்கும் வழிவகுத்து வருகிறது.குறிப்பாக மத எதிர்ப்புவாதக் குழுக்களும் தீவிரவாத அமைப்புகளும் சமூகத்தின் இருப்பாக மாறியுள்ளதுடன் அதுவே உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்படுகிறது. அதனை முதன்மைப்படுத்தும் பிரதான நாடுகளின் மையப்பகுதியாக பாகிஸ்தான் காணப்படுகிறது. ஏனைய மதங்கள் மீது அதிக எதிர்ப்புணர்வை கட்டிவளர்க்கும் மதத் தீவிரவாதம் வன்முறையை இயல்பான பண்பாக கொண்டுள்ளது. வன்முறையே அதன் பாதுகாப்பு எனக்கருதுகிறது.

நான்காவது, நாட்டின் பிராந்திய அணுகுமுறை மட்டுமன்றி உலகளாவிய போக்கிலும் பாகிஸ்தானின் அரசியல் வன்முறைக்கான ஊக்குவிப்பை எதிர்கொள்கிறது. இம்ரான்கான் ஊழல்வாதி எனக் குறிப்பிட்டு ஆட்சியை இழக்கும் போது அமெரிக்கா மீதும் மேற்குலகத்தின் மீதும் இம்ரான்கான் குற்றம்சாட்டியிருந்தார். குறிப்பாக சீனாவுடனான நெருக்கத்தை அதிகம் கொண்டுள்ள இம்ரான் ரஷ்யாவுடனும் சமதையான உறவை பின்பற்றியிருந்தார். அதனால் அமெரிக்காவுடன் வெளிப்படையான முரண்பாடுகள் இல்லாது விட்டாலும் உள்ளார்ந்த ரீதியில் முரண்பாடுடைய நிலை தவிர்க்க முடியாது வளர்ச்சியடைந்தது. ஏறக்குறைய அவரது ஆட்சி இழப்புக்கு அத்தகைய உலக அரசியல் போக்கே காரணமாக அமைந்திருந்தது. சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் குவாடர் துறைமுக ஒத்துழைப்பு, கொரகரம் உயர்பாதை, பொருளாதார ஒத்துழைப்பு என்பன பாரிய நெருக்கத்தைக் கொண்டுள்ளன. இதற்கு எதிராக அமெரிக்க உட்பட்ட மேற்கினது அணுகுமுறை வளர்ச்சியடைந்ததன் விளைவாக பாகிஸ்தானின் ஸ்திரமான ஆட்சி ஆபத்தான நிலைக்குள் நகருகிறது.

ஐந்தாவது, இம்ரான்கான் மீதான துப்பாக்கிச் சூடு தேர்தலுக்கான அவரது ஆதரவுத் தளத்தை அதிகரித்துள்ளதாகவே உணரப்படுகிறது. போராட்டங்களும் வன்முறைகளும் தொடர்வதற்கான வாய்ப்பு அதிகரித்துச் செல்கிறது. அதேநேரம் தற்போதைய ஆட்சியை தொடரும் பாகிஸ்தான், பிரதமரின் அதிகாரத்திற்கு எதிராக பலமான மக்கள் எழுச்சியொன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தென்னாசிய நாடுகள் அனைத்துமே ஊழல் ஆட்சியாளர்களைக் கொண்ட நாடுகளாகவே காணப்படுகின்றன. அதில் பங்களாதேஷுக்கு அடுத்த நிலையிலுள்ள பாகிஸ்தான் வன்முறையாலும் இராணுவவாதத்தாலும் சூழப்பட்டுள்ளது. அதாவது ஊழல், வன்முறை, இராணுவம் என்பவற்றுடன், பாகிஸ்தானிய உயர்வர்க்கம் இத்தகைய இயல்புகளுக்கு சலாம் போடும் நிலையிலேயே விளங்குகின்றது. அதனால் ஆட்சியின் முழுமையையோ அல்லது ஜனநாய ரீதியிலான ஆட்சிமாற்றத்தையோ கண்டு கொள்வது பாகிஸ்தானில் கடினமானது. அதற்கு அடிப்படையில் பாகிஸ்தானை உருவாக்கிய ஜின்னா ஏற்படுத்திய கட்டமைப்புக்களே காரணமாகும். பாகிஸ்தானின் ஆட்சியாளர்களும் ஆட்சி அதிகாரமும் இராணுவத்தாலும் வன்முறையாலும் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானிய சிந்தனையாளர் ஹம்சா அலவி குறிப்பிடுவது போலவே காணப்படுகிறது. பாகிஸ்தானை ஆளும் வர்க்கத்தை இராணுவம் தனது நலனுக்கு ஏற்ப கையாளுவதும் அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதும் நிதர்சனமாகவுள்ளது.

எனவே இம்ரான்கான் மீதான துப்பாக்கிப் பிரயோகம் பாகிஸ்தானை ஆளும் அரசாங்கத்தின் மீதான குற்றச்சாட்டை அதிகரித்துள்ளது. அவ்வாறே உலகளாவிய சக்திகளின் தலையீடு இருக்கலாம் என்ற குரல்களும் எழுப்பப்படுகின்றன. இவை அனைத்துமே இம்ரான்கானின் தேர்தல் வெற்றிக்கான முதலீடாக அமைய வாய்ப்புள்ளது. இத்தகைய தாக்குதல்கள் பாகிஸ்தானைப் பொறுத்தவரை வழமையானவையாகவே தெரிகின்றன. கடந்த காலம் முழுவதும் அத்தகைய வன்முறைக்குள்ளாலேயே பாகிஸ்தானின் அரசியல் நகர்ந்துள்ளது.



தமிழ்க்கவியின்
## வாழ்க்கைக் கோலங்கள் 3

# இது சோம்பேறிகளின் காலம்

“எனக்கொரு மரச்சீப்பு வேணும்.” என் பேத்தி கேட்டிருக்கிறாள். சீப்பு என்றதும் எனக்கு நினைவுக்கு வருவது என் சின்ன வயதில் எங்கள் தெருக்களில் பொட்டணிகட்டி பொருட்களை கொண்டு வரும் சிறு வியாபாரிகள்தான். அப்போதெல்லாம் வயோதிபப் பெண்கள்தான் கடைத்தெருவுக்குப் போவார்கள். சிறு பிள்ளைகளும் போவார்கள். கோவில் திருவிழாக்களில் வரும் கடைகளையே எமது பெண்கள் பார்க்கமுடியும்.

எங்கள் தெருவில் மணிப்பெட்டிக்காரர் வருவார். நாலு வீட்டுப் பெண்கள் ஒரு வீட்டில் கூடி அவர்களை கூப்பிட்டுப் பொருட்களை வாங்குவார்கள். அங்கேதான் உலகின் நாகரீகம் பரிமாறப்படும்.

‘ரோசாப்பூ ரவிக்கைக்காரி’ என்றெரு படம் வந்ததே அது போல. என்தாய் மிகவும் கூச்ச சுபாவம். அறியாமையை அடக்கவும் தெரியாது. அந்த மணிப்பெட்டிகாரரிடம் ஒரு கொம்புச்சீப்பும், ஒரு பேன் வா ரும் சீப்பும் வாங்கினார், இரண்டும் கொம்பில் செய்தது. அந்த வியாபாரி பிளாஸ்டிக் சீப்பொன்றையும் காட்டினார். அது வளையும் தன்மை கொண்டது. “எடியே ரப்பரில சீப்பு” என அதிசயித்தார். பச்சைக்கிளி பொம்மையும் முதலில் உடையும் பொருளில் செய்து வரும். இப்போது அதுவும் ரப்பரில் வந்திருந்தது. “செலுலொயிட் உடையும் இது உடையாது”என்றார். அது அப்போது வியப்பு புதினம், அப்பா வந்ததும் அம்மா அதை சொல்லி ஆச்சரியப்பட, அவர் “எடி இப்ப குடங்கூட அலுமினியத்தில வந்திருக்கு” என்றார். பிளாஸ்டிக் பெருகுமுன் மண்ணிலே நாம் பார்த்த பொருட்கள். சட்டி பானை, தாச்சி, குடம் என அலுமினியம் வீட்டை நிரப்பிய போது இருந்த ஆனந்தம், பிளாஸ்டிக் வந்து கொண்டிருந்த போதும் இருந்தது.

விவசாயிகளுக்கு தமது மேட்டு நிலங்களுக்கு மட்டுமல்ல, நினைத்த இடங்களுக்கு நீரை பீச்சியடித்த ரபர் பிளாஸ்டிக் பைப்புகள் பேரானந்தத்தை தந்தன. கூடவே ஏற்றம் போட்டு இறைத்த கிணறுகள் மெள்ளமெள்ள பம்பிகளை உள்வாங்கி விரைந்தன. ஏற்ற இறைப்பு கிணற்றைக் கலக்கி இறைப்பதால் கிணறு தூய்மையாக இருந்தது. யந்திரங்கள் நீரை உறிஞ்சின. கிணற்றின் மேல் குப்பைகள் அப்படியே இத்துப்போய் நீரில் கலந்தது. கூடவே பம்பிக்கு விடும் எண்ணையும் நீரில் மிதந்தது.

மாடு கட்டி இறைக்கும்போது தேவையான ஒரு ஆள் குறைந்து மாடுகளின் வேலையும் மீதமானது. அந்த மாடுகளை வேறு வேலைக்கு அனுப்ப முடிந்தது. கண்களை மூடிக்கொண்டு வந்த பொருளெல்லாம் வாரிக்கட்டினோம். இப்போது பிளாஸ்டிக் எங்களை வழிநடத்த ஆரம்பித்து விட்டது.

பாரமில்லை லேசில் உடையாது, விதவிதமான வண்ணங்கள். எந்தவேலைக்கும் எங்கு சென்றாலும் எத்தனை விதமாகவும் நாம் வாங்கும் பொருளின் விலையோடு இலவசமாக கிடைக்கிறது. சோடா வாங்கினால் அந்தப் புட்டியில் மீண்டும் எண்ணை வாங்கலாம் தண்ணீர் பிடிக்கலாம். தேவையில்லையேல் தெருவில் வீசலாம் இனாமாக வருவதுதானே.

உலகம் முழுதும் குப்பைகளாக கொட்டப்பட்டுக் கொண்டிருப்பது பிளாஸ்டிக் கழிவுகளே. குடிமக்கள் பிழங்குகிற கடற்கரைகளாகட்டும் தெருக்கரைகளாகட்டும் குடிநீர்ப்போத்தல்களும் ‘சொப்பிங் பாக்’ எனப்படும் பொலித்தீன் பைகளுமே நிரம்பிக் கிடக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், சீர் திருத்தங்களை அரங்கேற்றிய போர்க்காலத்தில்கூட அந்த பைகளை மிக நெற்பங் கெட்டதாக தயாரித்து பின் அவை அழிந்துவிடக் கூடியவை என முத்திரை குத்தி அதற்கு நெகிழம் என பெயருமிட்டு விற்பனைக்கு பயன்படுத்தினார்கள். அவை அழிவதில்லை. வெகு விரைவில் கிழிந்து தும்பாகிவிடும் அவ்வளவுதான்.

முன்னர் காங்கேசன் சீமெந்து ஏழு சுற்றுத்தாள் இருக்கும். ஒரு வெற்றுப் பைக்கு தையல் பிரிக்க ஐம்பது சதம். கீழேயுள்ள தையலை பிரித்து அந்த தாளில் இப்படி பைகளை ஒட்டி கடைகளுக்கு கொடுப்பது ஏழை மக்களின் குடிசைக் கைத்தொழிலாக இருந்தது. அரைறாத்தல், ஒருறாத்தல், மூன்று றாத்தல் எடைவரை பழைய செய்தித்தாள்களில் சுற்றியும் அதற்கு மேலாயின் இந்த மாட்டுத்தாள் பைகளிலும் போட்டுத் தருவார்கள்.

அவற்றை வாங்கி குட்டிச்சாக்கில் போட்டு வீட்டுக்கு கொண்டுவரலாம். மீன் வாங்கவென்றே உமல் பின்னி வைத்திருப்பர். வேலைத்தலங்களுக்கு உணவு கொண்டு செல்ல பெரியதும் சிறியதுமாக ஓலைப்பெட்டிகள் இருக்கும். இப்போது பிளாஸ்டிக் வாளிகள் பயன்படுகின்றன. வானொலிப்பெட்டிகளே இருந்தாலும் அவை மரப்பெட்டிகளாக இருந்தன. உள்ளே வைத்தியசாலையின் மருந்துக்குப்பிகளைப்போல கண்ணாடிக்குடுவைகள் கவிழ்ந்திருக்கும் அவை ‘வால்வ்’ எனப்படும். சருவப்பானைகள் சருவக்குடங்களுடன் மண்பானைகளும் சட்டிகளும், உண்டியல் முட்டிகளும், மண்ணிலேயே செய்ய தொழிலாளர்கள் இருந்தனர். குடங்களும் பயன்பாட்டில் இருந்தன. வீடுகளில் தேன் பாணிப்பனாட்டு போன்றவை சேமிக்க பாக்கு மடல்களும் சுரைக்குடுவைகளும் பயன்பட்டன.



செருப்புகள் தோலில் தான் செய்தார்கள் செய்யும் தொழிலாளர்களும் ஊருக்கூர் இருந்தார்கள். மிதியடிக் கட்டை மரக்கட்டையில் காலளவுக்கானபடி வெட்டி சிறு தோலில் மேற்புறம் அமைந்திருக்கும் குளியலுக்கும் மலகூடங்களுக்கும் பயன்பட்டது. இப்போது முடியுமா?

எந்த வகையிலும் இந்த பொருட்கள் நமது வாழ்க்கைக்கு மிக அவசியமானதாக மாறியிருக்கிறது. இனி இவை இல்லாமல் வாழ முடியாது என நம்பிக் கொண்டுமிருக்கிறோம். காரணம் இது சோம்பேறிகளின் காலம். நம்மால் இப்போது இருந்தால் எழும்ப முடிவதில்லை. உடல் உழைப்பு மிக அருகிவிட்டது. எல்லாவற்றையும் யந்திரங்கள் கொண்டு செய்யப் பழகியிருக்கிறோம்.

எழுந்து நடந்து தொலைக்காட்சி இயக்க பஞ்சி. முன்னர் தொலைக்காட்சி அலைவரிசையை மாற்ற வேண்டுமானால் ஒவ்வொரு தடவையும் ஒருவர் அதன் அருகே செல்ல வேண்டும். இப்போது ரிமோட் கொண்டு தட்டுகிறோம். அதையும் கஸ்டம் என்று தவிர்த்து விட்டு கைபேசியிலேயே காட்சிகளையும் பார்க்கிறோம்.

நாங்கள் பிளாஸ்டிக் இல்லாத காலத்தில் வாழ்ந்தவர்கள். காலையில் பல்துலக்க நாயுருவி வேம்பு ஆல்,வேல் என்று எத்தனையோ மூலிகைகள் இருந்தன. கடைக்கு கொண்டு செல்லவென குட்டிச்சாக்குகளை ஒன்றரை அடி அகலமும் இரண்டடி உயரமுமாக தைத்து கடையில் விற்பர். வாங்கினால் வருடக்கணக்கில் இருக்கும்.

மாட்டுத்தாள் பைகள் இரண்டு அளவுகளில் கிடைக்கும். அவற்றை அஞ்சியேம் பத்துச் சேம் பைகள் என சொல்வர். அடடா மாட்டுத் தாள் என்றால் தெரியாதா? சீமெந்து கட்டிவரும் தாள். இப்போது ஒருபைக்கு இரு தாள்கள்தான்.

பெருமளவு மரங்களும், காடுகளும் அழித்து மக்கள் கதிரை மேசை கட்டில் வீடு விட்டம் உத்தரம் வளை, கப்பு வரிச்சு பூட்டு கதிகால் என ஆக்கியது போய் பிளாஸ்டிக் வந்தபின் ஒரளவு மரங்கள் தப்பித்தன.

ஆனால் பாருங்கள் இந்த பிளாஸ்டிக் ஒரு விபத்துப் போல கண்டுபிடிக்கப்பட்டதுதான். 1862ல் அலெக்ஸாண்டர் பார்க்கர் என்பவர் செலுலாயிட்டிலிருந்து பிளாஸ்டிக் பொருளை தற்செயலாக கண்டுபிடித்து லண்டனில் கண்காட்சியொன்றில் வைத்தாராம். அதன்பிறகு கோடு போட்டா ரோடு போடுகிற நாடான அமெரிக்காவின் ‘டுபாண்ட்’ என்ற நிறுவனம் முதலாம் உலக யுத்தத்தின் போது யுத்தப் பொருட்களுக்கான நெகிழிகளை உருவாக்க. அதை தொடர்ந்து 1933ல் பாசெட், கிப்ரான், ஆகிய இருவரும் பிளாஸ்டிக்கில் பலவகையான பாவனைப் பொருட்களைத் தயாரித்தனர்.

பின்னர் அதுவே பலப்பல பொருட்களாகி விற்பனைக்கும் வந்து இன்று படு பயங்கரமாக மாறிவிட்டது.

மின்கடத்திகளுக்கு உறையாக மின்சார சுவிட்சுகளாக. இன்னும் மிக அத்தியாவசியமான பொருட்களாக பிளாஸ்டிக் பயனுள்ள வகையில் உதவினாலும் பொருட்களை உபயோகிக்கக் கூடிய விடயங்களிலும் பொலித்தினை பாவிப்பதால். நமக்கு நாமே கொள்ளி சொருகிக் கொள்கிறோம் என்றுதான் கூறலாம்.

# ஒலிப்பேழை வெளியீட்டு விழா





சென்னை பிரசாத் தியேட்டரில் செல்வ அன்பரசன் இயக்கத்தில் தேனி சுருளி தயாரிப்பில் வெளிவரவிருக்கும் பேயக்காணோம் திரைப் படத்தின் ஓடியோ வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த விழாவில் அம்மா கிரியேஷன் சிவா, தயாரிப்பாளர் கதிரேசன், வன்னியரசு, தயாரிப்பாளரும் இயக்குனருமான தர்மசீலன் செந்தூரன் படத்தின் ஹீரோ கௌசிக் காமெடி நடிகர் கோதண்டம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 'மங்கள ஆரத்தி'

கொழும்பு நாட்டிய கலா மந்திர் நடன நிறுவனத்தின் 46 ஆண்டு கால கலைச் சேவை பூர்த்தியை கொண்டாடும் வகையில், 'மங்கள ஆரத்தி' நடன நிகழ்ச்சி இம்மாதம் 12ஆம் திகதி மாலை 5.30க்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கையின் புகழ் பூத்த நடன ஆசிரியை கலாசூரி, கலாசாகர ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரன் இந்நிகழ்வினை தயாரித்து நெறிப்படுத்தி வழங்குகின்றார். இந்நிகழ்வில் சாஸ்த்திரீய, கிராமிய மற்றும் சமகால நடன வடிவங்களின் அடிப்படையில் நடனங்கள் இடம்பெறவுள்ளன. பல புதிய கலைஞர்கள் இந்நிகழ்ச்சியினூடாக அறிமுகப்படுத்தப்படுகின்றனர்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் Y. அநிருத்தனன் பிரதம அதிதியாகவும், லங்கா அஷோக் லெய்லான்ட் PLC இன் தலைமை நிர்வாக அதிகாரி உமேஷ் கௌதம் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.





# "வனிதாபிமான" விருதினை வென்ற உமறு லெவ்வை உம்மு மஜினா

நாடளாவிய ரீதியில் சிரச TV மற்றும் NDB வங்கி இணைந்து வழங்கும் “ஸ்ரீலங்கா வனிதாபிமான” விருது வழங்கும் மாகாணப்போட்டியில் மாகாண ரீதியில் முதலிடம் பெற்ற மாவடிப்பள்ளியைச் சேர்ந்த உமறு லெவ்வை உம்மு மஜினாவிற்கு கிழக்கு மாகாணத்திற்கான "வனிதாபிமான" விருது வழங்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது.

இலங்கையின் 9 மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒன்பது நபர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




இலக்கியத்துறைக்கான விருதினை கிழக்கு மாகாணம் சார்பாக உமறுலெவ்வை உம்மு மஜினா பெற்றுள்ளார். கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் மாவடிப்பள்ளி எனும் ஊரில் வசிக்கும் உமறு லெவ்வை மற்றும் எஸ். ஐ. உம்மு சல்மா ஆகியோரின் புதல்வியான யூ. எல். யூ. மஜினா ஆரம்ப கல்வியை மாவடிப்பள்ளி அல் அஷ்ரஃப் மகா வித்தியாலயத்திலும் உயர் கல்வியை கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியிலும் வெளிவாரியாக பட்டப்படிப்பு கற்கையினை பேராதனை பல்கலைக்கழகத்திலும் மேற்கொண்டார்.

கட்டாரில் இயங்கும் துணிந்தெழு சஞ்சிகையில் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் உள்ளார்.

வெளிநாட்டில் வசிக்கும் சில சகோதரிகளின் உதவியுடன் வறியவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை பெற்றுக்கொடுக்கும் சமூகப்பணிகளையும் செய்து வருகிறார்.

பாடசாலைக்காலத்திலிருந்தே கவிதை, சிறுகதை, சிறுவர் கதை, நாடகங்கள், பாடலாக்கம், விவாதம் என பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும், சான்றிதழ்களும் பெற்றுள்ளார். இவர் எழுதிய ஆக்கங்கள் பிரதேச இலக்கிய போட்டிகளில் பிரதேச ரீதியில் முதலாமிடங்களைப் பெற்றதுடன் மாவட்ட ரீதியிலும் தேர்வாகி கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இவர் பல விருதுகளுக்கும் சொந்தக்காரி. சுவதம் விருது, இந்தியாவில் அப்துல் கலாமின் பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட "கவிமணிசுடர் விருது", பெருந்தலைவர் காமராசரின் "சிந்தனை மாமணி விருது", பேரறிஞர் அண்ணாவின் "எழுதுகோல் ஆளுமை விருது", முத்தமிழ் கலைஞரின் "செந்தமிழ்ச்சுடர் கலைஞர் விருது", இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்த தினத்தை முன்னிட்டு "எழுத்தொளி சக்ரா விருது", தீபாவளி பண்டிகையை முன்னிட்டு " செந்தமிழ் ஒலிச்செம்மல் விருது" என இந்தியாவின் பல அமைப்புகள் இணைந்து விருது வழங்கி இவரை கௌரவித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் சர்வதேச ரீதியில் இந்தியா, கட்டார், பிரான்ஸ், லண்டன் போன்ற நாடுகளில் தனது எழுத்துப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்.

இவர் தினகரனில் செந்தூரம் பகுதியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பெண் எழுத்தாளர்களை அறிமுகம் செய்தும் வருகிறார். இந்தியாவில் தமிழகம் முழுவதும் வெளிவரும் விடியல் இலக்கிய இதழில் இந்திய பெண் எழுத்தாளர்களையும் அறிமுகம் செய்து வருகிறார். கவிதைகளுக்கு குரல் கொடுத்தும் வருகிறார்.

# இளைஞர் யுவதிகளை வலுப்படுத்தும் மையா



கைகளால் தயாரிக்கப்பட்ட கைவினஞர் சீஸ் வர்த்தக நாமமான ‘மையா சீஸ்’ (Maia Cheese) இன் உற்பத்தித் தொகுதிகளை அதன் நம்பிக்கையான வாடிக்கையாளர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் Cinnamon Lakeside ஹோட்டல் வளாகத்தில் அதன் புதிய விற்பனைக் கூடம் திறந்துவைக்கப் பட்டது.

‘மையா சீஸ்’ என்பது ஜோர்ஜியாவின் முன்னணி சீஸ் தயாரிப்பாளரான மையா டொனான்சே (Maia Donadze) யின் எண்ணக்கருவிலிருந்து உருவானதாகும். அவர் 2005ஆம் ஆண்டு இந்தியாவின் கோவாவில் ‘மையா சீஸ்’ வர்த்தக நாமத்தை ஆரம்பித்ததுடன், அதன் பின்னர் 2015ஆம் அண்டு இலங்கைக்குக் குடிபெயர்ந்த பின்னர் மாதிபொல பிரதேசத்தில் ‘மையா சீஸ்’ உற்பத்திகளை ஆரம்பித்தார்.




2015ஆம் ஆண்டு முதல் 25-27 வயதுப் பிரிவைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் மற்றும் ஆடை உற்பத்தித் துறை போன்ற ஏனைய தொழிற் துறைகளில் வேலையிலிருந்து நீக்கப்பட்ட 45 வயதுக்கு மேற்பட்டவர்கள் என மூன்று வயதுப் பிரிவுகளையும் சேர்ந்த பலருக்கு மையா சீஸ் உரிய பயிற்சிகளை அவர்களுக்கு வேலைவாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

இந்த சிறப்பான அங்குரார்ப்பணம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சீஸ் உருவாக்குனரான மையா டொனான்சே குறிப்பிடுகையில், “என்னையும், எனது சீஸ் தயாரிப்பையும் அரவணைத்த இலங்கையின் அற்புதமான மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதுவரையான பயணம் சவால் மிக்கதாக இருந்தாலும், வெற்றியை அடையக் கூடி பயணமாகவே இருந்தது.

கைகளினால் தயாரிக்கப்படும் ஐரோப்பிய சீஸுக்கான ஒரேயொரு புதியவிற்பனைக் கூடமாக இதனைத் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் மாற்றுவதே எமது நோக்கமாகும்.

எமது சீஸ் உற்பத்தித் தொகுதிகளைத் தொடர்ந்தும் பரிசோதிக்கவும், அவற்றை விஸ்தரிக்கவும் எதிர்பார்த்திருக்கின்றோம்” என்றார்.

குறுகிய காலத்துக்குள் ‘மையா சீஸ்’ வீட்டில் அதிகம் பயன்படுத்தப்படும் வர்த்தக நாமமாக உருவாவதற்கு வழங்கிய சகல ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல்களுக்காக இணை நிறுவுனர் செரியோசா அன்டோனி விஜேகோனுக்கும் டொனான்சே நன்றி தெரிவித்தார்.

பரிஸ்டா கஃபே (Barista Cafes), ஜோன் கீல்ஸ் குழுமம் (John Keells Group) மற்றும் ஜெட்விங் ஹோட்டல் அன்ட் ரிசோட் (Jetwing Hotels & Resorts) போன்ற நிறுவனங்களுக்கான விநியோகஸ்தராக மையா சீஸ் கூட்டாண்மை ஏற்படுத்தியுள்ளது.

இது தவிரவும் சொஃப்ட் லொஜிக் குளோமார்க் (Softlogic Glomark), குட் மார்க்கட் (Good Market), சாரகேத ஓர்கானிக்ஸ்ட் அன்ட் அட்கென் ஸ்பென்ஸ் பிஎல்சி ஜி.டி.பி (Saaraketha Organics & Aitken Spence PLC GPD (Global Parcel Delivery)போன்ற நிறுவனங்கள் உள்ளிட்டவை மையா சீஸின் ஏனைய பங்காளர்களாகும்.

# 51 சிறுவர்கதை நூல்கள் தமிழ் மொழியில்

இலங்கையின் பிரபல சிங்கள மொழி சிறுவர் கதை எழுத்தாளரும் ஓவியருமான காலஞ்சென்ற சிபில் வெத்தசிங்ஹ எழுதிய நூல்களுள் 51 (ஐம்பத்தொரு) நூல்கல்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு அண்மையில் (31.10.2022 ) வெளியிட்டு வைக்கப்பட்டது. எம்.டி. குணசேன நிறுவனத்தின் வெளியீடுகளான இந்நூல்களை தமிழ் மொழியில் வி.ரெட்லி ஹெரிசன் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல் க ளின் ஆங்கில மற்றும் ஜப்பான் மொழி பெயர்ப்புகளும் இதே நாளன்று வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







சிபில் வெத்த சிங்ஹவின் 95 ஆவது (தொண்ணூற்றைந்தாவது) ஜனன தின அனுஷ்டிப்பு கடந்த 31ஆம் திகதியன்று எம்.டி. குணசேன நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே மேற்படி நூல்களின் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெற்றது.

எம்.டி.குணசேன நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரஜீவ் குணசேன மற்றும் வெளியீடுகளுக்கான முகாமையாளர் ஜயம்பதி ராஜகருணா ஆகியோரின் தலைமையில் தனுஜா நிர்மலியின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஏராளமானோர் கலந்து சிறப்பித்தனர்.

சிபில் வெத்தசிங்ஹ 76 வருடங்களுக்கும் மேலாக சிறுவர் கதை நூல்களை எழுதி வந்துள்ளதுடன் பல உள்ளூர் மற்றும் சர்வதேச விருதுகளையும் வென்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அனைத்து வயது சிறுவர்களுக்கும் ஏற்றவகையில் அமைக்கப்பட்டுள்ள இந்நூல்களை அனைத்து எம்.டி.குணசேன புத்தக விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்ய முடியும்.




## கையோடு பலித்த ராசி பலன்..!

ஷெல்லிதாசன்
திருகோணமலை

காலை தொலைக்காட்சியில் ஒளிபரப்பான
இன்றைய நாள் எப்படி
சோதிடத்தில்...
"கன்னி ராசிக்காரருக்கு அவர்கள்
எதிர்பாராத விதத்தில் செல்வம்
இன்று அவர்களது வீடுதேடி வந்து
கதவைத்தட்டும்.
கடன்தொல்லை தீரும்
கவலையும் தீரும்" என்பதாய்.....
அதைக் கேட்ட
அதே ராசிக்காரனான எனக்கோ
கையிலிருந்த காசெல்லாம் தீர்ந்து
அடுத்த சம்பள நாளுக்காய்
ஏங்கியிருந்த வேளை
ஒரே குதூகலம்...
செல்வம் கொட்டப்போகிறது
கடன் தொல்லையெல்லாம்
காற்றாய் பறக்கப் போகிறது
என்ற எண்ணத்தில்
கிறங்கியிருந்த நான்.....
பூட்டியிருந்த என்வீட்டு
வாசல் மணி பலமாக ஒலித்தது கேட்டு
கதவைத் திறந்தேன்
எனது மச்சான் கொடாக்கண்டன்
" செல்வம் "
புன்னகை புரிந்தபடி
தனது குடும்ப சகிதமாக
உரிமையோடு உள்நுழைந்தான்
ஐந்தாறு நாட்களுக்கு
என் வீட்டில் நின்று
விடுமுறையை கழிக்கும் ஆவலில்..!



## முதுமையின் பொழுதுகள்

முஸம்மில் கமர்தீன்
கொழும்பு

வெளிச்சமற்ற அறையொன்றில்,
என்னை தனிமை படுத்திக்கொண்டே
மனச் செவிகளில் கேட்கிறேன்
யாரும் கேட்டிறாத மெல்லிய ஓசை...

வாழ்நாட்களை கடந்து வந்தும்
வலிகளினதும் இழப்புகளினதும்
வடுக்கள் இன்னும்
வறுத்தெடுத்துக் கொண்டிருக்கிறது
என்னிதயத்தோடு
சதையும் தோலுமாய்
என்னோடு ஒட்டிக் கொண்டிருந்த
சில நேசவுறவுகளின் பாசங்களினால்
கூரிட்ட துரோகங்களை நினைத்து...

அவ்வுறவுகளால் அன்பை விறகாக்கி
பாசமெனும் தீயை மூட்டி
என்னிதயத்தை,
பற்றியெரியவிட்ட அத்துரோகங்களை
மன்னிப்பால் மட்டுமே
என்னால் அணைக்க முடிந்தது...

அவர்களின் நாவால்
கொட்டிய அத்துனை வார்த்தைகளும்
இரும்பாக இருந்திருந்தால்
சப்பி விழுங்கியிருப்பேன்...

அவர்களின் சொற்கள் அத்துனையும்
முற்களாக இருந்திருந்தால்
நான் மென்று
தொண்டைக்குழி சுவைத்து இருந்திருக்கும்...

என்னிதயத்தை
மௌனத்தால் பூட்டுப் போட்டு
நடைவண்டியை
கால்களில் இறுக்கிக் கொண்டு
வழிப்பாதை வழியாக சொற்ப தூரத்தில்...
என்னை பதாகையொன்று வரவேற்றது
இப்படியொரு வாசகம்

இது வேர்விட்ட மரத்திற்கு
கிளைகளால் கூரிட்ட துரோகம்
முதுமை இல்லம் என்று...



## பதில் உண்டோ என் மனுவிற்கு!

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

கனவிலே உன் முகம் மறைவதில்லை
விடியலில் உன் முகம்
நிஜத்தில் இல்லை

ஏக்கங்கள் யாவும் என்னை
ஏங்கிட செய்யும் வேலை
உண்மைகள் யாதும் இங்கு
உயிர்பெற மறுப்பது உண்மை

நீ நான் என்ற விதி மாறி
நாம் என்றே வாழ்ந்தோம்
நாம் என்ற வழிதவறி
நீ நான் என மீண்டோம்

இது பிரிவா இல்லை தொலைவா
உன்னிடம் கேட்கிறேன்
இது முடிவா இல்லை முதலா
மீண்டிட நினைக்கிறேன்

சிறு கோபம் சிறு ஏக்கம்
வலி தந்து வடுவானது அன்று
யாவையும் நான் மறந்து
உனதானேன் இன்று
எனதாக நீ மாற
என்னை ஏற்றிடுவாயா!



## சோதிப் பிழம்பே

ரதிதேவி, மானிப்பாய்

பகவான் என்னும் வான்வெளியில்
பறந்து திரியும் முகில் குயில்கள்
ஆயிரம் ரூபங்கள் அணிந்து களைந்து
களைத்தே தெளிந்தன வானெனவே

முகிலெனத் தன்னை முனைந்தவர்க்கு
முகிலாகி எல்லாம் பயமுறுத்தும்
வெண்ணாவி நெய்த சிற்றுடலே
இவை வெவ்வேறற்ற ஒன்றெனவே
ஓதி உணர்ந்த முனிவர்க்கு
எல்லாம் ஆகித் துணை நிற்கும்
பிரம்மம் பகவன் பரமாத்மா
பெயர்கள் கோடி கொண்ட பொருள்
ஆம் அந்த ஒற்றைச்
சுடரைக் கண்டவர்க்கு
கண்கள் இனிப் பயனில்லையே

காலம், இரவு பகலெனவே
பிரிந்து கிடந்ததால் பிறந்த
பிரபஞ்சம் என்னும் பெருமாயை
தனை விழுங்கி நிற்கும் பேரொளியே

காற்றோடு கலந்து
காணாமல் போனேன்
ஊற்றாகி நின்ற
உன் உண்மையைக் கண்டதும்

எனக்கு நானே தாயாகி
என்னை நானே ஈன்றெடுப்பதே
தவம்

வேர் கொண்டு விளைந்தாலும்
நறுமணம், மலரிதழ் விட்டு
விலக வேண்டியது விதி
அகுது ஆன்மா என்ற வாசம்
என்றும் வாடாது
எங்கும் பரவி நிற்கும்
பரவசித்து நிற்கும்



## நீ என் தேவதையாக நித்தம் வாழ்கிறாய்

அன்புடன் நதுநசி

இதயம் எனக்கு
இன்பத்தால் துடிக்கிறது
துன்பம் மனதில்
குடியிருந்த போதும்

இன்று உனக்கு
பிறந்த நாள் என்பதால்
உன் மனதால் நீ
மகிழ்ந்து கொள்ளும் நாள்

நினைத்து பார்க்கிறேன்
இறந்து போன என்
நினைவுகளை இன்று
மீண்டும் ஒரு தடவை

அவை உயிர்ப்புடன் தான்
இருக்கின்றன இன்றும்
அந்த நினைவுகளில் நீ
தேவதையாக வாழ்கிறாய்

உந்தன் மகிழ்ச்சி
ஒன்று மட்டுமே நோக்கமாக
உந்தன் விருப்பங்கள்
மட்டுமே நிகழ்வுகளாக

நினைவுகளை அவை
இன்றும் பசுமையாக்க
உன்னை எதிர் காணும்
நொடிகளெல்லாம் இதமானது

என்னை நான்
உன்னிடம் இழந்தேன்
மீண்டும் திரும்ப பெற்றிட
மனமின்றி விட்டு விட்டேன்

இன்றும் கூட
உனை நலம் காண
மகிழ்ந்து போவேன் தினம்
நீ என் தேவதையாக.....

## சீரியல் கல்வி வேண்டாம்

தரு. தங்கம்
ரக்குவானை

மெகா சீரியல்களை பார்க்க
மினி திரை அரங்குகளாகும் வீடுகள்
படிக்க முயலும் இளையவர்களை
படம் பார்க்க கூப்பிடும்
சொந்த உறவுகள்
சீரியல்கள் பார்த்தது போதும்
சின்னஞ்சிறு மனதில்
களங்கத்தை ஏற்படுத்தி
காதலை வளர்க்காதீர்கள்
படிக்கும் பருவத்தில்
பள்ளியை நாடவிடுங்கள்
ஆசிரியர்களை
குறை கூறாதீர்கள்
கல்விதான் உங்களை மாற்றும்
கவலைகள் இல்லாமல் வாழ
வழி வகுக்கும்
கல்வியின் மகிமையை
கற்றவர்களிடம் கேளுங்கள்...
பெற்றோர்களே பிள்ளைகளுக்கு
வழிகாட்டுங்கள் வாழவிடுங்கள்!



## தனிமை

வன்னிக்கவி லக்சன்

தனிமை தந்தது என் வாழ்வில் துணிவை
தனிமையில் நான் கண்டேன் வாழ்வின் வரம்பை
தனிமையை இனிமையாக்க காணவில்லை ஏனோ? நண்பனை
இனி எனக்கு நண்பனே தனிமை எதற்கினி இத்தவிப்பு
தனிமையிலென் உள்ளம் உணர்ந்தேன்
தனிமையிலென் திறமைகள் புரிந்தேன்
தனிமை போக்க அறிவியலோடிணைந்தேன்
அதனாலென்னவோ அதன் ஆழமும் அறிந்தேன்
தனிமை போக்க கவிகள் வரைந்தேன்
இக்கவி படைக்கவும் அத்தனிமைதான் காரணமல்லோ

## சம்மதம் சொல்வாயா?

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்

தையலவளின் மீது
மையல் கொண்டேன்
வெயிலென்றும் பாராமல்
வீதியில் இறங்கினேன்

செல்லும் வழி
சொல்லும் மொழியறிந்து
பல்லும் பளிச்சிடவே
பாக்களை ஓதினேன்

யௌவன வாழ்வில்
எவ்வளவு பொழுதுகள்
அவ்வளவும் உன் நினைவால்
இவ்வளவும் சொல்லாகுது

புன்சிரிப்பைக் கண்டு – என் மன(ப்)
புண்களும் விலகுது
சங்கடத்தில் என் மனம்
சஞ்சரிக்கும் முன்

சம்மதம் என்பதை
சரத்துக்காகவேனும் சொல்லிடு
சஞ்சலமும் நீங்கிடும்
சத்தியமும் நிறைந்திடும்

## மழை காலம்

V.K.கலீபன், கொடிகாமம், யாழ்ப்பாணம்.

இரவுகள் நீளாதோ என்ற ஏக்கத்துடன்
போர்வையை இறுக பிடித்து
தூங்குகிறான் அவன்...

வேலைக்கு போகவில்லையா
மனைவியின் குரல் கேட்கிறது...


மெதுவாக எழுந்து குடைபிடித்து
வீதியோரம் செல்கிறான் வேலை தேடி...

வீதியோரம் காற்றுடன் கொட்டும் மழைக்கு,
குடையினால் ஈடுகொடுக்க வில்லை...

உடைகள் நனைந்துவிட்டதே வீடு திரும்புவோம்
என்று உள் மனம் கூறினாலும்,

நான் அரச உத்தியோகம் இல்லையே
லீவு எடுப்பதற்கு...
அந்தகாலத்தில் படிக்காமல்
விட்டதை உணர்கிறான் அவன்...

வேலைக்கு சென்றால் தான்
நாளை கஞ்சியாவது குடிக்கலாம்
மனைவியும் இரண்டு பிள்ளைகளும்
என்று எண்ணிய அந்த
ஏழையின் பயணம் தொடர்கிறது...



## இயற்கை



அருலானந்தம் ஞா.பிரகாஷ் கந்தப்பளை

கடவுள் நமக்கு
கொடுத்த மிக
பெரிய பொக்கிஷமே.....

இயல்பாக தோன்றி
மறையும் பொருட்கள் இயக்கம் வைத்து
இயங்கும் இடம்
காலம் அனைத்திலும்
இணைந்திருப்பாயே?

நிலம் நீர் காற்று
ஆகாயம் நெருப்பு
இதை சூழ்ந்தே இயற்கையில் படைக்க
பட்டான் மனிதன் ....

வெப்ப நிலையை
மாற்றி பருவ மழை
கொடுத்து மண் அரிப்பை தடுத்து
காடு மழைகள் தந்து
உணவு உறைவிடத்திற்கு
வழி வகை செய்து
தந்தாயே?

எங்கள்
வாழ்வாதாரத்தை உயர்த்த இயற்கை
வளங்களை காப்பதே எங்கள் கடமை......

## உத்வேகம் தேடும் உதிரம்....

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

உத்வேகம் எனும் சொல்லிற்கு
உண்மை அர்த்தம்
உயிராய் நேசித்த உறவுகளின்
உதிர்விற்குப் பிறகுதான்
உனக்கும் எனக்கும் புரியும்....

உதிர ஓட்டம்
உத்வேகமாய் ஓடியது
உதிர்ந்து போன உறவுகள்
உயிரோடு இருந்த பொழுதுகளில் தான்...

உயிர் தந்த தாய்...
உன் உயிர் வளர்த்த தந்தை...
உன் உதடுறிஞ்சிய மார்பகங்களில்
உன் தாய் பால்கொடுத்த
உன் உடன் பிறப்புக்கள்...
உனக்கென வாழும்
உன் மனைவி..
உனக்கென உழைத்துத் தேயும்
உன் கணவன்...
உயிர்ப் பணயம் வைத்து
உன்னால் பெற்றெடுக்கப்பட்ட பிள்ளைகள்...
உயிராய் நேசித்த
உற்ற நண்பர்கள்...

ஆம்.....இவர்கள்
உதிர்ந்து போகாமல்
உயிர் இருக்கும் வரைதான்
உதிர ஓட்டம்
உத்வேகம் தரும்....

ஒரு வேளை
உதிர்ந்து போய்விட்டால்....
உண்மையாய் சொல்கின்றேன்...
உடைந்தே போய் விடுவாய்....
உயிர் வாழ்வதே
உனக்கு உயிர் போகும் வலி தரும்
உலகம் உன்னை
உருக்குலைத்துவிடும்...

ஆம்...
உன் உடம்பில் ஓடிய
உத்வேக உதிரம்
உணர்வின்றி
உறைந்துதான் போகும்....

## நல்வழிகாட்டவந்தீரே

போர்வையூர் மஸிய்யா அஸாத்

அகிலத்து அருட்கொடை அண்ணல் நபியே
ஆதம் முதல் ஈஸா வரை தூதர்களுக்கே
இறுதித் தலைவராய் வந்தீரே
ஈருலக வெற்றிக்கும் நல்வழிகாட்டவந்தீரே

அனாதையாய் அவதரித்தீரே இப்பூவுலகில்
அன்புக்காய் ஏங்கியோரை ஆதரித்தீரே
ஆசான் களுக்கு எல்லாம் ஆசானாய் திகழ்ந்தீரே
ஆவலுடன் அறப்பணி செய்து நல்வழிகாட்டவந்தீரே

சாந்தமுடன் திகழ்ந்த சாந்தி நபி நீரே
சங்கை மார்க்கம் இஸ்லாத்தை போதித்தீரே
சான்றோராய் திகழ்ந்தீரே இப்பூவுலகில்
சமாதானம் நிலைக்க நல்வழிகாட்டவந்தீரே

கருணைக் கடலாம் காருண்ய நபியே இறை
கலாமாம் அல்குர்ஆனை போதித்தீரே
கடமைதனை கச்சிதமாய் நிறைவேற்றினீரே
கர்வமின்றி மானுடர்க்கு நல்வழிகாட்டவந்தீரே

**Repeat Your Ad For Better Offers**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை விமானப் படை

## வான் படை வீரர் / வீராங்கனைகளுக்கான வெற்றிடங்கள்

இலங்கை நிரந்தர / தொண்டர் வான் படையில் வான்படை வீரர் / வீராங்கனைகளாக இணைந்து பெருமையான தேசத்தை கட்டியெழுப்ப வாருங்கள்

### நிரந்தர ஆட்சேர்ப்பு

[illegible]

### நேரடி ஆட்சேர்ப்பு

[illegible]

### தொண்டர் ஆட்சேர்ப்பு

போசனசாலை மேற்பார்வையாளர் (ஆண் / பெண்) / உணவக மேற்பார்வையாளர் – (ஆண்)

அழுக்ககை திரவர் – (ஆண் / பெண்)

பூமி தொழிற்பாட்டாளர் – தரை பராமரிப்பு – (ஆண்)

### சம்பளமும் கொடுப்பனவுகளும்

- மொத்த மாதாந்த திரட்டிய சம்பளம் 66,785/- ஆகும் [illegible]
- [illegible] 23350/- ஆகும் உணவு மற்றும் வீட்டுக் கூலி கொடுப்பனவு
- இலவச உணவு மற்றும் தங்குமிட வசதி
- இலவச சீருடை
- வைத்திய வசதி
- [illegible]
- தொழிற்துறை பயிற்சி
- காப்புறுதி வசதி
- விடுமுறை ஆசனப்பத்திரம்
- ஓய்வூதிய கொடுப்பனவுகள்
- [illegible]
- உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி வைத்திய வசதி

மேலதிகத் தகவல்களுக்காக 2022 நவம்பர் மாதம் 04 ம் திகதி இலக்கம் 2305 ஆக வர்த்தமானியை பார்க்கவும் மற்றும் www.documents.gov.lk

### அடிப்படை தகைமைகள்

- ஸ்ரீ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்
- வயது 2023 மார்ச் 30 ஆம் திகதியன்று

நிரந்தர
ஆண் – 18 – 23 இருத்தல் வேண்டும்
பெண் – 18 – 22 இருத்தல் வேண்டும்

நேரடி ஆட்சேர்ப்பு (நிரந்தர / தொண்டர்)
ஆண் – 18 – 28 இருத்தல் வேண்டும்
ஆண் – 18 – 30 இருத்தல் வேண்டும் [illegible]
பெண் – 18 – 26 இருத்தல் வேண்டும்

- நிரந்தர – [illegible]

தொண்டர்
ஆண் – 18 – 28 இருத்தல் வேண்டும்
பெண் – 18 – 26 இருத்தல் வேண்டும்

- உயரம் ஆண் : 165.0 cm (5 அடி 5 அங்குலம்) [illegible]
  ஆண் : 160.2 cm (5 அடி 3 அங்குலம்) [illegible]
  பெண் : 160.2 cm (5 அடி 3 அங்குலம்) [illegible]
- நிறை ஆண் : 17 < BMI < 26
  பெண் : 17 < BMI < 25
- மார்பு [illegible] 32 அங்குலம் (ஆண்)
- [illegible] : CP2
- தொலை பார்வை : இரண்டு கண்களிலும் 6/6 [illegible]

### அடிப்படை கல்வி தகைமைகள்

க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கில மொழி [illegible] சித்தி உட்பட 6 பாடங்களில் சித்திகள் இருத்தல் வேண்டும்.

**2022 டிசம்பர் 04ம்** திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்

மேலதிக தகவல்களுக்காக **011 2 495 900** www.airforce.lk

[illegible] ஆட்சேர்ப்பு அதிகாரி
தொழிற்துறை பயிற்சி பாடசாலை,
இலங்கை விமானப்படை, கொக்கல.

இணையத்தளம் ஊடாக விண்ணப்பம் அனுப்ப முடியும்
www.airforce.lk or https://airforce.lk/joinus/

---

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை
## முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)

**ஸ்ரீ ஜயவர்தனபுர நிர்வாகத் தலைநகரம் மற்றும் கொழும்பு வர்த்தகத் தலைநகரத்தின் நுழைவாயிலுக்கு அருகாமையில்**

**ராஜகிரிய நகரில்**

**கலப்பு அபிவிருத்தித் திட்டம்**



**காணி அளவு:**
ஏக். 0 ரூட் 3 பர். 22.00

**முதலீட்டு வாய்ப்பு:**
99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை

**பிணை முறி:**
ரூபா 10,000,000/-

**விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு:**
2022 டிசம்பர் மாதம் 6ஆம் திகதி மு.ப. 10.00

**அடிப்படை விலை:**
ரூபா **959,500,000/-**

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு (முதலீடு/ மேம்பாட்டாளர்) குறித்த தகவல்கள் அடங்கிய முதலீட்டு முன்மொழிவுகள் கோரலுக்கான ஆவணங்களை மீளளிக்கப்படாத 100,000 ரூபா பணத்தை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய – கட்ட 1, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு கட்டணத்தை செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவுக்கு 2022 நவம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 2022 டிசம்பர் மாதம் 22ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.


மேம்பாட்டு முன்மொழிவுகள் ஏற்பது 2023 ஜனவரி மாதம் 10ஆம் திகதி பி.ப. 02.00க்கு முடிவுறுவதோடு கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகளை அத்தருணத்திலேயே திறப்பது பத்தரமுல்லை, "சுஹுருபாய" 18ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் இடம்பெறுவதோடு, அதற்காக விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டு பிரிவு, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரியில் அல்லது அவசர தொலைபேசி இலக்கம்: 011-2875921, 011-2875916-20, நீடிப்பு: 2960-2967, கைபேசி இலக்கம் 071 7225300, தொலைநகல்: 011 2875900, மின்னஞ்சல் முகவரி: directorred@uda.gov.lk இணையதளம்: www.uda.gov.lk இல் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**அமைச்சரவை மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,**
**17ஆவது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்லை.**

---

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை
## முதலீட்டு முன்மொழிவுக்கான அழைப்பு



# கொழும்பு 13

**புளுமெண்டல்**

**வடிவமைப்பு - நிர்மாணம் - நிதி - செயற்படுத்தல் மற்றும் ஒப்படைத்தலின் கீழ்வழங்கல் வசதிகள்**

(Logistic) மற்றும் அது சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களுக்காக

**சிறந்த முதலீட்டு வாய்ப்பு**

| | | |
|---|---|---|
| **காணி அளவு** | : | ஏக். 12 ரூட் 02 பர். 02.22(ஹெக். 5.0682) |
| **முதலீட்டு வாய்ப்பு** | : | 50 ஆண்டுகள் குத்தகை அடிப்படை |
| **அடிப்படை விலை** | : | ரூபா 5,423,695,000/- |
| **பிணை முறி** | : | ரூபா 55,000,000/- |

இலங்கை துறைமுக அதிகாரசபை மூலம் களஞ்சியம் மற்றும் அது சார்ந்த மேம்பாட்டு வலயமாக அறிவிக்கப்பட்டிருக்கும் முன்மொழியப்பட்ட பன்முக போக்குவரத்து நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது.

அதிவேகப் பாதை நுழைவாயில்

- துறைமுக நுழைவுப் பாதை
- துறைமுக மற்றும் பிரதான ரயில் பாதை வரையான ரயில் பாதை
- துறைமுக நகரம் வரையான அதிவேகப் பாதை
- கட்டுநாயக்க அதிவேகப் பாதை



இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு (முதலீடு/ மேம்பாட்டாளர்) குறித்த தகவல்கள் அடங்கிய முதலீட்டு முன்மொழிவுகள் கோரலுக்கான ஆவணங்களை மீளளிக்கப்படாத 100,000 ரூபா பணத்தை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய – கட்ட 1, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு கட்டணத்தை செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவுக்கு 2022 நவம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 2022 டிசம்பர் மாதம் 22ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 டிசம்பர் மாதம் 05ஆம் திகதி மு.ப. 10.00க்கு செத்சிறிபாய, கட்டம் 1, 9ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

மேம்பாட்டு முன்மொழிவுகள் ஏற்பது 2023 ஜனவரி 12ஆம் திகதி நண்பகல் 12.00க்கு முடிவுறுவதோடு கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகளை அத்தருணத்திலேயே திறப்பது பத்தரமுல்லை, "சுஹுருபாய" 18ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் இடம்பெறுவதோடு, அதற்காக விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், ஆதன முகாமைத்துவம் மற்றும் மேம்பாட்டு பிரிவு, 8ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரியில் அல்லது அவசர தொலைபேசி இலக்கம்: 011-2875921, 011-2875916-20, நீடிப்பு: 2960-2967, கைபேசி இலக்கம் 071-1775076, தொலைநகல்: 011-2875900, மின்னஞ்சல் முகவரி: directorred@uda.gov.lk இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், அமைச்சரவை மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 17ஆவது மற்றும் 18ஆவது மாடி, "சுஹுருபாய", பத்தரமுல்லை.**




## ஆட்சி மாற்றமும்... *(07ஆம் பக்கத் தொடர்)*

உண்மையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நம்மையெல்லாம் ஆழமாகச் சிந்திக்கச் செய்திருக்க வேண்டும். உலகமெல்லாம் பிச்சை கேட்கும் நிலை ஏன் நமக்கு வந்தது? இதை நாம் மாற்ற முடியாதா? என்று சிந்தித்திருக்க வேண்டும். இதற்கான பொறிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அதில் அனைவரும் ஒன்றிணைந்து பங்களிப்பதைப் பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். அவசரகால அல்லது இடர்கால பொறிமுறை – வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் இரண்டு மடங்கு அல்லது மூன்று மடங்கு வேலை செய்ய வேண்டும் என்ற நிலையை உருவாக்கியிருக்க வேண்டும். இதை அரசாங்கமும் செய்யவில்லை. எதிர்த்தரப்புகளும் செய்யவில்லை. சமூக மட்டத்திலுள்ளோரும் செய்யவில்லை. எனவே நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சிகள் எதுவும் நடக்கவே இல்லை. இது வெட்கப்பட வேண்டிய உண்மையாகும்.

பதிலாக ஆட்சி மாற்றம் வேண்டும் – தேர்தல் வேண்டும் என்று மட்டும் தந்திரமாகச் சொல்லப்படுகிறது. ஆட்சி மாற்றமும் தேர்தலும் என்ன மந்திரக் கோலா? எல்லாப் பரிகாரத்துக்குமாக?

நாம் துணிவாகச் சிந்தித்தால், சரியாகச் செயற்பட்டால் நிச்சயமாக நம்மால் இந்த நெருக்கடியிலிருந்து மீள முடியும். மாற்றங்களை உண்டாக்க முடியும். இடர்காலத்திட்டத்தைத் தீட்டி, உரிய பொறிமுறையை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அதை உறுதிப்பாட்டுடன் மேற்கொள்ள வேண்டும். ஒரு ஐந்து ஆண்டுத் திட்டமாக முதற்கட்டமாக இதைச் செய்யலாம். இதற்கான பொருளாதாரக் கொள்கை, வேலைத்திட்டம், சட்ட உருவாக்கம், நிர்வாக நடைமுறை போன்றவற்றை சிறப்பு ஏற்பாடாகச் செய்ய வேண்டும்.

ஆனால், அப்படி ஒன்றிணைந்து செயற்பட்டு ஒரு புதிய யுகத்தைக் காணுவோம் என்ற திடசங்கற்பத்தைப் பூணுவதற்கு எவருமே முன்வரவில்லை. இதுதான் மிகத் துயரமானது. மிக வெட்கக் கேடானது.

எனவேதான் நாடு நெருக்கடியிலிருந்து மீளும் என்று நம்பிக்கை கொள்ள முடியவில்லை என்று துணிந்து கூற முடிகிறது. காரணம், வெளிப்படையானது. புண்ணுக்கு வைத்தியம் செய்வதை – மருந்து போடுவதை விட்டு விட்டு, புண்ணைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறோம். இதுதான் நமக்குப் பழக்கமானது. இதைத்தான் எப்போதும் செய்து கொண்டிருக்கிறோம். நமக்கு முன்னே உள்ள எந்தப் பிரச்சினைக்கும் நாம் தீர்வு காண்பதில்லை. பதிலாக அவற்றைப் பேசிப் பேசியே பராமரித்துக் கொள்கிறோம்.

அரசாங்கத்துக்கு வெளியே பல கட்சிகள் உண்டு. அமைப்புகள் உண்டு. புத்திஜீவிகள் உள்ளனர். செயற்பாட்டியக்கங்கள் இருக்கின்றன. பல தலைவர்களும் நிபுணர்களும் உள்ளனர். இவ்வளவும் இருந்தாலும் பொருளாதார நெருக்கடிக்கு என்ன வகையான தீர்வு சாத்தியம்? அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்கான வழிமுறை என்ன? அரசின் பங்களிப்பும் பொறுப்பும் எத்தகையது? மக்களுடைய பங்களிப்பு எவ்வாறிருக்க வேண்டும்? இதைச் சாத்தியப்படுத்துவது எப்படி? சர்வதேச உதவிகளைப் பெறுவதும் அதைப் பயனுடையதாக மாற்றுவதும் எவ்வாறு? என்பதைப்பற்றி ஒருவர் கூடப் பேசக் காணவில்லை.

அதைப்போல இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன? அதற்கு என்ன செய்ய வேண்டும்? அதற்கான வழிமுறை என்ன? அரசின் பங்களிப்பும் பொறுப்பும் எத்தகையது? மக்களுடைய பங்களிப்பு எவ்வாறிருக்க வேண்டும்? இதைச் சாத்தியப்படுத்துவது எப்படி? என்று சிந்திப்பதைக் காணவில்லை.

எவ்லோரும் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். அதைப்பேசிப் பேசியே காலத்தை ஓட்டுகிறார்கள். பிரச்சினையைப் பற்றி எல்லோருக்கும்தான் நன்றாகத் தெரியுமே. இப்பொழுது இந்த நெருக்கடியிலிருந்து எப்படி மீள்வது? என்பதே பேச வேண்டியதும் செயற்பட வேண்டியதுமாகும். இதற்கு வழிகாட்டுவது யார்? சாத்தியங்களை உருவாக்குவது யார்?

தற்போது வெளியே ஆட்சி மாற்றம் போலொரு தோற்றம் காட்டினாலும் நிலைமையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை என்பது உண்மையே. சிறிய அளவில் தட்டுப்பாடு நீங்கினாலும் பொருட்களின் விலை குறையவில்லை. அரசுக் கொள்கையில் மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு எதுவும் கிட்டவில்லை. குறிப்பாக விவசாயச்செய்கைக்கான அரச உதவிகள் இன்னும் கேள்வியாகவே உள்ளன. மீள்வதற்கான புதிய பொருளாதாரக் கொள்கையோ நெருக்கடி கால வேலைத்திட்டங்களோ முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் இன்னும் இளையோர் தொடக்கம் முதியோர் வரையில் பலரும் சும்மாதான் இருக்கிறார்கள். என்ன வேலையைச் செய்வது என்று தெரியாத நிலையில் 30 வயதுக்குட்பட்ட லட்சக்கணக்கானோர் உள்ளனர். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான இளைய சக்தி அநாவசியமாக வீணடிக்கப்படுகிறது.

ஒவ்வொரு கட்சியும் ஆட்சியைப் பிடிப்பதற்காகவே ஆவலாதிப்படுகின்றது. இதற்கான அரசியற் கூட்டுகள் உருவாகின்றன. அல்லது அதைப்பற்றி தீவிரமாக யோசிக்கப்படுகிறது. பொதுஜன பெரமுனவும் மீள் எழுச்சியடைவதற்கான ஏற்பாடுகளைத் துரிதகதியில் செய்கிறது. "யாரும் நம்மைத் தோற்கடிக்க முடியாது. மீண்டும் நாம் வருவோம் என்று சூளுரைத்திருக்கிறார்" இளைய ராஜபக்ஷ.

நாடு இருக்கின்ற நிலையில் அதை முன்னேற்றுவதை விட்டு விட்டு ஆட்சியை மீளக் கைப்பற்றும் முயற்சியிலேயே முழுக்கவனத்தையும் வைத்திருக்கின்றனர் ராஜபக்ஷவினர். இவ்வளவுக்கும் இன்றைய சீரழிவு நிலைக்குப் பெரும்பொறுப்பு ராஜபக்ஷக்களே. இதையிட்ட பொறுப்புணர்வோ குற்றவுணர்வோ அவர்களுக்கிருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்திருந்தால் இந்த மாதிரி இளைய ராஜபக்ஸ கதைத்திருக்க மாட்டார். மட்டுமல்ல, புத்தளம் தொடக்கம் ஒவ்வொரு இடத்திலும் தங்களுடைய மீள் எழுச்சிக்கான எத்தனத்தை வெளிப்பத்திக் கொண்டிருக்கின்றனர் பொதுஜனபெரமுனவினர். அதற்கு ஆதரவளிப்போருக்கும் தவறுகளில் பொறுப்புண்டு.

ராஜபக்ஷக்களைக் குற்றம் சாட்டி, ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்து மட்டும் நாட்டுக்கு நன்மைகளைச் செய்து விட முடியாது. அதற்கு மாற்று வழியே தேவை. இதனால்தான் சிஸ்டம் சேஞ்ஜ் (System change) வலியுறுப்படுகிறது. நாட்டுக்கு மெய்யான சர்வரோக நிவாரணி என்பது System change மட்டுமே. அதற்கு இப்போதுள்ள எந்த அரசியற் தலைகளும் பொருத்தமானவை அல்ல.




# "ஆசிரியம் ஓர் இறை வணக்கம்"

## ஆசிரியர்களுக்கான அரியதொரு நூல்

**இஸ்லாத்தில் வரலாற்று ரீதியாக நோக்குமிடத்தில் ஒவ்வொரு காலத்திலும் வருகை தந்த நபிமார்களது பணியும் ஆசிரியர் பணியாகவே அமைந்துள்ளது. முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முதன் முதலாக ஜிப்ரீல் (அலை) மூலமாக இறைவனால் அருளப்பட்ட வேத வழிப்பாடு "இக்ரஃ" ஓதுவீராக என்பதாகும்.**

கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம் இதன் மூலம் புலனாகிறது.

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்னும் முதியோர் வாக்குக்கு ஏற்ப தெய்வீகப் பணி புரிபவர்களாக ஆசிரியர்கள் மதிக்கப்படுகின்றனர். இது ஒரு புனிதமான பணியென்பதையும் நாம் ஒவ்வொருவரும் நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும். அந்த வகையில் முப்தி. யூசுப் ஹனிபா வால் எழுதப்பட்ட "ஆசிரியம் ஓர் இறை வணக்கம்" எனும் நூல் வெளிக்கொணரப்பட்டுள்ளது. அவர் முதலாவது கட்டுரையில் "ஆசிரியர் பணி ஓர் இறைவணக்கமாகும்" என்ற தலைப்பில் ஆசிரியர் பணியின் சிறப்பு பற்றி அல்குர்ஆன் கூறும் விளக்கங்களையும் சுட்டிக் காட்டி "ஆசிரியர்களாக இருந்து ஆற்றக் கூடிய பணி இறைபணி. நபித்துவப் பணி இறைபணி, நபித்துவப் பணி என்று வர்ணிக்கின்ற பணியாக இருப்பதனால் அப்பணியில் நபிமார்களிடமிருந்த தூய்மையான எண்ணங்கள், உணர்வுகள், உங்களுடைய பணியிலும் வெளிப்பட வேண்டும் என்பது அடிப்படை அம்சமாகக் காணப்படுகிறது" என்று அவர் தனது நூலில் பதிவு செய்துள்ளார். இதில் குர்ஆன் விளக்கங்களுடன் ஆசிரியர் தொழிலை இறைவனின் திருப்தியோடு செய்ய வேண்டும். உலக ஆதாயத்திற்கோ, புகழுக்கோ, பிள்ளைகளிடத்தில் இருந்து வெகுமதியை எதிர்பார்த்தோ செய்வது பொருத்தமல்ல இறைவனுக்காக செய்தல் வேண்டும் என நூலாசிரியர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். உண்மையிலேயே உலகம் பூராகவும் உள்ள நாடுகளில் முஸ்லிம்கள் வேரூன்றி பெருவிருட்சமாக வளர்ந்து தங்களின் அடையாளங்களை இன்று வரை நிலை நிறுத்தி வருவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைய வேண்டும். குறித்த சமுதாயம் இனம், மொழி, கலாசாரம் போன்ற அணிகலன்களை அணிந்த வண்ணம் தனித்துவமாக உலகம் முழுக்க வாழ்ந்து வருகின்றனர். அந்த வகையில் ஆசிரியர் பணியின் மூலம் தம்முடைய குறித்த தாய் மொழியைப் பேசவும் எழுதவும் கற்றுக் கொடுத்து அதற்காக அரும்பணியாற்றிய ஆசிரியர் பணியாளர்கள் தொடர்ந்து பாராட்டப் பட்டும் அவர்கள் தொடர்ந்து மதிக்கபட்டும் வருகிறார்கள்.




அறிவும் தேடலும் ஒரு தலைமுறையோடு நின்று விடுவதில்லை. அது மனித வரலாற்று

ஓட்டத்தின் நியதி என்பார்கள். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கல்விக்கு அளித்த பங்களிப்பினை உலகம் வியந்து போற்றுகின்றது. அவர் இறைவேதமாக வழங்கிய அல்குர்ஆனை கற்றுணர தனது சமூகத்தினரும் மாணவர் சமூகத்தினரும் அவ்வழி தொடர வழிசமைத்தார்கள். நூலாசிரியர் முப்தி. யூசுப் ஹனிபா " ஆசிரியப் பணி நபிமார்கள் செய்த பணியாகும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் முதல் பந்தியில் "அல்லாஹ் நபிமார்களையும், இறைதூதர்களையும் இந்த பூமிக்கு அனுப்பி வைத்ததன் நோக்கம் மனிதர்களை அறிவூட்டுவதற்காகும். இறை தூதர்கள் அனுப்பப்பட்டதன் நோக்கம் குறித்து அல் குர்ஆன் பல இடங்களிலும் தெளிவுபடுத்துகிறது" என விளக்கமளிக்கிறார்.

இஸ்லாமிய நல்லுலகுக்கு அற்புத ஆசிரியர்களை அறிமுகப்படுத்திய பெருமை இறைவனையே சாரும். அதிலும் ஆசிரியர் துறையில் பெரும் பங்களிப்பை நல்கியதோடு அவர்களுடையே காணப்பட்ட பண்புகளின் சிறப்புக்களை வெளியுலகிற்கு எடுத்துக் காட்டி, அனைவரையும் வியக்க வைத்த பெருமகன் இறைவனாவர்.

இறைவனின் இருப்பையும் வாழ்வையும் ஆசிரியர்களின் உள்ளத்தில் வளர்க்க வேண்டிய பொறுப்பை இந்நூலின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் நூலாசிரியர். ஆசிரியர் என்பவர் தன் பிள்ளைகளை விடவும் மாணவர்கள் மீது அதிக கரிசனையுடையவராக இருத்தல் வேண்டும். கரிசனை, மென்மை, நளினம், கேள்விக்குப் பதில் சொல்வது போன்ற சிறந்த பண்புகள் ஒவ்வோர் ஆசிரியர்களிடத்திலும் இருக்க வேண்டும். அந்த உயர் பண்புகளே நபிகளிடத்திலும் காணப்பட்டன என்று இலகுபட விளக்கிறார் நூலாசிரியர்.

உலகில் நாகரீகங்கள் தோன்றுவதற்கும், உலக முன்னேற்றத்திற்கும் ஆசிரியர்கள் பெரும் பங்காற்றி இருக்கின்றார்கள் என்பதை வரலாற்று வாயிலாக அறியலாம். இவ்வாசிரியர்களின் தன்னலமற்ற சேவைகளை நாம் பெரு மதிப்புடன் நினைத்துப் பார்த்தல் வேண்டும். அவர்கள் சமூக மாற்றத்திற்கான ஏணிப்படி. எனவே இத்துணை மகத்துவத்துக்கும் கௌரவத்துக்கும் உரித்துடைய ஆசிரியர்கள் உண்மையான ஆசிரியர்களாக இருத்தல் வேண்டும். குற்றங்கள் இல்லாதவர்களாக தங்களை தற்காத்துக் கொண்டு ஆசிரியர் பணிபுரிய வேண்டியது பெரும் கடப்பாடாகும். இந்நூல் ஆசிரியம் தொழில் புரிபவர்களுக்கு மட்டுமல்ல பொதுவாக அனைத்து தரப்பினர்களுக்கும் உவப்பானதொரு நூலாகும்.

இந்நூல் பற்றி அகில இலங்கை ஜம்மியயதுல் உலமா சபையின் பிரதித் தலைவர் ஏ. சி. அகார் முஹம்மத் " இந்நூலை வாசிக்கும் ஆசிரியர் தனது பணியின் மகிமையையும் முக்கியத்துவத்தையும் உணர்வதோடு புத்துணர்ச்சியுடனும் புதுத் தெம்புடனும் தனது சேவையைத் தொடர ஊக்குவிக்கப்படுவார் என நான் நம்புகிறேன். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அறபுக் கலாசாலையின் ஆசிரியர்கள் உட்பட கற்பித்தலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் எனவும் கருகின்றேன்" என்று தமது அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூல் ஆசிரியர் சமூகத்திற்கு அரியதொரு நூலாக அமைகிறது. நூலாசிரியர் முப்தி. யூசுப் ஹனிபாவின் முயற்சிகள் மென்மேலும் தொடர வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்பால் அலி...

## சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான... (05ஆம் பக்கத் தொடர்)

இது குறித்து எனக்கு தற்போது பல புகார்கள் வந்துள்ளன. பெட்ரோல் நிரப்பு நிலையங்கள் சிலவற்றில் இதனைப் பயன்படுத்த இன்னும் வசதி இல்லை. இது எனக்கு வந்த புகார். இது சுற்றுலாத் துறையை வெறுப்படையச் செய்துள்ளது என்று சுற்றுலாப் பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

**கே: கொவிட்–19 தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியால், சுற்றுலாத் துறையில் பல வேலைகள் இழக்கப்பட்டுள்ளன. இந்த வேலைகளுக்கு புத்துயிர் அளிக்கவும், சுற்றுலா வேலைகளில் அதிக இளைஞர்களை ஈர்க்கவும் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?**

பதில்: பல தொழில்கள் மூடப்பட்டன. கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக பல ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டன. இவர்கள் மீண்டும் அவற்றைத் தொடங்குவதற்கு, நாம் அவர்களுக்கு உதவ முடியும். சுற்றுலாத்துறையில் சிலர் கடன் பெற்று அதைச் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர். அதிக வட்டி வீதங்கள் இருப்பதால், அவர்கள் பெற்ற வட்டியை விட அதிகமாக செலுத்துகிறார்கள்.

இந்த குறிப்பிட்ட மக்களுக்கு எவ்வாறு நிவாரணம் வழங்கப் போகிறோம் மற்றும் அவர்களது தொழில் முயற்சிகளை மீண்டும் தொடங்குவதற்கு இந்தக் கடன்களை எவ்வாறு திருப்பிச் செலுத்துவது என்பது குறித்து அரசாங்கமாக நாம் விவாதிக்க வேண்டும். அரசாங்கம் என்ற வகையில், இந்த மக்கள் மீண்டும் தொடங்குவதற்கு நாம் உதவ வேண்டும். இல்லையெனில், இது மிகவும் கடினம் மற்றும் அவர்களால் அதைச் செய்ய முடியாது. நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். எனவே, அதை எப்படி மீண்டும் இருந்த இடத்திற்கு கொண்டு வர முடியும் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். ஒன்றரை மாதங்களுக்கு முன்பு வேலைக்குச் சேர்ந்தேன். இந்தத் தொழிலை மேம்படுத்துவதற்கும், இளைஞர்களை சுற்றுலாத் துறையில் எப்படி ஈடுபடுத்துவது என்பதற்கும் நிறைய திட்டங்கள் என்னிடம் உள்ளன. எனக்கு சுற்றுலாவில் வானமே எல்லை. அதற்கான வாய்ப்பு கிடைத்தால் கண்டிப்பாக செய்வேன்.

**கே: அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, இரட்டைக் குடியுரிமை கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் மீண்டும் ஒரு பொது உரையாடல் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

பதில்: உண்மையில், அந்த நபர் வெளியே வந்து நான் இரட்டைக் குடியுரிமை பெற்றவன் என்று கூறும் வரை, பாராளுமன்றத்தில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் யார் என்று என்னால் கூற முடியாது. அவர்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள். ஆனால் அமெரிக்கா, அவுஸ்திரேலியா அல்லது வேறு எதுவாக இருந்தாலும், அவர்கள் குடியுரிமை மற்றும் இரட்டை குடியுரிமை பற்றிய தகவல்களை மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப் போவதில்லை. இலங்கை கூட தரவு பாதுகாப்பு சட்டத்திற்கு கீழ்ப்படியவில்லை, ஆனால் மற்ற நாடுகள் பின்பற்றுகின்றன. அந்த நபரே வெளியே வந்து 'நான் இரட்டை நாட்டவர்' என்று கூறிவிட்டு, எனது தேசியத்தை இங்கேயோ அல்லது அங்கேயோ ஒழிக்காவிட்டால், அது தனிநபரின் விருப்பம்.

எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் இரட்டைக் குடிமக்கள் யார் என்பதை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டும். அதைச் செய்யுமாறு சபாநாயகரிடம் கோர முடியாது.

திகதி 03.11.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4928
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,114,200.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,976,927.00
ஆங்கில எழுத்து U வெற்றி இலக்கங்கள் 7 4 6 8 7 5

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 958
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,364,280.00
B வெற்றி இலக்கினம் 09 17 23 80 வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 131,627,068.40

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1383
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,882,920.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 1 2 7 1 0 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,293,906.40

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3170
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,272,140.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 05 13 37 44
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,770,086.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 237
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,618,900.00
இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 05 39 56 57 விசேட இலக்கினம் சிம்மம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,530,616.60

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1276
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,203,560.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 279,431,934.00
X 25 02 15 73 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



## சுகாதார அமைச்சு

### இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி புலமைப்பரிசில் - 2022-2023

இந்திய அரசாங்க அனுசரணையின் கீழ் இலங்கை மாணவர்கள் 10 பேருக்கு மேற்கு வங்காள பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கல்கட்டாவில் அமையப்பெற்ற தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் (NIH) 2022-2023 கல்வியாண்டிற்காக ஹோமியோபதி மருத்துவபட்ட கற்கைநெறியை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பாக தகைமையானவர்களை தேர்ந்தெடுக்கும் முகமாக சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிக்காலம் 5 ½ வருடங்களாகும். கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் தகைமையான ஹோமியோபதி மருத்துவராக செயற்படுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

**தகைமைகள்**

க.பொ.த.(உ/த) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் தோற்றி பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்து அப்பரீட்சையில் பொது ஆங்கிலப் பாடத்திலும் சித்திபெற்றுள்ள மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடனான தகைமையைக் கொண்டுள்ள 2022.12.31 திகதியன்று 18 - 25 வயதிற்கிடைப்பட்ட விண்ணப்பதாரிகள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, நிரந்தர மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் (02) (விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடுதல் கட்டாயம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்),கல்வித் தகைமைகள் மற்றும் க.பொ.த.(உ/த மற்றும் சா/த ) பரீட்சைகளில் சித்தியடைந்த வருடம் போன்றவற்றை, தெளிவாகக் குறிப்பிட்டு தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனைத்து சான்றிதழ்களினதும் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் சகிதம் 2022.11.25 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில், அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை **ministryofindigenousmedicine@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படும் மூலப் பிரதிக்கு மேலதிகமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை (சுய தரவுகளை மட்டும்) தொலைநகல் மூலம் 011 2112736 இற்கு அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக செயலாளர் (நிர்வாகம்)
சுதேச வைத்தியப் பிரிவு
சுகாதார அமைச்சு
இல.26, 3ம் மாடி. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.**

**தெரிவு செய்யும் முறை**

நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின் அதியுயர் தகைமைகளை பூர்த்தி செய்தவர்களுக்கிடையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு:**

விண்ணப்பதாரிகளுள் அதியுயர் தகைமைகளை பூர்த்தி செய்தவர்கள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இது தொடர்பில் சுகாதார அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாவதுடன் கல்கட்டாவில் அமைந்துள்ள ஹோமியோபதி நிறுவனம் மற்றும் குறித்த பாடநெறி பற்றிய மேலதிக விபரங்கள் இணையதளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு வழிப்பயணத்திற்காக (செல்வதற்கு) மாத்திரம் விமான பயணச்சீட்டொன்று ( Air Ticket) அமைச்சினால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் மற்றும் மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கடிதங்களை அனுப்புவதன் மூலமும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 011 2112742.

**எஸ். ஜனக்க ஸ்ரீ சந்ரகுப்த
செயலாளர்,
சுகாதார அமைச்சு**




### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## Procurement of Supply, Installation, Commissioning and Maintenance of Advance End Point Security Solution for Ministry of Finance

**IFB No.: ITM/2/1/02/NCB/EPS/2022**

1. விலைமனுக்கோரல் ஆவணத்தில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு நிதி அமைச்சிற்காக **Advance End Point Security Solution** என்பதன் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நிதி அமைச்சின் தகவல், தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

   ஒப்பந்தக் காலப்பகுதி: ஒப்படைப்பு மற்றும் நிறுவுதல் காலப்பகுதியானது ஒப்பந்தத்தை கைச்சாத்திடும் திகதியிலிருந்து + 3 வருட பங்களிப்பு, ஆதரவு மற்றும் பராமரிப்பு ஆகியன 6 வாரங்களுள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

2. விலைமனுதாரர்கள் பின்வரும் ஆகக் குறைந்த தகைமை தகவுத்திறனை பூர்த்தி செய்தல் வேண்டும்.
   - Participation as a supplier, in at least One (1) Security Solution Project such as Firewall or endpoint security which valued at least LKR 10 Million that have been successfully completed within the last 5 financial years (2017-2018. 2018-2019, 2019-2020. 2020-2021. 2021-2022)
   - கடந்த 3 நிதியிடல் வருடங்களில் (2019-2020, 2020-2021, 2021-2022) நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த சான்றழிக்கப்பட்ட பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு 100 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல்.

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைகளாக திட்டவட்டமாக தேசிய பெறுகை வழிகாட்டிகளில் குறிப்பிட்டுள்ளவாறு நடாத்தப்படுமென்பதுடன் வழிகாட்டிகளில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை +94 112 151440 என்ற தொலைபேசி வழியாகவும் **sumanapala.mss@itmd.treasury.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் 2022 நவம்பர் 8 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமாகும் வகையில் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் Ms. Sepali Sumanapala இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. 15,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. 2022 நவம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2022 நவம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் ஒன்பது இலட்சம் இலங்கை ரூபாவிற்கு குறையாத தொகையிலான (900,000 இ.ரூபாவிற்கு குறையாத தொகையில்) விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7. 2022 நவம்பர் 15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நிதி அமைச்சின் தரை மாடியின் ரண்தோர கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று வளமுள்ள விலைமனுதாரர்களுடன் நடைபெறும்.

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ திணைக்களம்,
அறை இல.: 27, தரை மாடி,
நிதி அமைச்சு,
செயலகம்,
கொழும்பு-01.
2022 நவம்பர் 6 ஆம் திகதியன்று.**



# ஐவருக்கு வாழ்வளித்து இவ்வுலகிலிருந்து விடைபெற்றார் சமிந்த!

மருத்துவம் தற்போது அசுர வளர்ச்சி கண்டிருக்கிறது. மருத்துவ அறிவியலின் மகத்துவத்தால் பலர் மரணத்தின் பிடியில் இருந்து மீண்டிருக்கின்றனர். சாத்தியமே இல்லை என்று எண்ணியவற்றையெல்லாம் மருத்துவம் சாத்தியப்படுத்தியிருக்கிறது. இரத்ததானம், கண் தானம் என்பனவற்றைத் தாண்டி முக்கிய உடல் உறுப்புகளை தானமாகப் பெற்று நீண்ட காலம் வாழலாம் என்ற நிலைக்கு மருத்துவ அறிவியல் வளர்ச்சியடைந்துவிட்டது எனலாம். மண்ணில் புதைந்து வீணாய் மக்கிபோகும் உடல்கள், தீயில் எரிந்து சாம்பலாகும் உடல்கள் மரணத்தோடு போராடும் எத்தனையோ உயிர்களை காக்க உதவலாம் என்பதை மருத்துவ அறிவியல் நிரூபித்துள்ளது. பிறப்பை தடுத்த மனித இனம் இன்று மரணத்தை தடுக்கவும் புதிய நுட்பங்களை கண்டுபிடித்துவிட்டது.



மனைவியும் மகன்மாரும்

பொதுவாக உடல் உறுப்பு தானம் செய்வதை, வாழும் போது, ஒருவரது இறப்புக்குப் பின்னர், மூளைச்சாவடைந்த பின்னர் என மூன்று வகையாக பிரிக்கலாம். ஒருவர் விபத்திலோ அல்லது கடுமையாக உடல் நலம் பாதிக்கப்படும் போதோ மூளைச்சாவடைய நேரிடுகின்றது. அவரது உடல் உறுப்புகள் நன்றாக இருக்கும். அதேசமயம் அவரின் இதயம் துடித்தாலும் சுயமாக மூச்சு விடமுடியாது. செயற்கை சுவாசம் மூலம் மட்டுமே சுவாசம் நடைபெறும். செயற்கைச் சுவாசக் குழாய்களை அகற்றியவுடன் ஒரு சிலமணி நேரத்தில் ஒரு நபர் நிச்சயம் இறந்துவிடுவார் என உறுதிசெய்யப்பட்டால் தான் அந்நபர் மூளைச்சாவடைந்தவராக அறிவிக்கப்படுவார்.

ஒருவர் மூளைச்சாவடைந்துவிட்டார் என்பதை மருத்துவமனையில் இருக்கும் ஒரு வைத்தியர் மட்டும் அறிவித்துவிட முடியாது. நரம்பியல் நிபுணர், நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர், இதய நிபுணர் ஆகியோர் அடங்கிய குழுவினர் பரிசோதித்து மூளைச்சாவு குறித்து உறுதிசெய்ய முடியும். அதன்பின்னரே மூளைச்சாவடைந்தவரின் உறவினர்களிடம் இதுதொடர்பில் விளக்கி அவர்களின் சம்மதம் பெறப்பட்ட பின்னர் உறுப்புகளை தானமாக பெறமுடியும்.

அண்மையில் பதுளை, ஹசலக, மஹாஸ்வெத்தும கிராமத்தை எம். ஜி.சமிந்த என்பவர் தனது இறப்பின் மூலம் ஐவரை வாழவைத்து இவ்வுலகிலிருந்து அண்மையில் விடைபெற்றுச்சென்றார். குடும்பத்தில் மூத்தவரான, சமிந்தவுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருக்கின்றனர். சிறுவயது முதலே தமது சமய கொள்கைகள், மத அனுஷ்டானங்களுக்கு ஏற்ப தனது வாழ்க்கை கொண்டு நடத்தியவராக இவர் இருந்துள்ளார். ஹசலக்க பிரதேச சபையின் சாரதியாக கடமையாற்றிய இவருக்கு திருமணமாகி இரண்டு ஆண் பிள்ளைகள். மனைவி கிராம பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றுபவர். மூத்தமகன் கண்டி ரோயல் கல்லூரியில் கல்விகற்று சாராரணதர பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கின்றார். இளைய மகன் எட்டாம் வகுப்பில் கல்வி கற்கின்றார். அவரது குடும்பம் மிகவும் மகிழ்ச்சியானது. ஆனால் ஏழ்மை சூழ்ந்தது. எனினும் குருவிக்கூடாய் இருந்த சமிந்தவின் குடும்பத்துக்கு யார் கண்பட்டதோ தெரியவில்லை. அவர்களின் வாழ்விலும் விதி விளையாடியது.


கடந்த ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி. வழமைபோல் ஹசலக்க பிரதேச சபைக்கு தொழிலுக்காக சென்று பஸ்ஸில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், வீட்டுக்கு 600 மீற்றர் தொலைவில் வைத்து பஸ்ஸிலிருந்து இறங்கும் போது தவறி கீழே வீழ்ந்துள்ளார். இதன்போது அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு அங்கிருந்தவர்களால் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். சிறிதுநேரத்தில் அவரது குடும்பத்தவருக்கு அறிவிக்கப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவுக்கு அவர் மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சைகள் எதுவும் அவருக்கு பலனளிக்கவில்லை. அவருடைய நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்தது. இறுதியில் மூளைச்சாவு ஏற்பட்டது. இனி அவர் உயிர் பிழைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதை வைத்தியர்கள் உறுதிசெய்தனர். இதனையடுத்து அவரது ஏனைய உடல் உறுப்புகள் நல்ல நிலையில் இருந்தமையால் அவற்றை தானம் செய்ய குடும்பத்தினரிடம் மருத்துவர்கள் சம்மதத்தை கோரினர். இத்தகைய சந்தர்ப்பத்தில் சமிந்தவின் குடும்பத்தினர் மன தைரியத்துடன் அதனை எதிர்கொண்டனர். நெருங்கிய ஒருவரின் மரணம் என்பது யாராலும் தாங்கிக் கொள்ள முடியாத ஒன்று. எனினும் அந்தத் தருணத்திலும் உடல் உறுப்புகளை தானம் செய்ய கருணை உள்ளத்துடன் சமிந்தவின் குடும்பத்தினர் முன்வந்தனர். அதுவும் அவரது மனைவியும் இரண்டு மகன்மாரும் மிகுந்த மன தைரியத்துடன் அதை எதிர்கொண்டனர். கடைசிவரை அந்த முடிவில் உறுதியாக இருந்தனர்.

அதன் பிரகாரம், பதுளை பொது வைத்தியசாலையின் வைத்திய குழுவினர் சம்பவம் தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அறிவித்து, தேவையான ஏற்பாடுகளை செய்தனர். இலங்கை விமானப்படை மற்றும் சுகாதார அமைச்சுக்கு இடையில் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி கடந்த மாதம் 31ஆம் திகதி இலங்கை விமானப்படையின் பெல் 412 உலங்கு வானூர்தி அம்புலன்ஸாக மாற்றப்பட்டு அதில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு சமிந்தவின் உடல் கொண்டுவரப்பட்டது. பின்னர் அவரது முக்கிய உடல் உறுப்புகள் அகற்றப்பட்டதன் பின்னர் பதுளை பொது வைத்தியசாலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் கடந்த இரண்டாம் திகதி மாலை சடலம் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு கடந்த 4ஆம் திகதி மாலை இறுதிகிரியைகள் இடம்பெற்றன.

## குடும்ப தலைவரை இழந்த வேளையிலும் அவரின் உடலுறுப்புகளைத் தானம் செய்ய முன்வந்த குடும்பத்தின் மனிதாபிமானம்

சமிந்தவின் உடலிருந்து பெறப்பட்ட முக்கிய உடல் உறுப்புகளை கொண்டு ஐவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகின்றது. அவரது இதயம் வெளிநாட்டு வைத்திய குழுவின் உதவியுடன் நோயாளியொருவருக்கு பொருத்தப்படவுள்ளது. அவரது நுரையீரல், கல்லீரல் கண்டி வைத்தியசாலையிலுள்ள நோயாளியொருவருக்கும் இரண்டு சிறுநீரகங்களும் பதுளை வைத்தியசாலையிலுள்ள நோயாளியொருவருக்கும் பொருத்தப்படவுள்ளதாக பதுளை வைத்திய சாலை தகவல்களின் மூலம் தெரிய வந்துள்ளது.

சமிந்தவின் சகோதரர் நிலங்க எம்மோடு கதைக்கையில்,



சமிந்த

'பௌத்த மதம் எப்பொழுதும் தானத்திற்கு முன்னுரிமை வழங்கும் மதமாகும். எங்கள் அண்ணா இவ்வுலகில் வாழும் போதும் பௌத்த மதத்தின் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு மனித நேயத்துடன் வாழ்ந்தவர். அவரின் மனைவியும் அவ்வாறே. அதனால் தான் அண்ணா உயிர் பிழைக்க இனி வழி இல்லை என்பதை வைத்தியர்கள் அறிவித்தும் அந்த மீளாத துயரிலும் உடல் உறுப்புகளை தானம் செய்வது என்ற துணிவான முடிவை அவரால் எடுக்கமுடிந்தது. இதற்காக அரசாங்கம் பெரும் தொகை பணத்தை செலவழித்தது. உடல் உறுப்புகளை வழங்குவது என்ற நிலைப்பாட்டில் இறுதிவரை அவரும் பிள்ளைகளும் உறுதியாக இருந்தமை பாராட்டப்படவேண்டியது. ஒரு மகனாக, கணவனாக, சகோதரனாக தந்தையாக அவரின் இடத்தை யாராலும் நிரப்பமுடியாது.

அண்ணனின் இழப்பு எங்களுக்கு துயரத்தை ஏற்படுத்தினாலும் அவரின் உடல் உறுப்புகள் மூலம் முகம் அறியாத ஐவர் உயிர் பிழைக்கப்போகின்றார்கள் என்பது பெரும் மகிழ்ச்சியான விடயம். இதைவிட புண்ணியம் வேறு எதுவுமில்லை என கண்ணீர் மல்க தெரிவித்தார்.

சமிந்த இவ்வுலகை விட்டு பிரிந்தாலும் பலருக்கு வாழ்வளித்து அனைவர் இதயத்திலும் இடம்பிடித்துள்ளார். மனிதம் மரித்துக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்திலும் மனித நேயத்துடன் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன்வருவதென்பது சாதாரணமானதல்லவே?



வசந்தா அருள்ரட்ணம்









குருநாகல் போதனா வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கு இணங்க குருநாகல் வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவுக்கு 15 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துவகைகள் குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பட்டது. குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் எம். வை. எம். கியாஸ் தலைமையில் சென்ற குழுவினர்கள் இந்தப் பொருட்களை வைத்தியசாலையின் அதிகாரிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தனர். இந்நிகழ்வில் புற்று நோய் வைத்திய நிபுணர்களான லீலா சிரிவர்தன, ஜாலிய ஜயசேகர ஆகியோரும் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் எம். எஸ். எம். அஸான், உப செயலாளர் என். எப். சலீப், பொருளாளர் ஏ. எம். இர்பான் ஆகியோருடன் வர்த்தகப் பிரமுகர்களான நவாஸ் ஹாஜியார். ராசிக் ஹாஜியார் உள்ளிட்ட வர்த்தகப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர். தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களுக்கு உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டன.

(இக்பால் அலி)

## "உத்துர கிணி கனி " நூல் வெளியீட்டு விழா

இலங்கை வங்கியின் மொழிபெயர்ப்பாளர் ஹேமசந்திர பதிரண தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்த அரசியல் நாவலான"உத்துர கிணி கனி '' நூல் வெளியீடு இம்மாதம் 09ஆம் திகதி, புதன்கிழமை பி.ப 12.30 மணிக்கு இலங்கை வங்கி தலைமையகத்தின் 3ம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கின்றது. பிரதம அதிதியாக இலங்கை வங்கி பொது முகாமையாளர் கே.இ.டீ. சுமணசிரியும், சிறப்பு அதிதியாக முன்னாள் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் கலந்து கொள்கிறார்கள்.

நூல் அறிமுக உரையை பிரபல எழுத்தாளர் கமல் பெரேரா நிகழ்த்த, நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் (புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனம்) பெற்றுக் கொள்வார். இவ்விழாவில் சிவதாண்டவம் உட்பட பல கலாசார நிகழ்வுகள் நடைபெற உள்ளன.







உடப்பு, சின்னப்பாடு பகுதியில் (4)பெருந்தொகையான பாரை மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 20ஆயிரம் கிலோவுக்கு மேற்பட்ட பாரைமீன்கள் கரைவலையில் கரை சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு மீன் சுமார் 07கிலோ நிறை கொண்டதாக காணப்படுகிறது. ஒரு கிலோ 680 ரூபாய்க்கு வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(படம்: உடப்பு குறூப் நிருபர்)

## யானை மனித மோதலில்... (04 ஆம் பக்கத் தொடர்)

நான் இரவு அவரது தொலைபேசிக்கு பல முறை அழைப்பை மேற்கொண்ட போதும் அவரது தொலைபேசி இயங்கவில்லை. இந்த காட்டு யானைப் பிரச்சினைக்கு எதையாவது செய்யுங்கள் என்றே நாம் கூறுகின்றோம். இதனால் அப்பாவி உயிர்கள்தான் பறிபோகின்றன.

இதனால் எனக்கும் எனது இரு பிள்ளைகளுக்கும் ஏற்பட்டிருக்கும் இழப்பை ஈடுசெய்ய முடியாது.

இதற்கு யாராலும் தீர்வைத் தர முடியாது. எனது கணவர் பொறுப்பான ஒரு பொலிஸ் உத்தியோகத்தராகும். மீண்டும் இவ்வாறான இழப்புகளை வேறு எவருக்கு ஏற்படுத்தி விடாதீர்கள் என நான் கைகூப்பி கேட்டுக் கொள்கிறேன்..."

சார்ஜன் சுனிலின் மூத்த மகனான 22 வயதுடைய ஏ. பி. சமித்த லக்ஷான் மற்றும் 14 வயதுடைய ஏ. பி. சச்சின்த லக்ஷான் ஆகியோர் வாரியாபொல ஸ்ரீ சுமங்கல தேசிய பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

பொலிஸ்மா அதிபர் சீ. டி. விக்ரமரத்னவின் உத்தரவின் பேரில் சார்ஜன் சுனில் உடன் அமுலுக்கு வரும் வகையில் உப பொலிஸ் பரிசோதகராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார். சார்ஜன் சுனில் கடந்த 31ம் திகதியிலிருந்து உப பொலிஸ் பரிசோதகராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

சார்ஜன் சுனிலின் இறுதிக்கிரியைகள் கடந்த வியாழக்கிழமை முழுமையான பொலிஸ் மரியாதைகளுடன் வாரியாபொல பொது மயானத்தில் இடம்பெற்றன.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 14 சந்தேக நபர்களும் கெப்பிட்டிகொல்லாவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதோடு, அவர்களுள் 13 பேரை இம்மாதம் 10ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை 48 மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு நீதிமன்றம் பொலிஸாருக்கு அனுமதி வழங்கியுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய 16 பேர் கைது செய்யப்பட்டதோடு, அவர்களுள் ஒருவர் சம்பவத்துடன் நேரடித் தொடர்புபட்டிராத காரணத்தினால் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# வவுனியாவையும் விட்டு வைக்காத சிறுநீரக நோய்

இலங்கையில் அனுராதபுரம் மாவட்டத்துக்கு அடுத்ததாக வவுனியா மாவட்டத்தில் அங்கு வாழும் பெரும் எண்ணிக்கையிலான மக்களை பாதித்துள்ள ஒருவகை சிறுநீரக நோய்க்கான காரணம் இதுவரை மர்மமாக இருந்தே வந்தது. அங்க சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணம் கேள்விக்குறியாக உள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் மட்டும் இந்தப் பிரதேசத்தில் 20 ஆயிரம் பேர் இந்த மர்மமான சிறுநீரக நோய்க்கு பலியாகியுள்ளதாகவும் சுமார் 4 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சில கிராமங்களில் மாதத்திற்கு 10 பேராவது பலியாவதாகவும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு சுத்தமான குடிநீர் இன்மையே காரணம் என்று ஆய்வுகள் உறுதிசெய்துள்ளதாகவும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகமாக உள்ள மாவட்டங்களில் இரண்டாவது இடத்தில் வவுனியா மாவட்டம் காணப்படுவதாகவும் வவுனியா மாவட்டத்தில் காணப்படும் குடிநீர் பிரச்சினையே நிறுநீரக நோய் ஏற்படுவதற்கான பிரதான காரணம் எனவும் வட மாகாண சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. இதற்கு இங்கு வாழும் கிராம மக்கள் சுத்தமான குடிநீர் இன்றி அவதிப்படுவதும் காரணமாகும்.

இச் சிறுநீரக நோய் ரஜரட்ட பகுதியில் முதலில் கண்டறியப்பட்டதால் 'ரஜரட்ட சிறுநீரக நோய்' என்றும் இதற்குப் பெயர் உள்ளது. இன்று இந்தநோய் அந்தப் பகுதியையும் தாண்டி, பொலன்னறுவை மற்றும் ஹம்பாந்தோட்டை போன்ற மற்ற தென்னிலங்கைப் பகுதிகளிலும் பெருமளவில் காணப்படுகிறது. இப்போது இந்த நோய் மெதுவாக வடக்கு நோக்கியும் நகர்ந்த வவுனியாவில் அதிகரித்துள்ளது கடந்த சில தசாப்தங்களாக இந்நோயானது இலங்கையில் பாரிய பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. மிக அண்மையில் இலங்கையில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையானது சடுதியாக அதிகரித்துள்ளது.

அதன்படி வவுனியா மாவட்டத்தில், குறிப்பாக இவ்வாய்வுக்காக தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களான ஆசிக்குளம், மகாறம்பைக்குளம், ஈச்சங்குளம்.காத்தார்

**திவ்யா சிவகுமார்...✍**


சின்னகுளம், கூமாங்குளம், வவுனியா வடக்கு, அக்போபுர, ஈரப்பெரியார்குளம், நேரியகுளம், ஆண்டியா பெரியகுளம்.மெனிக்பாம்.பெரியஉழுக்குளம்.. போன்ற கிராமங்களில் இந்நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இவ்வாய்வானது வவுனியா மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகையும் அதன் போக்கும் எவ்வாறுள்ளது என்பதை கண்டறிவதை பிரதான நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் அரசாங்கத்தால் பல்வேறு சுகாதார விழிப்புணர்வுகள், தடுப்பு நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்ட போதிலும் நாட்பட்ட சிறுநீரக நோயின் வீச்சு அதிகரித்துள்ளது. பெறப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின்படி, வவுனியா மாவட்டத்தில் 2016 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் நாட்பட்ட சிறுநீரக நோயின் பரவுகை வேறுபட்ட அடிப்படையில் ஒவ்வொரு பிரதேசங்களில் பதிவாகியுள்ளமையை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. இந்நோயின் தாக்கம் 2011 தொடக்கம் 2013 வரையான காலப் பகுதியில் சாதாரண வேகத்திலும் 2014ல் சடுதியான அதிகரிப்பையும் கொண்டுள்ளதுடன் 2016ன் பின்னர் தாக்கம் குறைந்துள்ளது.

இந்நோயின் காரணமாக 50 - 69 வயதிற்கு உட்பட்டவர்கள் அதிகளவிலும் 70 வயதிற்கு மேற்பட்டவர்கள் சராசரியாகவும் 14 -49 வயதிற்குட்பட்டவர்களில் குறிப்பாக ஊழியப்படையினர் அதிகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் பிரதேச செயலகங்களான வவுனியாவில் 52%, வவுனியா தெற்கில் 27%, வெங்கல செட்டிகுளத்தில் 9.4%, வவுனியா வடக்கில் 11.6% என நோய்த் தாக்கத்தின் பரம்பல் வேறுபட்டு காணப்படுகின்றது. இந்நோயின் பரவுகை வயது, பிரதேசம், இனக்குழு, பால்நிலை எனும் மாறிகளின் அடிப்படையில் சமனற்ற பரம்பலைக் கொண்டுள்ளமை இவ்வாய்வின் மூலம் புள்ளிவிபர மற்றும் விவரண முறைகளில் கண்டறியப்பட்டுள்ளது .

(தொடரும்)




## விலைமனுக்களுக்கான அழைப்பு

**துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் வணிக கப்பற்றுறை செயலாளர் அலுவலகம்**

**சுத்திகரிப்புச் சேவை மற்றும் பாதுகாப்புச் சேவை — 2023**

துறைமுகம், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கீழ் செயற்படும் வணிக கப்பற்றுறை செயலாளர் அலுவலகத்திற்கு 2023ஆம் வருடத்திற்கான சுத்திகரிப்புச் சேவைக்காகவும் மற்றும் யாழ்ப்பாணம் உப அலுவலகத்திற்கான பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் முழுமையான விண்ணப்பப் படிவத் தொகுதியொன்றை 2022 நவம்பர் 28ஆம் திகதி வரையில் வணிக கப்பற்றுறை செயலாளர் அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம் அல்லது உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து (www.dgshipping.gov.lk) பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 011-2335389 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.



**WE'RE Hiring**

**தொழில் வாய்ப்பு**

சீன மொழி பேசும் இலங்கை
ஆண்/ பெண் வேட்பாளர்கள்
உடனடி ஆட்சேர்ப்பு
கவர்ச்சியான சம்பளப் பொதி
மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
+94773112900



Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams



## இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் கீழ்க்காணும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு சிறந்த உடலாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தரவுகள் கட்டுப்பாட்டாளர்
2. களஞ்சியக் காப்பாளர்
3. மின்னியலாளர்
4. மேசன்
5. பயிற்சி பெற்ற தொழிலாளர் (சிவில்)
6. பயிற்சி பெற்ற தொழிலாளர் (மின்னியல்)
7. பொருட்கள் ஏற்பு உதவியாளர்

2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2022ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே' எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விபரங்களை www.pariament.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்.**

**இலங்கை பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.**

2022 நவம்பர் மாதம் 06ஆம் திகதி



**LANKA SATHOSA லங்கா சதொச**
ජාතියේ මිල තීරක

## லங்கா சதொச லிமிடெட்டின் பாரிய ஏல விற்பனை

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

லங்கா சதொச பல்பொருள் அங்காடிகளினால் பயன்பாட்டில் இருந்து நீக்கப்பட்ட இயந்திரப் பொருட்கள்.

**2022 நவம்பர் 10ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00க்கு.**

மாளிகாவத்தை மொத்த களஞ்சியம், 163/3, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10 என்ற இடத்தில்.

**பரீட்சித்தல் - நவம்பர் 07, 08 மற்றும் 09 ஆகிய திகதிகளில் ஏலவிற்பனை இடத்தில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 04.30 வரை**

| | |
|---|---|
| Deep Freezers(up to 1100L) | Printers(Dot Matrix ) |
| Bottle Coolers (Single door to three doors) | Thermal Printers |
| Manual Platform scales(500Kg -1000Kg) | Card Machines |
| Generators (Diesel/Petrol -2.3 Kg- 5.5Kg) | Computer Mouse |
| Digital Scales(15Kg) | Computer Mother Boards |
| Digital Bar Code Scales(15Kg) | Cooling Fan Units(CPU) |
| Fans(Wall/Ceiling Fans) | Fax Machines |
| Super Market Trolleys | Telephones |
| Super Market Baskets | POS Machines |
| CPU's (Central Processing Units) | Miscellaneous Items (Iron/Plastic/Furniture) |
| Computer Key Boards | UPS (1.2KVA) |

மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் | நிஷாந்த **078 - 275 45 85**

விற்பனை நிபந்தனை

நுழைவாயில் :- ஏல விற்பனை திகதிக்கு நுழைவுக் கட்டணம் ஒருவருக்கு ரூபா 1000/=

பணம் செலுத்தல :- ஏலசுத்தியல் இறக்கப்பட்ட உடன் குறித்த விலைமனு பெறுமதியில் 30% பெறுமதி ஒன்றை மீளளிக்கப்படாத வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.

எஞ்சிய 70% பணத்தை 2022 நவம்பர் 11 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு முன்னர் கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, இல. 27, மூன்றாம் மாடியில் அமைந்துள்ள லங்கா சதொச லிமிடட் தலைமை அலுவலகத்தின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி அன்றைய தினத்திலேயே பொருட்களை பிற்பகல் 07.00க்கு முன்னர் அகற்றிக்கொள்ள வேண்டும்.

- இந்த ஏல விற்பனைக்காக லங்கா சதொச லிமிடட் ஊழியர்களுக்கு பங்குபற்ற வாய்ப்பு இல்லை.
- எந்த ஒரு பொருளையும்/ பொருட்களின் தொகுதி ஒன்றையும் முன் அறிவித்தல் இன்றி ஏல விற்பனையில் இருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை முகாமைத்துவத்திற்கு உள்ளது.
- ஏல விற்பனையாளரின் முடிவு இறுதி முடிவாகும்.
- வெற்றி பெற்ற ஏலதாரர் 2022-11-11 ஆம் திகதி பி.ப. 7 மணிக்கு முன்னர் பொருட்களை அகற்றிக்கொள்ளல் வேண்டும்
- 2022.11.11 ஆம் திகதி பி.ப. 7 மணிக்கு முன்னர் அகற்றிக்கொள்ளாத பொருட்கள் தொடர்பில் லங்கா சதொச பொறுப்பேற்காது

ANA AUCTIONEER
Black Tie Service with True Aloha!
ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනියර්(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com
lankaauction.lk



**நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு**

ජාතික සමගිය හා ප්‍රතිසංධානය සඳහා වන කාර්යාලය
தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம்
**Office For National Unity And reconciliation**

## தேசிய ஒற்றுமை நல்லிணக்கம் மற்றும் நல்வாழ்வுக்காக பிரதேச மற்றும் கிராமிய மட்டத்தில் செயற்படும் அமைப்புகளை பதிவு செய்தல்

நிலையான சமாதானத்தை நாட்டில் உறுதி செய்வதற்காக உள்ள முன்னணி அரச இயந்திரமானது நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் செயற்படும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகமாகும். மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக செயலாற்றும் செயற்பாட்டிலுள்ள சிவில் அமைப்புகள் / நிறுவனங்கள் தொடர்பினால் தகவல் முறைமையொன்றை அமைப்பதற்கும் எதிர்காலத்தில் அந்த நிறுவனத்துடன் ஒன்றிணைந்து / ஒத்துழைப்புடன் நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்பொருட்டு பின்வரும் தகைமைகளைக் கொண்ட அமைப்புகள் / நிறுவனங்கள் மட்டும் 2022-11-30ஆம் திகதிக்கு முன் அல்லது அன்றைய தினத்தில் கிடைக்கும் வகையில் விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

01. நிலையான சமாதானத்தை நாட்டில் உறுதி செய்வதற்காக செயற்பாட்டுப் பங்களிப்பைக் காட்டும் நிறுவனமாகவிருத்தல்.
02. பிரதேச / மாவட்ட / மாகாண அல்லது நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் நிகழ்ச்சிகளைச் செயற்படுத்தியிருத்தல்
03. சிவில் செயற்பாட்டு அங்கத்துவ குழுவொன்றினால் வலுவேற்றப்பட்ட நிறுவனமாகவிருத்தல்.

**அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்**
தொடரிலக்கம் ☐ குறிப்பு ☐

### விண்ணப்பப் படிவம்

நிறுவனத்தின் பெயர்:....................................................................

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்பது பற்றி ஆம் ☐ இல்லை ☐
அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமானால் மட்டும் இந்தப் பகுதிக்கு பதிலளிக்கவும்.
பதிவு செய்யப்பட்ட அரசாங்க நிறுவனம் (உ-ம்: பிரதேச செயலாளர் அலுவலகம்):....................................................................

....................................................................

பதிவிலக்கம் ☐ பதிவு செய்யப்பட்ட திகதி ☐ அலுவலக முகவரி ☐

மின்னஞ்சல் முகவரி: .................................... தொலைநகல் இலக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐

| | | நிலையான | கைப்பேசி |
|---|---|---|---|
| தொலைபேசி | அலுவலக தொலைபேசி | | |
| | தலைவர் | | |
| | செயலாளர் | | |
| | ஒருங்கிணைப்பாளர் | | |

அலுவலகம் இருக்கும் அதிகாரப் பிரதேசம் ☐ மாகாணம்: ☐
மாவட்டம் ☐ பி/செ/பிரிவு ☐
நிறுவனத்தின் / அமைப்பின் நோக்கம் ☐
நிறுவனத்தின் / அமைப்பின் பணி ☐

| | | 1 | | | 2 | | | 3 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பு அல்லது அரச சார்பற்ற நிறுவனமாக இருந்தால் அது தொடர்பான விபரங்களைத் தரவும் | நிறுவனம் (பெயர் மற்றும் குறும் பெயரை எழுதவும் | | | | | | | | | |
| | தொடர்புகளை பேணிய கால எல்லை | வரு | மாதம் | திகதி | வரு | மாதம் | திகதி | வரு | மாதம் | திகதி |

| | | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|---|
| 2018 முதல் 2022 வரை செயற்படுத்திய விசேட நிறுவன நிகழ்ச்சித்திட்டம் | நடாத்திய நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | | | | | |
| | கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை | | | | | |

**சான்றுபடுத்துதல்**

மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவை மற்றும் உண்மையானவையென சான்றுபகர்கின்றேன். தேவையான வேளைகளில் குறித்த ஆவணங்களின் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான இயலுமை என்னிடம் உள்ளது என்பதை உறுதி செய்கின்றேன்.

.................................................... ....................................................
**நிறுவனத் தலைவரின் பெயர்** **உத்தியோகபூர்வ முத்திரை, கையொப்பம் மற்றும் திகதி**

**விசாரணைகள்** : 0112 886 978 (அலுவலக நேரத்தில் மட்டும்) (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''அமைப்புகளை பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடவும்)

**முகவரி** : பணிப்பாளர் நாயகம்,
இல. 40, புத்கமுவ வீதி, ராஜகிரிய.

**இந்த விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கு பின்வரும் Link அல்லது QR சங்கேதத்தை பயன்படுத்தவும்.**
https://drive.google.com/file/d/1nB53Ur7ewA0hRbxcCRgwMQPMOaO3o8PO/view?usp=sharing

# அரச ஈட்டு முதலீட்டு வங்கி SMIB இல் வேலை வாய்ப்புகள்

தேசத்திற்கு முன்னனி வீட்டுவசதி வங்கியாக உள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கி, பின்வரும் பதவிக்காக தொடர்புடைய தகைமைகள் மற்றும் அனுபவத்துடன் சுறுசுறுப்பான தலைமைத்துவ பண்புகளை வெளிப்படுத்தக்கூடிய மற்றும் வர்த்தக இலக்குகளை அடைவதில் முழு ஈடுபாடு காட்டும் அபேட்சகர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

IT **தலைவர் - ஒப்பந்த அடிப்படை**

**முக்கிய பொறுப்புகள்**

வங்கியின் நோக்கு மற்றும் வர்த்தகத் திட்டங்களுக்கு அமைவாக பயனுள்ள ICT மூலோபாயத்தை மீளாய்வு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்படுத்துவது இந்த பணியின் ஒட்டுமொத்த நோக்கமாகும். வர்த்தக இலக்குகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுடன் இணங்கும் பொருட்டு வங்கியின் ICT செயற்பாடுகள் சார்ந்த பொருத்தமான ICT தீர்வுகளை தீர்மானித்தல், ICT கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீளாய்வு செய்தல். வங்கிக்கு தேவைப்படும் நடவடிக்கைகளுக்காக தேவைப்படும் மென்பொருள் அமைப்புகளை வடிவமைத்தல், மேம்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தலுக்காக ஒட்டுமொத்த பொறுப்பை வைத்திருப்பதோடு அனைத்து வன்பொருள் அமைப்புகளும் மூலோபாய நோக்கில் முறையாக பராமரிக்கப்பட்டு, செயற்பட்டு, பங்களிப்பு செய்கிறது என்பதை உறுதி செய்தல். சிரேஷ்ட நிர்வாகக் குழுவின் உறுப்பினராக வங்கியின் செயல்பாட்டு ஆளுகை செயல்முறை, IT ஊழியர்களை நிர்வகித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் மற்றும் வணிக இலக்குகள் மற்றும் திட்டங்களை நோக்கி அவர்களின் செயல்திறனைக் கண்காணித்தல்.

**தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி விஞ்ஞானம்/ தகவல் அமைப்புகள்/ கணினி பொறியியல் துறையில் இளமாணிப் பட்டம் அல்லது IT துறையில் இணையான தகைமையை பெற்றிருத்தல். மேலுள்ள தகைமையுடன் சேர்த்து IT தொடர்பான துறையில் முதுமாணி பட்டம் பெற்றிருப்பது விசேட அனுகூலமாகும். மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் பெற்றிருப்பது விரும்பத்தக்கது.

**அனுபவம்**

வங்கித்துறை அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் மொத்தம் 10 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதோடு அதில் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேலும், அபேட்சகர் IBM AS/400 systems, Java, Dotnet மற்றும் Oracle இல் ஆழமான அறிவு பெற்றிருத்தல் வேண்டும். IT திட்ட முகாமைத்துவம் மற்றும் இணைய பாதுகாப்புத் திறன் அனுகூலமாக அமையும். சிறந்த எழுத்து மற்றும் வாய்மொழி தொடர்பாடல் திறன் தேவையாகும்.

**ஊதியம்:** மாதாந்த கொடுப்பனவு

**ஒப்பந்தக் காலம்**: இரண்டு ஆண்டுகள்

**விண்ணப்ப முடிவுத் திகதி** – 2022.11.21

**பொது நிபந்தனைகள்**

தேர்வு முறை – ஆட்சேர்ப்புக் கொள்கை மற்றும் வங்கி நடைமுறையின்படி விண்ணப்பங்கள் கோரப்படும்.

நேர்முகப் பரீட்சை மூலம் தேர்வு இடம்பெறும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

மேலதிக விபரங்களுக்கு www.smib.lk என்ற வங்கி இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.

---

SPC

## பெறுகை அறிவித்தல்

## இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்

கீழே குறிப்பிட்டுள்ள வகுதிகளுக்கு நாராஹேன்பிட்ட, அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை அழைக்கின்றார். அத்துடன், வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் **நாராஹேன்பிட்ட , கிருள வீதி, 41 ஆம் இலக்கத்திலுள்ள 16 ஆம் மாடியின் ''மெஹேவர பியச", அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபன வரவேற்பு கருமபீடத்தில் கேள்வி ஆவணத்தை இலவசமாக பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.**

| தொ. இல. | அம்சம்/ விளக்கம் | கேள்வி இலக்கம் | மூடும் திகதி | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபாவில்) | கேள்வி ஆவணம் வழங்கும் காலப்பகுதி |
|---|---|---|---|---|---|
| 01. | Tender for supply, installation, migration, commissioning and maintenance of e-mail service | AD/1/EMAIL/351/2022 | 2022.11.22 ஆம் திகதியன்று | 3,000 + பெசேவ | 2022.11.08 இலிருந்து 2022.11.21 வரையும் |
| 02. | Tender for supply of Alu Pouch (Three side sealed) for Glucose M 82.5G | AD/2/ALU-82.5g/349/2022 | 2022.11.29 ஆம் திகதியன்று | 3,000 + பெசேவ | 2022.11.08 இலிருந்து 2022.11.28 வரையும் |
| 03. | Tender for supply of Alu Pouch (Three side sealed) for Glucose 100g | AD/2/ALU-100g/347/2022 | 2022.11.25 ஆம் திகதியன்று | 3,000 + பெசேவ | 2022.11.08 இலிருந்து 2022.11.24 வரையும் |
| 04. | Tender for supply of Plastic Containers | AD/2/PC/350/2022 | 2022.11.30 ஆம் திகதியன்று | 3,000 + பெசேவ | 2022.11.08 இலிருந்து 2022.11.29 வரையும் |
| 05. | Tender for supply of Price Tags with SPC | AD/2/PT/348/2022 | 2022.11.28 ஆம் திகதியன்று | 3,000 + பெசேவ | 2022.11.08 இலிருந்து 2022.11.25 வரையும் |

உங்களின் விலைமனுக்கோரலானது **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,''மெஹேவர பியச" 16 ஆம் மாடி, இல. 41, கிருள வீதி, நாராஹேன்பிட்ட** என முகவரியிடப்பட்டு ஒன்றில் பதிவுத் தபாலில் அல்லது மேலேயுள்ள அமைவிடத்தின் நிருவாக திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் மேலே வழங்கப்பட்டுள்ள கேள்வியின் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றில் அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் சேர்க்கப்படல் வேண்டும்.

தாமதமான விலைமனுக்கள் வரவேற்கப்பட மாட்டாது. கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வியை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை அரச மருந்தாக்கல்கள் கூட்டுத்தாபனம்,**
**''மெஹேவர பியச", 16 ஆம் மாடி, இல. 41,**
**கிருள வீதி, நாராஹேன்பிட்ட.**
**தொலைபேசி: 2320356-9.**

---

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

විවසාය නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**

**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம் – கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

## கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களுக்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் நீர்ப்பாசன முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP) கிரயச் செலவிற்காக 58.63 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களுக்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் நீர்ப்பாசன முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் ஒப்பந்தத்தின் கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களுக்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் நீர்ப்பாசன முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் எனும் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின், செயற்றிட்ட பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கிறார்.

| விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணை முறியின் பெறுமதி (ரூபா | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| தம்புள்ள வேவலவெவயில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கொய்யா கொத்தணிக்கு (0.5 ஏக்கர்) 200 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-273638-GO-RFB | 1,320,000.00 | 10,000.00 |
| அநுராதபுரத்தில் இடைக்கால மிளகாய் பயிர்ச்செய்கைக்கு Drip Tape நீர்ப்பாசன முறைமை மற்றும் கொய்யா கொத்தணிக்கு (01 ஏக்கர்) 50 எண்ணிக்கையான குறைந்த அழுத்தமுடைய மினி தெளிக்கும் நீர்ப்பாசன முறைமைகள் | LK-MOA- PMU-261612-GO-RFB | 660,000.00 | 5,000.00 |
| அம்பாறை மாவட்டத்தில் Soursop கொத்தணிக்கு 100 எண்ணிக்கையான நுண் தெளிக்கும் நீர்ப்பாசன முறைமை | LK-MOA- PMU-273638-GO-RFB | 480,000.00 | 5,000.00 |
| கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்திற்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் | LK-MOA- PMU-273639-GO-RFB | 145,000.00 | 5,000.00 |

3. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, பெறுகை திணைக்களத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து 0777419521 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம் மற்றும் 2022-11-08ஆம் திகதியிலிருந்து 2022-11-28ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவானது செயற்றிட்டத்தின் நிதியிடல் முகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. 2022-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கள் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2022-11-28ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியில் தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி என்பன தனித்தனியான உறைகளில் இடப்பட்டு 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என தபாலுறைகளில் குறிக்கப்படல் வேண்டும். அதன் பின்னர் இவ்விரண்டு தபாலுறைகளும் வேறொரு தபாலுறையில் இட்டு முத்திரைக்குறி பொறித்து அதன் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் ''கிழக்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணங்களுக்கு Soursop கன்றுகளை வழங்குதல் மற்றும் நீர்ப்பாசன முறைமையை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

8. மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 0112696086 அல்லது 0777419521**

**திகதி: 2022-11-06.**

---

## இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை

### கல்வி அமைச்சு

## 2023ஆம் வருடத்திற்கான வழங்குனர்களைப் பதிவு செய்தல்

01. 2023ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையுடன் தம்மை பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், வழங்குனர்கள் மற்றும் சிவில் பொறியியல் ஒப்பந்தக்காரர்கள்/ ஆலோசகர்கள் ஆகியோரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேசிய ஆராய்ச்சி சபை (NRC) தலைவரினால் விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.
02. ஒன்றுக்கு மேற்பட்ட வகுதிகளுக்கு விண்ணப்பிக்கும் நோக்கமிருந்தால், ஒவ்வொரு வகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்களை ஒரே உறையில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரரொருவர் (பெரும்பாலும் உள்ளூர் முகவர்கள்) ஒரு முதன்மையாளருக்கு மேற்பட்டவர்களுக்கு பதிவு செய்வதற்கு விரும்பின், அவ்வாறான முதன்மையாளர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
03. பதிவு செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவத்தின் தொகுதியொன்றை இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் www.nrc.gov.lk எனும் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம். பதிவு செய்வதற்கான (மீளளிக்கப்படாத) கட்டணத்தை (7ஆம் பிரிவின் பிரகாரம்) "பொரளை இலங்கை வங்கி அதி மேற்தரக் கிளை 192935" என்ற கணக்கிலக்கத்திற்கு தேசிய ஆராய்ச்சி சபையின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டு அதனது "பணம் வைப்பிலிடப்படும் பற்றுச்சீட்டும்" விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். காசோலைகள் அல்லது வங்கி வரைவுகள் அல்லது காசுக்கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இந்த நடைமுறைக்கு முரணான விண்ணப்பங்கள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
04. எந்தவொரு சூழ்நிலையிலும் 2022 நவம்பர் 21ஆம் திகதிக்கு பின்னர் விண்ணப்பங்கள் வழங்கப்பட மாட்டாது.
05. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அனைத்து தேவையான ஆவணங்களுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2023ஆம் வருடத்திற்கான வழங்குனர்களை பதிவு செய்தல்" என குறிப்பிடப்பட்டு தேசிய ஆராய்ச்சி சபையை 2022 நவம்பர் 21ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்யா மாவத்தை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
06. தபாலில் ஏற்படும் எந்தவொரு தாமதங்கள் தொடர்பாகவும் தேசிய ஆராய்ச்சி சபை பொறுப்பேற்காது. எந்தவொரு வழங்குநரும் தேவையான தகவல்கள் / ஆவணங்களை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கத் தவறினால் அந்த விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும் என்பதுடன் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. (பதிவு மற்றும் வகுதிக் கட்டணம் இரண்டும்)
07. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வகுதி (Cat.) மற்றும் பதிவுக் கட்டணம் (RF) (மீளளிக்கப்படாதது).

| வகுதி இல. (Cat #) | வகுதி விளக்கம் | பதிவுக் கட்டணம் (ரு) (RF) |
|---|---|---|
| A.1 | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (10 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதும் அல்லது சமமானதும் மற்றும் 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவானதும்) | 12,500.00 |
| A.2 | மருத்துவ உபகரணம் மற்றும் ஆய்வுகூட உபகரணம் (2 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதும் அல்லது சமமானதும் மற்றும் 10 மில்லியன் ரூபாவிற்குக் குறைவானதும்) | 3,500.00 |
| A.3 | ஆய்வுகூட இரசாயன பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் | 3,500.00 |
| A.4 | அலுவலக மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணம் [தொலைநகல் இயந்திரங்கள், புகைப்படப் பிரதியாக்கல் இயந்திரங்கள், டுப்ளிக்கேசன் இயந்திரங்கள், மென்னுறையிடும் (லெமினேட்டிங்) இயந்திரங்கள், ஓவர்ஹெட் புரஜெக்டர்கள், கணனிகள், அச்சுப்பொறிகள், சேர்வர்கள், தடையற்ற மின்வழங்கிகள் (UPS) பல்லூடக புரஜெக்டர்கள், வலையமைப்புகள், வலையமைப்புகள் மற்றும் தொடர்பான துணைப்பாகங்கள் மற்றும் இதுபோன்ற இன்னும் பலவும்] | 1,000.00 |
| A.5 | காகிதாதி மற்றும் ஏனைய அலுவலக தேவைப்பாடுகள் | 1,000.00 |
| A.6 | தளபாடங்கள் மற்றும் இணைப்புகள் | 1,000.00 |
| A.7 | சுத்திகரிப்புச் சேவைகள் | 1,000.00 |
| A.8 | தொடர்ச்சியான ஆய்வுகூட சேவைகள் மற்றும் ஏனயவை | 1,000.00 |
| A.9 | போக்குவரத்துச் சேவைகள் | 1,000.00 |
| A.10 | சுத்திகரிப்புப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் ஏனைய துணைப்பாகங்கள் | 1,000.00 |
| A.11 | தூதஞ்சல் (கூரியர்) சேவைகள் (உள்நாடு மற்றும் வெளிநாடு) | 1,000.00 |
| A.12 | அச்சுவேலை சேவைகள் (ஸ்பைரல் பைண்டிங், கச்சிதமான பைண்டிங், புகைப்படப் பிரதியாக்கல் மற்றும் அகப்படமாக்கல்) | 1,000.00 |
| A.13 | கழிவுப்பொருள் முகாமைத்துவ சேவைகள் (இலத்திரனியல் கழிவுகள் மற்றும் காகிதக் கழிவுகள் போன்றவை) | 1,000.00 |
| A.14 | ஏனைய சேவைகள் (உணவுகள் மற்றும் பானங்கள், கேட்டரிங் சேவைகள், சிற்றுண்டிகள் மற்றும் பகல் உணவுகள், இயற்கை குடிநீர் போத்தல், பால்மா, சீனி, தேயிலை, கழிவறை காகிதங்கள், தண்ணீர் போத்தல்கள்) | 1,000.00 |
| A.15 | வாகனங்களின் சிறிய திருத்தவேலைகள் (வளிச்சீராக்க திருத்தவேலைகள், மின்னியல் திருத்தவேலைகள், இயந்திரங்களின் சிறிய திருத்தவேலைகள், இன்னும் பல..) | 1,000.00 |

**தலைவர்,**
**தேசிய ஆராய்ச்சி சபை,**
**120/7, வித்யா மாவத்தை, கொழும்பு-07.**

**தொலைபேசி : 0112 675176** **தொலைநகல் : 0112 675136**
**மின்னஞ்சல் : admini@nrc.gov.lk** **இணையம் : www.nrc.gov.lk**

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 128 டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட டயர்கள் விற்பனைக்கு. டயர்களின் அளவு மற்றும் மாதிரி 265/70R16(17) FORENTINA, YAKOMA 07 நாட்களிற்குள் அழைக்கவும். MWSIP நீர்ப்பாசன அமைச்சு. தொ.பே. இல. 2675802, 0771592659. 067408

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

ஏற்றுமதி (Desiccated) நிறுவனத்தில் ஒரு நாளைக்கு சேருகின்ற 4000 லீட்டர் தேங்காய் நீர் விற்பனைக்கு உண்டு. எழுத்து மூலம் கோரவும். செயலாளர், கூட்டுறவு விற்பனைச் சங்கம், மாரவில. 032225 4272. ஈமெயில்: mepcssltd@gmail.com 067380

## வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பணிப்பெண்கள், வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. 35 வயதிற்கு குறைவானவர்கள். சிறந்த சம்பளம். வேலை நிபந்தனைகள். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு06. அழையுங்கள் 25 91169, 0777542 447, 0755091 379. 067425




### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

ஊழியர்கள் (Workers) வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் (Male/ Female) ஊழியர்கள் (Workers) தேவை. மாதாந்த சம்பளம் ரூ. 50,000 வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக் கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு 0766200300. 067367

### 325 தொழில்துறை பொது

கொழும்பு சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு Visiting சுப்பவைசர், சுத்திகரிப்பு ஊழியர்கள், பொலிசர் இயந்திர இயக்குநர்கள் தேவை. கூடுதல் சம்பளம். அழையுங்கள் 0772771022. 067158

கொழும்பு05இல் அமைந்துள்ள காப்புறுதி நிறுவனத்தில் சேவைக்கு 30 40 வயதிற்கு இடைப்பட்ட சா/த சித்தியடைந்த ஆண் அலுவலக உதவியாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். 0765779036. 066765

நீர்கொழும்பில் அமைந்துள்ள பியர் சொப் இற்கு ஊழியர் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். கூடுதல் சம்பளம். 07 75706720. 067220

பேலியகொடயில் அமைந்துள்ள வாகனம் கழுவும் மையமொன்றிற்கு அனுபவமுள்ள வாகனம் கழுவுபவர் தேவை. தங்குமிட வசதியுண்டு. வேலை நேரத்தில் உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்புகளுக்கு 0706022277 Premier Car Mart, 457, நீர்கொழும்பு வீதி, பேலியகொட. 065577

ராஜகிரிய ஒ பேசேகரபுர சலூன் ஒன்றிற்கு ஆண் முடி திருத்துநர் ஒருவர் தேவை. ஆங்கிலம், தமிழ் அறிவுள்ளவர்களிற்கு கூடிய சம்பளம். 0770041110, 0713931605. 067290

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

அமைதியான சூழலில் அமைந்துள்ள ஆடம்பர முதியோர் இல்லத்திற்கு புதிய முதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். சுவையான உணவு, தயவான ஊழியர் குழாம். சுத்தமான வசதியான தங்குமிட வசதிகள். மருத்துவ, தாதி, மனநல மருத்துவ ஆலோசனையுடன். 0716004411. 067157

## காணி/தோட்டம்

### 612 கட்டிட நிர்மாணம்/ பொருட்கள்

மதில் பூச்சு, பொட்டி, பிளேண்ட் உட்பட சிறிய மற்றும் மத்திய அளவான சகல மேசன் வேலைகளும் பூர்த்தி செய்து தரப்படும். 0765526182. 067122

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

களுபோவில வைத்தியசாலை வீதியில் முகப்பாக 9.5 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. மேலதிக விபரங்களுக்கு 0774271404. 067033

பத்தரமுல்ல 8 பேர்ச் இரு மாடி வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு. A/ C, Solar, வாகன நிறுத்துமிடம், CCTV. 550/ = 0 7 72228802. 067396

பிலியந்தலை நகரம், தேவானந்த வீதி (பிலியந்தலை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால்) அழகான ஓரளவு பாவிக்கப்பட்ட புத்தம் புதிய 2 மாடி ஆடம்பர வீடு விற்பனைக்கு. அதிகூடிய குடியிருப்பு பிரதேசம். அமைதியான, சொத்துக்கள், தனிப்பட்ட ஒழுங்கை / பிரதேசத்துடன் சகல வசதிகளுடன். தொடர்பு 0 72 2 451452. 067340

மு முமை யான இரு மாடி வீடு சுற்றிவர மதில் 8.14 பேர்ச் 05 அறைகள், 05 குளியலறைகள். பத்தரமுல்ல, பட்டபொல. 07137 80838. 067152

24/18/1/1 முகவரியில் வெள்ளவத்த மெனிங் பிளேஸ் 2 அறைகளுடன் மண்டபம், சமையலறையுடன் வீடு வாடகைக்கு உண்டு. 07 6 1 263828. 067168

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

சகல வசதிகளுடன் இரண்டு படுக்கையறை வீடு. I.D.H. சந்தி மற்றும் கார்கிள்ஸ் புட்சிட்டிக்கு அருகில். வெள்ள அபாயம் இல்லை. 077 665987. 066975




தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343



தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845



7 PERCH LAND FOR SALE
COLOMBO 14
GRAND PASS
NAGALAGAM STREET
25 Lakhs Per Perch
Price negotiable
0712 145 933


















தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342






தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



# படித்ததும் பகர்வதும் 117





சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### கழிவகற்றும் தொழிலாளர்களுக்கு கண்ணியமளிப்போம்!

நகரங்களில் வாழும் மக்களுக்கு உதவும் தொழிலாளர்களில், தவிர்க்க முடியாத அதி முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாளர்களாக இருப்பவர்கள் கழிவு அகற்றும் தொழிலாளர்கள் என்றால் மிகையல்ல.

கிராமங்களைப் போலன்றி நகரப் பகுதிகளில் கழிவுகள் முறையாக அகற்றப்படுவது அத்தியவசிய பணியாக உள்ளது.

அடுத்தடுத்து சேர்ந்தாற்போல் இருக்கும் வீடுகளாகவும், அடுக்கடுக்குகளாக மாடிகளாகவும் மிக நெருக்கமாக நகர்ப் பிரதேசங்களில் இல்லங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இதனால் ஒவ்வொரு வீட்டிலும் சிறிய அளவில் கழிவுகள் சேர்ந்தாலும் அவற்றை ஒன்று சேர்க்கும் போது மிகப்பெருமளவில் சேர்ந்து விடுகின்றன.



ஒவ்வொரு வீட்டுக்கும் வந்து, அங்கு சேருகின்ற கழிவுகளை திரட்டி அகற்றுகின்ற நடவடிக்கைகளை அதற்கென நியமிக்கப்பட்டுள்ள கழிவகற்றும் தொழிலாளர்கள் அன்றாடம் செய்து வருகின்றனர். இவர்கள் தொழிலாக அதனை செய்தாலும் அது ஒருவகையில் மகத்தான சேவையாகவே இருக்கிறது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

கடும் மழையானாலும், வெள்ளம் எங்கும் ஏற்பட்டாலும், காற்று கடுமையாக வீசினாலும், கடும் வெயில் சுட்டெரித்தாலும் இவர்கள் தினசரி தமது தொழிலை செய்யத் தவறுவதில்லை. இவர்களால்தான் நகர் வாழ் மக்கள் சுத்தத்துடனும், சுகாதாரத்துடனும் வாழ முடிகிறது. இத்தகைய தொழிலாளர்கள் ஒரு நாள் தமது கடமைக்கு வராவிட்டாலும்கூட பல வீடுகளில் சேர்கின்ற குப்பை கூழங்கள் நாறி நாற்றமெடுத்து வீட்டுக்குள்ளேயே மூக்கைப் பொத்தி வாழும் நிலையை தோற்றுவிக்கிறது. இது ஒன்றே இவர்களது முக்கியத்துவத்தை சிறப்பாக எடுத்துக் காட்ட போதுமானது.

இத்தகைய கழிவகற்றும் தொழிலாளர்களுக்கு தம்மாலான உதவிகளை செய்ய ஒவ்வொருவரும் முன்வர வேண்டும். “சம்பளத்துக்குத் தானே வேலை செய்கிறார்கள்” என்று கூறிக் கொண்டு, ஒதுங்கி விடாமல் பணத்தாலோ, பொருளாலோ, இத்தகையவர்களுக்கு உதவிகள் செய்திட வேண்டும். அவ்வப்போது உணவுப் பொருட்களை வழங்குதல், உலர் உணவுப் பொதிகளை கொடுத்து உதவுதல், உடுதுணிகளை வழங்குதல் போன்ற வழிகளிலும் அவர்களுக்கு உதவலாம்.

எதுவுமே வழங்கிட முடியாவிட்டாலும்கூட அவர்களை கண்ணியத்தோடு நடத்த வேண்டும். இத்தகைய மனிதாபிமான செயற்பாடுகள் கழிவகற்றும் தொழிலாளர்களுக்கு உற்சாகமளிப்பதோடு திருப்தியோடு அவர்கள் தம் தொழிலை தொடர ஊக்குவிப்பாக அமையும். இவற்றை கருத்தில் கொண்டு, நம் வீட்டுக்கு வரும் கழிவகற்றும் தொழிலாளர்களுக்கு கண்ணியமளித்து கனிவோடு உதவிட முன்வருவோம்.

## நெஞ்சுக்கு நீதி

சுத்தம் சுகம் தருமென்று சொன்னார்கள் பெரியோர்கள்
சுத்திகரிப்போர் சுகம் தரும் உறவுகள்தாம் உணருங்கள்
நித்தம் சுத்திகரிப்போரின் துயர் துடைத்திட உதவுங்கள்
சத்தியமாய் சூழலில் சுகநலம் சிறந்திடும் அறியுங்கள்

## பாராட்டுகிறோம் வாழ்த்துகிறோம்

### “சாகித்திய ரத்னா” தி. ஞானசேகரன்

இலங்கைத் தமிழ் இலக்கியத் துறையில் தனக்கென தனியிடம் பிடித்துள்ள, டாக்டர் தி. ஞானசேகரன் இலங்கை அரசாங்கத்தின் அதியுயர் இலக்கிய விருதான “சாகித்திய ரத்னா” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இவர் சூடியுள்ள கிரீடத்தில் மற்றுமொரு வைரக்கல் பதிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஆறு தசாப்தங்களாக எழுத்துலகில் பிரகாசிக்கும் தி. ஞானசேகரன் சிறுகதை, தொடர் கதை, நாவல், கட்டுரை, விமர்சனம், பயண இலக்கியம், இலக்கிய ஆய்வு, பத்தி எழுத்து என இலக்கியத் துறையின் சகல பிரிவுகளிலும் பங்களித்து சிறப்பு பெற்றவர். இவற்றுக்கு மேலாக இதழியலிலும் முத்திரை பதித்து ‘ஞானம்’ எனும் கலை இலக்கிய சஞ்சிகையை சுமார் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக வெளியிட்டு சாதனை படைத்து வருகிறார். அத்துடன் நூல் பதிப்புத் துறையிலும் ஆதிக்கம் செலுத்தி இதுவரை தனது ஞானம் பதிப்பகம் மூலம் 80றக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டும் தனித்துவமான சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

புதிய சுவடுகள், குருதி மலை, லயத்துச் சிறைகள், கவ்வாத்து, எரிமலை என பல நாவல்களை எழுதியுள்ளார். குருதிமலை நாவல், சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரமாகியுள்ளது.. புதிய சுவடுகள், குருதிமலை இரண்டும் சாகித்திய விருது பெற்றவை. ‘எரிமலை’ கொடகே விருது பெற்றதுடன் தமிழ்நாட்டு கரிகாற் சோழன் விருதினையும் வென்றது. இது சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கூட மொழி பெயர்க்கப்பட்டுள்ளமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

தனது ஞானம் சஞ்சிகையில் நூற்றுக்கணக்கான இலக்கிய ஆளுமைகளை அட்டைப்பட அதிதிகளாக அறிமுகப்படுத்தி சிறப்பித்துள்ள தி. ஞானசேகரனை, இலங்கையில் மட்டுமல்ல வெளிநாடுகளில் வெளிவரும் சஞ்சிகைகள் பலவும் அட்டைப்பட அதிதியாக்கி அலங்கரித்துள்ளன. கலாபூஷணம், சாகித்திய ரத்னா என உயர் அரச விருதுகளை வென்றுள்ள இவருக்கு உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் பல 35றக்கும் மேற்பட்ட விருதுகளையும் பட்டங்களையும் வழங்கி கௌரவித்துள்ளன.

இவரது நூல்களும், இவர் ஆசிரியராக இருக்கும் ‘ஞானம்’ இதழும் பலராலும் பட்டதாரி, முதுமானி, கலாநிதி போன்ற உயர் பட்டங்களுக்காக பல்கலைக் கழகங்களில் ஆய்வு செய்யப்பட்டிருப்பது இவருக்கே கிடைத்துள்ள தனித்துவமான சிறப்பாகும்.

இவ்வாறு, ஞானம் ஞானசேகரனின் சிறப்புகளையும் சாதனைகளையும் அடுக்கிகொண்டே செல்லலாம். இலக்கியத் துறைக்கான அதியுயர் ‘சாகித்திய ரத்னா’ கௌரவம் பெற்றுள்ள ‘ஞானம்’ ஞானசேகரனை உளம் நிறைந்து பாராட்டுவதோடு, அவர் வளமும் நலமும் நீண்ட ஆயுளும் பெற்று தன் இலக்கிய பணிகளை மகிழ்வோடு, சிறப்பாகத் தொடர பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

## பிரிந்தார் பெருமை

### ராசிக் அஸீஸ்

உடுதெனியவை பிறப்பிடமாகவும், மாபோலையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த பிரபல சமூக சேவையாளரும், வர்த்தகருமான ராசிக் அஸீஸ் அண்மையில் (2022.09.28) காலமானார். இவர் மாபோலை ஜும்மா பள்ளியின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளன உப செயலாளர், ஜனநாயக முஸ்லிம் லீக்கின் செயலாளர், கம்பஹா மாவட்ட முஸ்லிம் நலன்புரி சங்க உப தலைவர் உட்பட பல சமூக சேவை இயக்கங்களில் முக்கிய பொறுப்புகளை வகித்து சேவையாற்றியுள்ளார்.



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் சம்மேளனம் மர்ஹூம் எம். ஏ. பாக்கிர் மார்க்கார் தலைமையில் வெளியிட்ட ‘உதயம்’ ‘டோன்’ (Dawnn) பத்திரிகைகளின் பிரசுரத்துக்கும் வெளியீட்டுக்கும் பொறுப்பாக இருந்து, பொருளாதார ரீதியிலும் உதவி செய்தவர். பல அரசாங்க, தனியார் நிறுவனங்களின் பணிப்பாளராகவும் செயல்பட்டுள்ளார். உடுதெனிய கிராமத்தின் முதலாவது அகில இலங்கை சமாதான நீதவான் இவராவார்.

அரசியலில் ஈடுபாடு கொண்ட இவர், ஜனநாயக ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட போதிலும் ஒருசில விருப்பு வாக்குகளினால் வெற்றி வாய்ப்பை இழந்தார். முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, முன்னாள் அமைச்சர்களான காமினி திசாநாயக்க, எஸ். பீ. திசாநாயக்க, ஏ. எம். எஸ். அதிகாரி, ஆட்டிகல, எம். எச். முஹம்மத், எம். ஏ. பாக்கிர் மார்க்கார் உட்பட பல அமைச்சர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தார்.

பல அரபுக் கல்லூரி மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு தொடர்ச்சியாக புலமை பரிசில்களை வழங்கி வந்துள்ளார். அவரது இறப்புக்குப் பின்னரும் இப்பணி தொடர ஏற்பாடு செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அல்லாஹ் அன்னாரின் மறுமை வாழ்வை அழகாக்கி அருள் புரிவானாக!

## சிந்தனை செய் மனமே

### உயிர் பிரிந்த பின்...!

ஒரு குடும்ப தலைவர் இறந்து விட்டார். அவருக்கு நாற்பது வயது கூட ஆகவில்லை. அவரது மனைவி, சிறு வயது மகன், பெற்றோர் அனைவரும் உடலின் அருகே அமர்ந்து கதறி அழுது கொண்டிருந்தனர்.



இந்தக் குடும்பத்துக்கு குருஜியாக இருப்பவர் அப்போது அங்கு வந்தார். அவரைக் கண்டதும் அவர்கள் மேலும் பெரிதாக கதறி அழ ஆரம்பித்தனர். இறந்தவரின் மனைவி சொன்னாள். ”குருஜி! இவ்வளவு இளம் வயதில் என்னையும் என் மகனையும் நிர்க்கதியாக விட்டுப் போய் விட்டாரே! அவர் உயிருடன் மீள வருவார் என்றால் அதற்காக நான் எதுவும் செய்வேன்’’

குருஜி, அவர்கள் அனைவருக்கும் ஆறுதல் சொல்லி சமாதானப் படுத்த முயன்றார்.. ஆனால் அவர்கள் ஆறுதல் அடையயவில்லை. கடைசியில் குருஜி, ”ஒரு கோப்பை தண்ணீர் கொண்டு வாருங்கள்” என்றார்.

தண்ணீர் கொண்டு வரப்பட்டது. குருஜி தண்ணீர் கோப்பையை இறந்தவரின் உடலின் அருகில் வைத்துத் தானும் அமர்ந்தார். பின் சொன்னார். ”இறந்தவர் உயிருடன் திரும்பி வர வேண்டும் என நினைப்பவர், இந்தத் தண்ணீரை அருந்தலாம். இறந்தவர் திரும்பி வருவார். ஆனால் அதற்குப் பதில் நீரை அருந்தியவர் மரணமடைவார்!” என்றார்.

அங்கிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆனால் யாரும் நீரை அருந்த முன் வரவில்லை.

குருஜி, இறந்தவரின் தந்தையைக் கேட்டார். ”ஐயா.! நீங்கள் உங்கள் மகனுக்காக உங்கள் உயிரைக் கொடுக்க மாட்டீர்களா.?” தந்தை சொன்னார் ”நான் இறந்து விட்டால் என் மனைவிக்கு யார் ஆதரவு? அவளுக்காக நான் வாழ வேண்டுமே”

தாயைக் கேட்க அவள் சொன்னாள், ”அடுத்த மாதம் என் மகளுக்குப் பேறுகாலம். நான் இறந்து விட்டால் அவளுக்கு யார் உதவுவது.?”

மனைவி சொன்னாள், ”நான் இறந்தால் என் பையனை யார் கவனித்து வளர்ப்பது.? அவனுக்காக நான் வாழ வேண்டும்”

இறுதியில் குருஜி பையனைப் பார்த்துக்கேட்டார், ”குழந்தாய், உன் தந்தைக்காக நீ உயிரை கொடுப்பாயா?” உடனே தாய் அவனை இழுத்து அணைத்துக் கொண்டு கேட்டாள், ”குருஜி, உங்களுக்கென்ன பைத்தியமா? அவன் ஒரு குழந்தை. இனிமேல் தான் அவனுக்கு வாழ்க்கையே இருக்கிறது. அவனைப் போய் நீங்கள் கேட்கலாமா?”

குருஜி சொன்னார், ”உங்கள் அனைவருக்கும் ஏதாவது கடமை, பொறுப்பு இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அப்படியானால் இவருக்கு இங்கு வேலையில்லை என்றாகிறது. எனவேதான் கடவுள் அவனை எடுத்துக் கொண்டார் போலும். இப்போது இவரது இறுதி யாத்திரைக்கான ஏற்பாடுகளைக் கவனியுங்கள்”

## நலமே வாழ்வோம்

### எச்சரிக்கை! டெங்கு தீவிரம்

இலங்கையில் டெங்கு மிக வேகமாக பரவி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்களின்படி, இவ்வருட ஒக்டோபர் மாதத்தில் 586 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர், நாடு முழுவதும் இதுவரை 49,000 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.




இதேவேளை கொழும்பில் டெங்கு உச்சத்தை எட்டக்கூடும் என மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வருடத்தின் இறுதி மூன்று மாதங்களிலும், அடுத்த வருடத்தின் ஆரம்பத்திலும் கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் டெங்கு நோய் உச்ச மட்டத்தை எட்டும் என வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

தெஹிவளை, கல்கிசை, கோட்டே, கொலன்னாவ போன்ற பகுதிகளில் தற்போது டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். எனவே இலங்கை மக்கள் அனைவரும் பொதுவாகவும், கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் வாழும் மக்கள் குறிப்பாகவும் டெங்கு நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

## பொன் மொழி அது பொய்யா மொழி

- எப்போதும் நேர்மறையான எண்ணங்களை மட்டுமே மனதில் நிறைத்துக் கொள்ளுங்கள்.
- மற்றவர்களைப் பற்றிப் புறம் பேசுவதில் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள். உங்களைப் பற்றி புறம் பேசப்படுவதை அதிகம் பொருட்படுத்தாதீர்கள்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207



# ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 15

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து உருவகக்கதை முன்னோடி சு.வே.

“உருவகக் கதை என்கிற கடினமான கதை சொல்லுந்துறையுட் புகுந்து, முதலாவது வெற்றியை ஈட்டிய பெருமை சு. வேலுப்பிள்ளை (சு.வே)யைச் சாரும். பாரதரத்தினம் சக்கரவர்த்தி இராஜகோபாலச்சாரி ராஜாஜியால் புகழப்பட்ட மணற்கோவிலையும் வாசகர் பலரால் பாராட்டப்பட்ட வெறுங்கோவிலையும் எழுதித் தானொரு பண்பாடான சிந்தனைமிக்க ஓர் எழுத்தாளர் என்பதை நிலைநாட்டிவிட்டார். இவருடைய வர்ணனை அழகுகள், கற்பனை நயங்கள், தனிச்சிறப்பு வாய்ந்தன. நடையிலே சுத்தமும் ஓட்டமும் உண்டு. பாற்காவடி, மண்வாசனை போன்ற பல நல்ல சிறுகதைகளை எழுதி, தாம் ஒரு சிறுகதையாசிரியர் என்பதையும் நிரூபித்துள்ளார்” என கனக செந்திநாதன் தனது ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்ற ஆய்வு நூலில் சு.வே. பற்றிக் குறிப்பிட்டுள்ளார் (பக்கம்: 42).

தமிழக மூதறிஞரான ராஜாஜி சு.வே. எழுதிய மணற் கோயில் என்ற உருவகக் கதையைப் படித்துவிட்டு, தன்னுடன் இருந்த அறிஞர்களுக்கு அதனைக் காண்பித்து, “ஆஹா! இதுவல்லவா சிறந்த உருவகக்கதை" என விதந்து பாராட்டினாராம். இக்கதை கலைச்செல்வி சஞ்சிகையில் வெளியானது.

வாழ்க்கை வெளிப்படுத்துகின்ற உண்மைகளையும் இயற்கையின் தன்மைகளையும் எடுத்துக்கூறி மக்களின் உள்ளங்களில் பதியவைப்பதற்கும் அவர்களைச் சிந்திக்க வைப்பதற்கும் உருவகக்கதைகள் இலக்கிய உலகில் பெரும் பங்களிப்பினைச் செய்கின்றன. வாழ்க்கைத் தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் பல்வேறுபட்ட மிருகங்கள், ஜீவராசிகள், இயற்கை சக்திகள் வழியாக காண்பிப்பது உருவகக்கதை.

சுப்பிரமணியம் தையல்நாயகி தம்பதியினருக்கு 24.05.1921இல் மகனாகப் பிறந்த சு. வேலுப்பிள்ளை ஒரு பயிற்றப்பட்ட தமிழாசிரியர் ஒரு தமிழ்ப் பண்டிதர். திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிபெற்ற பின்னணி இவரைப் புத்திலக்கியப் படைப்பாளியாக உருவாக்கியது.

1946முதல் 1981வரை ஆசிரியப் பணிபுரிந்த சு. வே, தான் பெற்ற அனுபவங்களையே கருப்பொருள்களாகக் கொண்டு தனது படைப்புகளை ஆக்கித் தந்துள்ளார்.

சு.வே. சிறுகதை, உருவகக்கதை, கட்டுரை, நாடகம் ஆகிய இலக்கியத்துறைகளில் தடம் பதித்தவர். ஈழத்து உருவகக்கதைத் துறையின் முன்னோடி இவரே. இவரது உருவகக் கதைகள் மித்ர வெளியீடாக 1999இல் மணற்கோயில் என்ற மகுடத்தில் தொகுப்பாக வெளிவந்தது.

உருவகக் கதைகள் பற்றி சு.வே. தனது மணற் கோயில் தொகுப்பின் கபாடம் திறமினோ என்ற முன்னுரையில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

“இன்று உருவகக் கதைகள் எனப்படுபவற்றை உற்று நோக்கினால், உருவகக் கதைகளிலே சாதாரண உருவகத்தின் அமைப்பு உண்டு. உள்ளுறை உவமத்தின் சாயல் குறிப்பிடத்தக்க அளவு படிகிறது. இறைச்சிப் பொருளின் நிழல் பெருமளவில் விழுகிறது. எனவே இந்த உருவகக் கதை என்ற பண்டமானது உருவகம், உள்ளுறை உவமம், இறைச்சிப்பொருள் என்ற மூன்றின் கூட்டுறவால் பிறந்த ஒன்று எனக்கொள்ளல் பொருத்தமுடைத்து. இது சிறுகதையை வடிவமாக – உருவகமாகக் கொண்டு உலாவி வருவதால் அந்தப் பெயர் பூண்டிருக்கலாம்.

உருவகக் கதை, தன்னாற் கொள்ளப்பட்டுக் கருவுயிர்க்கப்பட்ட வித்தின் வன்மையிலேயே உயிர் வாழ்கிறது. அந்த உயிர்ப் பொருளே உரிப் பொருள். உரிப்பொருள் சம்பிரதாய எல்லைகளுக் குட்பட்டோ, வழிவழியாகப் பலராலும் எச்சிற் படுத்தவற்றைச் சுற்றியோ எழவேண்டுமென்ற நியதியில்லை. அவ்வாறு எதிர்பார்ப்பது பிணத்துக்கு மாலைசூட்டி அழகு பார்ப்பதையொத்தது. முக்கால உலக நிகழ்ச்சிகளுக்குள்ளே பலபல வேளைகளிலே பலபல பொருள்கள் மின்னற் கீற்றுப்போலத் துடித்து நெளிவதைச் சிந்தனையாற்றல் கொண்டு காணல் முடியும். அந்தப் பொருள்களே தத்துவங்கள். உண்மையென்பது அவற்றின் மறுபெயர். அந்த உண்மை சமய தத்துவமாகவோ அரசியற் தத்துவமாகவோ பிறவாகவோ அமையலாம். தத்துவங்கள் கால, தேச வர்த்தமானங்களையும் மரபுகள் என்று பெரிதுபடுத்துவனவற்றையுங் கடந்து நிற்கும் நிலைபேறுடையவை. கூர்த்த மதிகொண்டு தேடிக்கண்டறிய வேண்டியவை. அந்தத் தத்துவங்களுளொன்றை மையப் பொருளாக, உரிப் பொருளாகக் கொண்டு அதனை அழகாகவுந் தெளிவாகவும் காட்டுவதற்கு எழுந்த ஓர் உத்தியே உருவகக் கதை. எனவே, அதன் உரிப்பொருள் மிகமிக வலுவுடையதொன்றாக அமைய வேண்டும். அக்கினியைப் போன்ற தூய்மைவாய்ந்த உரிப்பொருளின் வன்மையே உருவகக் கதையின் ஆயுளை நிர்வகிக்கிறது என்று கூறினால் அதுவே எற்புடையது போலத் தோன்றுகிறது.

உருவகக் கதையின் உரிப்பொருளாகிய தத்துவம் மனங்கவரக் கூடிய, அழகியதோர் உருவமாக வடிவங்கொள்ளுதல், அடுத்து இன்றியமையாததாகின்றது. நிர்ச்சலனமான குளத்தின் நடுவிலே எறியப்பட்ட கல் தோற்றுவித்த அலைவட்டங்கள், ஒன்றையொன்று உந்தி விரிவடைந்து பெரியதொரு வட்டமாகக் கரையைத் தொட்டு முடிவது போல, மனத்திலே கொள்ளப்பட்ட தத்துவப் பொருளான உரிப்பொருள் கருப் பொருள்களைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, கற்பனை அலைகளை எழுப்பி விரிபு பட்டுச் செல்லும். நீரிலெழுந்த வட்டங்களின் மையம் கல்லெறியப்பட்ட இடமாகிவிடுவது போல மனத்தெழுந்த கற்பனையலைகளின் மையம் தத்துவப் பொருளாக அமைகிறது. இந்நிலையில் உரிப் பொருளை விரிவு படுத்தற்கேற்ற கருப்பொருளும் அதனைப்பற்றிப் படர்ந்து செல்லும் கற்பனைத் திறமும் உருவகக்கதையின் மற்றைய அம்சங்களாக விளங்குவதைக் காணமுடியும். அந்தக் கருப்பொருள் மனிதனாகவோ, மரமாகவோ, மிருகமாகவோ, முகிலாகவோ, நதியாகவோ அன்றி உலகியலக் கப்பாற்பட்ட கடவுளாகவோ, சாத்தானாகவோ இருக்கலாம். இயங்கும் திணைப்பொருளாகவோ, நிலைத்திணைப் பொருளாகவோ இருக்கலாம். ஆனால் அவை கற்பனையின் பூரண மதர்ப்பினால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும், பிணங்கும், உயர்வுதாழ்வு காட்டி வாதிடும், மோனத்தவம் புரியும், சிரித்துக் கும்மாளங்கொட்டும். அவை எச்செயலைச் செய்தாலும் அவையும் அவற்றுக்குச் செயல்களைக் கற்பித்து, அவைகளை ஆட்கொண்ட கற்பனையும், தாம்பிறந்த இடத்தை, தத்துவப் பொருளை குறிப்பாகக் காட்டிக் கொண்டிருக்கும்.

உரி, கரு, கற்பனை என்ற மூன்றின் சேர்க்கையாலும் மனத்தகத்து உருவகக் கதையென்றொரு கர்ப்பம் விளைந்து விட்டாலும் அதனை வெளிக் கொணர்ந்து வாசகர்களிடையே பரிமாற்றஞ் செய்வதற்கேற்ற சொல்லுந்திறன் உருவகக் கதையின் மற்றோரம்சமாக அமைகிறது.”

சு.வே.யின் முதற் சிறுகதை கிடைக்காத பலன் 1943ல் ஈழகேசரியில் வெளியானது. இவரது சிறுகதைகள் மண்வாசைன, பாற்காவடி, ஆகிய மகுடங்களில் தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

இவரது சிறுகதைத் தொகுதி பாற்காவடிக்கு முன்னுரை எழுதிய செங்கை ஆழியான் தனது முன்னுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

“சு.வே.யின் சிறுகதைகள் வெறும் கற்பனாவாதப் பிரசவங்களல்ல. அவை இந்த மண்ணின் வாழ்வையும் வளத்தையும் அவலத்தையும் ஆழமாகப் பேசுவன. யதார்த்தப் படைப்புகள், தேசிய இலக்கியம் என்பதற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாக அமைவன. 1943 முதல் 1950 களிலேயே சு. வே.யின் படைப்பிலக்கிய நோக்கு மிகத் தெளிவாக, இந்த மண்சார்ந்ததாக இருந்திருக்கிறதென்பதற்கு பாற்காவடி(1947), மனித மிருகம் (1944), கிடைக்காத பலன் (1943) என்பன தக்க உதாரணக் கதைகளாகும். அந்தத் தேசிய இலக்கிய நோக்கு 1950 முதல் 1970களில் மிகவும் ஆழமாகவும் கனதியாகவும் மண்வாசனை (1963), பெரியம்மா (1962) ஆகிய சிறுகதைகளில் படிமப்பட்டுள்ளது. சு.வே. தனது சிறுகதையில் இந்த நாட்டினையும் அதில் வாழ்ந்துவரும் மக்களையும் மட்டுமே சித்தரித்துள்ளார் என்பது மிக முக்கியமான அம்சம். மண்வாசனைக் கதைகள் அவருடையவை. நவீன சிறுகதையின் அழுத்தமான பண்புகளைக் கொண்டவை” எனக் குறிப்பிட்டுள்ளார். சு. வே. நாடக பிரதியாக்கத் துறையிலும் ஆழமாகத் தடம்பதித்துள்ளார். 1965இல் இலங்கைக் கலைக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் வஞ்சி என்ற ஓரங்கநாடகம் முதற்பரிசு பெற்றது. அடுத்த ஆண்டில் எழிலரசி என்ற முழுநீள நாடகம் முதற்பரிசு பெற்றது. 1960இல் இலங்கை வானொலி நாடகப் போட்டியில் இவரின் மண்வாசனை முதற்பரிசு பெற்றது. 1968இல் ஒருமை நெறித்தெய்வம் என்ற நாடகம் பரிசு பெற்றது. சு.வே. பல வானொலித் தொடர் நாடகங்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய, ஏட்டிலிருந்து (16 வாரங்கள்), கிராம ராஜ்யம் (32 வாரங்கள்), பொன்னாச்சிக் குளம் (97 வாரங்கள்), நவயுகம் (12 வாரங்கள்) தொடராக ஒலிபரப்பட்ட நாடகங்களாகும்.









இலங்கை வானொலியில் சு.வே. தொடர் உரைகளையும் நடத்தியுள்ளார். இலக்கிய இரசனை’ (32 வாரங்கள்), ‘திருக்குறட் சித்திரம்’ (36 வாரங்கள), ‘நாட்டுக்கு நல்லது’ (24 வாரங்கள்); என்பன இவரது வானொலித் தொடர் உரைச் சித்திரங்களாகும்.

சு.வே. எழுதிய சந்திரமதி, குகன் ஆகிய சிறுவர் கதைகள் சு.வே.யின் சிறுவர் இலக்கியத்துக்கான பங்களிப்புகளாகும். சு. வே. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் கடமை ஆற்றியவேளை மாணவர்களுக்கான பல பாடநூல்களையும் எழுதியுள்ளார். பிரமச்சாரியாகத் தவவாழ்வு வாழ்ந்த சு.வே, 22.06.2007இல் அமரரானார்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 36

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | | 08 |
| 09 | 10 | | 11 | 12 | 13 |
| | 14 | 15 | 16 | | 17 |
| 18 | | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | | |

பெயர் ..........................................................

வகுப்பு ..........................................................

தொலைபேசி இல ..........................................................

பாடசாலை பெயர் ..........................................................

வதிவிட முகவரி ..........................................................

..........................................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) சடப்பொருள் அல்லாத சக்திவடிவம் இது. கண்களால் பார்க்க முடியாது. உலோகங்கள் ஊடாக கடத்தப்படுவது. இந்த சக்திமுதல் இன்றேல் எமது அன்றாட வாழ்வில் கருமங்களை ஆற்றுவதென்பது இக்காலத்தில் இயலாத காரியம். எண்ணிக்கையற்ற உபகரணங்களை இயக்குவதற்குத் தேவையான சக்திவடிவம்.

(9) பெயராகவும் வினையாகவும் வருகின்ற சொல். பெயராக வருகையில் சிங்கத்தைக் குறிக்கும், வினையாக வருகையில் ஏதேனுமொரு பொருளை சிறு துண்டுகளாக வெட்டுவதைக் குறிக்கும்.

(11) வாரத்திலுள்ள ஏழு தினங்களில் ஒன்றை மட்டுமன்றி, சூரியக்குடும்பத்திலுள்ள கோள் ஒன்றையும் குறிக்கும் சொல். சூரியனுக்கு மிக அருகில் உள்ள கிரகம்.

(14) மனிதர் மீது மாத்திரமன்றி, அனைத்து உயிர்கள் மீதும் கொள்ள வேண்டிய நேசம்.

(19) சீரிய வாழ்க்கைக்கான சரியான வழிமுறையாகச் சொல்லப்பட்டிருக்கும் நீதிநெறி அல்லது போதனை என்பதை மட்டுமன்றி, இல்லாதோருக்கு அளிக்கும் கொடையையும் குறிக்கும் சொல்.

(23) இந்துசமயத்தின் மாபெரும் இதிகாசங்களில் ஒன்றை இயற்றிய பெரும் கவிஞன். (இடமிருந்து வலம்)

### மேலிருந்து கீழ்

(1) அக்காலத்தில் எமது மக்களின் சமையலறையில் காணப்பட்ட முக்கிய உபகரணம் இது. தானியங்கள், தேங்காய் போன்றவற்றை அரைத்துக் கொள்வதற்காக பயன்படுத்தப்பட்ட கருங்கல் உபகரணம். (தலைகீழான சொல்)

(3) நீளங்களை அளந்து கொள்வதற்காக உலகெங்கும் பொதுவாகப் பயன்படுத்தக் கூடிய நியம அலகுகள் அறிமுகமாவதற்கு முன்னர், எமது முன்னோர்கள் பயன்படுத்திய அலகு இது. கைவிரல்களை அகல விரித்துக் கொண்டால், பெருவிரலுக்கும் சிறிய விரலுக்கும் இடைப்பட்ட நீளம் இது.

(8) பால் போன்ற வெண்ணிறம் கொண்ட பறவை. அக்கால தமிழ் இலக்கியங்களில் இப்பறவையின் நடையானது பெண்களின் நடைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

(10) கொடையில் சிறந்த வள்ளல்களில் ஒருவனாக இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மன்னன் இவன். இந்தியாவின் பறம்பு தேசத்தை ஆட்சி செய்த அரசன். (தலைகீழான சொல்)

(11) தண்டுப் பகுதியில் இனிப்புச்சாறு கொண்டுள்ள தாவரம். (தலைகீழான சொல்)

(15) எமது நாட்டின் பணத்தில் மிகவும் குறைவான பெறுமதியைக் குறிப்பது இச்சொல்.

(18) பூக்களைத் தேடி வண்டுகள் வருவது இதனைப் பருகுவதற்காக ஆகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 35

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தண்ணீர் 06. மலை 08. கண்டி 12. குநா
18. நடிகன் 22. புகை 24. ஆறு

**மேலிருந்து கீழ்**

01. தலைவன் 04. நாகர் 05. அடிமை 12. குட்டி
17. கன்று 18. நகை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 34

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எப். லாதீபா**
தரம் 08C, களு/ஸாஹிரா கல்லூரி,
இல.29, ஜீலானி வீதி, தர்கா நகர்.

**2. எம்.எஸ். சையான்**
தரம் 03, பள்ளிபோருவ மு. வித்தியாலயம்,
இல. 123/5, பள்ளிபோருவ, ஹெம்மாத்தகம.

**3. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12 செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர.

**4. உ. திரக்சிகா**
தரம் 11, கமு உவஸ்லி மத்திய கல்லூரி,
புதிய சோமநாதர் வீதி, பாண்டிருப்பு.

**5. எம்.ஏ. அஜ்மல்**
தரம் 03, பள்ளிப்போருவ, மு.வித்தியாலயம்,
132/4, பள்ளிபோருவ, ஹெம்மாத்தகம.

**6. அமீம் அஹ்னப் நபி**
தரம் 06, கமு/சது/அல், அஸ்ரப் தேசிய பாடசாலை,
இறக்காமம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 36
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.**

**தெளிவுரை :**
பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறருக்குக் கொடுப்பதே சிறந்தது.

# மாவீரன் நெப்போலியன்



சிறு வயதில் நெப்போலியன் இராணுவ விடுதியில் படித்துக் கொண்டு இருந்தார். அந்த சமயத்தில் ஒரு நாள் நெப்போலியன் அறைக்கு பக்கத்து அறையில் உள்ள மற்றொரு மாணவனின் அழகான பை காணாமல் போய் விட்டது. உடனே அந்த மாணவன் தன் மேலதிகாரியிடம் புகார் கொடுத்தான். "உனக்கு யார் மேலையாவது சந்தேகம் இருக்கின்றதா" என அந்த மேலதிகாரி கேட்டார். அதற்கு அந்த மாணவன் நெப்போலியன் மீது தான் சந்தேகம் என்று கூறினான்.

உடனே அந்த அதிகாரி நெப்போலியனை தன் அறைக்கு அழைத்தார். நெப்போலியன் வந்தவுடன் அந்த அதிகாரி எதையும் விசாரிக்காமல் இனி திருடுவியா? என்று நெப்போலியனை அடிக்க ஆரம்பித்தார். நெப்போலியன் எதுவும் பேசாமல் அடியை வாங்கி கொண்டார்.

சிறிது நாட்கள் கழித்து அந்த மாணவன் தன் மேலதிகாரியிடம், அன்று தன் பையை திருடியது நெப்போலியன் இல்லை, வேறொரு மாணவன்" என்று கூறி மன்னிப்பு கேட்டான். மேலதிகாரி தவறு செய்யாத நெப்போலியனை அடித்து விட்டோமே என்று வருத்தப்பட்டு, நெப்போலியனை தன் அறைக்கு அழைத்தார்.

நெப்போலியன் அறைக்கு வந்தவுடன் "செய்யாத தவறுக்கு அன்று ஏன் அடி வாங்கினாய்? அன்றே திருடவில்லை என்று கூறி இருக்கலாமே?" என்று மேலதிகாரி கேட்டார். அதற்கு நெப்போலியன் "நீங்கள் அடிக்கும் முன்பே கேட்டு இருந்தால் நான் கூறி இருப்பேன், ஆனால் நீங்கள் எதையும் கேட்காமல் அடிக்க ஆரம்பித்து விட்டீர்கள். அப்பொழுது நான் திருடவில்லை என்று கூறி இருந்தால் அடிக்க பயந்து கூறியதாக நினைத்து இருப்பீர்கள். நான் பயந்ததாக யாரும் நினைத்து விடக் கூடாது என்பதற்காகத்தான் அப்பொழுது எதுவும் கூறவில்லை" என்று நெப்போலியன் கூறினார். நெப்போலியனை மாவீரன் என்று அழைப்பதற்கு காரணம் அவரின் வெற்றிகளால் அல்ல, அவரின் உறுதியான மனோதிடத்தால் தான்.

## இவ்வார மழலை




ரவிசந்திரக்குமார் / விசித்திரா,
கொழும்பு

## வாரம் ஒரு பெரியார்

### கவிச்சக்கரவர்த்தி கம்பர்



"கம்பன் வீட்டுத் கட்டுத்தறியும் கவிபாடும்" என்று கூறுமளவுக்கு கம்பரது கவித்திறமை இன்றும் பேசப்பட்டு வருகிறது. 'கவிபேரரசர் கம்பர்', 'கவிச்சக்ரவர்த்தி கம்பர்', 'கல்வியில் பெரியவர் கம்பர்' என அவருக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியில் சொல்வான்மைக் கொண்டவராக, ஆழமான கவிதை அனுபவமும், கற்பனை ஆற்றலும், புலமைத் திறனும் பெற்றவர். 'கம்பராமாயணம்', 'சிலையெழுபது', 'சடகோபர் அந்தாதி', 'சரசுவதி அந்தாதி', 'திருக்கை வழக்கம்', 'ஏரெழுபது' மற்றும் 'மும்மணிக்கோவை' போன்றவை அவர் படைத்த படைப்புகளாகும். இதில், 'கம்பராமாயணம்' உலகளாவிய அங்கீகாரம் பெற்றது.

கிபி 12 ஆம் நூற்றாண்டில், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவழுந்தூர் என்னும் இடத்தில் இவர் பிறந்தார்.

நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந்தாலும், அவர் தமிழ்நாட்டில் உள்ள வெண்ணைநெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ, செழிப்போடு எடுத்து வளர்க்கப்பட்டார். இளம் வயதிலிருந்தே அவர், தொன்மையான மொழிகளான சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழியின் மீது பேரார்வம் உடையவராக இருந்தார். சிறு வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகள் எழுதும் ஆர்வம் இருந்தது.

மாபெரும் கவிஞராக உருவெடுத்த கம்பரின் புகழை அறிந்த அப்போதைய சோழ மன்னர், அவருக்கு அழைப்பு விடுத்தார். அரண்மனைக்கு சென்ற அவர், மன்னரின் அன்பு கட்டளைக்கிணங்க அவரது படைப்புகளில் சில வரிகளை அவருக்குப் பாடிக் காட்டினார். அவரது கவித்திறனை நேரில் கண்டு வியந்த சோழ மன்னர், அவருக்கு, 'கவிஞர்களின் பேரரசர்' என்றும் அர்தமுடைய 'கவி சக்கரவர்த்தி' என்றும் பட்டம் சூட்டி, அவருக்கு சொந்தமான பெருவாரிய நிலத்தைப் பரிசளித்து, அதற்கு 'கம்பநாடு' என்றும் பெயர் சூட்டினார்.

கம்பரின் தாய்மொழி, தமிழ் என்றாலும், சமஸ்கிருதத்திலும் அவர் புலமைப் பெற்றே விளங்கினார். அதற்கு சான்று, அவர் எழுதிய 'கம்பராமாயனம்'. முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த இராமாயணத்தை, அவர் தமிழில், அவருக்குரித்தான பாணியில் மீண்டும் எழுதினார்.

கம்பராமாயணம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு தனிப்பட்ட இடத்தைப் பிடித்து, தமிழ் இலக்கியத்தையே வானளவிற்கு உயர்த்தியது.

கவிச்சக்ரவர்த்தி கம்பர், கிபி 1250 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார். இதுவரை வந்த தமிழறிஞர்கள் பட்டியலில், கம்பர் யாரும் எட்ட முடியாத இலக்கில் உள்ளார்.

## நூலைப் படி

நல்ல நூலைத் தேடி
நாளும் பொழுதும் படி
அறிவை வளர்க்கும் அவ்வழி
அதுவே என்றும் நல்வழி
வள்ளுவன் குறளைப் படி
நாலடி யாரைப் படி
ஏலாதி நூலைப் படி
ஔவை சொன்ன அறவழி
அனைத்தும் ஆழப்படி
கம்பன் காவியம் படி
சிலம்பு காட்டு நீதியை
சிரமேற் கொண்டு படி!

**சாரணா கையூம்**



## விளக்கம்

### "பூனை குறுக்கே போனால் அந்த வழியே போகக்கூடாது"

பூனைகள் எப்போதும் குடியிருப்புகள் நிறைந்த பகுதிகளில் தான் இருக்கும். மன்னர் காலத்தில் போருக்கு படை திரட்டி செல்லும் வழியில் பூனையை பார்த்தால், இந்த வழியில் குடியிருப்புகள் இருக்கிறது. அங்கே இருக்கும் ஆண்கள் அனைவரும் போர்க்களத்திற்கு சென்றிருப்பார்கள். அங்கே சிறுவர்கள், வயதானவர்கள், பெண்கள் மட்டுமே இருப்பார்கள். அந்த பகுதியில் சென்றால் குதிரைகளில் செல்லும் வீரர்களால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதனாலே அந்த பகுதியில் செல்ல மாட்டார்கள். ஆனால் இப்போது அந்த வழக்கம் தவறாக மாற்றப்பட்டு விட்டது.

## நமது உடலைப் பற்றி அறிவோம்

1. பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வது
2. ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்
3. மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
4. மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.
5. ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீற்றர்.
6. நமது இரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ. பயணம் செய்கிறது.
7. நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.
8. நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.
9. மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.
10. உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்ஸ்.
11. ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லீற்றர்.
12. கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
13. மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
14. கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்கு பொருத்தப்படுகின்றன.
15. 900 பென்சில்களை தயாரிக்கும் அளவிற்கு மனித உடலில் கார்பன் சத்து இருக்கிறது.

## சிறுவர் சித்திரங்கள்





**அப்துல் ஹமீத் சினான்**
துந்துவை அஹதிய்யாப் பாடசாலை
துந்துவை பெந்தோட்டை.



**இக்ரா இப்றாஹிம்**
துந்துவை அஹதிய்யாப் பாடசாலை
துந்துவை பெந்தோட்டை.



**ஸாகிர் சப்ராஸ்**
துந்துவை அஹதிய்யாப் பாடசாலை
துந்துவை பெந்தோட்டை.



பாணந்துறை ஜீலான் தேசிய பாடசாலை மீலாத் விழா வைபவத்தில் வருகை தரும் அதிதிகளை வரவேற்க சிறுவர்கள் ஆயத்தமாக இருப்பதை காணலாம்.
(படம்: மொறட்டுவை மத்திய விசேட நிருபர்)

## விரலை நகக்கண் என்று ஏன் அழைக்கின்றோம்?

கண் செய்யும் வேலை சில நேரங்களில் கையும் செய்து வருகிறது. இது உங்களால் நம்ப முடிகிறதா? ஆம், நம் வீட்டில் திடீரென்று இரவு நேரங்களில் மின்வெட்டு ஏற்படும் சமயத்தில் நம்மை சுற்றி இருட்டாக இருக்கும். அந்த சமயத்தில் நம்முடைய கண் இருட்டு உலகத்தை உணரும். அந்த நொடியில் நம்முடைய கை சென்று பக்கத்தில் இருப்பது கதவா, சுவரா அல்லது மனித உருவமா என கையினால் தடவி அதன் மூலம் வரும் உணர்வை வைத்து அறிந்து கொள்ள முடியும் . அதனால் தான் விரலை நகக்கண் என்று அழைக்கின்றோம்.



## மஞ்சரி விளையாட்டு

# எங்கே தவறிழைத்தோம்?




ஆரம்ப சுற்றில் நமீபியாவிடம் தோற்றபோது இலங்கை அணியால் அதனை சுதாகரிக்க முடிந்தது. ஏனென்றால் அடுத்து இருந்த ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் நெதர்லாந்துக்கு எதிரான போட்டிகள் அத்தனை சவாலானது அல்ல.

நினைத்தபடி அந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டிய இலங்கை சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறி முதல் போட்டியில் அயர்லாந்தை தோற்கடித்தது நல்ல ஆரம்பம்.

ஆனால் அடுத்து நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி தோற்றதற்கு இலங்கையின் திறமைக்கு அப்பால் வெளிப்புற காரணிகளையும் நியாயமாகச் சொல்லிவிடலாம். ஆனால் நியூசிலாந்துக்கு எதிராக இலங்கை சந்தித்தது மோசமான தோல்வி. அந்தத் தோல்வியுடனேயே இலங்கை அணியின் உலகக் கிண்ண கனவு கலைந்து விட்டது.

எப்போது அரையிறுதிக்கு முன்னேற மற்றொரு அணியின் தயவை எதிர்பார்க்கும் சூழல் ஏற்பட்டதோ அப்போது அதிர்ஷ்டத்தை நம்ப வேண்டி இருந்தது. அதுவும் அயர்லாந்து அல்லது ஆப்கானின் வெற்றிதான் இலங்கையின் அரையிறுதியை தீர்மானிக்கும் என்றபோது இலங்கை அதிர்ச்சி முடிவு ஒன்றையே காத்திருந்தது.

எதிர்பார்த்தபடி முடிவு கிடைக்காமல் இலங்கை உலகக் கிண்ணத்தில் இருந்து வெளியேறியது ஏமாற்றம் தந்தாலும், அணியின் திறமை, போட்டியின் போக்குகளை பார்க்கும்போது அது எதிர்பார்த்ததுதான்.

ஆசிய கிண்ணத்தை வென்று பெரும் நம்பிக்கையுடனேயே இலங்கை அணி இம்முறை உலகக் கிண்ணத்திற்கு சென்றது. என்றாலும், இலங்கை அணி எங்கே தவறிழைத்தது?

உலகக் கிண்ணத்தில் இலங்கைக்கு ஏற்பட்ட முதல் தடங்கல் காயங்கள்தான். அது போட்டித் திட்டங்களையே குழப்பிவிட்டது. போட்டிகள் ஆரம்பிக்கும் முன்னரே பெரும் எதிர்பார்ப்பாக இருந்த இளம் இடது கை வேகப் பந்து வீச்சாளர் டில்ஷான் மதுஷங்க காயமடைந்து வெளியேறினார்.

பின்னர் இலங்கையின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர காயமடைந்து வெளியேறினார். தொடர்ந்த மதுஷங்கவுக்கு பதில் அணிக்கு அழைக்கப்பட்ட மற்றொரு இடது கை வேகப்பந்து வீச்சாளரான பினுர பெர்னாண்டோவுக்கும் காயம்.



துடுப்பாட்ட வீரர் மற்றும் அவசரத்திற்கு பந்துவீச்சிலும் பயன்படுத்த முடியுமான தனுஷ்க குணதிலக்கவும் காயமடைய மேலதிகமாக மூன்று வீரர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டது.

அணியில் இருந்து வெளியேறாதபோதும் பத்தும் நிசங்க மற்றும் பிரமோத் மதுஷானின் காயங்கள் அவர்கள் போட்டியில் ஆட முடியாத நிலையை ஏற்படுத்தியது.

வேகப்பந்து வரிசை பலவீனம் அடைந்ததால் சுழற்பந்து வீச்சாளர்களான வனிந்து ஹசரங்க மற்றும் மஹீஷ் தீக்ஷனவை அதிகம் நம்ப வேண்டி இருந்தது. வேகப்பந்துக்கு அதிகம் சாதகமான ஆஸி. அடுகளங்களில் அது எப்போதும் உதவாது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி இதற்கு நல்ல உதாரணம். வனிந்து ஹசரங்கவின் பந்துவீச்சு முழுமையாக செல்லாமல்போனது. அவர் 3 ஓவர்களுக்கு 53 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து தனது சர்வதேச கிரிக்கெட்டில் மோசமான பந்துவீச்சை காண்பித்தார். அவரை நம்பியிருந்த இலங்கை அணி கடைசியில் மோசமான தோல்வியை சந்திக்க வேண்டி ஏற்பட்டது.

இலங்கை பந்துவீச்சில் ஏற்பட்ட பலவீனம் முக்கியமான போட்டிகளில் தெளிவாகத் தெரிந்தது.

துடுப்பாட்டத்திலும் யாரும் பிடிகொடுத்து ஆடியதாகத் தெரியவில்லை. இந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை பெற்ற இலங்கை வீரராக குசல் மெண்டிஸ் இருந்தபோதும் அவர் பலமான அணிகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து அணிகளுக்கு எதிரான போட்டிகளில் முறையே 5, 4 ஓட்டங்களையே பெற்றார்.

மறுபுறம் பத்தும் நிசங்கவின் ஆட்டத்தில் வழக்கமான வேகம் இருக்கவில்லை. பந்து வழக்கத்தை விட அதிகம் மேலெழும் அவுஸ்திரேலிய ஆடுகளங்களில் அவர் அதிகம் பழக்கப்படவில்லை என்பது அவர் துடுப்பை சுழற்றும் பாணியிலேயே தெரிகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் அவர் 40 ஓட்டங்களை எடுத்தபோதும் அதனைப் பெற 45 பந்துகளுக்கு முகம்கொடுத்து வெறுமனே 2 பௌண்டரிகளை மாத்திரம் தான் எடுத்தார்.

தனஞ்சய டி சில்வாவின் பந்தை தேர்வு செய்து துடுப்பெடுத்தாடும் பாணி அவுஸ்திரேலிய ஆடுகளங்களுக்கு கச்சிதமாக பொருந்துகின்றபோதும் ஆப்கானுக்கு எதிரான போட்டியில் தான் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களை பெற்று கைகொடுத்தார்.

குணதிலக்க காயமடைந்த பின்னர் இரண்டாவது வரிசையில் வந்த சரித் அசலங்க இன்னும் தனது வழக்கமான அட்டத்திற்கு திரும்பவில்லை.

ஆரம்ப வரிசை சற்று தடுதாற்றம் கண்டதால் பானுக்க ராஜபக்ஷ மற்றும் அணித் தலைவர் தசுன் ஷானக்க மத்திய வரிசையில் தடுமாற வேண்டி ஏற்பட்டது. ஒன்று அவர்கள் முன்கூட்டியே துடுப்பெடுத்தாட வந்து முழுமையாக அணியை சுமக்க வேண்டி ஏற்பட்டது, இல்லையென்றால் கடைசி நேரத்தில் அதிக ஓட்ட வேகத்தை பிடிக்க வேண்டி ஏற்பட்டது.

இதற்கு சகலதுறை வீரர் சாமிக்க கருணாரத்னவிடம் இருந்தும் எந்த உதவியும் கிடைக்கவில்லை. கருணாரத்ன இந்தத் தொடரில் முழுமையாக சோபிக்கவில்லை. கருணாரத்ன அடிய ஏழு போட்டிகளிலும் 32 ஓட்டங்களையே பெற்றதோடு பந்துவீச்சில் 3 விக்கெட்டுகளையே வீழ்த்தினார். இதனால் ஆப்கானுக்கு எதிரான போட்டியில் அவரை சேர்க்காமல் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இலங்கை அணியில் இப்போது இருக்கும் முழுமையான வேகப் பந்து சகலதுறை வீரர் கருணாரத்ன தான். தசுன் ஷானக்க இப்போதெல்லாம் அதிகம் பந்துவீசுவதில்லை. துடுப்பாட்டத்தில்தான் அதிகம் கவனம் செலுத்துகிறார்.

எனவே கருணாரத்ன அணியில் தனது பாத்திரத்தை நன்றாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டி இருப்பதோடு மாற்று வேகப்பந்து சகலதுறை வீரர் ஒருவரின் தேவையும் அணியில் உள்ளது.

இவை எல்லாவற்றையும் விட களத்தடுப்புதான் பெரும் பிரச்சினை. துடுப்பாட்ட வீரர்கள், பந்துவீச்சாளர்கள் எத்தனை தான் திறமையாக ஆடினாலும் களத்தடுப்பு என்பது ஆட்டத்தை திசை திருப்பக் கூடியது.

இலங்கை அணியின் களத்தடுப்பு நிலையாக இல்லை. ஆசிய கிண்ணத்தில் சிறப்பாக இருந்த களத்தடுப்பு உலகக் கிண்ணத்தில் மோசமாகிவிட்டது. நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் கிளன் பிலிப்ஸின் கைக்கு வந்த பிடியெடுப்பை பத்தும் நிசங்க தவறவிட்டது என்பது ஊருக்கே தெரிந்த கதை.

அதுதான் போட்டியையே திசைதிருப்பியது. இலங்கையின் தலையெழுத்தையே மாற்றியது என்று சொன்னாலும் தப்பில்லை.

இது மட்டுமல்ல இம்முறை உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி கிட்டத்தட்ட எட்டு பிடியெடுப்புகளை தவறவிட்டிருக்கிறது. இது ஏனைய அணிகளுடன் ஒப்பிடுகையில் அதிகம். எனவே இந்தக் குறையை சரிசெய்வது அவசியம்.

இம்முறை உலகக் கிண்ணம் என்பது இலங்கை அணியை பொறுத்தவரை எமாற்றம் தந்தாலும், அதனை எதிர்காலத்திற்கு முதலீடாக பயன்படுத்த முடியும். தற்போது இலங்கை அணி ஒரு கட்டமைப்புக்குள் வந்திருக்கிறது. இந்த இளம் அணியால் இன்னும் மூன்று நான்கு உலகக் கிண்ணங்களை பார்க்க முடியும். அப்போது இலங்கை இப்போதை விடவும் வலுவான அணியாக இருக்கும்.



**எஸ்.பிர்தௌஸ்...**

# பங்களாதேஷின் நியாயம்




"நியாயம் அல்லது நியாயமற்ற தன்மை பற்றி யாரும் உடைமாற்றும் அறையில் பேசவில்லை" என்று ஷகீப் அல் ஹசன் சற்று பதற்றத்துடன் செய்தியாளர்களிடம் கூறுவது தெரிந்தது.

பங்களாதேஷ் அணித்தலைவர் ஷகீப் அல் ஹசன் சற்று அதிகமாகவே உணர்ச்சிவசப்படுபவர், அவர் மாத்திரம் அல்ல ஒட்டுமொத்த பங்களாதேஷ் அணியுமே அப்படித்தான். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அது சற்று சிறுபிள்ளைத்தனமாகவும் தெரியும். ஆனால் பங்களாதேஷ் அணியின் பலமும், பலவீனமும் அதுதான்.

இந்தியாவுக்கு எதிரான டி20 உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்று போட்டி என்பது அப்படி ஒரு பரபரப்பான சூழலை கொண்டது.




வெற்றிபெறும் அணி கிட்டத்தட்ட அரையிறுதி வாய்ப்பை அதிகரிக்கும்' என்ற சூழலில் இந்த பரபரப்பு எதிர்பார்த்தது தான்.

ஆனால் பங்களாதேஷ் அணிக்கு வெற்றி கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கும்போது அதன் நடத்தை சற்று தூக்கலாகத் தெரியும். ஏற்கனவே இந்திய அணி சர்வதேச கிரிக்கெட்டை தனது கைக்குள் வைத்து ஆட்டிப் படைப்பதாக பேச்சு இருக்கும் போதும்பங்களாதேஷின்செயலில் ஓரளவு நியாயம் இருப்பதாகவும் தெரியலாம்.

185 ஓட்டங்களை துரத்தியடித்த பங்களாதேஷ் அணி 7 ஓவர்கள் முடிவில் விக்கெட் இழப்பின்றி 66 ஓட்டங்களை பெற்றிருந்தபோதே மழை குறுக்கிட்டது. அப்போது டக்வர்த் லுவிஸ் முறைப்படி பார்த்தால் 17 ஓட்டங்களால் பங்களாதேஷ் முன்னால் இருந்தது.

மழை பெய்யும் ஒவ்வொரு விநாடியும் பங்களாதேஷின் வெற்றி உறுதியாகும் நிலை. பத்து ஓவர்களை இழந்தால் பங்களாதேஷ் அணி மூன்று ஓவர்களுக்கு 23 ஓட்டங்களை பெற வேண்டும். ஐந்து ஓவர்களை இழந்தால் எட்டு ஓவர்களுக்கு 76 ஓட்டங்களை பெற வேண்டும். எப்படிப் பார்த்தாலும் பங்களாதேஷுக்கு சாதகமான சூழல்.

40 நிமிடங்களில் மழை நின்றது. அதாவது இரண்டு ஓவர்கள் இழக்கும் நிலை. மைதானத்தில் இருக்கும் நீரை அகற்றி விளையாடுவதற்கு தகுதியான சூழலை உருவாக்க இன்னும் 20 நிமிடங்கள் தேவைப்படும் என்று பார்த்தால் மொத்தம் ஏழு ஓவர்கள் இழக்க நேரிடும். ஆனால் போட்டியை 13 நிமிடங்களில் ஆரம்பிப்பதாக நடுவர்கள் அறிவித்தார்கள். பங்களாதேஷின் இலக்கு மேலும் ஒன்பது ஓவர்களில் 85 என நிர்ணயிக்கப்பட்டது. அதாவது நான்கு ஓவர்களே குறைக்கப்பட்டது.

இந்திய வீரர்கள் அமைதியாக தமது அடுத்த கட்ட திட்டத்தை வகுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் ஷகீப் அல் ஹசன் நடுவருடன் தீவிரமாக எதையோ பேசுவது தெரிந்தது. அருகில் இந்திய அணித்தலைவர் ரோஹித் ஷர்மா அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். ஷகீப் மைதானத்தை காட்டி தண்ணீர் இன்னும் இருப்பதாக முறையிடுவது நன்றாகத் தெரிந்தது. போட்டி அவசர அவசரமாக முன்கூட்டியே ஆரம்பிக்கப்பட்டது என்பது பங்களாதேஷ் தரப்பின் குற்றச்சாட்டு.

துடுப்பெடுத்தாட வந்த லிட்டோன் தாசும் நடுவரிடம் மைதானத்தில் தண்ணீர் இருப்பதை சுட்டிக்காட்டுவது தெரிந்தது. இதற்கு தோதாக போட்டி ஆரம்பித்து முதல் பந்திலேயே லிட்டோன் தாஸ் ஓட்டம் பெறும் போது வழுக்கி விழுந்து கையில் காயம் ஏற்பட்டது. அடுத்த பந்திலேயே கவனமாக ஓடப்போய் ரன் அவுட் ஆகிவிட்டார். 27 பந்துகளில் 60 ஓட்டங்களை பெற்ற லிட்டோன் தாசின் ஆட்டமிழப்பு பங்களாதேஷ் அணிக்கு பாதகமாக போட்டியை திசை திருப்பியது.

கடைசியில் பங்களாதேஷ் அணி 5 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. அந்த ஐந்து ஓட்டங்களுக்கு மற்றொரு கதை இருக்கிறது. போட்டியின்போது களத்தடுப்பில் ஈடுபட்ட விராட் கொஹ்லி போலியான செயல் ஒன்றை செய்ததாகவும் அதனை நடுவர் கவனிக்கத் தவறிவிட்டதாகவும் பங்களாதேஷ் தரப்பு கூறியது.

அதற்கு அபராதமாக ஐந்து ஓட்டங்கள் வழங்கப்பட்டிருந்தால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருக்கும் என்பதுதான் அந்தத் தர்க்கம். ஆனால் இந்தத் தர்க்கங்களில் நியாயம் இருந்தாலும் நியாயம் கூற முடியாது என்பதுவே உண்மை. அதனால்தான் ஷகீப் அல் ஹசன் ஊடக சந்திப்பில் அதனை வெளிப்படையாகப் பேசாமல் மறைத்துவிட்டார்.

செய்தியாளர்: உண்மையில் நீங்கள் விளையாடாமல் இருக்க முயன்றீர்களா? சிரித்தபடி ஷகீப்: எங்களுக்கு ஏதாவது விருப்பு இருந்ததாக நினைக்கிறீர்களா?

செய்தியாளர்: அப்படி இல்லை, நீங்கள் அவர்களை நம்ப வைக்க முயன்றீர்களா? ஷகீப், தொடர்ந்தும் சிரித்தபடி: யாரை நம்ப வைக்க?

செய்தியாளர்: நடுவர்களை? ஷகீபின் சிரிப்பு அதிகமானது: நடுவர்களை என்னால் நம்ப வைக்க முடியும் என்று நினைக்கிறீர்களா?

செய்தியாளர்: அப்படி என்றால் பங்களாதேஷின் ஆறுகளைப் பற்றியா நீங்கள் விவாதித்துக் கொண்டிருந்தீர்கள்?ஷகீபுக்குஎன்ன கூறுவது என்று புரியவில்லை.

செய்தியாளர்: அப்படி என்றால் எதனை பற்றி நீங்கள் பேசினீர்கள்? ஷகீப்: ஆம், நீங்கள் சரியான கேள்வியை கேட்டிருக்கிறீர்கள். நடுவர் இரு தலைவர்களையும் அழைத்து, எம்மிடம் வெற்றி இலக்கு, பந்துகளின் எண்ணிக்கை போன்றவற்றை கூறினார்.

செய்தியாளர்: நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள்? ஷகீப்: ஆம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஓரம் நிறுவனத்தின் தலைமையகம் தெஹிவளையில் திறப்பு

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பிரதம அதிதி




***மர்லின் மரிக்கார்***

பற்சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் நவீன மருத்துவ உபகரணங்களை இலங்கை பற்சிகிச்சை மருத்துவ துறைக்கு விநியோகிக்கும் முன்னணி நிறுவனமான ஓரம் உலகளாவிய தனியார் நிறுவனம் அதன் தலைமையகத்தை தெஹிவளை, பெப்பிலியான, நெதிமால, இலக்கம் 92 இலக்கக் கட்டடத்தில் கோலாகலமாகத் திறந்து வைத்துள்ளது.



ஓரம் உலகளாவிய தனியார் நிறுவனத்தின் தலைவர் ஜாபிர் சாலி, உலகளாவிய நிறைவேற்று பணிப்பாளர் முஸ்தாக் ஜாபிர் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் முன்னாள் அமைச்சருமான அகில விராஜ் காரியவசம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

இவ்வைபவத்தில் இந்தியாவில் மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்யும் பல்தேசிய நிறுவனமான கமல் என்கொன் இன்டஸ்ட்ரீஸின் பணிப்பாளர் விக்ரம் பிரதாப்காத், வதிவிட முகாமையாளர் முஹம்மட் அலி கட்ரி, பயிற்சி மற்றும் சந்தைப்படுத்தல் முகாமையாளர் டொக்டர் நீட்டா செட்டி உள்ளிட்டோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் தலைமை உரையாற்றிய நிறுவனத்தின் உலகளாவிய நிறைவேற்று அதிகாரி முஸ்தாக் ஜாபிர், ஓரம் உலகளாவிய தனியார் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பின்னணி குறித்தும் இந்நிறுவனம் அடைந்துள்ள வளர்ச்சிகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

'பற்சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் நவீன மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்து இந்நாட்டு சந்தைக்கு நாம் அறிமுகப்படுத்துகின்றோம். அத்தோடு பற்சிகிச்சை மருத்துவர்களுக்கு பற்சிகிச்சைக்கான நவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து அறிமுகப்படுத்தும் வகையில் சான்றிதழ் கற்கைகளை முன்னெடுக்கின்றோம். இக்கற்கைகளுக்கான வளவாளர்களாக நவீன பற்சிகிச்சை மற்றும் மருத்துவ உபகரணங்கள் தொடர்பான முன்னணி பல் வைத்தியர்களைக் கொண்டு செயன்முறையுடன் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

'இவ்வாறான நவீன துறைகளை பாராட்டி ஊக்குவிப்பது காலத்தின் அவசியத் தேவை என்றும் இப்பணியை முன்னெடுக்கும் நிறுவனத்தின் தலைவர், உலகளாவிய நிறைவேற்று அதிகாரி உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களையும் வாழ்த்திப் பாராட்டுவதாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அகிலவிராஜ் காரியவசம் உரையாற்றும் போது கூறினார்.

# வீட்டுத் தோட்டத்துக்கு முக்கியத்துவமளித்த செலான் டிக்கிரி உலக சிறுவர் தினம்

இலங்கையில் உலக சிறுவர் தினம் ஒக்டோபர் 1ஆம் திகதி கொண்டாடப்படும் நிலையில், இலங்கையின் முதற்தர சிறுவர் சேமிப்புக் கணக்கான செலான் டிக்கிரி, ஒக்டோபர் மாதம் முழுவதையும், தேசத்தின் சிறுவர்களுக்கு களிப்பூட்டும், புத்தாக்கமான அம்சங்கள் நிறைந்த மாதமாக கொண்டாடுவதற்கு சலுகைகளை வழங்க முன்வந்துள்ளது. தொடர்ச்சியாக 10ஆவது வருடமாக செலான் டிக்கிரி உலக சிறுவர் மாதத் திட்டம் முன்னெடுக்கப்படுவதுடன், ஏற்கனவே காணப்படும் மற்றும் புதிய சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் 2022 ஒக்டோபர் 1 முதல் 31 வரையான காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும் வைப்புகளுக்கு விசேட வைப்புகளை வழங்க முன்வந்துள்ளது.




பணவீக்கத்தின் தாக்கத்தை கவனத்தில் கொண்டு, அதிகரித்துச் செலவும் வாழ்க்கைச் செலவை குறைத்துக் கொள்வதற்காக பல இல்லங்களில், வீட்டுத் தோட்டச் செய்கையை மேற்கொள்வதை செலான் வங்கி இனங்கண்டிருந்தது. இந்தக் காரணிகளை கவனத்தில் கொண்டு, இந்த மாதத்தில் செலான் டிக்கிரியினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளினூடாக, சிறுவர்களின் பயிர்ச் செய்கை தொடர்பான புதிய சிந்தனைகளை வெளிக்கொண்டுவருவதை ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது.

இந்த நற்பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், புதிய அல்லது ஏற்கனவே காணப்படும் செலான் டிக்கிரி கணக்கினுள் ரூ. 25000/ வைப்புச் செய்யப்படும் போது, கணக்குதாரருக்கு, வீட்டுத் தோட்டச் செய்கைக்கான பொதி ஒன்று வழங்கப்படும். இதில் இரு அத்தியாவசிய சாதனங்கள், கையுறைகள், வளர்ப்பு பொதிகள் மற்றும் விதைகள் போன்றவற்றுடன், டிக்கிரி வீட்டுத் தோட்ட போட்டியில் இலவசமாக பங்குபற்றும் வாய்ப்பு போன்றன அடங்கியிருக்கும். 12 வயது வரையான சிறுவர்களுக்கு இந்தத் திட்டத்தினூடாக ரூ. 500,000 வரை பரிசுகளை வெற்றியீட்டக்கூடியதாக இருக்கும்.

புதிய கணக்கொன்றில் ரூ. 100,000 வைப்புச் செய்யப்படும் போது, மேற்படி வீட்டுத் தோட்டச் செய்கைப் பொதியைப் பெறுவதற்கும், அன்பளிப்பு வவுச்சர்கள் மற்றும் மேலதிக அன்பளிப்பு போன்றவற்றை பெறும் வாய்ப்பை கணக்குதாரர் பெறுவார்.

# உயர் தரப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கு Brandixஇன் பல்கலைக்கழக புலமைப்பரிசில் திட்டம்

நாடு பொருளாதாரச் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், இலங்கைச் சமூகத்தாருக்கு உயர் கல்வியைத் தொடர்வது எனும் பெரும் சவாலான காரியமாக மாறி வரும் சூழலில், இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளரான Brandix Apparel Ltd, இந்தத் தேசிய தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், புலமைப்பரிசில் திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ளது.




மனிதநேய பல்கலைக்கழக புலமைப்பரிசில் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை Brandix அறிமுகம் செய்துள்ளதுடன், க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்களுக்கு, தமது உயர் கல்வியைத் தொடர்ந்து, தமது பிரத்தியேக மற்றும் நிபுணத்துவ விருத்தியை உறுதி செய்து கொள்வதற்கு ஆதரவளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்ட நடைமுறைப்படுத்தலின் போது, மாதிரி கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் பயின்று, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று, அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் மாணவர்களுக்கு இந்தப் புலமைப்பரிசில் வழங்குவது நீடிக்கப்படும்.

Brandix தொழிற்சாலையை அண்மித்த 10 கிலோமீற்றர் சுற்றுவட்டாரத்தில் அமைந்துள்ள கிராமத்தாரின் நலனில் கவனம் செலுத்தும் வகையில் முன்னெடுக்கப்படும் திட்டமாக மாதிரிக் கிராமங்கள் என்பது அமைந்துள்ளது. இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தினூடாக, இலங்கையின் எதிர்கால பணியாளர்களின் திறமையை மேம்படுத்துவதில் பெருமளவு பங்களிப்பு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதுவரையில் இந்தத் திட்டத்தின் கீழ் 18 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளன. இந்த மாணவர்கள் ஆரம்பகட்ட அறிமுகம் மற்றும் ஆங்கில முன் கல்வி நிகழ்ச்சிகளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவர்களுக்கான விரிவுரைகள் நாட்டின் எட்டு பல்கலைக்கழகங்களில் தற்போது மெய்நிகர் மற்றும் நேரடியாக இடம்பெற ஆரம்பித்துள்ளதுடன், இவற்றில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், களனி பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், கிழக்கு பல்கலைக்கழகம், பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் வயம்ப பல்கலைக்கழகம் போன்றன அடங்கியுள்ளன.

# Christell Luxury Wellness இன் புதிய சரும உடல் பராமரிப்புத் தெரிவுகள் அறிமுகம்

*Christell Luxury Wellness* இனால் தமது சொந்த வர்த்தக நாமத்திலமைந்த சரும, கூந்தல் மற்றும் உடல் பராமரிப்புத் தெரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. *"CHRISTELL"* எனும் வர்த்தக நாமத்திலமைந்த இந்தத் தெரிவுகள், நிறுவனத்தின் விரிவாக்கச் செயற்பாடுகளின் அங்கமாக அமைந்துள்ளது.



ஒக்டோபர் 30 ஆம் திகதி கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்ற இந்த அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களுக்கு, இந்த புதிய சரும மற்றும் கூந்தல் பராமரிப்புத் தெரிவுகள் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

*"CHRISTELL"* இன் சகல தயாரிப்புகளிலும் பசுமையான மற்றும் உயர் தரம் வாய்ந்த மூலப்பொருட்கள் அடங்கியுள்ளதுடன், இலங்கையின் இயற்கையான குணப்படுத்தும் சுதேச மூலிகைகளைக் கொண்டு, நவீன விஞ்ஞான மருத்துவ முறைப்படி தயாரிக்கப்பட்டுள்ளதால், சிறந்த பெறுபேறுகளை வழங்கும் வகையில் அமைந்திருக்கும். சருமத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய மாசுகள் மற்றும் அசேதன உள்ளம்சங்களற்ற தயாரிப்புகளாக அமைந்திருப்பதுடன், ஒட்டுமொத்த சுகாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. சகல மூலப் பொருட்களும், அவற்றின் உச்ச காலகட்டத்தில் அறுவடை செய்யப்பட்டு பெறப்படுகின்றன.

பாரம்பரிய தயாரிப்புச் செயன்முறைக்காக தாவரத்தின் செயல்நிலையிலுள்ள அங்கம் மாத்திரமே பெறப்படுகின்றது. உள்நாட்டு உற்பத்திச் செயன்முறைகளினூடாக இலங்கையின் பொருளாதாரத்துக்கு ஆதரவளிப்பதுடன், உள்நாட்டு விவசாயச் சமூகத்துக்கும் ஆதரவளிப்பதாக அமைந்திருக்கும். சருமப் பராமரிப்புத் தயாரிப்புகளினூடாக சருமத்தை மாத்திரம் இலக்காகக் கொள்ளாமல், ஒட்டுமொத்த சுகாதாரம் மற்றும் நலனில் தாக்கம் செலுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது. *Christell Skin Clinic* இன் மருத்துவ பணிப்பாளரான வைத்தியர். ஷானிகா அரசகுலரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "பாதுகாப்பற்ற சருமப் பராமரிப்பு தயாரிப்புகளை பயன்படுத்தியிருந்ததால் எமது பல வாடிக்கையாளர்கள் பாரதூரமான பின்விளைவுகளுக்கு முகங்கொடுத்திருந்ததை நாம் அவதானித்தோம். துரதிர்ஷ்டவசமாக இந்த எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது." என்றார்.

*Christell Skin Clinic* இன் பணிப்பாளர் பேராசிரியர். ரமணி அரசகுலரட்ன கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களிலிருந்தே எமது வாடிக்கையாளர்கள் தமக்கு பொருத்தமான சருமப் பராமரிப்புத் தெரிவுகளை எம்மிடம் கேட்ட வண்ணமிருந்தனர். இலங்கையின் அழகியல் துறையில் முன்னோடியாக *Christell Skin Clinic* அமைந்திருப்பதுடன், நவீன, துளையிடாத சிகிச்சை முறைகளை சகல சரும, கூந்தல் மற்றும் உடல் பராமரிப்புத் தேவைகளுக்காகவும் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக வழங்குகின்றது. எமது நிபுணத்துவத்தையும், சிகிச்சைசார் அறிவையும் பயன்படுத்தி, எமது சொந்த தயாரிப்புத் தெரிவை அறிமுகம் செய்வதற்கு இது சிறந்த தருணமாக அமைந்துள்ளதென நாம் தீர்மானித்தோம்.

# மடப்பாத்த DPMC Workshop வசதிகள் விஸ்தரிப்பு




நிலவும் பொருளாதாரப் பின்னடைவு மிக்க சூழலில் வினைத்திறனை அதிகரிக்கும் அதே நேரம், வளங்களை அதிகப்படுத்தி, நிர்வாகச் செலவுகளைக் குறைப்பது முக்கியமானதாகும். மேலும், வழங்கப்பட்டுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வணிக ரீதியான சரக்குப் போக்குவரத்துக்களைப் பராமரிப்பது என்பன அனைத்து பெரு நிறுவனங்களுக்கும் இன்றியமையாததாகும்.

போக்குவரத்துத் தொகுதிகளை சரியான நேரத்தில் பராமரிப்பது மற்றும் உடனடியான திருத்தங்களை மேற்கொள்வது பழுதடைவுகளைக் குறைப்பதுடன், வினைத்திறனான எரிபொருள் பயன்பாட்டை அதிகரித்து, வேலைகள் நிறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்தி வாடிக்கையாளர்களின் திருப்தியை மேம்படுத்த முடிவதுடன், எவ்வித சிரமங்களும் இன்றி நாளாந்த விநியோகங்களை மேற்கொள்ள முடியும்.

இது தொடர்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் வகையில் மடப்பாத்தவிலுள்ள *DPMC Workshop* தற்பொழுது, மினி கப்ஸ், படி லொறி, பஸ், சிங்கிள் டபிள் கப்ஸ், பிரீஸர் லொறிகள், டிப்பர்கள், கொள்கலன் டெய்லர் மற்றும் பிரைம் மூவர்ஸ் போன்ற வணிக ரீதியான வாகனங்களுக்கான வசதிகளைக் கொண்டுள்ளது.

இதற்கு ஒரு படி மேல் சென்று ஒட்டுமொத்த பராமரிப்பு பங்காளர்களாக நியமிக்கும் கம்பனிகளுக்கு வீதியோர உதவிகளை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது. இதன் ஊடாக பெருநிறுவனங்கள் தமது பணிகளைச் செய்யும் அதேநேரம், விசேட நிபுணத்துவம் பெற்றவர்களால் போக்குவருத்துத் தொகுதிகளை உரிய நேரத்தில் பராமரித்து, பழுதுபார்த்தல்களை மேற்கொண்டு தடையின்றி தமது சேவைகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கையின் ஆட்டோமோட்டிவ் தொழில் துறையில் முன்னணியாளராகத் திகழும் டேவிட் பீரிஸ் குழுமத்தின் உறுப்பினரான மடப்பாத்த *DPMC Workshop* ஆனது, நம்பிக்கை, தொழில்சார் நிபுணத்துவம், சிறந்த வாடிக்கையாளர் சேவை என்பவற்றினால் தசாப்தங்களாக நற்பெயரைப் பெற்றுள்ளது.

# 25 வருட பூர்த்தியை கொண்டாடுகின்றது HUTCH

*Hutchison Telecommunications Lanka (Pvt) Ltd. (HUTCH)* ஆனது, இலங்கையில் உள்ள இணைப்புகளிடையே பிரிவினையைக் குறைப்பதற்கும், உயர்தர மொபைல் புரோட்பான்ட் அனுபவம், கட்டுப்படியான விலையில் தகவல் தொடர்பு சேவைகளை வழங்குவதன் மூலம் தேசத்தை வலுவூட்டுவதற்கும் தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படுமென அறிவித்துள்ளது.




*Global Fortune 500* பன்முகத் தொழில்துறை நிறுவனமான *CK Hutchison Holdings* இன் கீழுள்ள நிறுவனமே *HUTCH* நிறுவனமாகும். 1997 ஆம் ஆண்டு இலங்கையில் *Calllink* செயற்பாட்டுக்கான அனுமதியை *HUTCH* பெற்றது. அதனைத் தொடர்ந்து அனைத்து தலைமுறை தொழில்நுட்பத்தையும் அது பயன்படுத்தியுள்ளதோடு, குறிப்பாக தற்போது தேசத்தின் மிகப்பெரிய முழு அளவிலான 4G புரோட்பேண்ட் வலையமைப்புகளில் ஒன்றை முன்னெடுத்து வருகிறது.

2018 ஆம் ஆண்டில் *Etisalat* தொலைத்தொடர்பு குழுமத்தின், இலங்கை துணை நிறுவனத்தை தன்னுடன் இணைத்ததைத் தொடர்ந்து, *HUTCH 4G* வலையமைப்பானது தற்போது இலங்கையின் சனத்தொகையில் சுமார் 95% வரை சென்றடைந்துள்ளது. அத்துடன் அது 5G வலையமைப்பை தயார் நிலையிலும் வைத்துள்ளது.

நாட்டில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக *HUTCH* தொடர்ந்து முதலீடு செய்து வருவதுடன், வரிகள் மற்றும் தொலைத்தொடர்பு கட்டணங்கள் மூலம் பெறுமதி சங்கிலிகள் மற்றும் அரசாங்க வருமானங்களுக்கு பங்களிப்புச் செய்வதனூடாக பொருளாதாரத்திற்கு கணிசமான அளவில் பங்களிப்பை வழங்குகின்றது.

*HUTCH* அதன் சேவைகளை வழங்குவோருடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புகளைப் பேணுவதுடன், தம்முடன் இணைந்துள்ள தேசிய அளவிலான 75,000 இற்கும் அதிகமானோருக்கு வருமானம் ஈட்டுவதிலும் ஆதரவளிக்கின்றது.

# அதிகமான உரிமை வெளியீட்டினை அறிமுகம் செய்யும் Softlogic Finance PLC

*Softlogic Capital PLC* இன் துணை நிறுவனமான *Softlogic Finance PLC*, அதன் போதுமான மூலதன அளவு விகித (CAR) தேவைகளைப் பின்பற்றுவதற்கும், டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் வணிக விரிவாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் புதிய மூலதனத்தைத் திரட்டுவதற்காக ரூ. 850 மில்லியனுக்கும் அதிகமான தொகையை திரட்டுவதற்கான உரிமைகள் வெளியீட்டிற்குச் செல்லும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. உரிமை வெளியீடு நிறுவனத்தின் பங்குதாரர்கள் வைத்திருக்கும் ஒவ்வொரு நானூற்று இருபத்தி மூன்று (423) சாதாரண பங்குகளுக்கு தலா ரூ.7.31 என்ற விலையில் நூறு (100) புதிய சாதாரண பங்குகளை செயல்படுத்தும்.

அதன்படி நூற்று பதினாறு மில்லியன் நானூற்று எண்பத்து மூவாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்று (116,483,901) சாதாரண பங்குகளின் உரிமை வெளியீட்டின் மூலம் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிக்க நிறுவனம் முன்மொழிவதுடன் ஒரு பங்கிற்கு ரூ. 7.31/ என்ற பெறுமதியில் சாதாரண பங்குகளின் மொத்தத் தொகை எண்ணூற்று ஐம்பத்தொரு மில்லியன் நானூற்று தொண்ணூற்று ஏழாயிரத்து முந்நூற்று பதினாறு (ரூ. 851,497,316/) ரூபா ஆகும்.

*Softlogic Finance PLC* இன் செயல்திறன் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியான திருமதி *Ivon Brohier*, உரிமை வெளியீடு குறித்து கருத்து தெரிவிக்கையில், "இரண்டு வருடகாலமாக நிலவிய நோய் பரவல் மற்றும் மோசமான நிதி நெருக்கடி காரணமாக நாடு எதிர்நோக்கி வரும் சவால் நிறைந்த சூழ்நிலையில் இருந்து மீண்டு வெளியேறும் நிலையில், *Softlogic Finance* நிறுவனம் வணிகத்தை விரிவுபடுத்துவதிலும், குறிப்பாக டிஜிட்டல் தொழில்நுட்பமயமாக்களிலும் இணைந்த நிலையில் உள்ளது."என்றார்.

# பீலிச்சண்டை

பசறையூர் ஏ.எஸ் . பாலச்சந்திரன்



எங்கு பார்த்தாலும் பசுமை நிறைந்த தேயிலைக்காடு, ஈர்க்கும் அழகை வைத்தே எழில் கொஞ்சும் மலைநாட்டு தேயிலைப்பூவனம் என்று தெரிந்து கொள்வார்கள். காடாய் இருந்த மலைகள் எங்கும் கால்கள் ஊன்றிய தேயிலையோடு ஆங்காகங்கே விதைத்து விட்டது போல் லயன்கள் என்னும் தோட்டத்தொழிலாளர் குடியிருப்புகளும் உண்டு.

மாலை மங்கும் வேளை, மாடுகள், ஆடுகளோடு மலையிறங்கும் மனிதர் கூட்டம் ஆண்களின் கைகளில் மண் வெட்டியும், கவ்வாத்துக்கத்தியும் இருக்க..... பெண்களின் கைகளில் மட்டக்கம்பும் தலையில் கொழுந்துக் கூடைகளுமாக ஓட்டமும் நடையுமாய் வீடுநோக்கி ஓடும் படலம். சிலர் வேலை முடிந்து வரும் வழியில் கால்நடைகளுக்கு உணவாக இலை குழைகளையும் வெட்டிக்கொண்டே வருவார்கள்.

சிலர் காய்ந்த தேயிலை மிளாறுகளைப் பொறுக்கி ஒரு கட்டுக்கட்டித் தூக்கிக் கொண்டும் வருவார்கள். சிலர் சவுக்குச் சருகுகளை ஒன்று சேர்த்து ஒரு மூட்டையாகக் கட்டிக்கொண்டு வருவார்கள்... சவுக்குச்சருகு, அடுப்பைப் பற்ற வைக்க இலகுவாக இருக்கும். சில பெண்கள் அடுப்பை மெழுகுவதற்காக அப்போதே போட்ட மாட்டுச்சாணத்தையும் சேகரித்துக் கொண்டு வருவார்கள். இதுதான் மலையகத்தின் உண்மை நிலை.

இப்படித்தான் வள்ளியம்மையும், தலையில் கொழுந்துக் கூடையுடன் பாதையின் இரு மருங்கில் ஆங்காகங்கே கிடந்த விறகுக் குச்சிகளையும் கோர்த்துக்கட்டிய கட்டுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். அந்த பன்னிரெண்டு காம்பறா லயத்தில் தான் அவள் வீடும் இருந்தது.

அவள் கணவன் மருதமுத்துவும் இதே தோட்டத்தில் தான் தொழிலாளியாக வேலை புரிகிறான். ஆண்களுக்கு இரண்டு மணிக்கே வேலை முடிந்து விடும்.

கவ்வாத்து, காணுவெட்டு, உரம் போடுதல், மருந்தடித்தல், குழிதோண்டல் என்று ஆண்களுக்கு கடுமையான வேலைதான் கொடுப்பார்கள்.

இதனால் உடம்பு உளைச்சல் காரணமாக மாலை வேளைகளில் அவர்களில் அனேகமானோர் ராக்கம்மாவின் கள்ளுக்கடையிலாவது அல்லது சுடலைமணியின் கசிப்புக் கடையிலாவது நின்று கொண்டிருப்பார்கள். வள்ளியம்மையின் கணவன் குப்புசாமி கூட அங்குதான் நிற்பான்.

வள்ளியம்மைக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவளை தலைநகரிலுள்ள ஒரு தனவந்தர் வீட்டிலேயே, வீட்டு வேலைக்கு அனுப்பியிருந்தார். இளையவன் சுருட்டைச் சுந்தரும், சின்னவள் தாரணியும் தோட்டப் பாடசாலையிலேயே கல்வி கற்றுவந்தார்கள். இதைத் தவிர வள்ளியம்மையைப் பற்றிச் சொல்ல பெரிதாக ஒன்றுமில்லை.

எல்லா வீட்டுக் கூரையூடாகவும் புகைமண்டலம் பரவிக்கொண்டிருந்தது. அவள் வீட்டிலும் புகை பரவுவதைக்கண்டு பூரித்துப்போனாள் வள்ளியம்மை.

"அப்படியானால் தன் மகளும் அடுப்பை மூட்டி இருக்கிறாள்... அப்போ கேத்தலில் தண்ணீர் சுட்டுக் கொண்டிருக்கும்... போனவுடன்தேநீரை ஊற்றிக் குடித்து விட்டு பீலியடிக்குப் போகலாம்" என்று தன்னுள்ளே எண்ணிக் கொண்டவளாக வீட்டுக்குள் நுழைவதற்கு முன் கோடிப்பக்கம் சென்று பீலியடியையும் ஒரு முறை பார்த்துவிட்டு வருவோம்' என்று சென்றவளுக்கு அங்கு நிரம்பி வழிந்த பாத்திரங்களைப் பார்க்க மலைப்பாக இருந்தது.

அனேகமாக தோட்டப்பகுதிகளில் பன்னிரெண்டு காம்பறா லயமாகட்டும், ஆறு கம்பறா லயமாகட்டும், ஒரே ஒரு தண்ணீர்ப்பீலிதான் பொருத்தப்பட்டிருக்கும். அந்த ஒரு பீலியில் தான் எல்லா அலுவல்களையும் செய்து கொள்ள வேண்டும்.

யார் முந்திக்கொள்கிறார்களோ, அதன் அடிப்படையில் தான் படிப்படியாக இடம் கிடைக்கும்.

தலையில் இருந்த விறகுக்கட்டை இறக்கி வைத்துவிட்டு, கொழுந்துக் கூடையையும் தொங்க வைத்துவிட்டு வாசலில் நின்றபடியே சேலையில் ஒட்டிக்கிடக்கும் ஒட்டுண்ணி போன்ற முட்களை பிடிங்கிக் கொண்டிருந்தாள். அவள் கைகளில் இருந்த பித்தளை வளையல் சத்தம் கேட்டு அம்மா வந்து விட்டாள் என்று வெளியே வந்தாள் தாரணி.

அம்மா வந்துட்டியா?" "ஆமா , புள்ள தண்ணி சுட்டுடிச்சா... " "இல்லம்மா வெறகு பச்ச போல எரியுது இல்ல" "அந்த வெறக கொஞ்சம் ஒடிச்சி வையம்மா நல்லா காஞ்சிருக்கு...." என்று தான் சுமந்து வந்த விறகுக் கட்டை மகளிடம் காண்பித்தாள். அம்மா தாரணி....... நான் அடுப்ப பார்க்குறேன்.... பீலியடியிலே சரியான கூட்டமா இருக்கு.... இன்னைக்கு எத்தனை மணியாகுமோ தெரியல்ல. நீ போயி நம்ம பாத்திரங்களையும் வச்சிக்கிட்டு நில்லு" என்று மகளிடம் சொல்லி விட்டு, வீட்டு விறாந்தையில் உடுப்புகளை மாற்றிக் கொண்டு தேநீர் ஊற்றப்போன போது ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டாள். உடனே பீலியடியை நோக்கி ஓடோடிச் சென்றாள். அதற்கிடையில் அந்த லயமே கிடுகிடுத்து நின்றது. ஒரு நொடிப் பொழுதில் அனைவரும் குழுமி நின்றார்கள்.

அங்கே பீலியடியில் முதல் காம்பறாவில் இருக்கும் முத்தையா கீழே விழுந்து மயக்க நிலையில் கிடந்தான்.

சிலர் அவன் மூக்கில் கையை வைத்து பார்த்துவிட்டு "முடிஞ்சு போச்சு முடிஞ்சு போச்சு.... போலீசுக்கு சொல்லனும் " என்று முடிவு பண்ணினார்கள். அந்த தோட்டமே கதிகலங்கிப் போய் அந்த இடத்தில் கூடி நின்றது. அதற்கிடையில் யாரோ தொலைபேசியில் விடயத்தை பொலிஸாருக்கு அறிவிக்க சற்று நேரத்தில் பொலிஸாரும் வந்திறங்கினார்கள். பொலிஸார் நடந்ததை விசாரித்தார்கள். நடந்தது என்ன?

மூன்றாம் காம்பறாவில் இருக்கும் சுப்பம்மா ரொம்பவும் மோசமானவள், ஆணவக்காரி, சண்டை பிடிப்பதில் சாமர்த்தியசாலி. இது அந்த தோட்டத்துக்கே தெரியும், தண்ணீர் வந்தவுடன் முதன்முதலில் முத்தையா தான் பாத்திரங்களை கொண்டு போய் பீலிக்கரையில் வைத்திக்கிறான். அதற்குப் பிறகு வந்த சுப்பம்மா அவனை வீண்வம்புக்கு இழுத்திருக்கிறாள். அவனுடைய பாத்திரங்களை தள்ளி விட்டு, இவளுடைய பாத்திரங்களை வைக்க முற்பட்டபோது, முத்தையா அவளுடைய கையைப்பிடித்து தள்ளி விட்டிருக்கிறான். உடனே சுப்பம்மா.... "ஐயோ" ஐயோ எல்லாரும் வாங்களே... முத்தையா என் கையைப் பிடித்து இழுத்து பாலத்காரம் பண்ணுறான்.

இந்த அநியாயத்தைக்கேக்க யாரும் இல்லையா.... கடவுளே' என்று கூச்சலிட்டிருக்கிறாள்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த சுப்பம்மாவின் மகன் தவசீலன் சுற்றும் முற்றும் பார்த்தபோது உலக்கை அவன் கண்ணில் பட்டிருக்கிறது. உடனே உலக்கையை எடுத்து வந்து ஆத்திரத்தில் முத்தையாவைத் தாக்கி இருக்கிறான். அன்னைக்கு இப்படியொரு அசம்பாவிதம் நடந்தால் எந்த மகனால்தான் பார்த்துக்கொண்டிருக்க முடியும்? அதைத்தான் தவசீலனும் செய்திருக்கிறான்.

முத்தையாவின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பொலிஸார் தவசீலனைத்தேடி அவன் வீட்டை முற்றுகை இட்டார்கள். அதற்கிடையில் அவன் தலைமறைவாகி விட்டிருந்தான். பொலிஸார் அவனைத்தேடி வலை வீசினார்கள்.

பிரேதப் பரிசோதனையின் பின் முத்தையாவின் சடலம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தோட்ட மக்கள் அனைவரின் கண்ணீர் அஞ்சலியோடு முத்தையாவின் சடலம் தோட்ட மைதானத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது.

முத்தையா நல்லவன். யாரிடமும் அப்படி சண்டைச்சச் சரவுகளுக்கு போகக் கூடியவன் அல்ல. திருமணமாகி இரண்டு பிள்ளைகளுக்குத் தந்தை... அவன் மனைவி மல்லிகாவும் அதே தோட்டத்திலேயே வேலை செய்தாள். முத்தையா இல்லாமல் மல்லிகா எப்படி வாழப்போகிறாளோ... இந்த சின்னஞ்சிறு பிள்ளைகளை எப்படி கரை சேர்க்கப்போகிறாளோ என்று எல்லோரும் பரிதாபப்பட்டார்கள். அவளுக்கும் பெரிதாக உறவினர்கள் என்று யாருமில்லை... எல்லாம் ஆண்டவன் கிருபைதான். யாருமற்ற அநாதைகளுக்கு ஆண்டவன் தானே அடைக்கலம் தர வேண்டும்.

பீலிக்கரையில் அடிக்கடி இப்படி சச்சரவுகள் தினம் தினம் நடைபெறுவது வழக்கம். இருப்பினும் இந்தளவுக்கு போனதில்லை. எல்லாம் தண்ணீர்ப் பிரச்சினையால் வந்த விளைவு.

மறுநாள் யாரும் வேலைக்குப்போகவில்லை. தோட்டமே சோகமயமாகத் திகழ்ந்தது.

விடயத்தைக் கேள்விப்பட்டு ஏதோ ஓர் அதிசயத்தைப் பார்ப்பது போல அக்கம் பக்கத்து தோட்டங்களிலிருந்தும். கிராமப்புரங்களிலிருந்தும், சனக்கூட்டம் வழிந்து நின்றது.

அதைவிட வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை என்று ஊடகத்துறையினரும் குழுமி நின்றனர். இது அவர்களைப் பொறுத்தவரை சூடான செய்தி. ஒருவாறு முத்தையாவின் சடலம் தோட்ட மயானத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அனேகமாக ஒவ்வொரு தோட்டங்களிலும் இதற்காக பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். முத்தையாவின் மனைவியும் பிள்ளைகளும் ஓவென்று அழுது புலம்பினார்கள். அக்காட்சியைக் காண்பவர்களின் கண்களிலெல்லாம் கண்ணீர் ஆறாகக் பெருகியது.

தனக்கு தெரிந்த காலத்திலிருந்தே ஓடி ஆடித் திரிந்த அந்த தோட்டத்தையும் உடன் இருந்தவர்களையும் விட்டு முத்தையா மீளாத்துயிலோடு விடைபெற்றுச் சென்றான்.

அன்று இரவே தோட்டத் தலைவர்களும் சில முக்கியஸ்தர்களும் கோவில் மண்டபத்தில் கூடிப்பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். முத்தையாவின் மரணத்தோடு இந்த தண்ணீர்ப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும்.

ஒவ்வொரு வீட்டுக்கும் தனித்தனி தண்ணீர்ப் பீலி போட நிருவாகத்திடம் கோரப்போவதாக முடிவு செய்தார்கள். விடிந்ததும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்து தோட்ட அலுவலகத்திற்குச் செல்வதென்று தீர்மானித்தார்கள்.

கிழக்குச் சூரியனின் வரவை எல்லோருக்கும் முன்பாக தெரிந்து கொண்ட சேவல்கள் எல்லாம் ஒன்றிணைந்து கூவத்தொடங்கின.

சேவல் கூவும் சிங்கார ஒலிகேட்டு பொழுது புலர்ந்துவிட்டதை புரிந்து கொண்ட அந்த தோட்ட மக்கள் அனைவரும் கண்விழித்து தத்தம் கடமைகளில் ஈடுபட்டார்கள். ஏற்கனவே தீர்மானித்தப்படி குறித்த சிலர் நிருவாகத்தினரைச் சந்திக்கப் புறப்பட்டார்கள்.

கேட்டுப்பார்த்தும் நிருவாகம் இவர்களின் கோரிக்கைக்கு உடன்படவில்லை. விடயம் யூனியன் வரை சென்றது. யூனியன் என்பது தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் கட்சிக்கூடம்.

யூனியனும் நிருவாகத்தினர் கேட்டுப்பார்த்தும் தோட்ட நிருவாகத்தினர் செவிசாய்க்கவில்லை. வேறு வழியில்லை சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் என்று தொடர்ந்தது. இருந்தும் தோட்ட நிருவாகம் கண்டு கொள்ளவே இல்லை.

சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடர்ந்து. உண்ணாவிரதப் போராட்டமும் நடந்தது. பலர் மயங்கி விழுந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

விடயம் பத்திரிக்கை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் மூலம் உலகமே பரவியது. மேலிடத்திலிருந்து தோட்ட நிருவாகத்துக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

வேறு வழி இன்றி நிருவாகம் கோரிக்கைக்கு உடன்பட்டது. நீர் விநியோகத்திற்கு மட்டுமல்ல, லயக் காம்பராக்களுக்கு பதிலாக தனித்தனி வீடுகளும் நிர்மானிக்கப்பட்டது. இப்போது அந்த தேயிலைத்தோட்டமே உருமாறி இருந்தது.


முத்தையாவின் மரணத்தினாலேயே இந்த தோட்டத்துக்கு விமோசனம் கிடைத்திருக்கிறது.

ஆகவே முத்தையாவிற்கு சிலை வைக்க வேண்டும் என்று சிலர் அபிப்பிராயம் தெரிவித்தார்கள்.

அதுவும் நிறைவேற்றப்பட்டது அதுமட்டுமல்ல அந்த தோட்டத்துக்கு "முத்தையாபுரம்"' என்ற பெயரும் சூட்டப்பட்டது.

> வள்ளியம்மையும், தலையில் கொழுந்துக் கூடையுடன் பாதையின் இரு மருங்கில் ஆங்காகங்கே கிடந்த விறகுக் குச்சிகளையும் கோர்த்துக்கட்டிய கட்டுடன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். அந்த பன்னிரெண்டு காம்பறாலயத்தில் தான் அவள் வீடும் இருந்தது.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 45



திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................
.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 45
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 45

**இடமிருந்து வலம்**

01. சீரும் சிறப்பும் கொண்ட நிலை
07. விற்பனை நிலையம்
08. கிழங்கு வகை உணவுப் பயிர் (குழம்பியுள்ளது)
10. அதிகளவு பணம் அல்லது பொருட்கள் வழங்குவதை இப்படிச் சொல்வர் (திரும்பியுள்ளது)
11. அரசன்
12. பாடல்வகை
14. பாம்பில் ஒரு வகை (திரும்பியுள்ளது)
18. வேதனைக்குள்ளாக்கும், துன்புறுத்தல்
19. முதலாளித்துவத்தை ஆதரிக்கும் இயக்கம் (குழம்பியுள்ளது)
20. திருமணமாகாத பெண் குழம்பிவிட்டாள்
21. அமைதியான இயல்புடையவன்
23. இவ்வுலக வாழ்வு அல்லது இந்தப் பிறவி
24. பகற் பொழுதின் ஆரம்பம் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

01. வசதி
02. பெண்கள் அணியும் உடை (குழம்பியுள்ளது)
03. ஒழுங்குமுறை (குழம்பியுள்ளது)
04. கூற்றுவன்
05. காடு (குழம்பியுள்ளது)
06. ஏணை
09. திருடன் (குழம்பியுள்ளது)
13. வித்து
15. குழப்பம்
16. பேச்சுத்திறன்
17. குடும்பஸ்தன் (கீழிருந்து மேல்)
20. அடுத்து வருவது அல்லது இதற்கு மேலும் (தலைகீழ்)
21. பாதை, தெரு
22. செவி (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 44

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. உசிதம் 04. குருதி 07. குறடு
09. சிறை 10. மூக்குத்தி 12. தாதி
13. புல் 14. அலட்சியம் 17. அங்காடி
18. அசதி 20. மகன் 21. பகல்
22. வம்சாவளி

**மேலிருந்து கீழ்**

01. உடுக்கு 02. சிறகு 03. தகுதி
05. ருசி 06. திறை 08. சித்திரை
11. மூதாட்டி 13. சம்பல் 14. அங்கம்
15. காவலன் 16. அயல் 17. அமளி
19. திகதி

### பரிசு பெறுவோர் விபரம்

| முதல்பரிசு (ரூ 500/) | இரண்டாம்பரிசு (ரூ 350/) | மூன்றாம் பரிசு (ரூ 150/) |
|---|---|---|
| **கே. சித்திரவேலாயுதன்**<br>57, ஹஸ்கிசன் வீதி,<br>திருகோணமலை | **எம்.பி. அஸூஹதி**<br>இல 34/25, முதலாம் ஒழுங்கை,<br>தனிப்பெல்கஹ சந்தி, காலி | **ஏ.எல். அப்துல் ஜலீல்,**<br>ஜீ/1ஏ/1 மஹாபுத்கம<br>கொட்டிகாவத்தை |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 44

### பாராட்டு பெறுவோர்

**1. கே. பத்மலோஜினி** களுவாஞ்சிக்குடி

**2. ஹலீமா சித்தீக்கா,** அவிஸ்ஸாவெல

**3. எம்.சி.எப். ஷீமா** உக்குவளை

**4. வி.ராசையா** நுவரெலியா

**5.எஸ். செல்வராஜா** பதுளை

**6. மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை

**7. சித்தி அயிஷா,** பதுளை

**8. எம். ஏ. அஜ்மல்** ஹெம்மாத்தகம

**9. கே. உதயராஜன்** கல்முனை

**10.ஏ.எச்.எம் அத்தாஸ்,** வெலிப்பனை

★★★



# வாரபலன்

06.11.2022 - 12.11.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

ராசிநாதன் செவ்வாய் 3ல் இருக்கிறார். தன குடும்ப அதிபதி சுக்கிரன் 7ல் இருக்கிறார். ஆட்சி நிலையில் இருக்கிறார். எனவே மனைவி வழியில் செல்வமும் ஆதரவும் உண்டு. பொருளாதாரம் உயரும். குடும்ப உறவுகள் சுமுகமாக இருக்கும். செவ்வாய் பலமாக இருப்பதால், சுய சிந்தனையும் துணிச்சலான முடிவுடன் கூடிய செயல்பாடும் இருக்கும். 10ல் சனி ஆட்சி பெற்று இருப்பதால், தொழில் சுமுகமாக நடக்கும். புதன் 7ல் இருப்பதால் நட்பு வட்டாரங்கள் பெருகும். உறவுகள் பலம் பெறும். ஆதரவும் இருக்கும். பஞ்சமாதிபதி சூரியன் நீசம் அடைந்திருப்பதால், பிள்ளைகளால் சிறு தொந்தரவும் மனக்குழப்பமும் ஏற்படும்.

## ரிஷபம்

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நற்பலன்கள் கூடியதாகவே இருக்கும். 9ல் சனி அமர்ந்து 3ம் பார்வையாக குருவைப் பார்ப்பதால், கவனத்தோடு செய்யும் தொழில்கள் முன்னேற்ற நிலையை அடையும். ராசிநாதன் சுக்கிரன் 6ல் ஆட்சி பலத்தோடு இருப்பதால் எதிரிகளின் பழிச்சொல்லுக்கு இடம் தராது செயலாற்ற வேண்டும். 6ல் சூரியன். பொருளாதாரம் நிமிரும். புதன் 6க்கு மாறுவதும் நல்லதுதான். வருமானம் அதிகரிக்கும். வியாபாரத்தை விரிவு செய்யும் உத்தேசத்துடன் செயல்படுவீர்கள்.12க்குரிய செவ்வாய் இரண்டில் இருப்பதாலும், ஆறாம் ராசி பலம் பெறுவதாலும், தேக ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டும். நேர்த்திக்கடன்களை கவனத்துடன் நிறைவேற்றவேண்டும்.

## மிதுனம்

மிதுன ராசிக்காரர்கள் மீண்டு வரும் வாரமாக இந்த வாரம் இருக்கும். ராசிநாதன் 5ல் இருக்கிறார். 5க்குரிய சுக்கிரன் அங்கே ஆட்சி பலத்தோடு இருக்கிறார். சுகாதிபதி பலம்பெற்று இருக்கிறார். எனவே, குழந்தைகளால் மகிழ்ச்சி நீடிக்கும். குடும்பம் சற்று குதூகலமாக இருக்கும். 11ல் ராகு இருப்பதால், ஏதோ ஒரு விதத்தில் வருமானத்தைத் தந்து கொண்டிருப்பார். ஆசைகளை வளர்ப்பார். ஆனால், சனி தடுப்பார் என்பதால் பெரிய அளவில் நீங்கள் தேவையில்லாத ஆசைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம். அஷ்டமச் சனி நடந்து கொண்டிருக்கிறது. மிதுன ராசிக்காரர்களுக்கு அது எப்படிப்பட்ட கஷ்டங்களைத் தந்து கொண்டிருக்கிறது என்பது அனுபவித்தவர்களுக்கு தெரியும். எந்தவித முயற்சிகளையும் இப்பொழுது தொடங்க வேண்டாம்.

## கடகம்

கடக ராசி நேயர்கள் சற்று விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய வாரம் இது. குருவினுடைய பார்வை ராசியில் விழுவது என்பது உங்களை நீங்களே சமாளித்துக் கொள்ள உதவும். எண்ண ஓட்டங்கள் சீராகும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். முயற்சிகள் பலிக்கும். கட்டுப்பாடுள்ள சிந்தனை உருவாகும். புதிய ஆடை மற்றும் ஆபரணச் சேர்க்கை உண்டு. தந்தைவழியில் உதவிகள் கிடைக்கும். குழந்தைகள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். உறவினர்கள் வருகை புரிவார்கள்.பழைய வாகனத்தை விற்றுவிட்டு புதிய வாகனம் வாங்கும் வாய்ப்புண்டு. 12ல் உள்ள செவ்வாயால் பணவிரயம் உண்டு. மருத்துவச் செலவும் சற்று அதிகரிக்கும். கண்டச் சனி நடப்பதால் சுபகாரியத் தடைகள் ஏற்படும். கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் நிகழ இடம் தர வேண்டாம். நரம்பு சம்பந்தமான பிரச்சினைகள் உள்ளவர்கள், எச்சரிக்கையுடன் இருக்கவும்.

## சிம்மம்

சிம்ம ராசி நேயர்களுக்கு ராசிநாதனாகிய சூரியன் நீசம் அடைந்திருந்தாலும், நீசபங்கம் பெற்று இருப்பது சற்று ஆறுதலான விஷயம். பேச்சில் கம்பீரம் இருக்கும். தடுமாற்றமற்ற மனநிலையும் தன்னம்பிக்கையும் கூடும். 3ல் உள்ள கேது உங்கள் எண்ணங்களை வளப்படுத்தி நல்வாழ்க்கை தருவார். சுக்கிரன் அமைப்பினால் வருமானம் சிக்கலின்றி இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சுலபமாகும். வங்கிக்கடன் எளிதாக கிடைக்கும். சொத்து வழக்குகள் சாதகமாக நடக்கும். 3ல் சுக்கிரன் ஆட்சி அல்லவா. வண்டி வாகன சுகம் உண்டு. அஷ்டம குரு சில கஷ்டங்களைத் தரவே செய்வார். அவ்வப்போது மனப் பதட்டம் ஏற்படும். காரியங்கள் நீங்கள் நினைத்தபடி நடக்காமல் திடீர் தடுமாற்றத்தில் தள்ளிவிடும். இதற்கு 3ல் உள்ள புதனும் துணை செய்வார். வீண் செலவு ஆகும். சேமிப்பு கரையும். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டும்.

## கன்னி

கன்னி ராசி நேயர்களுக்கு ராசிநாதனான புதன் 2 ல் இருக்கிறார். அவரோடு தன குடும்பாதிபதி சுக்கிரன் இணைந்திருக்கிறார். எனவே பொருள் வரத்து உண்டு. கலைஞர்கள் புது வாழ்வைப் பெறுவார்கள். வருமானத்திற்கான புதிய வழிகள் திறக்கும். இயந்திரத் தொழில்கள், பூமி கட்டடங்கள் முதலியவற்றால் ஆதாயம் உண்டு. ராசியை குரு பார்ப்பது, ராசியின் பலத்தை அதிகரிக்கச் செய்யும். கணவன் மனைவி உறவுகள் சீர்பட இருக்கும். கௌரவம் உயரும். நட்பு வட்டாரங்கள் சுமுகமாக இருக்கும். நீண்டகால அரசு வழி முயற்சிகள் பலனளிக்கும். 8ம் இடத்தில் ராகு இருக்கிறார். உடல் நலம் அவ்வப்பொழுது பாதிக்கும். அதை முறையாக கவனிக்க வேண்டும். மருத்துவச் செலவுகள் சற்று அதிகமாகும். கணவன் அல்லது மனைவி இருவருக்கும் சிறு மனக்கஷ்டங்கள் ஏற்படும். கடன்களைக் கட்டுவதில் பிரச்சினை உண்டு. பயனில்லாத வீண் செலவுகளைச் செய்ய வைக்கும்.

## துலாம்

துலாராசி நேயர்களுக்கு சற்று ஆறுதல் தரும் வாரம் இது. லாபாதிபதி சூரியன் ராசியில் நீசபங்கம் பெற்றிருப்பதும், ராசிக்குரிய சுக்கிரன் ஆட்சியாகி வலுவடைந்து இருப்பதும், பாக்கியாதிபதி புதன் இணைந்திருப்பதும், நல்ல அமைப்புகள். செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் இருப்பதால், குடும்ப உறவுகள் சீராக இருக்கும். வருமானத் தடை விலகும். இழுபறி வேலைகள் முடிவடையும். அரசாங்க காரியங்களில் அனுகூலம் உண்டு. நேர்முகத் தேர்வுகளில் வெற்றி பெறுவார்கள். செவ்வாயின் சஞ்சாரத்தால் வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு.அர்த்தாஷ்டமச் சனி நடக்கிறது. உறவுகளை பகைத்துக் கொள்ள வேண்டாம். எதிலும் முன்னெச்சரிக்கை தேவை. 7ல் உள்ள ராகுவால் நட்பு வட்டார விரிசல் வரலாம். கூட்டுத் தொழிலில் சில பிரச்சினைகள் ஏற்படலாம். ராசியில் கிரக யுத்தம் என்பதால் உங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் குழப்பங்களைத் தவிர்க்க முடியும்.

## விருச்சிகம்

3ல் சனி ஆட்சி ஆகியிருக்கிறார். 5ல் குருவும் இருப்பதால் விருச்சிக ராசிக்காரர்கள் சற்று தன்னம்பிக்கையுடனும், கவனத்துடனும் இருப்பார்கள். குருவின் பார்வை பாக்கிய லாபஸ்தானத்தில் விழுவதால், தொழில் வளம் பெறும். எண்ணங்கள் பூர்த்தியாகும். எதிலும் காரியபலிதம் உண்டாகும். வருமானம் ஏதோ ஒரு வழியில் வந்து கொண்டிருக்கும்.12ல் உள்ள கிரகங்களால் தூக்கம் கெடும். சிறு மருத்துவ செலவுகள் ஏற்படும். 6ம் அதிபன் செவ்வாய் 8 ல் இருப்பதால் ஏற்கனவே உள்ள பிரச்சினைகள் (நோய், கடன், பகை போன்றவை) மேலும் வளரவே செய்யும். எனவே, முன் கவனத்துடன் செயலாற்றவும். காரணம், சூரியன் ராசியில் நீசம் பெற்று இருக்கிறார் அல்லவா. அதோடு, நிழல் கிரகமான கேதுவும் சூரியனோடு இருக்கிறார். முன்கோபத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## தனுசு

தனுசு ராசி நேயர்களுக்கு சற்று சிரமம் விலகும் வாரம் இது. 11ல் கிரகங்கள் சேர்ந்திருக்கின்றன. சூரியன், சுக்கிரன், புதன் இணைந்திருப்பதும், கேது 11ஆம் இடத்தில் இருப்பதும், மறைமுக பலத்தைக் காட்டுகின்றன. தொழில் மற்றும் தன ஆதாயம் உண்டு. ஏதோ ஒரு வகையில் உங்கள் எண்ணம் பூர்த்தியாகிவிடும். எதிர்ப்புகள் விலகும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். நன்கு திட்டமிட்டு கிடைத்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொண்டால், முன்னேற்றம் உண்டு. சனி, குடும்ப ஸ்தானத்தில் இருப்பதும் சுகஸ்தானத்தைப் பார்ப்பதும் அலைச்சலை அதிகரிக்கும். அவ்வப்பொழுது மனப் பதட்டம் ஏற்படும். உடல்நலனில் கவனம் கொள்ள வேண்டும். குழந்தைகளால் குழப்பம் இருக்கும். ஏதோ ஒரு இனம் புரியாத எதிர்கால அச்சமும் சிந்தனையும் மனதை அவ்வப்பொழுது சளைக்க வைக்கும். 7 ல் உள்ள செவ்வாய் குடும்ப உறவுகளில் கலகம் ஏற்படுத்தலாம்.

## மகரம்

மகர ராசி நேயர்கள் தைரியத்துடன் இருக்க வேண்டிய வாரமிது. 6ல் உள்ள செவ்வாய் மன தைரியத்தையும், சுறுசுறுப்பையும் தரும். குரு 3ல் வக்ர கதியில் இருப்பதும் மறைமுகமான ஒரு நன்மைதான். பிரயாணங்கள் உங்கள் வாழ்வை மேம்படுத்தலாம். பயணங்களால் உற்சாகம் உண்டு. 10ல் சூரியன் நீசபங்கம் பெற்று இருப்பது அரசியல் ஆதாயத்தைக் குறிக்கிறது. அரசாங்க வேலைகள் சாதகமாக முடிவதைக் குறிக்கிறது. வேலை தேடுவோருக்கு வேலை கிடைத்துவிடும். ஜென்ம சனியால் ஏற்பட்ட சங்கடங்கள் சற்று குறைய ஆரம்பிக்கும். 4ல் உள்ள ராகு சில உறவுச் சிக்கல்களைத் தரும். தேவையில்லாத கருத்து வேறுபாடுகளை வரவழைக்கும். சோர்வும் செயல் தாமதமும் ஏற்படலாம். சிறு அளவில் பண விரயங்கள் ஏற்படும். கால் பாதங்கள் மற்றும் முட்டியில் கவனம் தேவை. கவனச் சிதறலால் சிறு விபத்துகள் நிகழலாம்.

## கும்பம்

கும்பராசி நேயர்களுக்கு தனுசு, குரு வலிமையோடு இருக்கிறார். பொருள் சிக்கலின்றி வரவு மேம்படும். வருமான உயர்வால் மகிழ்ச்சி இருக்கும். கொடுக்கல் வாங்கல்கள் சிரமமின்றி நடக்கும். தொழிலும் நல்ல முறையில் முன்னேறும். அபிவிருத்திக்கான முயற்சிகள் பலிதமாகும். 3ல் உள்ள ராகு, உங்கள் திட்டங்களை வெற்றி அடையச் செய்வார். இடம் வாங்கும் முயற்சியும் தொழில் விஸ்தரிக்கும் முயற்சியும் செய்யவைப்பார். 9ல் சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் குடும்ப உறவுகள் உங்களுக்குத் துணையாக இருக்கும். செவ்வாய் 4ம் பார்வையாக அஷ்டம ஸ்தானத்தைப் பார்ப்பதால் வண்டி வாகனங்கள் ஓட்டும்போது கவனம் வேண்டும். பயணங்களில் கவனம் தேவை. வண்டி வாகனங்களை சரிவர பராமரிக்க வேண்டும். 12ல் உள்ள சனியால், சில உடல் உபாதைகள் ஏற்படலாம். அலைச்சலைக் குறைத்துக் கொள்வது நல்லது பயணத்தில் சில சிறு தடைகள் வந்து பிறகு சரியாகும். எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்ளவும்.

## மீனம்

மீன ராசி நேயர்களுக்கு குரு பல நன்மைகளை செய்வார். பொருளாதார உயர்வு ஏற்படும். மனைவி, மக்கள், குடும்பம் உங்களுக்குச் சாதகமாக துணையாக நிற்கும். நட்பு வட்டாரங்கள் உதவி செய்யும். தொழில், வணிகம் லாபகரமாக நடக்கும். வருமானத் தடை அகலும். அதிகாரிகள் உங்களைப் பாராட்டுவார்கள். உங்கள் செயலில் புதிய மாற்றம் தெரியும். அந்த மாற்றங்கள் உங்களை முன்னேற்றத்தை நோக்கி நகர்த்தும். அஷ்டமத்தில் பல கிரகங்கள் இணைந்திருப்பதால், எல்லா விஷயங்களிலும் கவனமாக இருக்கவும். உங்கள் கவனக்குறைவால் எதிர்பாராத சிக்கல்கள், வம்பு, வழக்குகள் வரலாம். எனவே, ஒரு முறைக்கு இரண்டு முறை யோசித்து எந்தச் செயலையும் செய்யவும். உடல்நல பிரச்சினைகளுக்கு மாற்று மருத்துவம் கைகொடுக்கும். வேலையாட்கள் மற்றும் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் வரலாம்.



சீரங்கன் பெரியசாமி
ஓய்வுநிலை பணிப்பாளர்,
விவசாயத் திணைக்களம்

வீட்டிலே ஒரு காய்கறித் தோட்டம் 5

# வீட்டுத்தோட்டங்களுக்கு தேவையான விதைகள்

நாம் வீட்டுத் தோட்டங்களை வருடம் முழுவதும் நிலைபேறாகப் பராமரிக்க வேண்டியது அவசியமாகும். ஒரு பயிரை அறுவடை செய்து முடித்ததும் அவ்விடத்தில் இன்னொரு பயிரை நட வேண்டும். எனவே எமக்கு வருடம் முழுவதும் எப்போது வேண்டுமானாலும் தேவையான விதைகள், நடுகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். எமது வீட்டுத் தோட்டத்தில் நடுகை செய்யப்படும் எல்லாப் பயிர்களுக்கும் விதைகள் அவசியமில்லை. சில பயிர்களை பதியப் பாகங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்து கொள்ள முடியும். அதாவது கிளை அல்லது தண்டுத் துண்டங்கள், ஓடிகள், வேர்கள், வேர்த் தண்டுக் கிழங்கு, கிழங்குத் துண்டங்கள், உறிஞ்சிகள், பதிவைத்தல், ஒட்டுதல் போன்றவற்றின் மூலம் நடுகைப் பொருட்களைப் பெற்று பயிர்களை நட முடியும்.

எமது வீட்டுத் தோட்டம் நிலைத்திருப்பதற்கும், சிறந்த உற்பத்திகளைப் பெற்றுக் கொள்வதற்கும் அடிப்படையாக அமைவது தரமான விதை, நடுகைப் பொருட்கள் ஆகும். வீட்டுத் தோட்டத்தில் எந்தப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் போதும் பயன்படுத்தப்படும் விதைகளும், நடுகைப் பொருட்களும் எப்போதும் ஆரோக்கியமானதாகவும், நோய்கள், பூச்சிகளின் சேதம் என்பன இல்லாதனவாகவும் இருப்பதை உறுதி செய்து கொள்வது அவசியமாகும். எமது வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான நடுகைப் பொருட்களை நம்பிக்கையானவர்களிடம் கொள்வனவு செய்யலாம் அல்லது வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் பயிர்களில் நாமாகவே உற்பத்தி செய்து கொள்ளலாம். எம்மால் உற்பத்தி செய்யப்பட்ட விதை, நடுகைப் பொருட்களை மீண்டும் நமது வீட்டுத் தோட்டத்தில் பயன்படுத்துவதாயின் (சுய விதை உற்பத்தியை மேற்கொண்டு வீட்டுத்தோட்டத்தில் பயன்படுத்துவதாயின்) அவை பெற்றுக் கொள்ளப்படும் தாய்த் தாவரங்கள் ஆரோக்கியமானதாகவும், பூச்சிகளின் சேதம் இல்லாதனவாகவும் இருப்பதில் கவனஞ் செலுத்த வேண்டும்.

### அத்தாட்சிப்படுத்திய விதைகளை வாங்குங்கள்

வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான விதைகளை பெரும்பாலும் நாம் கடைகளிலேயே வாங்குகின்றோம். இவ்வாறு கடைகளில் வாங்கும் போது பல விடயங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டும். இதன் மூலம் அநாவசியமான இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். கடைகளில் கொள்வனவு செய்து வீட்டுத் தோட்டத்திற்காக பயன்படுத்துவதாயின் அவை கொள்வனவு செய்யப்படும் இடம் நம்பிக்கையான இடமாக இருப்பது அவசியமாகும். விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப் படுத்தும் சேவையினரின் மேற்பார்வையின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட அல்லது அச்சேவையினரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைகளையே கொள்வனவு செய்ய வேண்டும். இவ்வாறான விதைப் பைக்கற்றுக்களின் அல்லது ரின்களின் மீது எஸ்.சி.எஸ் (SCS) என ஆங்கிலத்தில் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருக்கும். இதன் மூலம் ஆரோக்கியத் தன்மை, பூச்சித் தாக்கமற்ற தன்மை என்பனவற்றை நிச்சயமாக உறுதி செய்து கொள்ள முடியும். மேலும் வாங்கும் விதைகள், நடுகைப் பொருட்கள் உரிய வர்க்கத்தினது என்பதையும், நடுகை செய்வதற்குப் பொருத்தமான பருவத்தில் உள்ளது என்பதையும் நீங்கள் உறுதி செய்து கொள்ள முடியும்.

### உள்நாட்டு வர்க்கங்களை பயிரிடுங்கள்

விதைகளை விலைக்கு வாங்கும் போது அவை உங்கள் சுற்றாடலிற்கு ஏற்றனவா என்பதிலும் கவனஞ் செலுத்த வேண்டும். விவசாயத் திணைக்களத்தில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள் உள்ளன. அதனை அவதானித்து வாங்க வேண்டும். வீட்டுத்தோட்டங்களில் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றவை எமது பிரதேசங்களில் இயற்கையாகவே காணப்படும் பயிர் இனங்கள் ஆகும். உதாரணமாக கத்தரி, தக்காளி, பூசணி, கெக்கரி, மிளகாய் போன்றவற்றில் பல உள்நாட்டு வர்க்கங்கள் உள்ளன. இவை பல பெயர்களினால் அழைக்கப்படலாம். உதாரணமாக பச்சைக் கத்தரி, மட்டுவில், பிளாஸ்ரிக் கத்தரி, இறால் குழிய என பல உள்ளன. அவற்றை நீங்கள் பயிரிட்டு பயன் பெறலாம். ஆனால் இவ்வாறான வர்க்கங்களின் விதைகளை நீங்கள் கடைகளில் வாங்க முடியாது. எனினும் தற்போது ஒரு சில கடைகளில் இவ்வாறான விதைகள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றை நீங்கள் தேடி வாங்கிக் கொள்ள முடியும். இல்லாவிடில் உங்கள் அயலவர் யாரிடமாவது இருக்குமாயின் அவர்களிடம் வாங்கி நட்டுக் கொள்ளுங்கள்.

### கலப்பின வர்க்க விதைகளை வாங்காதீர்கள்

விதைகளை விலைக்கு வாங்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம் அவை கலப்பின வீரியம் (ஹைபிரிட்) கொண்ட வர்க்கங்களா அல்லது சாதாரண முறையில் உற்பத்தி செய்யப்படும் வர்க்கங்களா என்பதாகும். பொதுவாக வர்த்தகப் பயிர்ச்செய்கைக்கே கலப்பின வர்க்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றிலிருந்து சிறந்த பயன்களைப் பெற வேண்டுமாயின் அவற்றை சிறந்த முகாமைத்துவத்தின் கீழ் செய்கைபண்ண வேண்டும். உதாரணமாக சரியான இடைவெளி, செயற்கை உரங்களை இடல், சரியான நேரத்தில் கத்தரித்தல், பயிற்றுவித்தல் போன்ற குறிப்பிட்ட பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன மிக அவசியமாகும். இவற்றை மேற்கொள்ளாத போது நாம் எதிர்பார்க்கும் பயன்களை அடைய முடியாது போய்விடும். ஆனால் வீட்டுத்தோட்டச் செய்கையை மேற்கொள்ளும் போது இவற்றை எம்மால் செய்ய முடியாமற் போய்விடும். இதனால் எதிர்பார்க்கும் பலன்களைப் பெற முடியாது. எனவே வீட்டுத் தோட்டங்களுக்கு சாதாரண முறையில் உற்பத்தி செய்யப்படும் திறந்த அயன் மகரந்தச் சேர்க்கை அடையும் வர்க்கங்களே மிகவும் பொருத்தமானவையாகும்.



வீட்டுத்தோட்டங்களிற்கு தேவையான விதைகளை நாம் சுய விதை உற்பத்தியின் மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவதே மிகச் சிறந்த முறையாகும். அது பற்றிய விபரங்களை இனி அறிந்து கொள்வோம்.

### வீட்டுத் தோட்டத்திற்கான சுய விதை உற்பத்தி

பெரும்பாலான மரக்கறிகள், வயற் பயிர்கள், சில பழங்கள் என்பனவற்றை நமது தோட்டங்களில் அடுத்த தடவை பயிரிடுவதற்காக சுய விதை உற்பத்தியை நாம் மேற்கொள்ள முடியும். பெரும்பாலான பயிர் வர்க்கங்களின் விதைகளை நாமாகவே உற்பத்தி செயது கொள்ள முடியும். இதற்காக அடிப்படை அறிவு தேவைப்படுவதோடு அதனை கவனமாக, சிந்தித்து மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் முளைத்தல் (முளைதிறன் வீதம்) குறைவடைதல், வேறு வர்க்கங்களுடன் கலத்தல், நோய், பீடைத் தாக்கத்தினால் அழிவடைதல் போன்றன ஏற்படலாம். எல்லா பயிர்களிலும் ஒரே மாதிரியாக விதைகளை உற்பத்தி செய்ய முடியாது. சிலவற்றில் பழங்களை நன்கு உலரவிட்டு, அதிலிருந்து விதைகளைப் பெற வேண்டும். உதாரணமாக பயற்றை, போஞ்சி, பீர்க்கு, சிறகவரை, வெண்டி, பாசிப்பயறு, கௌபீ போன்ற பயிர்கள் நன்கு முதிர்ச்சியடைந்ததும், அவற்றை நன்கு காய விட்டு விதைகளைப் பெறலாம். இதனை நாம் நெற்றுக்களிலிருந்து விதைகளை உற்பத்தி செய்தல் எனக் குறிப்பிடுவோம். தக்காளி, கத்தரி, பாகல், புடோல் போன்ற பயிர்களில் அவை நன்கு பழுத்த பின்னர், சதையைக் கழுவி அகற்றி விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

நெற்றுக்களிலிருந்து விதை உற்பத்தி

நீங்கள் விதைகளை உற்பத்தி செய்ய விரும்பும் பயிர்களில் உங்கள் தோட்டத்தில் மிகவும் ஆரோக்கியமாகவும், வீரியமாகவும் வளர்ந்துள்ள பூச்சிகளின் தாக்கம் இல்லாத, அதிகளவில் காய்த்துள்ள செடிகளை முதலில் தெரிவு செய்து கொள்ளுங்கள். இச்செடியில் முதலாவது தடவை காய்களை அறுவடை செய்த பின்னர் 2வது 6 வது தடவை வரை அறுவடை செய்யப்படும் காய்களிலிருந்து விதைகளை பெற்றுக் கொள்ளவது மிகவும் நல்லது.

நான் மேலே குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட செடிகளைத் தெரிவு செய்த பின்னர் விதைகளை பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான காய்களை அதாவது நெற்றுக்களை அறுவடை செய்யாது செடியிலேயே நன்கு முதிர்ச்சியடைவதற்கும், உலர்வதற்கும் விடவும். இதன்போது நெற்றுக்கள் வெடித்து விதைகள் கீழே விழுவதற்கு முன் நெற்றுக்களை அறுவடை செய்வது அவசியமாகும். அறுவடை செய்யப்பட்ட நெற்றுக்களிலிருந்து விதைகளை வேறாக்கி சில தினங்களிற்கு ஓரளவான நிழலில் உலர விடவும். பின் அவற்றை நன்கு சுத்தப்படுத்தி பாயில், சாக்கில் அல்லது பிளாஸ்ரிக் தட்டுக்களில் பரப்பி சூரிய ஒளியில் 3 முதல் 4 நாட்களுக்கு உலர்த்தி ஈரப்பதனை முடியுமான வரை குறைத்துக் கொள்ளவும். 8 தொடக்கம் 9 வீதம் வரை ஈரப்பதனை குறைப்பது அவசியமாகும். இவற்றை அறுவடை செய்யும் போது அதிக மழையுடன் கூடிய காலநிலையைத் தவிர்ப்பது அவசியமாகும்.

அவ்விதைகளை பொலித்தீனால் பொதி செய்து குளிரூட்டியில் 13 முதல் 15 பாகை சென்றிகிரேட் வெப்பநிலையில் பேணவும். இம் முறையில் 1 1 /2 வருட காலத்திற்கு விதைகளை களஞ்சியப்படுத்தி நடுகைக்காக பயன்படுத்த முடியும். நடுகை செய்வதற்கு ஒரு நாளுக்கு முன் குளிரூட்டியிலிருந்து வெளியே எடுக்கவும். இல்லாவிடில் இந் நெற்றுக்களிலிருந்து விதைகளை பிரித்தெடுக்காது நெற்றுடன் உலர்த்தி களஞ்சியப்படுத்தி தேவையான போது விதைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இவற்றைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு பல பாரம்பரிய முறைகள் உள்ளன.

### பழங்களிலிருந்து விதைகளைப் பெறல்

தக்காளி, வெள்ளரி, கெக்கரி போன்ற பயிர்களில் 2 முதல் 6வது தடவைகள் வரை பழங்களை அறுவடை செய்து விதைகளை பெற்றுக் கொள்ளவது மிக பொருத்தமானது. இதற்காக நோய், பீடைகள் இல்லாத தாவரங்களிலிருந்து பழங்களைப் பெற்றுக் கொள்ளவும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பழங்களை செடியிலேயே நன்றாக பழுக்க விடவும். பின் அவற்றை அறுவடை செய்து மேலும் சில தினங்களுக்கு கனிய விடவும். அவற்றை இரண்டாக வெட்டி விதையையும், அதனுடன் பிளாஸ்ரிக் பாத்திரத்தில் அல்லது மட் பானையில் இட்டு ஒரு நாளைக்கு நொதிக்க விடவும். பின் சதையை அகற்றும் வரை தூய நீரில் விதைகளை கழுவி சுத்தம் செய்யவும். இவ் விதைகளை ஓரளவான நிழலில் உலர்த்தி பிளாஸ்ரிக் தட்டு, கடதாசி அல்லது சாக்குகளில் பரப்பி சூரிய ஒளியில் 3முதல் 4 நாட்களுக்கு ஈரப்பதன் 8 தொடக்கம் 9 வீதம் வரும் வரை உலர்த்தவும். அவ் விதைகளை பொலித்தீனில் பொதி செய்து குளிரூட்டியில் 13 முதல் 15 சென்றிகிரேட் வெப்ப நிலையில் சேமித்து பேணவும். நடுகை செய்வதற்கு ஒரு நாளைக்கு முன் குளிரூட்டியிலிருந்து வெளியில் எடுத்து நடுகைக்காகப் பயன்படுத்தவும்.

### கத்தரி, கண்டங் கத்தரி, சுண்டைக்காய் ஆகியவற்றின் விதைகளை உற்பத்தி செய்தல்

இப் பயிர்களில் 2 முதல் 6 தடவைகள் வரை அறுவடை செய்யப்பட்ட காய்களிலிருந்து விதைகளைப் பெற்றுக் கொள்வது மிகப் பொருத்தமானது. இங்கு தெரிவு செய்யப்பட்ட காய்களை அறுவடை செய்யாது செடியிலேயே நன்கு முற்றி பழுக்க விடவும். பழுத்த காய்களை பெற்று சில தினங்களுக்கு குவியலாக குவித்து வைக்கவும். பின் இக் காய்களை அதாவது பழங்களை தடியினால் நன்கு அடித்து, பழங்களை நசித்து நீருள்ள பாத்திரத்தில் இட்டு விதைகளை வேறாக்கிக் கொள்ளவும். இவ் விதைகளை நன்கு நீரில் கழுவி எடுத்து, ஓரளவான நிழலில் விதைகளை உலர விடவும். பின் பிளாஸ்ரிக் தட்டுக்களில் அல்லது கடதாசிகளில் பரப்பி 2 முதல் 4 நாட்களுக்கு உலர்த்தி பொலித்தீனினால் பொதி செய்து குளிரூட்டியில் 13 முதல் 15 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் குளிரூட்டியில் சேமித்து பராமரிக்கவும். நாற்றுமேடையில் விதைப்பதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்களிற்கு முன் குளிரூட்டியிலிருந்து வெளியே எடுக்கவும்.

### புடோல், பூசணி, பப்பாசி ஆகியவற்றின் விதைகளை உற்பத்தி செய்தல்

இப் பயிர்களில் பழங்களை செடியிலேயே நன்கு முற்றி பழுக்க (கனியவிடவும்) விடவும். பின் அவற்றை அறுவடை செய்து மேலும் சில நாட்களுக்கு கனிய விட்டு கூரான, துருப்பிடிக்காத கத்தியொன்றினால் வெட்டி விதைகளை வேறாக்கவும். அவ் விதைகளை அவற்றின் சதை நீங்கும் வரை தூய நீரினால் கழுவி நிழலில் உலர்த்தவும். அவற்றை பிளாஸ்ரிக் தட்டு அல்லது பாயில் பரப்பி சூரிய ஒளியில் 4 முதல் 5 நாட்களுக்கு நன்கு உலர்த்தவும் (ஈரப்பதன் 8 – 9 வீதம் வரும் வரை). உலர்ந்த பின் அவற்றை நன்கு சுத்தப்படுத்தி பொலித்தீனில் பொதி செய்து 13 முதல் 15 பாகை செல்சியஸ் வெப்பநிலையில் குளிரூட்டியில் சேமித்து வைக்கவும்.

# தெளிவத்தை ஜோசப்

## முடிவுக்கு வந்த நீண்ட நெடும் இலக்கிய பயணம்



அது 1972 வருடம் என நினைக்கிறேன். எனக்கு இருபது வயதிருக்கும். பத்திரிகைகளில் சிறு கட்டுரைகள், ஆசிரியர் கடிதங்கள் எழுதி அவை பிரசுரமாவதுண்டு. வாசிப்பு, தேடல், ஓரளவுக்கு பொது அறிவு இருந்ததால் பத்திரிகையில் சப் எடிட்டர் ஆகிவிடலாம் என நினைத்தேன். ஆனால் பத்திரிகை அலுவலக தொழில் எப்படி இருக்கும் என்றெல்லாம் தெரியாது. அது நாட்டில் வறுமை சூழ்ந்த காலம் நாட்டில் தொழில் வளம் இல்லை. மூடப்பட்ட பொருளாதாரம். மக்கள் மத்தியில் பணப் புரழ்வு மிகவும் குறைவு. ஜே.வி.பி ஆயுத கிளர்ச்சி முடிவடைந்த ஒரு மந்தமான பருவம். ஒரு உணவு பஞ்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம் என்பது அப்போது மக்களுக்குத் தெரியாது.

அக்காலத்தில் இப்போதுள்ள மாதிரி பணம் செலுத்தி கற்கக் கூடிய வகைவகையான பாடத்திட்டங்கள் கிடையாது. எனவே பாடசாலை விட்டு விலகியவர்கள் தம்மைத் தயார்படுத்தும் வகையில் ஷோர்ட் ஹேண்ட் டைப்பிங் படிக்கப் போய்விடுவார்கள். இக்கல்வியை இன்றைய கம்பியூட்டர் கிளாசுடன் ஒப்பிடலாம். என்னை கொழும்பில் தங்கி கொள்ளுப்பிட்டி ஆறாம் ஒழுங்கை அட்டிகன் டைப்பிஸ் பயிற்சி நிலையத்தில் தட்டச்சு, சுருக்கெழுத்து படிக்க வைத்தார்கள். அக்காலத்தில் எனக்கு சுவாமி விவேகானந்தர் மீது ஈடுபாடு இருந்ததால் வெள்ளவத்தை கிராமகிருஷ்ண மிஷனுக்கு சென்று வருவேன். அங்கே இளைஞரான சாது பால கிருஷ்ணனுடன் தொடர்பு ஏற்பட்டது. சில சமயம் தியானம் செய்வேன், சாப்பாடும் தருவார். கொஞ்சம் சரக்கு இருக்கிறது என்பதை அவர் புரிந்து கொண்ட சமயத்தில் என் பத்திரிகையில் வேலை செய்ய வேண்டும் என்ற ஆசையை வெளியிட்டேன்.



மனைவியுடன்...

அவர் ஒரு கடிதம் எழுதி உறையில் வைத்து முகரி எழுதி என்னிடம் தந்தார். முகவரியில் தெளிவத்தை ஜோசப், ஸ்டர் பிரேண்ட் கொன்பெக் ஷனரி வேர்க்ஸ், கொழும்பு 14 என எழுதப்பட்டிருந்தது. இந்தப் பெயரில் எனக்கு பரிட்சயமில்லை. இவர் ஒரு எழுத்தாளர். பத்திரிகைக்கு நெருக்கமானவர். அவர் உங்களுக்காக சிபாரிசு செய்வார் என்றார் சாது பாலகிருஷ்ணன்.

நான் அக் கடிதத்தை எடுத்துக் கொண்டு செயின்ஸ்தான் தியட்டரை ஒட்டியதாக அமைந்திருந்த ஸ்டார் பிரேண்ட் கொன்பெக்ஷனரி வேர்க்ஸ் என்ற இனிப்பு தயாரிக்கும் நிறுவனத்துக்கு சென்றேன். அப்போது அது இனிப்புகள் தயாரிப்பில் முன்னணி நிறுவனமாக விளங்கியது.


முதலாம் மாடிக்குச் சென்று தகவல் சொல்லி சோபாவில் காத்திருந்தபோது என் பக்கத்தில் வந்தமர்ந்த ஒருவர் நான் தெளிவத்தை ஜோசப்; என்னைப் பார்க்க வந்தீர்களா? என்று கேட்டார். நான் அதிர்ச்சி கலந்த புன்னகையை வெளிப்படுத்தி பாலகிருஷ்ணன் தந்த கடிதத்தை அவரிடம் தந்தேன். அதை வாசித்த அவர் நான் யார், எவர் என்ற விவரங்களைக் கேட்டு விட்டு காத்திருக்கும் படி சொல்லிவிட்டு உள்ளே சென்றார். ஒரு கடித உறையுடன் திரும்பி வந்தவர். நீங்கள் விண்ணப்பிக்கும் பத்திரிகை இங்கிருந்து அதிக தூரமில்லை. அங்கே சென்று கார்மேகம் என்பவரிடம் இந்தக் கவரைக் கொடுங்கள் என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார்.

அந்தப் பத்திரிகை அலுவலகம் அப்போது சிறியதாக இருந்ததாக நினைவு. உள்ளே சென்று கார்மேகம் என்பவரை விசாரிக்க, வெள்ளை ஷர்ட், களிசானுடன் வந்த ஒருவர் சிறிய மேஜையில் அமர்ந்து என்ன வேண்டும் என்று கேட்டார். நான் கடிதத்தைக் கொடுத்துவிட்டு என் பெயரில் வெளியான பத்திரிகை நறுக்குகள் ஒட்டப்பட்ட நான் தயாரித்து வைத்திருந்த புத்தகத்தை அவரிடம் கையளித்தேன். ஒரு முறை அவற்றை நோட்டம் விட்ட அவர், பத்திரிகை இப்போது நஷ்டத்தில் நடந்து கொண்டிருப்பதாகவும் ஆள் சேர்க்கும் எண்ணம் நிறுவனத்துக்கு இல்லை என்றும் என்னிடம் கூறியதோடு, இங்கே கொடுக்க சம்பளம் கொழும்பில் தங்கியிருக்கவும் போதாது... தொடர்ந்து எழுதுங்கள் பின்னர் பார்க்கலாம் என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார்.

> **களிசான், ஷூ, முழுக்கை மேற்சட்டை, டை என அந்நிறுவனத்துக்கு பணியாற்ற வந்த டிப்டொப் கணக்காளரும் அவர்தான். அவர் டிப்டொப்பாக வந்ததும் வேட்டியும் கோட்டுமாக பணியாற்றிய கணக்காளர்கள் வீடு போய்ச் சேர்ந்து விட்டார்களாம்! 1964 முதல் 2007 வரையில் 43 ஆண்டுகளாக, அங்கே அந் நிறுவனம் மூடப்படும் வரை பணியாற்றி வந்துள்ளார்**

எண்பதுகளின் ஆரம்பத்தில் ஸ்டார் நிறுவனத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான எட்வர்ட் காகூ எனக்கு நண்பரானார். அவரைக் காண அந்நிறுவனத்துக்கு சென்றிருந்தபோது எழுத்தில் ஆர்வம் கொண்டவன் என்ற வகையில், உங்களுக்கு தெளிவத்தை ஜோசப்பைத் தெரியுமா? என்று கேட்டார்.

பெயரளவில் தெரியும் பழக்கமில்லை என்றேன். அவ்வாறானால் ஒரு 'சர்ப்ரைஸ்' தருகிறேன் என்று சொல்லி யாருடனோ பேசி எக்கவுண்டனை உடனடியாக வரச் சொன்னார். சில நிமிடங்களில் கதவைத் திறந்து ஒருவர் உள்ளே வந்து எட்வர்ட் முன்னிலையில் கேள்விக்குறி பார்வையுடன் நின்றார். அவரைக்காட்டி என்னிடம் "இவர்தான் தெளிவத்தை ஜோசப். எங்கள் எக்கவுண்டன்" என்றதோடு அவரைப்பார்த்து, "இவர் அருள் சத்தியநாதன். பத்திரிகைகளுக்கு எழுதுவார். உங்களை சந்திக்க வேண்டுமாம். இவருக்கு சமய நம்பிக்கை எல்லாம் கிடையாது. கொஞ்சம் சொல்லுங்கள்" என்றார். வாங்க போகலாம் என என்னை அழைத்துக் கொண்டு தன்மேசைக்கு சென்றார் ஜோசப்.



இளமையில்...

இலக்கியம் பற்றி கொஞ்சம் பேசிவிட்டு மனிதனுக்கு ஏதாவது ஒரு மதம் இருக்க வேண்டும் என்றார். அந்த நேரத்தில் அவருடன் விவாதம் செய்யும் மனநிலையில் நான் இருக்கவில்லை.

கடவுள் நம்பிக்கை என்பது ஒருவருடைய தனிப்பட்ட விவகாரம். அதற்காக மதம் என்ற ஒரு நிறுவனத்தில் இருந்து கொண்டு விடாப்பிடியாக அந்நிறுவனத்தை ஆதரிக்க வேண்டும் என நான் கருதவில்லை. நீங்கள் இந்த நிறுவனத்தில் பணியாற்றுவதுபோல நானும் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறேன். நாம் நிறுவனத்துக்கு உண்மையாக இருக்க வேண்டும். ஆனால் அந் நிறுவனம் செய்வதெல்லாம் சரி என்று சொல்ல வேண்டியதில்லை அல்லவா? என்றேன் நான். அத்துடன் அந்த விஷயம் முற்றுப்புள்ளிக்கு வந்தது. அதன் பின்னர் இறுதிவரை நாங்கள் இருவரும் மதங்கள் பற்றி பேசியதேயில்லை.

ஸ்டார் பிரேண்ட் நிறுவத்தின் ஸ்தாபகர் செல்வம் காகூ.... அவருடைய இளைய சகோதரர் மோட்சம் காகூ பதுளை பிரதான வீதியில் ஒரு செலவு கடை நடத்தி வந்தார். ஊவா கட்டவளை தோட்ட ஆசிரியரான தெளிவத்தை ஜோசப்பின் தந்தையார் சந்தன சாமிப்பிள்ளை அக்கடையின் கணக்கபிள்ளையாகக் கடமையாற்றி வந்தார். தன் மூத்த சகோதரர் செல்வம் காகூ ஸ்டார் பிரேண்ட் நிறுவனத்துக்கு பொருத்தமான ஒரு கணக்காளரைத் தேடிக்கொண்டிருந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட மோட்சம், சாமிப்பிள்ளையிடம் இதைத் தெரிவித்திருக்கிறார். தெளிவத்தையில் சிறிய சம்பளத்தில் வாத்தியார் வேலை செய்து கொண்டிருந்த தன் மகன் ஜோசப்புக்கு இந்த வேலையை பெற்றுக் கொடுக்கலாமே என நினைத்த அவர் மகனை கொழும்புக்கு அனுப்பி வைத்தார்.

தெளிவத்தை ஜோசப் இப்படித்தான் கொழும்புக்கு வந்தார். களிசான், ஷூ, முழுக்கை மேற்சட்டை, டை என அந்நிறுவனத்துக்கு பணியாற்ற வந்த டிப்டொப் கணக்காளரும் அவர்தான்.

அவர் டிப்டொப்பாக வந்ததும் வேட்டியும் கோட்டுமாக பணியாற்றிய கணக்காளர்கள் வீடு போய்ச் சேர்ந்து விட்டார்களாம்! 1964 முதல் 2007 வரையில் 43 ஆண்டுகளாக, அங்கே அந் நிறுவனம் மூடப்படும் வரை பணியாற்றி வந்துள்ளார். தெளிவத்தை ஜோசப்.

ஏனையோரைப் போல் அவர் காலை 8.30க்கு வேலைக்கு வருவதில்லை.

பகல் 12 அல்லது ஒரு மணிக்கு வந்து நான்கு மணிக்கு வீடு திரும்பி விடுவார். இது செல்வம் காகூ அவருக்கு அளித்திருந்த சுதந்திரம். செல்வம் காகூ அடிக்கடி தமிழகம் சென்று வருவார். அப்படி போய் வரும்போதெல்லாம் தமிழ் சஞ்சிகைகள் மற்றும் நூல்களை வாங்கி வந்து தெளிவத்தைக்குக் கொடுப்பது வழக்கம். பத்திரிகைகளுக்கு சிறுகதை எழுதும் படைப்பாளர் மற்றும் இலக்கிய ஆர்வலரே எமது கணக்காளர் என்பதில் செல்வம் பெருமை கொண்டிருக்க வேண்டும்.

அது போலவே பண ரீதியாகவும் உதவுவாராம். செல்வம் மறைந்து அவரது மகன்மார் நிறுவன பொறுப்பை ஏற்ற பின்னரும் ஜோசப்புக்கு அலுவலகத்தில் வழங்கப்பட்டிருந்த சலுகைகள் அப்படியே தொடர்ந்தன என்கிறார் செல்வத்தின் மகன் மாரில் ஒருவரான எட்வர்ட் காகூ.

(தொடரும்)

அருள் சத்தியநாதன் ...

---



இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

## இனியவனே என்று பாடி வந்தேன்!



ஜனரஞ்சக எழுத்தாளர்
**மொழிவாணன்**

தீபாவைப் பார்க்கும் போது அவனுடைய தங்கை குமுதினியின் ஞாபகம் தான் அவனுக்கு வந்தது.

அவளும் இப்படித்தான்.

மூன்று கவுன்களை வைத்துக் கொண்டு தான் மாறி மாறி போட்டுக்கொண்டிருப்பாள்.

அவன் அம்மாவும் அப்படித்தான்.

அவளுக்கும் நான்கு கவுன்களும் இரண்டு சேலையும்தான் சொத்தாக இருந்தது.

தன் குடும்பத்தின் வறுமையைப் பற்றி நினைக்கும் போது,

விரைந்து ஓடிச் சென்றாள்.

வியப்புடன்,

அவள் ஓடிச் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் ஜீவகன்.

★★★

கராஜ்'க்கு வந்த அதன் சொந்தக்காரர் கார்மேகம், தனது அழுக்குப்படிந்த ஆடையை எடுத்து அணிந்து கொண்டு, ஆயுதங்களை எடுப்பதற்காக முன்னால் ஊர்ந்தார்.

நேற்று அவன் வெண்பாவை சந்தித்த இடத்திற்கும்,

அவன் வேலை செய்யும் கராஜ்'க்கும் கொஞ்ச தூரம் தான்.

நாலு நாலரை மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் தான் அவன் அவளைச் சந்தித்தாள்.

இதனால்,

இரண்டு இரண்டரை மணிக்கு இடையில் தான் அவள் கிளாசுக்கு வருவதாக இருக்க வேண்டும்.

எப்படி அவளிடம் சொல்வது?

இந்த கேள்விகள் எல்லாம் வந்து,

அவனை கேள்விக்குள் தள்ளிவிட்டது.

இந்த நேரத்தில் தான், பார்வதி அறைவாசல் கதவில் போடப்பட்டிருந்த திரைச் சீலையை நீக்கிப் பார்த்தாள்.

"என்னடா தம்பி இது நீ வந்ததை நான் கவனிக்கவே இல்லையே... ஏன்டா வந்ததும் வராததுமா கட்டில்ல சாய்ந்துட்டே......... ஓடம்புக்கு ஏதுமா...?"

வெண்பாவைப் பற்றிய நினைவுகள் தான் என்னை வாட்டுகிறது என்று அவளிடம் எப்படி சொல்வது என்று புரியாமல் விழித்த ஜீவகன்,

பார்வதி சொன்னதுதான் காரணம் என்பதைப் போல்

"உம்...!" என்று அம்மிங் கொடுத்தான்.

"ம்... நெனைச்சேன் நீ அப்படியே படுத்திடு நான் கொஞ்சம் கொத்தமல்லிய காய்ச்சிட்டு வாறேன்.

உனக்குதான் பாரமான வேலையெல்லாம் செய்ய முடியாதே...!" என்று சொல்லியபடியே. மெல்ல ஊர்ந்து சென்றாள் பார்வதி மாமியிடம் பொய் சொன்னதை எண்ணி ஜீவகனுக்கு கொஞ்சம் வருத்தமாகத்தான் இருந்தது.

பிரேம் அறைக்குள் நுழைந்த போது,

வினாகிரியை துணியில் நனைத்து,

அதை ஜீவகனின் நெற்றியில் போட்டுக் கொண்டிருந்தாள் பார்வதி.

"என்னம்மா இது?" என்று கேட்ட படியே,

கட்டிலில் அமர்ந்து கொண்டான் பிரேம்.

"இவனுக்கு சரியான காச்சல்டா... என்கிட்ட எதுவுமே சொல்ல... நான் வந்து பார்த்த போது கட்டில்ல படுத்துக்கிடந்தான்...!"

பார்வதி இப்படிச் சொன்னதும்,

ஜீவகனை ஒரு மாதியாகத் திரும்பித்திரும்பிப் பார்த்தான் பிரேம்.

"டேய் பிரேம் இவனை கொஞ்சம் பார்த்துக்கோ... நான் போய் அடுப்புல வெச்ச கொத்தமல்லிய பார்த்துவிட்டு வந்துடுறேன்..!" என்று சொல்லிவிட்டு,

எழுந்து சென்றாள் பார்வதி.

அவள் சென்ற பிறகு,

என்னடா இது புதிய டிராமா?" என்று கேட்ட படியே அவன் முகத்தை உற்றுப் பார்த்தான்.

அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல்,

வேறு பக்கம் திரும்பிக் கொண்டான் ஜீவகன்!

## 08 உள்ளங்கள் ஒன்றாக துள்ளும் போது கண்கள் ஆடும் காதல் நாடகம் அப்போது



அவனுக்கு வேதனையாக இருந்தது.

பெரிதாக ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான் ஜீவகன்.

"என்ன... ஜீவா?"

"ம்.... இல்ல ஒன்னுமில்ல..!"

"அப்ப ஏன் என்னையே சோகமா பார்த்துக் கொண்டிருந்தீங்க?"

அவள் இப்படிக் கேட்டதும், ஜீவகன் கொஞ்சம் சுதாகரித்துக் கொண்டான்.

"ஏன்... ஜீவா... நான் முன்பு சொன்னது உங்கள் காதில் விழுந்ததா?"

ஒருமாதிரியாக அவனைப் பார்த்தபடியே கேட்டாள் தீபா.

"என்ன சொன்னீங்க...?"

"கண்டி காரர்கள் என்றால் எனக்கு கொள்ளை ஆசை!" சொல்லிவிட்டு,

இடது கண்ணை பட்டென்று அடித்தாள் தீபா.

அதைத் தொடர்ந்து,

அந்த இடத்தை விட்டு,

அதே நேரம், திருத்த வேலைக்காக வந்திருந்த காரின் முன்னால் அமர்ந்து கொண்டு, ஏதோ சிந்தனையில் மூழ்கி இருந்த ஜீவகனைக் கவனித்தார்.

வியப்புடன் அவனைப் பார்த்தபடியே சென்ற கார்மேகம், ஆயுதப்பெட்டியில் இருந்த ஆயுதங்களில் தனக்குத் தேவையான ஆயுதங்களை தெரிவு செய்வதில் ஈடுபட்டார்.

சத்தம் கேட்டுத் திரும்பிய ஜீவகன், தனது முதலாளி பக்கத்தில் நிற்பதைக் கண்டதும், பரபரப்படைந்தான்.

அடுத்து, தனது எதிரில் இருந்த அந்த காரின் திருத்த வேலைகளை செய்ய ஆரம்பித்தார்.

அதே நேரம், அதைசெய்து கொண்டே, ஓரக்கண்ணால்,

அடிக்கடி அவரையும் பார்த்துக் கொண்டான்.

வேலையை செய்து கொண்டிருந்த அவன் மனம்,

இரண்டு மணி அளவில் பஸ்தரிப்பு நிலையத்திற்கு சென்று,

அவளை சந்திக்க வேண்டுமென்று முடிவு செய்தது.

இரண்டுமணி அளவில், சிறிது நேரத்தில் வருகிறேன் என்று கார்மேகத்திடம் சொல்லி விட்டு,

மவுன்டமேரி பஸ் ஓல்ட்டுக்கு வந்தான்.

வெண்பா எங்காவது தென்படுகிறாளா என்று பார்ப்பதற்காக, விழிகளை மேய விட்டான்!

பல பெண்கள் அங்கே வந்து போனாலும்,

வெண்பாவோ அவளுடைய தோழிகளோ அங்கே வரவில்லை.

நின்று நின்று ஏமாந்து போன ஜீவகன்.

இறுதியில்,

தோல்வியை தோளில் தொங்கப்போட்டுக் கொண்டு கராஜ்'க்கு வந்து சேர்ந்தான்.

மாலையில் அவன் வீடுவந்து சேர்ந்தபோது, பார்வதியைக் காணக்கிடைக்கவில்லை.

சோர்வுடன் அறைக்குள் நுழைந்து, கட்டிலில் சாய்ந்து கொண்டான்.

இப்போது,

அவன் உள்ளம் முழுதும் வெண்பாவின் நினைவே?

வெண்பா இப்போது எங்கே இருப்பாள்?

அவள் மீண்டும் டியுஷன் கிளாசுக்கு வருவாளா?

அவளை எப்படி பார்ப்பது?

அவளைப் பார்த்தாலும் தனது மனதில் உள்ளதை


(இனியவன் வருவான்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 நவம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை



CAPITAL TV யின் செய்தி வாசிப்பாளர்
**வினிப்பிரியா மணிநாதன்**




பிர்தௌஸ்

# கூகுளுக்கு எல்லாம் தெரியும்

கூகுள் தேடுதளத்திற்கு உங்களைப் பற்றி எல்லாமே தெரியும். உங்களது தொலைபேசி இலக்கம், அழைப்பு பதிவுகள், மின்னஞ்சல்கள், இடம், தனிப்பட்ட தகவல்கள், நீங்கள் செல்லும் இணையதளங்கள், யூடியுபில் நீங்கள் பார்த்த வீடியோக்கள், நீங்கள் என்ன சாதனத்தை பயன்படுத்துகிறீர்கள், தேடுதளத்தில் நீங்கள் எந்த நேரத்தில், எப்போது என்ன டைப் செய்கிறீர்கள் மற்றும் உங்களின் ஐ.பீ. முகவரி எல்லாமே கூகுளின் தரவுத்தளத்தில் பதிவாகி இருக்கும்.


# "மேலும் கீழும் கோடுகள் போடு அதுதான் ஓவியம்"

"மேலும் கீழும் கோடுகள் போடு அதுதான் ஓவியம்" என்ற கண்ணதாசன் பாடலுக்கு கச்சிதமாகப் பொருந்துகின்ற ஓவியத்தை வரைந்தவர் பெயர் பீட் மொன்ட்ரியன். டச் நாட்டைச் சேர்ந்த இவர் 20ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த ஓவியர்களில் ஒருவர் என்று அழைக்கப்படுபவர்.

1940களில் அவர் தீட்டிய ஓவியத்தில் வெறுமனே கோடுகள்தான் இருக்கும். ஓவியத்தைப் பார்த்தால் அதனை தீட்டியது என்று கூட கூற முடியாது. வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு, நீலம், மஞ்சள் நிறத்தில் குறுக்கு, நெடுக்காக கோடுகள் இருக்கும்.

ஓவியத்தை ரசிப்பவர்களைக் கேட்டால் ஆயிரத்தெட்டு வியாக்கியானம் சொல்வார்கள். ஆனால், கடந்த 75 ஆண்டுகளாக இந்த ஓவியம் தலைகீழாகக் காட்சிக்கு வைக்கப்பட்டது அண்மையில்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

"கட்டத்தின் தடித்த பக்கம் இருண்ட வானம் போல மேலே இருக்க வேண்டும்" என்று இந்தத் தப்பை கண்டுபிடித்த மேயர் புசெர் சொல்கிறார். இத்தனைக்கும் நியூயோர்க் சிட்டி 1 என்ற இந்த ஓவியம் பல பிரபல ஓவியக் காண்காட்சிகளில் வைக்கப்பட்டு, மகா பண்டிதர்கள் பார்த்த ஓவியம்.



1980 தொடக்கம் இந்த ஓவியம் ஜெர்மனி கலைக்கூடம் ஒன்றில் இருக்கிறது.

ஆனால் இந்த ஓவியத்தை தொடர்ந்து தலைகீழாகவே தொங்கவிட முடிவு எடுத்திருக்கிறார்கள். இல்லாவிட்டால் அந்த ஓவியம் சிதைந்துவிடுமாம். மேலிருந்தால் என்ன கீழிருந்தால் என்ன யார் கவனிக்கப்போகிறார்கள் என்பது அவர்களது நினைப்பு.

# சிரிக்கும் சூரியன்



அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா எடுத்த இந்தப் படத்தில் சூரியன் சிரிப்பது போல தோற்றம் தருகிறது. சூரியனின் ஒளி மற்றும் வெப்பம் பற்றி ஆய்வு செய்யும் சூரிய இயக்கவியல் ஆய்வக துணைக்கோளே இந்த புகைப் படத்தை எடுத்திருக்கிறது.

இரு கண்கள் மற்றும் சிரித்த வாய் என்று இருக்கும் இந்தப் படத்தை பார்த்தால் உண்மையிலேயே சூரியன் சிரிப்பது போல்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் படத்தில் இருக்கும் கண்கள் மற்றும் வாய் போன்று தோற்றம் தருகின்ற துளைகள் பயங்கரமானவை. இந்தத் துளைகளை 'கரோனல் துளைகள்' என்று அழைப்பார்கள். இதன் வழியாகத்தான் அதிவேக சூரிய காற்று விண்வெளிக்கு வீசப்படுகிறது.


சூரியனின் குறைந்த இயக்கம் கொண்ட பகுதி என்பதாலேயே இந்த கரோனல் துளை இருண்டு காணப்படுகிறது. இந்தத் துளைகள் வெளிப்புற வளிமண்டலத்திற்கு மின்னூட்ட துகள்களை உமிழ்வது, வட துருவங்களில் சூரியப் புயல் தாக்கக் காரணமாகிறது.

எனவே, சிரிப்பை நம்பாதீர்கள் என்ற தத்துவத்திற்கு இந்தப் படம் நல்ல சாட்சி.

# இப்படி ஒரு மறதியா!



ஜெர்மனியின் பிராங்பேர்ட் நகரத்தில் இருக்கும் பழைய கராஜ் ஒன்றில் சம்பந்தம் இல்லாமல் கார் வண்டி ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அந்த கட்டடத்தை தகர்ப்பதற்கு நகர நிர்வாகத்திற்கு இந்தக் கார் பெரும் தடங்கலாக இருந்தது. அதனை அகற்றுவதற்கு முன் காருக்கு சொந்தக்காரர் யார் என்று தேட ஆரம்பித்தார்கள். அதற்கு பழைய ஆவணங்களை தூசு தட்ட வேண்டி இருந்தது.



2017ஆம் ஆண்டுதான் இந்த சம்பவம் நிகழ்ந்தது. ஆனால் 1997ஆம் ஆண்டு 56 வயதுடைய ஒருவர் தனது காரைக் காணவில்லை என்று பொலிஸில் முறையிட்டிருக்கிறார். அந்தக் கார்தான் இது. 20 ஆண்டுகளுக்கு முன் தனது கார் எங்கே என்று தேடிய அவர் அது காணவில்லை என்றதும் திருடப்பட்டுவிட்டதாக நினைத்தே பொலிஸில் முறையிட்டிருக்கிறார்.

உண்மையில் அவரது கார் திருடப்படவில்லை. அவர்தான் அந்த கராஜில் காரை நிறுத்திவிட்டு சென்றிருக்கிறார். பின்னர் காரை நிறுத்திய இடத்தை மறந்துவிட்டார். இருபது ஆண்டுகள் கழித்து அவரது காரை அடையாளம் காணச் சென்றபோதுதான் அது ஞாபகத்திற்கு வந்திருக்கிறது.

# எகிப்து மம்மியில் கொக்கைனா?



3000 ஆண்டுகளுக்கு முன்னர் எகிப்து பாரோக்களின் 21ஆவது வம்சத்தில் இருந்த ஒரு பெண் மத குருவின் பெயர் ஹனட் டவுய். அவரது மம்மி 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.


இந்த மம்மி சாதாரணப்பட்டது அல்ல. வரலாற்றையே திருப்பி எழுதும் அளவுக்கு முக்கியமானது. 1992ஆம் ஆண்டு ஜெர்மனி நச்சுவியலாளர் ஸ்வெட்லானா பலபனோவா அந்த மம்மியில் கொக்கைன், ஹஷிஷ் மற்றும் நிகொடின் இருப்பதை கண்டுபிடித்தார்.

இப்போது பிரபல போதைப் பொருட்களாக இருக்கும் கொக்கைன், ஹஷிஷ் எல்லாமே 3000 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கா பிராந்தியத்திற்கு வெளியே இருந்ததாக வரலாறு இல்லை. கொகா மற்றும் டொபாகோ செடிகள் அமெரிக்காஸ் பிராந்தியத்தில்தான் இருந்தன.

வரலாறு சொல்லும் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த பின்னர்தான் இந்த போதைப் பொருள் உலகெங்கும் பரவியதோடு போதைக் கடத்தலும் பெரிய கடத்தல் வியாபாரமாக மாறியது. அதிலும் பிரிட்டிஷ் பேரரசு காலத்தில்தான் கொக்கைன் எகிப்து பக்கம் தலை காட்டியதாக வரலாறு சொல்கிறது.

எனவே 3000 ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்காஸ் பிராந்தியத்துடன் வெளியுலகுக்கு தொடர்பு இருந்திருக்கக் கூடும் என்று உறுதி செய்ய இதனை ஆதரமாக எடுத்துக் கொள்ளலாம். என்றாலும் இது பற்றிய விவாதம் முடிந்தபாடில்லை.

இது உண்மையானால் கொலம்பஸ் பெயர் வரலாற்றுப் புத்தகத்தில் இருந்து அழிந்து விடும்.



# உயிர்களை ஆட்டி படைக்கும் பேய்கள்!

(கடந்த வாரத் தொடர்)

இன்றுவரை எஞ்சியிருக்கும் பேய்களின் செயல்பாட்டின் முதல் சான்று கில்காமாஷின் காவியம் பண்டைய பாபிலோனிய புராணக்கதைகள் கிமு 2000 இல் பதிவு செய்யப்பட்டன.

இந்த புராணக்கதைகள் களிமண் மாத்திரைகளில் எழுதப்பட்டுள்ளன. அவர்கள் கில்காமாஷ் என்ற விசித்திரக் கதை நாயகனையும், மனித உருவத்தில் அவரிடம் வந்த அவரது இறந்த நண்பரின் பேயையும் கையாள்கின்றனர். பண்டைய எகிப்தியர்களும் பேய்கள் இருப்பதாக நம்பினர். அவர்களின் பேய்கள் ஒரு பறவையின் தலையுடன் தோன்றி, கு என்ற பெயரைப் பெற்றன, மேலும் அவை





இறந்தவர்களின் ஆத்மாக்களைக் குறிக்கின்றன. இவை பல்வேறு நோய்களைப் பரப்பும் மற்றும் பல்வேறு விலங்குகளில் வாழக்கூடிய தீய ஆவிகள், அதே நேரத்தில் வெறிநாய்க்கடியை அவர்களுக்குள் செலுத்துகின்றன என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பண்டைய சீனாவில் வசிப்பவர்கள் இறந்தவர்களை மிகுந்த மரியாதையுடன் நடத்தினார்கள் மற்றும் அவர்களின் நினைவாக விடுமுறை நாட்களைக் கூட நடத்தினார்கள் என்ற போதிலும், அவர்கள் இறந்தவர்களின் ஆவிகளைப் பற்றி மிகவும் பயந்தார்கள், அவை நேரடியாக ஆபத்தானவை மற்றும் மிகவும் தீங்கிழைக்கும் என்று கருதப்பட்டன. அத்தகைய பேய், சீன நம்பிக்கைகளின்படி, அவர் வாழ்ந்த காலத்தில் அவர் மீது இருந்த அதே உடையில் வந்தது. அவரது தோற்றம் மிகவும் ஈர்க்கக்கூடியதாக இருந்தது. முதலில், ஒரு வகையான வடிவமற்ற மேகம் காட்டப்பட்டது, அதில் இருந்து பேயின் கால்களும் தலையும் வளர்ந்தன. அதன்பிறகுதான் உடல் தோன்றியது, அது பளபளக்கும் பச்சை மேகத்தை சூழ்ந்தது.

பிரிட்டிஷ் தலைநகரம் நீண்ட காலமாக உலக மையமாக கருதப்படவில்லை, அங்கு பல்வேறு வகையான ஆவிகள் மற்றும் பேய்கள் குவிந்துள்ளன.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன்வாசிகள், 1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மாலை, 8,000 பேர் மிகவும் ஆடம்பரமான கச்சேரி அரங்குகளில் ஒன்றான ராயல் ஆல்பர்ட் ஹாலுக்கு மரியாதை நிமித்தமாக நடைபெற்ற ஒரு கோலாகல நிகழ்வில் கலந்து கொள்ள வந்த கதையை மீண்டும் கூறி வருகின்றனர்.

புகழ்பெற்ற ஆர்தர் கோனன் டாய்லின், எழுத்தாளர் மற்றும் ஷெர்லாக் ஹோம்ஸ் என்ற நன்கு அறியப்பட்ட துப்பறியும் ஆசிரியரின் ஆசிரியர். டெயில் கோட் அணிந்த பேய்கள் உள்ளதா, நிகழ்ச்சியின் ஹீரோ கச்சேரி தொடங்குவதற்கு சற்று முன்பு வளாகத்திற்குள் நுழைந்து தனது மனைவி ஜீனுடன் மரியாதைக்குரிய இடத்தில் அமர்ந்து, இந்த நிகழ்வு முடியும் வரை அங்கேயே இருந்தார்.

ஆனால் இந்த கதையில் மிகவும் அசாதாரணமான விஷயம் என்னவென்றால், குறிப்பிடப்பட்ட கச்சேரி தொடங்குவதற்கு 6 நாட்களுக்கு முன்பு எழுத்தாளர் இறந்தார், இது அவரது நினைவாக அர்ப்பணிக்கப்பட்டது. எழுத்தாளரின் விதவை முன்கூட்டியே கவலைப்பட்டு, இறந்தவருக்கு மரியாதைக்குரிய இடத்துடன் நுழைவுச் சீட்டையும் ஆர்டர் செய்தார். இந்த பெண் ஒரு திறமையான ஊடகமாக கருதப்படுவதற்கு பிரபலமானவர் மற்றும் இறந்தவர்களின் ஆத்மாக்களுடன் தொடர்பு கொள்ள முடியும் மற்றும் அவர்களுக்காக வாழும் மக்களின் உலகத்திற்கு ஒழுங்கமைக்கப்பட்ட வருகைகள்.

கச்சேரி அரங்கில் மறைந்த சர் ஆர்தரின் பேண்டம் வருவதைப் பற்றி அவள் அறிந்திருந்தாள். கச்சேரியில் கலந்து கொண்ட பார்வையாளர்கள் அனைவரும், கோனன் டாய்லை பார்வையால் அறிந்தவர்கள், ஆல்பர்ட் ஹாலுக்கு அவர் வருகையை மிகவும் அமைதியாகவும், குளிர்ச்சியாகவும் உணர்ந்தனர், இது ஆங்கிலேயர்களுக்கு பொதுவானது மற்றும் இது லண்டனில் நடந்தது, அங்கு பேயுடன் ஒரு சந்திப்பு உள்ளது. அரிதான மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்டதாக கருதப்படவில்லை.

சில சந்தர்ப்பங்களில், பேய்கள் விஞ்ஞானிகளுக்கு உண்மைகளை ஒப்பிட்டுப் பார்க்க உதவுகின்றன, இதற்கு நன்றி அவர்கள் கடந்த காலத்தின் உண்மையான படங்களை மீட்டெடுக்கிறார்கள், மேலும் பேய்களிடமிருந்து தூண்டப்பட்ட விவரங்களின் உண்மை பின்னர் ஆராய்ச்சியாளர்களால் அல்லது கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதற்கு மிகவும் பிரபலமான உதாரணம், பிரிட்டிஷ் மன்னர் ஹென்றி VIII இன் இரண்டாவது மனைவி, பிரபலமான அன்னே போலின், 1536 இல் தூக்கிலிடப்பட்டது, அவர் தனது கணவரை ஏமாற்றியதாக குற்றம் சாட்டப்பட்டார். முன்னதாக, வரலாற்றாசிரியர்கள் அன்னாவின் மரணதண்டனை செயல்முறை அந்த நேரத்தில் பொதுவானது என்று நம்பினர், அதாவது, பாதிக்கப்பட்டவர் தனது தலையை வெட்டும் தொகுதியில் வைத்தார், மற்றும் மரணதண்டனை செய்பவர் அவரது கழுத்தை கோடரியால் வெட்டினார். இருப்பினும், அன்னாவுடன் எல்லாம் வித்தியாசமானது பின்னர் மாறியது.

விஷயம் என்னவென்றால், 1972 ஆம் ஆண்டில் டவர் கோட்டையில் ஒரு இளம் பெண் தனது பெற்றோருடன் உல்லாசப் பயணம் மேற்கொண்டார். மரணதண்டனைகள் நடந்த இடத்தை ஆராயும் தருணத்தில் பசுமை கோபுரம் நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இந்த இடத்தில் நடந்த அனைத்தையும் சிறுமி பார்த்தாள்.

அவள் பார்த்தது இதுதான்: அன்னே ராணி மண்டியிட்டு, சற்று முன்னோக்கி சாய்ந்தாள். அவளது மரணதண்டனை செய்பவன் வாளுடன் (கோடாரி அல்ல) அவள் காலணி அணியாததால், பின்னால் இருந்து முற்றிலும் அமைதியாக அவளை அணுகினான்.

அவர் முதலில் தனது காலணிகளை கழற்றியிருக்கலாம், அதனால் அவர் எப்படி அணுகுவார் என்பதை அண்ணாவால் கேட்க முடியவில்லை, அதனால் மரண பயம் அவளை முன்கூட்டியே கைப்பற்றாது.

விஷயம் என்னவென்றால், 1972 ஆம் ஆண்டில் டவர் கோட்டையில் ஒரு இளம் பெண் தனது பெற்றோருடன் உல்லாசப் பயணம் மேற்கொண்டார்.

(தொடரும்)

**எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக, லண்டன்வாசிகள், 1930 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மாலை, 8,000 பேர் மிகவும் ஆடம்பரமான கச்சேரி அரங்குகளில் ஒன்றான ராயல் ஆல்பர்ட் ஹாலுக்கு மரியாதை நிமித்தமாக நடைபெற்ற ஒரு கோலாகல நிகழ்வில் கலந்து கொள்ள வந்த கதையை மீண்டும் கூறி வருகின்றனர்.**

# தினகரன் ஊடக அனுசரணையில் தென்றல் FM இல் பாடகர் முஹம்மட் இர்பானின் 'பொன்மாலைப் பொழுது' நிகழ்வில்...






படங்கள்: ரஞ்சித் அசங்க, அஷ்ரப் ஏ சமட்



















# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி
























கிணத்துல கல்லை போட்டால் ஏன் முழுகிறது?
ஏன்னா, கல்லுக்கு நீச்சல் தெரியாதாம்.







ஒரு பையன் தலைக்கு அடியில் Dictionary வெச்சிட்டு தூக்குறானாம்.
ஏன்?
ஏனா, அவனுக்கு அர்த்தமில்லாத கனவு வருதாம்












# சட்டத்துறையில் சாதிக்க நினைக்கும் இளம் ஊடகவியலாளர்

சர்வதேச தொலைக்காட்சி ஊடாக கலைப் பயணத்தை ஆரம்பித்த செய்தி ஆசிரியர் **வினிப்பிரியா மணிநாதன்**



நான் யாரையும் எனக்கு போட்டியாளராக கருதியதில்லை... யாருடனும் ஒப்பிட்டு பார்ப்பதும் இல்லை அவரவர் திறமை அவரவர் அடையாளம்..... எனக்கு கடவுள் நம்பிக்கை கடவுள் அனுக்ரஹம் அதிகம்.. இறைவனின் அருளும் பெற்றோரின் ஆசியுடனும் எனது பயணம் தொடரும் என நம்புகின்றேன். தொலைக்காட்சியில் செய்திவாசிப்பாளராக திகழும் ஊடகவியலாளர் வினிப்பிரியா மணிநாதன் இவ்வாறு கூறுகிறார். மிகவும் சுவாரஸியமாக இவர் கூறிய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

ஊடகத்துறைக்கு வரவேண்டும் என ஒரு போதும் எண்ணியதில்லை. ஊடகத்துறையில் பிரகாசிக்கும் பலர் இவ்வாறு கூறக் கேட்டிருக்கின்றேன்.. எனது பாடசாலை கனவு இதுவாகும் எனவும் சிலர் கூறுவதுண்டு. ஆனால் எனக்கு தற்செயலாக கிடைத்த ஒரு சந்தர்ப்பம் இன்று பல பரிணமாங்களில் நல்லதொரு அடையாளத்தை தந்துள்ளது. ஊடகத்துறையில் 15



வருடங்களை கடந்து இன்றும் பயணித்துக் கொண்டிருக்கிறேன்.

2008 இல் சர்வதேச தொலைக்காட்சி ஊடாக எனது ஊடகப்பயணம் ஆரம்பமானது. எனது ஊடகப்பயணத்திற்கு முக்கிய காரணம் எனது தம்பி ராகுல் தேவ் மற்றும் தங்கை ப்ரியசகி ஆகியோர் இத்தனை வருடங்கள் கடந்தும் எனது தடையில்லா இந்த பயணத்திற்கு அவளே மிகப்பெரிய காரணி.


தங்கை என்பதை விட எனக்கு சிறந்த ஒரு நண்பியாவார்...... நாங்கள் இருவரும் இடக்கை பழக்கமுள்ளவர்கள் எனது தம்பியின் நண்பர் ஒருவர் (சகோதரர் போன்றவர்) மூலம் கிடைத்த அறிமுகம் அவர் சர்வதேச தொலைக்காட்சி ஒன்றில் முக்கிய பதவி வகித்துவந்தார்.

அவரது கோரிக்கையின் பிரகாரம் எனது தங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளராக அறிமுகமானார்... எனது தங்கை தமிழ் மொழி, இலக்கியம் போன்ற துறைகளில் மிகுந்த ஆர்வம் உடையவர்... கவிதையில் கைதேர்ந்த ஒருவர்.

தற்போது Fashion Design துறையில் கல்வி பயின்று வருவதுடன் ஐரோப்பிய வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒன்றில் பணிபுரிகிறார். எனது தம்பி தற்போது லண்டன் சென்றுவிட்டார். நாங்கள் இருவரும் உயர்தர பிரிவில் கலைத்துறையிலேயே கல்வி பயின்றோம். உயர்தர கல்வியின் பின்னர் இந்தியா சென்றிருந்தோம்.. இந்தியாவில் 3 வருடங்களாக தங்கியிருந்த காலப்பகுதியில் இதழியல் மற்றும் ஊடகம் சார்ந்த பல்வேறு கற்கைநெறிகளை மேற்கொண்டோம். எங்களுக்கு அரச மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் கடமையாற்றிய விரிவுரையாளர்கள் போராசிரியர்களிடம் ஊடகத்துறைசார்ந்த நுட்பங்களை தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பமும் கிடைத்தது. அதன்பின்னர் இலங்கையில் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இதழியல் கற்கை நெறியை பூர்த்தி செய்தேன்.

அதனையடுத்து தற்போது பிரித்தானிய தனியார் பல்கலைக்கழகமொன்றில் சட்டத்துறை கற்கைநெறியை பயின்றுவருகின்றேன். எனது தங்கை மிகவும் அன்பானவர். சகிப்புத்தன்மை நிறைந்தவர் ...அதேபோல் பயந்த சுபாவம் கொண்டவர் ... தங்கையும் நானும் சகோதரிகள் என்பதை விட நாங்கள் இருவரும் சிறந்த நண்பிகள் என்றே கூறலாம்.

அதற்கு முக்கிய காரணம் எனது அம்மாவின் வளர்ப்பு ... எங்களது சிறுவயதிலிருந்தே அனைத்து நல்ல பழக்கவழக்கங்களையும் அன்பாக சொல்



லிக்கொடுத்தவர். வன்மையா ஒரு போதும் எங்களிடம் நடந்து கொண்டதில்லை.

கோபமாக பேசியதில்லை.... கற்றுக்கொள்ள வேண்டியவற்றையும் ... கடந்து செல்ல வேண்டியவற்றையும் அனைவரிடமும் அன்புடனும் மரியாதையுடனும் பழகும் விதத்தையும் ஒவ்வொரு நொடியும் எனக்கு கற்றுத்தருபவர்... அதனாலேயே சவால் மிகுந்த ஊடகத்துறையில் இன்று 15 வருடங்களை கடந்தும் ஒழுக்கம் பண்பு மரியாதை என்பவற்றை வாழ்க்கையில் பின்பற்றி பயணிக்கின்றேன். எனது அப்பா மிகவும் அன்பானவர். அதேபோல் கண்டிப்பானவர். சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறையில் தொழில்புரிபவர் அவருக்கும் குடும்பத்துடன் நேரம் செலவிடுவது குறைவாகவே காணப்பட்டது.

அப்பா அவரது தொழிலில் அதிக நேரம் செலவிட வேண்டியிருந்தது. எனது அம்மாவின் சகோதரர் எங்களது மாமா..... சிறுவயதிலிருந்தே அன்பாக வளர்த்தவர்.. தன் பிள்ளைகளைப்போல் இன்று எங்களை அன்பாகவும் பொறுப்பாகவும் பார்த்துக்கொள்பவர்.



உள்நாட்டு யுத்தத்தின்போது பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர வேண்டிய சந்தர்ப்பத்திலும் எங்களது பாடசாலை கல்வி எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் மிகவும் கரிசனையாக இருந்த ஒருவர்.

இன்று வரை அனைத்து நல்ல பல விடயங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறார். வாழ்க்கையில் நெருக்கடியான சந்தர்ப்பங்களை சமாளிப்பதற்கான சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றார். நான் தொலைக்காட்சி. வானொலி இரண்டிலும் ஒரே நேரத்தில் பிரவேசித்தவள். எனது தங்கை ஊடகப்பயணத்தில் இணைந்து கொண்ட நாள் முதலே நானும் அதில் இணைய வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தேன். அவர் இணைந்த மறுநாளே எனக்கான ஊடகப்பயணத்திற்கு காரணியாக அவர் வழி அமைத்துக் கொடுத்தார். அன்று ஊடகத்துறைக்குள் பிரவேசித்த போது அறிவிப்பாளராகவும் செய்திவாசிப்பாளராகவும் அறிமுகமானேன்.





நான் இன்று செய்தி ஆசிரியராகவும் செய்திவாசிப்பாளராகவும் அரசியல் விமர்சனங்கள் உள்ளிட்ட நேர்காணல்களை செய்து வருகின்றேன். சட்டத்துறையில் முன்னேற வேண்டும் என்பதே எனது ஆர்வமாக இருந்தது. தைரியம் தன்னம்பிக்கை எனது பலம்.

2007 ஆம் ஆண்டி ஊடகத்துறைக்குள் அடியெடுத்துவைக்கும் போது தொலைக்காட்சி மற்றும் வானொலி அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் மாத்திரம் அறிமுகமாகினேன் அதன்பின்னர் உள்ளூர் மற்றும் சர்வதேச தொலைக்காட்சிகளிலும் பணிபுரிந்துள்ளேன். தற்போது CAPITAL FM இல் சிரேஷ்ட செய்தி ஆசிரியராகவும் செய்திவாசிப்பாளராகவும் Capital Tv யில் செய்திவாசிப்பாளரகவும் கடமையாற்றுகின்றேன்.

(07ஆம் பக்கம் பார்க்க



கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543

(06ஆம் பக்கத் தொடர்)

ஊடகத்துறையில் பல சவால்களை கடந்து ஊடகத்துறையின் பெறுமதி அறிந்து பயணிக்கும் ஒவ்வொருவரும் மிகவும் பாராட்டத்தக்கவர்கள்.

அவர்கள் ஒவ்வொருவருக்குள் ஒரு தனித்துவம் இருக்கின்றது. அவர்கள் அனைவருக்கும் இந்த இடத்தில் எனது பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

எமக்கு முன்னாள் இந்த துறையில் சாதித்தவர்கள் பலர் இருக்கின்றார்கள் . ஊடகம் என்பது ஒரு காலத்தில் பொழுது போக்கு அம்சமாக காணப்பட்டது.ஆனால் தற்போதைய காலகட்டத்தில் நமது எதிர்கால சமூகத்திற்கு சிறந்த விடயங்களை காண்பிக்கும் கருவியாக இருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

அபரிமிதமான தொழில்நுட்ப வளர்ச்சி இன்று நம் சமுதாயத்தில் சாதகமான பல விடயங்களுக்கு பயன்படுவதை போன்று பாதகமான செயல்களுக்கும் வழிவகுக்கும் வகையில் அமைந்துள்ளது. வயது வேறுபாடின்றி இன்று பலரது வாழ்க்கை பல வழிகளில் இறுக்கமாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையும் இவற்றுக்கு காரணமாகின்றது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் சமூகத்தை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஊடகங்களுக்கும் உள்ளது. அச்சு ஊடகமாகவும் இருக்கலாம் இலத்திரனியல் ஊடகமாகவும் இருக்கலாம்.

எனவே ஒவ்வொரு ஊடகவியலாளர்களும் தங்களது பணி நேரத்தை இன்னுமொருவருக்கு நல்ல பல வழிகளில் பயன்தரும் வகையில் செலவிட வேண்டும் என்பதே எனது எண்ணமாகும்.

ஏனென்றால் ஊடகத்துறை பணி என்பது சம்பளத்திற்காக மட்டும் வேலை செய்யும் இடமல்ல . சமூகத்தில் உள்ள அத்தனை விடயங்களையும் சிறந்த முறையில் மக்களுக்கு கொண்டு சேர்க்க வேண்டிய பொறுப்புடன் பயணிக்க வேண்டிய துறை.

ஒரு காலத்தில் ஊடகத்துறைக்குள் பிரவேசிப்பது என்பது எட்டாக்கனியாக இருந்த ஒரு விடயம். ஆனால் இன்று அது வெகு இலகுவாகிவிட்டது. காரணம் சமூக ஊடகங்களின் வளர்ச்சி இதற்கு காரணமாக இருக்கின்றது என்றே எண்ணுகின்றேன்.


சித்தி சற்குணதேவி

இன்று நம் நாட்டில் ஊடகத்துறையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் பல்வேறு சாதனைகளை புரிந்து வருகின்றார்கள். ஒரு காலத்தில் பெண்கள் என்றால் ஊடகத்துறையில் ஒரு காட்சி பொருளாக பேசப்பட்ட சந்தர்ப்பங்கள் இருந்துள்ளன. ஆனால் இன்று நம் நாட்டிலும் ஊடகத்துறை சார்ந்த பெண்கள் சிலர் அவற்றை முறியடித்து நல்ல முறையில் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கின்றார். தங்களது குடும்பவாழ்க்கையிலும் தொழிலிலும் பாதிப்பு ஏற்படாத வகையில் அவற்றை சிறந்த முறையில் தொடர்கின்றார்கள் .

அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கின்றேன். இன்று நம் நாட்டில் ஊடகத்துறையில் பிரகாசித்த பலர் பல்வேறு காரணிகளினால் சர்வதேச நாடுகள் பலவற்றில் குடியேறியுள்ளார்கள்.

கடல்கடந்தும் பாலின வேறுபாடின்றி அவர்கள் தங்களது பணியை ஏதோ ஒருவகையில் தொடர்ந்து செல்கின்றார்கள். ஊடகத்துறையின் சாதனையாளர்கள் சாதிக்க நினைப்பவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கின்றேன். ஏனென்றால் வானொலி தொலைக்காட்சி என இரண்டிலும் வயதில் மூத்தவர்கள் பலர் இன்று இளம் சமூகத்தின் போட்டித்தன்மைக்கு மத்தியில் தங்களது வெற்றி பயணத்தை தொடர்ந்த வண்ணமுள்ளார்கள். நான் யாரையும் எனக்கு போட்டியாளராக கருதியதில்லை... யாருடனும் ஒப்பிட்டு பார்ப்பதும் இல்லை. அவரவர் திறமை.

அவரவர் அடையாளம்..... எனக்கு கடவுள் நம்பிக்கை கடவுள் அனுக்ரஹம் அதிகம்.. இறைவனின் அருளும் பெற்றோரின் ஆசியுடனும் எனது பயணம் தொடரும் என நம்புகின்றேன்.

நான் பாடசாலையில் படிக்கின்ற காலத்திலே எனக்கு நிறைய ஒத்துழைப்பு வழங்கியவர் என் சித்தி சற்குணதேவி. அவங்க ஒரு ஆசிரியர். அதனால் அவர் வழங்கிய ஒத்துழைப்பை மறக்க முடியாது.

## செல்ஃபி உலா


இணைபிரியா தோழிகள்
விமலா


நாம் இருவர் வாணி


தனிக்காட்டு ராணி
சினேகா


முப்பெருந்தேவிகள்
சகுந்தலா


ஆயிரத்தில் ஒருத்தி
சுந்தரி

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து




நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்துாரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீங்களா ? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற *whats app* க்கோ அல்லது *senthuram2022@gmail.com*க்கோ அனுப்பி வைக்கலாம்.

Senthooram செந்தூரம்

2022 நவம்பர் 6 ஞாயிற்றுக்கிழமை 9

# பிக்பொஸ்ஸில் கலக்கும் இலங்கை ஜனனி

விஜய் டிவியில் ஒளிபரப்பாகும் மிக பிரபலமான நிகழ்ச்சியில் பிக் பாஸ் ஒன்று. தற்போது நிகழ்ச்சியில் பாஸ் சீசன் 6 நிகழ்ச்சி தொடங்கி சென்று கொண்டு இருக்கிறது. ஜிபி முத்து, அசீம், அசல், ஷெரினா, ராமசாமி, ஏடிகே, ஜனனி, அமுதவாணன், விஜே மஹேஸ்வரி, விஜே கதிரவன், ஆயிஷா, தனலட்சுமி, ரக்சிதா, மணிகண்டன், மெட்டி ஒலி சாந்தி, விக்ரமன், குயின்ஸி மற்றும் நிவாஷினி, சிவின் கணேசன் என 20 பேர் கலந்து கொண்டனர்.

பிக் பாஸ் என்றாலே எப்போதும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் போட்டியாளராக வருவது வழக்கம். சில சீசன்களுக்கு முன்பு செய்தி வாசிப்பாளர் லாஸ்லியா போட்டியாளராக வந்து அதிகம் பிரபல்யம் ஆனார்.

அவர் அதற்கு பிறகு ஹீரோயினாக தற்போது தமிழ் சினிமாவில் இருந்து வருகிறார்.

தற்போதைய பிக் பாஸ் 6வது சீசனில் இலங்கையைச் சேர்ந்த ஜனனி என்பவர் போட்டியாளராக கலந்து கொண்டுள்ளார். அவர் ஐபிசி தமிழ் சேனலில் தொகுப்பாளராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த முறை நிகழ்ச்சி ஒரே நேரத்தில் டிவியிலும், ஓடிடியிலும் ஒளிபரப்பாகி வருகிறது. பிக்பாஸ் நிகழ்ச்சி தற்போது பற்றி எரிய ஆரம்பித்துள்ளது. ஆரம்பத்தில் இருந்தே பிக்பாஸ் வீடு சண்டைக்கு பஞ்சம் இல்லாமல் ரணகளமாக சென்று கொண்டிருக்கிறது.

அதிலும் செருப்பை எடுத்து காட்டுவது முதல் ஆக்ரோஷமாக சண்டையிடுவது வரை போட்டியாளர்கள் படு பயங்கரமாக களத்தில் குதித்தனர்.





# நடிகையை காதலிக்கும் நடிகர்



**நடிகர்** சித்தார்த் நடிகையை காதலிப்பது உண்மைதான் என்பதை உறுதிப்படுத்தி இருப்பதாக சமூக வலைதளத்தில் தகவல் பரவி உள்ளது. ஷங்கர் இயக்கிய பாய்ஸ் படம் மூலம் அறிமுகமாகி முன்னணி கதாநாயகனாக உயர்ந்து சித்தார்த்துடன் ஏற்கனவே சில நடிகைகளை இணைத்து கிசுகிசுக்கள் வெளியாகி அடங்கியது. சமீப காலமாக நடிகை அதிதி ராவ் ஹைதரியுடன் சித்தார்த் காதலில் இருப்பதாக தகவல் பரவியது. இருவரும் விழாக்கள், பொது நிகழ்ச்சிகளில் ஜோடியாகவே பங்கேற்றனர். மும்பை தெருக்களில் நெருக்கமாக கைகோர்த்தபடி சுற்றிய புகைப்படங்களும் வெளியானது. இருவரும் காதலிப்பதாக பலரும் பேசினர். ஆனாலும் இது குறித்து எந்த விளக்கத்தையும் அவர்கள் அளிக்காமல் இருந்தனர். இந்த நிலையில் அதிதிராவ் ஹைதரி பிறந்த நாளையொட்டி அவருக்கு சித்தார்த் வாழ்த்து தெரிவித்து காதலிப்பது உண்மைதான் என்பதை உறுதிப்படுத்தி இருப்பதாக சமூக வலைதளத்தில் தகவல் பரவி உள்ளது. சித்தார்த் வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ''என் இதய ராஜகுமாரிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்'' என்று குறிப்பிட்டு உள்ளார். அதோடு தனது நெஞ்சில் அதிதிராவ் சாய்ந்தபடி இருக்கும் புகைப்படத்தையும் பகிர்ந்துள்ளார். இருவரும் மகா சமுத்திரம் என்ற தெலுங்கு படத்தில் இணைந்து நடித்தனர். அப்போது காதல் மலர்ந்ததாக கூறப்படுகிறது. அதிதிராவ் ஹைதரி தமிழில் செக்கசிவந்த வானம், சைக்கோ, ஹேய் சினாமிகா ஆகிய படங்களில் நடித்து இருக்கிறார்.

# ஜான்வியின் அம்மாவின் ஆசை



'நீ கவுரி ஷிண்டேவின் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்பது என் ஆசை' என்று அம்மா ஸ்ரீதேவி என்னிடம் தெரிவித்திருந்தார் என 'ஜான்வி' கூறினார். 1960களில் குழந்தை நட்சத்திரமாகவும், 1970 முதல் 1990களின் காலகட்டத்தில் கதாநாயகியாகவும், தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளில் கொடிகட்டிப் பறந்தவர், ஸ்ரீதேவி. 1997 வரை கதாநாயகியாக நடித்த அவர், 2012ம் ஆண்டு மீண்டும், கதையின் நாயகியாக நடிக்கத் தொடங்கினார். 2012ம் ஆண்டு வெளியான 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' திரைப் படம், அவருக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு, வீட்டிற்குள்ளேயே முடங்கிக்கிடக்கும் ஒரு பெண், ஒரு கட்டத்தில் தன்னுடைய தனித்தன்மையை மீட்டெடுக்கும் கதாபாத்திரத்தில் ஸ்ரீதேவி நடித்திருந்தார். பல இல்லத்தரசிகளுக்கு, உத்வேகம் அளிக்கும் கதாபாத்திரமாக இது அமைந்திருந்தது. இந்தப் படத்தில் அஜித் குமார் சிறப்பு தோற்றத்தில் நடித்திருந்தார்.

இந்தப் படத்தை இயக்கியவர் கவுரி ஷிண்டே. படம் வெளியாகி 10 ஆண்டுகளைக் கடந்த நிலையில், அந்தப் படம் பற்றி ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர் ஒரு பேட்டியில் கூறியிருக்கிறார்.

அதில் "இங்கிலீஷ் விங்கிலீஷ் படத்தை என்னால் மறக்க முடியாது. அந்தப் படம் நடிக்கும் போது, அம்மா எவ்வளவு மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் இருந்தார் என்பதை அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். பின்னாளில் ஒரு முறை 'நீ கவுரி ஷிண்டேவின் இயக்கத்தில் நடிக்க வேண்டும் என்பது என் ஆசை' என்று அம்மா என்னிடம் தெரிவித்திருந்தார். கவுரி ஷிண்டேவும் 'நாம் இணைந்து ஒரு படத்தில் பணியாற்றுவோம்' என்று உறுதியளித்துள்ளார். அந்த நாளுக்காக காத்திருக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# பூர்ணாவுக்கு துபாயில் பெரிய சொகுசு வீடு



**நடிகை** பூர்ணாவுக்கு அவரது கணவர் திருமண பரிசாக துபாயில் பெரிய சொகுசு வீடு, தங்கவைர நகைகளையும் பரிசாக வழங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழில் பரத் ஜோடியாக முனியாண்டி விலங்கியல் மூன்றாம் ஆண்டு, அருள்நிதியுடன் தகராறு, சசிகுமாரின் கொடி வீரன் மற்றும் கந்த கோட்டை, துரோகி, ஆடுபுலி, காப்பான், சவரக்கத்தி உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள பூர்ணா சில தினங்களுக்கு முன்பு துபாய் தொழில் அதிபர் ஷனித் அசிப் அலியை காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

நடிகர் நடிகைகள் பலரும் வலைத்தளத்தில் அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

தற்போது கணவருடன் துபாயில் குடியேறி இருக்கிறார். இந்த நிலையில் பூர்ணாவுக்கு அவரது கணவர் விலை உயர்ந்த பொருட்களை திருமண பரிசாக வழங்கியதாக தகவல் வெளியாகி உள்ளது.

துபாயில் பெரிய சொகுசு வீடு ஒன்றை பூர்ணாவுக்கு பரிசாக கொடுத்து அசத்தி இருக்கிறார். 1,700 கிராம் தங்கவைர நகைகளையும் பரிசாக வழங்கி இருப்பதாக கூறப்படுகிறது. பூர்ணா வலைத்தளத்தில் கணவர் குறித்து வெளியிட்டுள்ள பதிவில், நாம் இணைந்து பயணிப்போம். அன்பை குறையாமல் கொடுப்போம். ஒருவர் வளர்ச்சிக்கு ஒருவர் துணையாக இருப்போம் என்று கூறியுள்ளார்.

# காந்தாரா ரூ.170 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை

**கன்னட** நடிகர் ரிஷப் ஷெட்டியின் இயக்கத்தில் உருவான திரைப்படம் காந்தாரா. இப்படம் கன்னடத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 30ந்திகதி வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இதனைத் தொடர்ந்து, இப்படம் தமிழ், இந்தி, தெலுங்கு ஆகிய மொழிகளில் வெளியிட படக்குழு பணிகளை மேற்கொண்டது. அதன்படி, தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு கடந்த ஒக்டோபர் 15ந்திகதி காந்தாரா திரைப்படம் வெளியானது. ரூ.17 கோடி செலவில் தயாரான இந்தப் படம் இந்தியா முழுவதும் இதுவரை ரூ.170 கோடிக்கு மேல் வசூலித்து சாதனை நிகழ்த்தி உள்ளது. கே.ஜி.எப் படத்துக்கு பிறகு இந்திய அளவில் அதிகம் பேசப்படும் கன்னட படம் என்ற பெருமையை காந்தாரா பெற்று உள்ளது.

இதனை தொடர்ந்து நடிகர் ரஜினிகாந்த், இயக்குனர் மற்றும் நடிகரான ரிஷப் ஷெட்டியை நேரில் அழைத்து, பாராட்டுகளை தெரிவித்து கொண்டார். உடுப்பி பக்கம் உள்ள மலைவாழ் மக்களின் வாழ்க்கையையும், அவர்களின் தெய்வ நம்பிக்கை மற்றும் வழிபாட்டு முறையையும், நம்பிக்கை துரோகம், வலியையும் வெளிப்படுத்தும் விதமாக மண்வாசனையோடு கலந்து கொடுத்திருந்த இந்த படம், இந்திய சினிமாவில் அனைத்து மொழி ரசிகர்களாலுமே ஏற்று கொள்ளப்பட்டு விட்டது. இந்தப் படத்தின் வெற்றியை கொண்டாடும் வகையில், நடிகர் ரிஷப் ஷெட்டி மும்பையில் உள்ள சித்திவிநாயகர் கோவிலுக்கு சென்று சாமி கும்பிட்டார். வரும் வழியில், ரசிகர்கள் மற்றும் பத்திரிகையாளர்களுடன் ஒன்றாக அவர் புகைப்படங்களையும் எடுத்து கொண்டார். கடந்த 2019ம் ஆண்டு வெளியான பெல்பாட்டம் படம் ரிஷப் ஷெட்டியை கதாநாயகனாக உயர்த்தியது.

இந்த நிலையில், தான் எழுதிய கதையில் நடித்து, இயக்கவும் செய்த காந்தாரா திரைப்படம், தென்னகம் மட்டுமின்றி இந்தி பேசும் மக்கள் இடையேயும் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளது. நடிகர் ரிஷப் ஷெட்டியின் உண்மையான பெயர் பிரசாந்த் ஷெட்டி.

இவர் கடந்த சில வருடங்களுக்கு முன் பிரகதி என்பவரை திருமணம் செய்த நிலையில் இவருக்கு மூன்று வயதில் ஆண் குழந்தையும் இந்த ஆண்டு பிறந்த ஒரு பெண் குழந்தையும் உள்ளது.



# தீவிர அரசியலில் நமீதா

**விரைவில்** தீவிர அரசியலில் ஈடுபடுவேன் என நடிகை நமீதா அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார். நடிகை நமீதா தனது கணவர் வீரேந்திர சவுத்திரியுடன் திருப்பதி கோவிலுக்கு சென்றார்.

அங்கு பயபக்தியுடன் சாமி தரிசனம் செய்தார். பின்னர் ரங்கநாதர் மண்டபத்தில் தேவஸ்தான அதிகாரிகள் நமீதாவுக்கு தீர்த்த பிரசாதங்கள் வழங்கினார்கள்.

தரிசனம் முடிந்து வெளியே வந்த நமீதாவை ரசிகர்கள் சூழ்ந்தனர். அவருடன் செல்பி எடுத்துக்கொண்டனர்.

நமீதா நிருபர்களிடம் கூறும்போது, ''திருப்பதி ஏழுமலையானை தரிசனம் செய்தது மகிழ்ச்சியாக உள்ளது. எனது குழந்தைகள் நலமாக உள்ளனர். கடவுளுக்கு நன்றி சொல்லவே வந்தேன்.

எனக்கு சினிமாவில் நடிப்பதைவிட அரசியலில் ஈடுபடவே அதிக ஆர்வம் இருக்கிறது. விரைவில் தீவிர அரசியலில் ஈடுபடுவேன்" என்றார்.

தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, குஜராத் போன்றவற்றில் எந்த மாநில அரசியலில் ஈடுபடுவீர்கள் என்று கேட்டபோது, அதுகுறித்து விரைவில் அறிவிக்கிறேன் என்றார். நமீதா பா.ஜ.க.வில் உறுப்பினராக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழில் விஜயகாந்த் ஜோடியாக அறிமுகமான நமீதா அதிக படங்களில் நடித்து முன்னணி நடிகையாக உயர்ந்தார். திருமணத்துக்கு பிறகு படங்களில் நடிப்பதை குறைத்தார். சமீபத்தில் அவருக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தன.



# சமந்தாவுக்கு என்ன நடந்தது?

**சமந்தா** பேமிலிமேன் 2 வெப் தொடரில் நடித்த பிறகு இந்திய அளவில் முன்னணி நடிகை என்ற நட்சத்திர அந்தஸ்தை பெற்று இருக்கிறார். சமந்தாவின் யசோதா டிரெய்லரை தமிழில் சூர்யா, தெலுங்கில் விஜய்தேவரகொண்டா, கன்னடத்தில் ரஷ்கித் ஷெட்டி, மலையாளத்தில் துல்கர் சல்மான், இந்தியில் வருண் தவான் ஆகியோர் வெளியிட்டு உள்ளனர்.

நடிகை சமந்தா ரூத் பிரபு தனது ரசிகர்களுக்கு தான் மயோசிடிஸ் எனப்படும் ஆட்டோ இம்யூன் நோயால் பாதிக்கபட்டு உள்ளதாக தெரிவித்து உள்ளார். இன்ஸ்டாகிராமில், சமந்தா தனது மணிக்கட்டில் டிரிப்சுடன் படுக்கையில் அமர்ந்திருப்பது போன்ற ஒரு புகைப்படத்தை வெளியிட்டார்.ஒரு மைக் அவருக்கு முன்னால் உள்ளது. நடிகை முதுகை காட்டியபடி இருந்தார். தன் முகத்தை வெளிப்படுத்தாவிட்டாலும், கைகளால் இதய அசிம்பலை அடையாளபடுத்தினார். கையில் டிரிப்ஸ் ஏற்றிக் கொண்டே யசோதா படத்திற்கு நடிகை சமந்தா டப்பிங் பேசியுள்ளார். இதுதொடர்பான அவரது இன்ஸ்டாகிராம் பதிவு ரசிகர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது.அவர் தனது டுவிட்டில் யசோதா டிரெய்லருக்கான உங்கள் கருத்து அமோகமாக இருந்தது.

உங்கள் அனைவருடனும் நான் பகிர்ந்து கொள்ளும் இந்த அன்பும் தொடர்பும் தான், வாழ்க்கை என் மீது வீசும் முடிவில்லாத சவால்களைச் சமாளிக்க எனக்கு வலிமை அளிக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு எனக்கு இயல்பாகவே நோய் எதிர்ப்பு சக்தி குறையும் (மயோசிடிஸ் எனப்படும் ஆட்டோ இம்யூன்) நோய் இருப்பது கண்டறியப்பட்டது.

அது நிவாரணம் அடைந்த பிறகு இதைப் பகிரலாம் என்று எதிர்பார்த்தேன்.ஆனால் நான் எதிர்பார்த்ததை விட சற்று அதிக நாள் எடுத்துக்கொள்கிறது. நான் இன்னும் போராடிக்கொண்டிருக்கிறேன். நான் விரைவில் பூரண குணமடைவேன் என்று மருத்துவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். எனக்கு நல்ல நாட்களும் கெட்ட நாட்களும் இருந்தன. உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும். என்னால் எப்படியோ அந்த தருணம் கடந்து செல்கிறது. நான் குணமடையும் நாளை நெருங்கிவிட்டேன் என்று நினைக்கிறேன். நான் உங்களை நேசிக்கிறேன்... இதுவும் கடந்து போகும்." என கூறி உள்ளார்.

ரசிகர்கள் சமந்தாவுக்கு ஆறுதல் தெரிவித்தும், பூரண குணம் அடைய வாழ்த்து தெரிவித்தும் வருகின்றனர்.



## கர்ப்பிணிகளுக்கு ஒவ்வொரு மாதமும் இருக்க வேண்டிய கலோரியின் அளவு

கர்ப்பிணிகள் குழந்தைக்கும் சேர்த்துச் சாப்பிட வேண்டும் என்பது காலங்காலமாகச் சொல்லப்படுகிற ஒன்றுதான். இருவருக்குச் சாப்பிட வேண்டும் என்ற நம்பிக்கையில் அளவுக்கதிகமாகச் சாப்பிட வேண்டும் என்று அவசியமில்லை.

கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களில் நீங்கள் 1,800 கலோரிகள் சாப்பிட்டாலே போதுமானது. அதைத் தாண்டி கூடுதலாக நீங்கள் எதையும் சாப்பிடத் தேவையில்லை. அதாவது, நீங்கள் ஏற்கெனவே என்ன சாப்பிட்டுக்கொண்டிருந்தீர்களோ, அதையே இந்த மூன்று மாதங்களில் சாப்பிட்டால் போதுமானது.

சிலருக்கு கர்ப்ப காலத்தில் வாந்தி, தலைச்சுற்றல் அதிகமாக இருக்கும். அதனால் சரியாகச் சாப்பிட மாட்டார்கள். எனவே, அப்படி இருந்தால் தேவையான ஊட்டச்சத்துகள் உடலில் சேர்கின்றனவா என்பதில் மட்டும் கவனமாக இருக்க வேண்டும்.

4 முதல் 6 மாதங்கள் வரையிலான இரண்டாவது ட்ரைமெஸ்ட்டரில் நீங்கள் 2,200 கலோரிகள் வரை சாப்பிட வேண்டும். அதாவது 3 0 0 முதல் 350 கலோரிகள் வரை அதிகமாக நீங்கள் உட்கொள்ள வேண்டியிருக்கும். அதற்காக இன்னொரு வேளை உணவு சாப்பிட வேண்டும் என்றில்லை. ஒரு டம்ளர் பால் குடித்தாலே அதிலிருந்து உங்களுக்கு 150 கலோரிகள் கிடைத்துவிடும். அந்த வகையில் இரண்டு டம்ளர் பால் குடித்தாலே அந்த அதிகப்படியான 300 கலோரிகள் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

7 முதல் 9 மாதங்கள் வரையிலான மூன்றாவது ட்ரைமெஸ்ட்டரில் மொத்தமாகவே 2,400 கலோரிகள்தான் சாப்பிட வேண்டும். அந்த வகையில் கர்ப்பம் தரிப்பதற்கு முன் நீங்கள் சாப்பிட்டதிலிருந்து 400 முதல் 450 கலோரிகள் வரை அதிகம் சாப்பிட வேண்டியிருக்கும். இதற்கும் நீங்கள் இரண்டு டம்ளர் பாலுடன் ஒரு முட்டையோ, பத்து பாதாமோ சாப்பிட்டாலே போதுமானது.

எனவே, கர்ப்ப காலத்தில் இருவருக்கும் சாப்பிட வேண்டும் என அதிகம் சாப்பிடுவது, நொறுக்குத்தீனிகள் சாப்பிடுவது, ஆரோக்கியமற்ற உணவுகளைச் சாப்பிடுவது போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் 10 முதல் 15 கிலோ வரை எடை கூடலாம். ஆனால், அந்த எடையானது கர்ப்பத்தின் போதான பி.எம்.ஐயைப் பொறுத்தது. ஒருவேளை உங்களுடைய முந்தைய கர்ப்பத்தில் மிகக் குறைவாகவே எடை கூடியிருந்தால் அடுத்த கர்ப்பத்தில் நீங்கள் 18 கிலோ வரைகூட எடை கூடலாம்.





## வளைகாப்பு

கர்ப்ப காலத்தில் ஒவ்வொரு பெண்ணுக்கும் வளைகாப்பு செய்து பார்க்க வேண்டும் என்ற ஆசையும், ஏக்கமும் இருக்கும்.

ஏழாவது மாதத்திற்கு பிறகு கணவன், மனைவி உடலுறவில் ஈடுபடுவது அபாயம். இதனால், பிரச்சினைகள் ஏற்படலாம். இதனால் தான் ஏழாவது மாதத்தில் வளைகாப்பு நடத்தி இருவரையும் பிரித்து வைக்கின்றனர். ஏழு மாதத்திற்கு பிறகு தம்பதிகள் உறவில் ஈடுபட்டால் கருவில் வளரும் குழந்தை திரும்பிக் கொள்ளும், மூளை வளர்ச்சியில் குறைபாடு உண்டாகும் என மருத்துவர்கள் கூறுகின்றனர். மேலும், கர்ப்பிணி பெண்களுக்கு மன தைரியம் ஊட்டவும் வளைகாப்பு நடத்தப்படுகிறது. பிள்ளை பெற்று நாங்கள் இவ்வளவு பேர் தைரியமாக, ஆரோக்கியமாக இருக்கிறோம் என்பதை காட்டத்தான் பிள்ளை பெற்ற பெண்களை வளைகாப்பிற்கு அழைக்கின்றனர்.

வளைகாப்பில் வளையல் போடும் நிகழ்வு சிறப்புக்குரியது. ஆம், கர்ப்பிணி பெண்ணின் வளையல் ஓசை, கருவில் வளரும் குழந்தைக்கு தாலாட்டு போன்றது, இது குழந்தைக்கு பாதுகாப்பு உணர்வை அளிக்கும். அம்மா நம் அருகிலேயே இருக்கிறார் என்ற உணர்வை குழந்தைக்கு ஏற்படுத்துவதும் ஒரு காரணம் ஆகும்.

ஏழாவது மாதம் மூன்றாவது மூன்று மாத சுழற்சியின் துவக்கம். இந்த நேரத்தில் கர்ப்பிணி பெண் மற்றும் சிசு இருவருக்கும் ஊட்டச்சத்துக்கள் அவசியம். வளைகாப்பு நிகழ்வின் போது உறவினர்கள் எல்லோரும் ஏழு விதமான அறுசுவை உணவுகள் தந்து கர்ப்பிணி பெண்ணை ஆசீர்வாதம் செய்வார்கள். இதனால் கர்ப்பிணி மற்றும் கருவில் வளரும் சிசுவும் அனைத்து ஊட்டச்சத்துக்களும் பெற்று ஆரோக்கியமாக இருப்பார்கள்.

சுகப்பிரசவம் ஆகவேண்டும் அதற்கு கர்ப்பிணி பெண்ணுக்கு மன நலமும், உடல் நலமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காக தான் வளைகாப்பு என்னும் நிகழ்வே நடத்தப்படுகிறது. அதிலும், முக்கியமாக ஏழாவது மாதத்தில். சுகப்பிரசவம் நடக்க, தாயும், சேயும் நலமுடன் இருக்க வளைகாப்பு நல்ல பயனளிக்கும் வகையில் அமையும் நிகழ்வாக கருதப்படுகிறது.

## பார்ட்டிக்கு செல்லும் போது எப்படி மேக்கப் போட வேண்டும்?


அழகுக்கு அழகு சேர்ப்பது போல, ஒருவரது தோற்றத்தை மெருகூட்டி காட்டுவது 'மேக்கப்'. முக அமைப்பு, சரும நிறம் மட்டுமில்லாமல் காலை, மாலை, வெயில், மழை போன்ற கால நேரங்களையும் மேக்கப் போடும்போது கவனத்தில் கொள்ள வேண்டும். காலை நேரத்தில் இயற்கை வெளிச்சம் அதிகமாக இருக்கும். இந்த சமயத்தில் விருப்பத்துக்கேற்ற மேக்கப் போட்டுக்கொள்ளலாம்.

மாலை நேரங்களில் நடக்கும் விழாக்கள் மற்றும் பார்ட்டிகளில் அதிக வெளிச்சம் தருவதற்காக பெரிய மின்விளக்குகள் பயன்படுத்தப்படும். இவை அதிக வெப்பத்தை வெளியிடுவதால், எளிதாக உருகி வழியாதவாறு மாலை நேர மேக்கப் போட வேண்டும். எந்த வகையான மேக்கப் போடுவதற்கு முன்பும், முகத்தை அதற்கேற்றவாறு தயார் செய்வது முக்கியம். மேக்கப் சிறப்பாக அமைய வேண்டுமெனில், சருமம் புத்துணர்ச்சியோடு ஈரப்பதமாக இருப்பது அவசியம். எனவே முகத்தை நன்றாகக் கழுவி, ஸ்கிரப் செய்து, மாய்ஸ்சுரைசர் பூசிய பின்பு அதன் மேல் மேக்கப் போடுவது நல்லது. இதனால் அழகு சாதனப் பொருட்கள், சருமம் முழுவதும் சீராகப் படர்ந்து சிறந்த பினிஷிங் கிடைக்கும்.

மேக்கப்பின் முதல் படியாக பிரைமர் பயன்படுத்த வேண்டும். இது இரவு விளக்குகளின் வெப்பத்தால் உருகாமல், மேக்கப் வெகு நேரம் நீடித்திருக்க துணைபுரியும். இரவு நேர மேக்கப்பிற்கு பவுண்டேஷனை தவிர்த்து, கரும்புள்ளிகள் மற்றும் தழும்புகள் போன்றவற்றை மறைக்க கன்சீலர், முகத்தின் வடிவை மேம்படுத்திக்காட்ட கான்டூர் மட்டும் பயன்படுத்துவது நல்லது. அதிகமான பொருட்களைப் பயன்படுத்துவது, மேக்கப் உருகுவதற்கு வழிவகுக்கும். நீங்கள் அணியும் உடைக்கு ஏற்றவாறு மேக்கப் செய்வது முக்கியம்.

மினுமினுப்பான உடை அணியும்போது லேசான மேக்கப் போடுவது சிறந்தது. சாதாரண உடை அணிந்தால் பளிச் என்ற மேக்கப் பொருத்தமாக இருக்கும். உதடுகளில் அடர்ந்த நிற லிப்ஸ்டிக் பயன்படுத்தினால், கண்களில் குறைவாக மேக்கப் போடுவது பொருத்தமாக இருக்கும். கண்களுக்கு அதிக மேக்கப் போடும் போது, உதடுகளில் லேசான நிறம் கொண்ட லிப்ஸ்டிக் போடுவது நன்றாக இருக்கும்.

இரவுநேரத்தில் மின் விளக்கு வெளிச்சம் முகத்தில் பட்டு அதிகமாக பிரதிபலிப்பதால், கன்னம், மேல் உதடு மற்றும் புருவ வளைவு போன்ற இடங்களில் சிறிது ஹைலைட்டர் பயன்படுத்துவது அந்தப் பகுதிகளை அழகாகவும், எடுப்பாகவும் காட்டும்.



# புரவலர் இல்லத்தில் முப்பெரும் விழா









இலங்கை எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் புரவலர் புத்தகப் பூங்காவின் ஸ்தாபகத் தலைவரும் டவர் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் பிரிவு ஆலோசகருமான இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர், எழுத்தாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று அவற்றை தனது சொந்த நிதியில் அச்சிட்டு இலவசமாக நூலாசிரியர்களுக்கான பிரதிகளை வெளியிட்டு உதவும் திட்டத்தை முன்னெடுத்து வருகிறார். இந்நிலையில் எழுத்தாளர்களை கௌரவப்படுத்தும் நோக்கில் புரவலர் புத்தகப் பூங்கா இதுவரை அச்சிட்டு வெளியிட்டுள்ள 41 நூல்களில் சிறந்த நூலொன்றுக்கு புரவலர் புத்தகப் பூங்கா விருது வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான விண்ணப்பங்களையும் கோரியிருந்தது.

இதற்கிணங்க படைப்பாளிகளினால் அனுப்பிவைக்கப்பட்ட பிரதிகளுள் சிறந்த பிரதியான சிரேஷ்ட ஊடகவியாலாளர் வீ.தனபாலசிங்கம் எழுதிய “ஊருக்கு நல்லது சொல்வேன்” என்ற நூல் புத்தகப் பூங்காவின் நடுவர் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த நூலுக்கு புத்தகப் பூங்காவின் விருதும் ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசும் சான்றிதமும் வழங்கப்பட்டது.



இது தொடர்பான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30) கொழும்பு 03,ஆனந்தகுமார சுவாமி மாவத்தையிலுள்ள புரவலரின் இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது சிரேஷ்ட ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் எழுதிய “ஊருக்கு நல்லது சொல்வேன்” என்ற நூலுக்கான விருதையும் ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசையும் சான்றிதழையும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட வீரகேசரி நாளிதழ்,வார வெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீகஜன், தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் மற்றும் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

இதேவேளை கடந்த 28 ஆம் திகதி சாகித்தியரத்னா விருது பெற்ற ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் வைத்திய கலாநிதி ஞானசேகரனும் புரவலர் புத்தகப் பூங்காவினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இதன்போது அவருக்கான விருதையும் சான்றிதழையும் வீரகேசரி நாளிதழ்,வாரவெளியீடுகளின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீ கஜன்,தினகரன், வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர் மற்றும் புரவலர் ஹாஷிம் உமர் ஆகியோர் இணைந்து வழங்கினர். இவ்விசேட நிகழ்வில் கௌரவ அதிதிகளாக தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே.ஆர்.பி.ஹரன், தினக்குரல் செய்தி ஆசிரியர் ரி.சிவகணேசன், மேமன் கவி, கவிஞர் தாஸிம், பிரபல பாடகர் கலைக்கமல், சுயாதீன தொலைக்காட்சி நிறுவன தமிழ்ப் பிரிவு செய்தி ஆசிரியர் சித்தீக் ஹனீபா, புதிய அலை கலை வட்டத்தின் தலைவரும் ஊடகவியலாளருமான ராதா மேத்தா உள்ளிட்ட ஊடகவியலாளர்கள்,எழுத்தாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## பாடகி கலாவதி சின்னசாமி விருது வழங்கி கௌரவிப்பு



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அண்மையில் நடத்தப்பட்ட நவராத்திரி விழாவில் இலங்கையின் பின்னணிப் பாடகி கலாவதி சின்னசாமி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கையிலுள்ள பாடகிகளில் மிகவும் பிரபல்யமானவர் கலாவதி சின்னசாமி. இவர் 5 வயது முதல் பாட்டு பாடி வருகிறார்.

இவர் பாடசாலையில் கல்வி கற்று வருகின்ற காலங்களில் நடத்தப்பட்ட கலைவிழா, இசைவிழா, நவராத்திரி விழாக்களிலும் பாடசாலையில் நடைபெற்ற போட்டி நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி பரிசில்களை பெற்று வந்தவர். நாடகம், நடனம் போன்ற கலைத்துறைகளில் நாட்டமுள்ளவர். சிறு வயது முதலே கர்நாடக சங்கீதம் முறையாக கற்று வந்தவர். இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் ஒலிபரப்பான பல்வேறு நிகழ்ச்சிகளில் பாடி வந்தவர். பல மெல்லிசை பாடல்களைப் பாடி வந்த இவர், சிங்களப் பாடல்களையும் பாடி பிரபல்யம் பெற்றார்.

**- ஏ.கே.விஜேபாலன்**

## செந்தூர மழலைகள்



**Anafa**
irakkamam




**Asam**
irakkamam




**G. Shanvikha**
**Age 4**
Gobi Yanand, Vasanthi
21.10.2018

## நிறம் தீட்டுங்கள்



## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## சந்தச் சொற்களை சரியாக இணைத்திடுங்கள்

| | |
|---|---|
| முயல் | தட்டு |
| 1 சாட்டை | கன்று |
| 2 கட்டு | கயல் |
| 3 ஒன்று | மேகம் |
| 4 காகம் | தூசு |
| 5 காசு | வேட்டை |

## வழிகாட்டுங்கள்

பந்தை எடுக்க வழிகாட்டுங்கள்





## சுவைப்போம்

சுவைகளை அறிவோம். சரியான சொல்லின் கீழ்க் கோடிடுவோம்


மாம்பழம் (உறைக்கும், இனிக்கும்)


மிளகாய் (புளிக்கும், உறைக்கும்)


நெல்லிக்காய் (புளிக்கும், கசக்கும்)


பாகற்காய் (கசக்கும், உவர்க்கும்)


உப்பு (உவர்க்கும், புளிக்கும்)


பாக்கு (இனிக்கும், துவர்க்கும்)

## உங்களுக்கு தெரியுமா?

ஆமைக்கு பற்கள் கிடையாது.








# தேசிய ரீதியில் இரு தங்கப்பதக்கங்களை வென்று பெருமை சேர்த்த மாணவன்

## வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்திற்கு கிடைத்த கௌரவம்

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தில் தரம்4ல் கல்வி பயிலும் ஆரம்பக்கல்வி மாணவனான அறபாத் மொஹமட் அதீப் தேசிய கராட்டே சம்மேளனத்தினால் கொழும்பில் நடாத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்று ஊருக்கும். பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தேசிய கராட்டே சம்மேளனத்தின் 12வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சியிலேயே குறித்த மாணவன் இவ்வாறு தங்கப்பதக்கத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி மாணவன் சிறுவயதிலிருந்தே இயல்பான துணிச்சல் மிக்கவராக இருந்ததோடு தலைமைத்துவப் பண்புகள் கொண்டு மிளிர்ந்தவர் என்று கருதப்படுகின்றது.பாடசாலையில் கற்பிக்கும் வகுப்பு ஆசிரியரால் பிறப்பிக்கப்படும் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு நடப்பதோடு ஏனைய மாணவர்களுக்கும் முன்மாதிரியாக திகழ்ந்தவர் என்றும் கற்பித்த ஆசிரியர் அஸ்ரப் அலி குறிப்பிடுகின்றார்.

வு/ழைச்சேனையின் பிரபலமான விளையாட்டுக்கழகங்களில் ஒன்றான இம்ரான்ஸ் விளையாட்டுக்கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான யாஸீர் அறபாத் என்பவரின் இளைய மகனான மொஹமட் அதீப் அவர்களின் சாதனைகளை பாராட்டும் முகமாக பிரதேசத்திலுள்ள பல சமூகமட்ட அமைப்புக்களும் தமது பாராட்டுக்களை அம்மாணவனுக்கு தெரிவித்து வருவதோடு அவரை வரவழைத்து உரிய கௌரவங்களையும் அளித்து வருகின்றனர்.

வாழைச்சேனையின் மற்றொரு பிரபல்யமான விளையாட்டுக்கழகமான நியுஸ்டார் விளையாட்டுக்கழகம் குறித்த மாணவருக்கு நினைவுச்சின்னம் மற்றும் அன்பளிப்புக்களை வழங்கியிருப்பதோடு கற்கும் பாடசாலையாக வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயமும் அவருக்கான கௌரவங்களை அண்மையில் வழங்கியது. பாடசாலையில் கடமையாற்றும் 25 ஆசிரியர்களும்,அபிவிருத்தி உதவியாளர்களும்,அதிபரும் தனித்தனியான பரிசுப்பொருட்களை காலை ஆராதனையில் வழங்கி அவருக்கான கௌரவத்தை வழங்கி உற்சாகமளித்ததை காணக்கூடியதாக இருந்தது.பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள்,நலன் விரும்பிகள் அனைவரும் இவருக்கான பாராட்டுக்களை தற்போது தெரிவித்தும் வருகின்றனர்.இடைநிலைப்பிரிவிலும்,உயர்தரப்பிரிவிலும் செய்து காட்ட வேண்டிய தேசிய ரீதியான சாதனையை ஒரு ஆரம்பக்கல்வி மாணவராக இருந்து செய்து காட்டியமையே இவரது தனித்துவமாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

ஏனைய பாடசாலையின் ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழும் அதீப் அதிக உணவுகளை உண்ணாமல் கஞ்சி, பழம் ஆகிய ஆரோக்கிய உணவுகளையே அதிகம் விரும்புவராகவும் ஓய்வு நேரங்களில் போதுமான விளையாட்டுப்பயிற்சிகளை மேற்கொள்வதுடன் கற்றல் செயற்பாடுகளிலும் கவனத்தை ஈர்த்தும் வருகின்றார்.
















யு.எல்.எம்.ஹரீஸ் ...
(வாழைச்சேனை விசேட நிருபர்)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# அகம் பத்து 10

சங்கத்திணையின் அகக்கூறுகள் உணர்வுபூர்வமானவை. தலைமக்களின் அக எண்ணப்பாட்டின் கவினுறு காட்சி வடிவம் அகநானூறு.

அகநானூற்றின் பத்தாவது பா நெய்தல் பூக்கும் இரங்கல் ஒழுக்கம் சார்ந்தது. அம்மூவனாரின் 'வான் கடற் பரப்பில் தூவற்கு எதிரிய...'' என்று தொடங்கி, 'வளம் கெழு தொட்டி அன்ன இவள் நலனே'' என முடியும் பதின்மூன்று வரிகள் பா நெய்தல் ஒழுக்கத்தைப் பேசுகிறது.

இரவுக் குறியிடத்து தலைவியைக் கண்ணுற்று நீங்குகிறான் தலைமகன். அவனை எதிர்ப்பட்டு தோழி சொல்லுவனதான் கதை.

பெருங்கடற் பரப்பில் எழுகிற அலைத்திவலைகளை ஏற்றுக் கொண்ட விண்மீன்களைப் போல மெல்லிய அரும்புகள் மலர்ந்த புன்னை மரத்தின் கருமையான கிளையிலே பறவைகள் தங்கியிருக்கும் கடற்கரைத் தலைவனே! கருப்பொருட் புலப்பட வளங்கொண்ட நெய்தல் தலைவனவனே எனப் பேசத்தொடங்குகிறாள் தோழி. நெய்தலின் கருப்பொருள் புலப்பட வளம் கொண்ட நெய்தல் தலைவன்.

தலைவா, நீ நெய்தல் பூப்போன்ற தலைவியின் கண்கள் வருந்தியழ இவளைப் பிரிய எண்ணுவாயானால், ஒரு நல்ல காரியத்தைச் செய்தாக வேண்டும் என்கிறாள். சங்கத்தோழியின் மனம் தலைமக்களை இணைத்து வைப்பதில் நாட்டமுடையது. தலைவியின் அகத் துன்பத்தையும் பிரிவின் கனதியையும் அருகிருந்து உணர்பவள் தோழி.

இங்கும் அப்படித்தான். களவொழுக்கத்தில் கிளம்புகிற தலைவன், இரவுக் குறியிலே இன்புற்று விலக முனைகிறான். தலைவியின் பிரிவாற்றலால் கவலையடைந்த தோழி வற்புறுத்துவதாக அம்மூவனார் பாடல் அமைகிறது. மதிநுட்பத் தோழியின் கூற்றாகப் பாடல் விரிகிறது.

தலைவியோவெனில், கீழ் காற்றால் விளக்கம் பொருந்திய கடலின் அலைகள் உடைக்கின்ற மணல் மேட்டில் கிடக்கும் பழைய படகின் சிதைவைப் போக்கி புதுக்கியெடுத்து, புது வலையுடைய பரதவர் மணல் நிறைந்த அலை கடலில் வந்து நிறையும் சுறாமீனின் அதி தொகையை பலருக்கும் பகிர்ந்தளித்து, மகிழும் வளம் பொருந்திய தொட்டியென்னும் ஊர்போன்றது இவள் நலனென தலைவியின் குணநலன் பேசுகிறாள் தோழி.

அத்தகைய இவளின் நலனும் அழகும் இவனுக்கேயுரியது. ஆகவே தலைவியை விரைந்து மணங்கொண்டு உன் ஊருக்கே அழைத்தேகு என்கிறாள் தோழி. இவளைப் பிரிவாயாயின் இவள் இறந்துபடுவாள் என்பதால் இரவுக்குறியில் களியுண்டு ஒரு வழித்தணத்தலைத் தவிர்த்து வரைந்து மகிழ்கவெனத் தோழி கூறுவனவற்றினூடாக நெய்தலின் அகப்புலம் வெளிப்படுகிறது.

அதுமட்டுமல்ல தலைவி நலன் சொல்லும் விதத்தில் அவளது பெருமனம் வெளிப்படுகிறது. பழைய படகைப் புதுக்கி மீன்வளம் காணும் பரதவர் மீன்களை மற்றோருக்கு அள்ளி வழங்குவது போல, இவளும் இலகுவாய் வாய்த்திருக்கிறாள் என தலைவி நலத்தை தொண்டியூரோடு பண்பாட்டோடு ஒப்பிடுகிறாள். இத்தகையவளின் அழகு அவளுக்கே வாய்க்க வேண்டுமெனில் நீ அவளை மணந்தாக வேண்டுமென நிறுவுகிறாள் தோழி.

அம்மூவனாரின் கற்பனை, தோழி வழி வெளிப்படுகிறது. புன்னையின் அரும்பு விண்மீன்கள், தலைவியின் கண்கள் நெய்தல் பூ, அவள் நலன் தொண்டி நகரென உவமை மிளிர்கிற அகப்பா.

இப்பாடலில் உள்ளுறை உவமம் கொள்கிறது. பரதவர் கடல் மேல் செல்லாது இலகுவில் வந்து குவியும் மீன் நாட்டத்தை மற்றோரு ஊரைக் கூவியழைத்து அள்ளி வழங்கி இன்புறுவர். இதுபோன்று நீயும் ஒழுக்கமாகிய நல்வழி ஒழுகாது களவொழுக்கத்தில் மிதந்து பலரும் பழி கூறச் செய்தீர் என்கிற உட்பொருள் தோழியின் மதிநுட்பச் சாறு.'இவள் நலமும் எழிலும் இவளுக்கே உரியவாறு நின் ஊருக்கே வரைந்து செல்க'' என்பது இரங்கலும் இரங்கல் நிமித்தமுமான உரி.

## மறுவாசல்

முல்லை முஸ்ரிபா



## பரதவன்/ பரதவி

இரவின் தாழம்பூ விரிகிற ஓசை
ஒரு வழியில் இரு சுவடுகளின் நெய்தல்
இன்னுஞ் சூடாறா மணல் கொதிப்பு
மீளவும் மீளுமுணர்வு கொண்டனன்
பரதவன்

இரவின் குறிகள் ஓயா அலையென்பாய்
அலையென பரதவி மனந் துடிப்பாள்
உணர்வு பேரலையென
இனி உயிர் தரியாள்


இரங்கித்தொலையும் காலமெனக் கண்டாய் நீ
எனின் ஏகு
கொண்டேகு

காதல்
இரங்கல்
கனவு
நீளத்துளிர்க்கும் தாழையின் சங்கீதம்
கேள்

அருளின் நிறமென்ன இருளா

## ஔவன் கவிதை

## தாகிப்பு/தகிப்பு



பிரிவின் நிலத்தாகிப்பை
எந்த மொழி கொண்டு நிரப்பிடுவேன்
முப்பத்து ரெண்டு சொட்டுத் துளிக்குள்
கசிகிறது இதயத்தின் தகிப்பு

எவருமற்றவெளி
எதுவுமற்ற மௌனம்
எங்குமற்ற சொல்

எவரும் பேசாத
சொல்லையெடுத்து விதைக்கிறேன்
அதனர்த்தம் விருட்ஷிக்கையில்
நீழல் குளிருமொரு பெருங் காலமென
வேர் நீண்டதொரு காத்திருப்பு

எத்தனையாம் துளியில்
துளிர்ப்பது
மீள நீழல்

## சாகித்ய ரத்னா - 2022

இலங்கை இலக்கிய கௌரவங்களின் உச்சமானதாக சாகித்யரத்னா வாழ்நாள் இலக்கியப் பங்களிப்புக்கான விருது அமைகிறது.

வாழ்வின் பெரும்பகுதியில் இலக்கியத்துறைக்காக இயங்கிய ஆளுமைகளுக்கான கௌரவமாக சாகித்ய ரத்னா அரச இலக்கிய விருதில் சிங்களம், தமிழ், ஆங்கில இலக்கியப் புலத்தில் இயங்கியவர்களின் தேர்ந்தெடுப்பில் இவ்வாண்டு, பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு, தி.ஞானசேகரம், பேராசிரியர் கமனி ஜயசேகர ஆகியோர் உள்வாங்கப்பட்டனர்.

சிங்கள மொழியூடாக ஈழத்து இலக்கியத்துக்கு வலுச்சேர்க்கும் குறிப்பிடும் படியானவர் பேராசிரியர் சந்திரசிறி பள்ளியகுரு. கொழும்பு மருதானையில் பிறந்து மாத்தறை பள்ளி முல்லையில் வளர்ந்து கல்வித்துறையில் முனைவரானவர். கல்வி, இலக்கியம், சினிமா, நாடகம் எனத் தன் ஆளுமைப்பரப்பை விரித்தார் பேராசிரியர் சந்திரசிறி.

தமிழிலக்கியத்துக்கு பங்களித்த மூத்த படைப்பாளி தி.ஞானசேகரன். யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவனில் பிறந்து, இலங்கை மருத்துவக் கல்லூரியில் கற்று, மருத்துவராக மலையகத்தில் பணி தொடங்கியவர் தி.ஞானசேகரன். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவர், இருபத்து மூன்று நூல்களை எழுத்துலகுக்கு வழங்கியுள்ளார்.

புதிய சுவடுகள், குருதிமலை, கவ்வாத்து, ஆகிய நாவல்கள் விருது பல பெற்றவை. கால தரிசனம், அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும், தி.ஞானசேகரன் கதைகள் என்பன இவரது சிறுகதை நூல்கள்.







ஞானம் பதிப்பகமும், ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையும் இவரது தொடர் இலக்கிய இயக்கத்துக்குச் சான்றுகளாகும்.

ஆங்கில இலக்கியப் புலத்துக்கு பங்களித்தவர்களில் முக்கியமானவர் பேராசிரியர் கமனி ஜெயசேகர. கொழும்பில் பிறந்து, மியூஸியஸ் கல்லூரியில் பயின்று, களனிப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியைத் தொடர்ந்து பேராசிரியராக மிளிர்ந்தவர் கமனி.

கவிதை, சிறுகதை, ஆய்வு என காத்திரமாக இயக்கியவர்.

அகிம்சா, A dog's life, My love guru ஆகிய நாவல்கள் விருதுகள் வென்றன. மேற்கத்திய பாரம்பரிய கலாசார பேராசிரியராகப் பணி செய்தவர் கமனி ஜயசேகர.

இவர்கள் மூவரும் இவ்வாண்டுக்கான சாகித்யரத்னா உயர் கௌரவம் பெற்றனர். மறுசொல்லின் வாழ்த்துக்கள்

## கதை அலை கூறுவோம்

மாலி அல்மெய்டாவின் ஏழு சந்திரன்கள் (Tha Seven Moons of Almaida) நாவலுக்கு புக்கர் விருது கிடைத்திருக்கிறது. இலங்கையைச் சேர்ந்த புனைவெழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்க இந்த வெற்றிப் புள்ளியில் பாராட்டப்படுகிறார்.

இலங்கைப் புனைவெழுத்து முறையில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கான புதிய உந்தலை இதன்வழி ஷெஹான் முன்மொழிகிறார். அதீத கற்பனை கலந்த மிகு புனைவு வடிவத்தில் அமையப்பெற்ற இப்புனைவு மர்மம், அரசியல், மரணத்தின் பின்னரான வாழ்வு என்கிற முக்கோணத்தன்மையான களத்திலிருந்து புதிய நவீனம் கடந்த எடுத்துரைப்பை முன்னெடுக்கின்றது.



எண்பதுகளின் இலங்கைப் போர்வடுக்கதை, கதைகூறலின் மீபுனைவினூடாக சர்வதேச தளத்தில் மேலேறி நிற்கிறது. ஷெஹானின் புனைவெழுத்து ஈழ எழுத்து முறைக்கான புதிய அங்கீகாரத்தைப் கோரியபடி அல்லது இது வரையிலும் வந்த எடுத்துரைப்பு முறைமையை தகர்த்தபடிக்கு இந்நூற்றாண்டின் புதிய வாசிப்பைக் கோருகிறது. தனது நாவலை யதார்த்தவாத நாவலாகவோ அரசியல் நையாண்டியாகவோ வகைப்படுத்த விரும்பாத ஷொஹான், மிகு புனைவொன்றின் புதிய கலாசாரத்தை இலங்கை எழுத்தில் தொடங்கி வைக்க முனைகிறார்.

ஆங்கில வழி முன்னெடுத்த இப்புனைவு தமிழ், சிங்கள மொழிகளில் வருவதனூடாக வாசிப்பு பரப்பை அகலிக்கும் என்பதனால் மொழிபெயர்ப்பைக் கோரி நிற்கிறது.

பெருங்கனவு, வேடிக்கை கலந்த துணிச்சல், புத்தாக்கப் புதுமை, எள்ளலூடான எளிமை, சொல்முறையின் அதீதம் என எடுத்துரை நுட்பங்கள1Oடாக புக்கர் விருது வென்ற ஷெஹான் கருணாதிலக்க உலகம் முழுவதும் பேசப்படுகிறார். ஷெஹானின் புனைவு மரணத்தைத் தழுவிய ஊடகவியலாளரை மையப் பாத்திரமாகக் கொண்டு ஈழப்போரின் பக்கங்களை வெள;வேறு வடிவத்தில் புரட்டிப் பார்க்கிறது. இப் புனைவின் மூலம் கிடைத்த புக்கர் விருதைப் பெறும்போது ஷெஹான் தமிழிலும் பேசினார். 'கதையலை கூறுவோம்ளூ கூறிக்கொண்டே இருப்போம்'.

ஷெஹான் கருணாதிலக்க எழுத்துக்களுக்கு மறுசொல்லின் வாழ்த்துக்கள்.

## முற்போக்கு சிந்தனைகளால் தமிழினத்தை மீட்டெடுத்த பேரறிஞர் அண்ணா

# மதராச பட்டினத்திற்கு "தமிழ்நாடு" என பெயரிட்டவர் அறிஞர் அண்ணா

தியாகத்தின் அடையாளமாக அறியப்பட்ட கறுப்பு நிறத்தை மேல்பக்கமும் மறுமலர்ச்சியின் அடையாளமாக சுடர்விடும் சிவப்புநிறம் அடிப்பக்கத்திலும் கறுப்புசிவப்பு கொடியும் திராவிட முன்னேற்ற கழகத்தின் கொடியாக உருவெடுத்தது.

அறிஞர் அண்ணா தனி இயக்கம் தொடங்கியும் பெரியாரின் மீதான குரு பக்தி சிறிதும் குறையவில்லை,

திராவிடர் முன்னேற்ற கழகத்திற்கு தின் போட்டி கழகம் அல்ல. பெரியார் வகுத்த பாதையிலிலேயே நாங்கள் பொது தொண்டுகளை செய்வோம்" என்று அண்ணா உரைத்தார். மேலும் அண்ணா, "பெரியாரை பற்றி கண்ணியக் குறைவாக எவரும் பேசக்கூடாது. நமக்கு தலைவர் பெரியார்தான். அவர் எப்போதாவது திரும்பி வந்தால் தலைவர் பதவியில் அமர வேண்டும். அதுவரை தலைவர் பதவி வெற்றிடமாகவே இருக்கும்" என்று கூறினார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய மூன்று வார்த்தைகளை முன்மொழிந்தார்.

அண்ணா இந்து குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் அவரின் கோட்பாடு சமயம் சாராதவராகவே செயல்பட்டார். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டையும் வெளிப்படுத்தினார். "கடவுள் ஒன்று, மனித நேயமும் ஒன்றுதான்" என்பது தி.மு.க.வின் கொள்கையாகவும் வெளிப்படுத்தினார்.

அண்ணா மூட நம்பிக்கை மற்றும் சமய சுரண்டல்களையும் பலமாக சாடினார். ஆனால்

நடித்தும் உள்ளார். திரைப்படங்களை முக்கிய பிரச்சார ஊடகங்களாக அரசியலுக்காக பயன்படுத்தியவர் அறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணாவின் முதல் திரைப்படம் " நல்லதம்பி" (1948) நல்லதம்பி திரைப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் கலைவாணர் என்.எஸ் கிருஷ்ணன் நடித்துள்



எடுக்கப்பட்டன. இத்திரைப்படங்கள் திராவிட அரசியலின் பிரச்சாரமாக திகழ்ந்தன.

அண்ணாவின் திரைப்படங்கள் பெரும்பாலும் பிராமண எதிர்ப்பு மற்றும் காங்கிரஸ் எதிர்ப்பு பிரச்சாரங்களாக விளங்கின. இப் பிரச்சாரங்களை மக்களுக்கு எடுத்து செல்வதற்கு கலைஞர்கள் அண்ணாவிற்கு பக்க பலமாக விளங்கினர். இதில் முக்கிய கலைஞர்களாக எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், என்.எஸ்.கிருஷ்ணன், எஸ்.எஸ்.ஆர், டி .வி. நாராயணசாமி, கே.ஆர் ராமசாமி ஆகியோர். அண்ணாவின் கைவண்ணத்தில் உருவான திரைப்படங்களாக நல்ல தம்பி, வேலைக்காரி, ஓர் இரவு, சொர்க்கவாசல், நல்லவன் வாழ்வான், காதல் ஜோதி, எதையும் தாங்கும் இதயம், ரங்கோன் ராதா, தாய் மகளுக்கு கட்டிய தாலி, வண்டிக்காரன் மகன் போன்றவற்றை குறிப்பிடலாம்.

முக்கிய தலைவர்களாக மு.கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், ஈ.வெ.பி.சம்பத், என்.வி.நடராசன், ஏ.வி.பி ஆசைத்தம்பி, கே.கே.நீலமேகம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் பதவியை அறிஞர் அண்ணா ஏற்றுக்கொண்டார்.

அண்ணா ஸ்தாபித்த "திராவிட முன்னேற்ற கழகம்" ( தி.மு.க) பற்றி பேசுகையில் "தி.மு.க. திராவிடர் கழகத்

பெரியார் அண்ணாவை மேடைகளில் தாக்கி பேசிய போதிலும் அண்ணா அதற்காக வருத்தப்பட்டதில்லை. அண்ணாவின் ஆதரவாளர்கள் வேதனைப்பட்டார்கள். அதற்கு அண்ணா, "எதிர்காலத்தில் பெரியார் எங்களை பாராட்டுவார்" என்று குடந்தையில் நடந்த ஒரு கூட்டத்தில் கூறினார். அறிஞர் அண்ணா தி.மு.க. வின் முக்கிய கொள்கை முழக்கமாக

என்றுமே அவற்றின் சமூக தத்துவார்த்தங்களில் தலையிட்டதோ எதிர்த்ததோ இல்லை.

அண்ணா புதினங்களும், சிறுகதைகளும், நாடகங்களும், திரைக்கதைகளும் எழுதியுள்ளார். அண்ணா தனது கட்சிக்காக அரசியல் நாடகங்கள் எழுதி தானும் கதாபாத்திரத்தில்

ளார். நல்லதம்பி திரைப்படமானது ஜமீன்தார் ஒழிப்பு முறையை வலியுறுத்தி எடுக்கப்பட்ட திரைப்படமாகும். அண்ணாவின் மிகச் சிறந்த நாவல்களான "வேலைக்காரி" மற்றும் "ஓர் இரவு" போன்றவை திரைப்படமாக

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

1918 இல் கீசகவதம், 1931 இல் காளிதாஸ் என ஆரம்பித்த தமிழ் சினிமா, 1949வரை புராண, இதிகாச, ராஜா ராணி, மந்திர தந்திர, 50,40.30 பாடல்கள் கொண்ட படங்களாக வெளிவந்த காலங்களில், வி. சி. கணேசன் என்ற இளைஞனின் ஆக்ரோஷ வசன, நடிப்பில் 1952 இல் சமூக சீர்திருத்த கொள்கையையும், பகுத்தறிவு சிந்தனைகளையும், பொதுவுடைமை தத்துவங்களையும் சீர் தூக்கி காண்பித்த அதிரடி திரைப்படமான, இமாலய வெற்றி கண்ட "பராசக்தி" தமிழ்த்திரைக்கு புதிய சக்தி வழங்கி இவ்வாண்டுடன் 69 ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இப்படத்தில் தான் நடிப்புலக நாயகன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் "குணசேகரன் "என்ற பாத்திரத்தில் அறிமுகமாகி ஒரே இரவில் அகிலமே வியக்கும் வண்ணம் தமிழ் சினிமா வானில் இருந்த நட்சத்திர கூட்டங்களின் "கலைச் சூரியனா"க ஒளிர்ந்தார். இப்படம் திரைக்கு வந்த போது தென்னகத்தின் எல்லா இடங்களிலும், தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் பராசக்தியைப் பற்றியும், சிவாஜி கணேசனைப் பற்றியும் பட்டி தொட்டி எல்லாம் வெகுவாக பேசப்பட்டது. இதற்கு முன் முதன் முதலாக 1943இல் வெளியான "பவளக் கொடி" படத்தில் அறிமுகமாகி, ஒரே படத்தின் மூலம் உச்சப் புகழை அடைந்தவர் எம்.கே.தியாகராஜா பாகவதர் ஒருவரே. அதற்கு பின் 1952 இல்

கலைத்துறையில் நல்ல எதிர்காலம் இருப்பதை தீர்க்கதரிசனமாய் உணர்ந்தார். இதன் பயனாக "பராசக்தி "நாடகத்தை திரைப்படமாக எடுக்கும் நோக்குடன் ஏவியெம் பட நிறுவன அதிபர் திரு.மெய்யப்பச் செட்டியார் அவர்களை சந்தித்து, தனது எண்ணத்தை கூறவே இருவரும் இணைந்து "பராசக்தி"யை திரைப்படமாக எடுக்கும் பணியில் இறங்கினர். இப்படத்தில் "குணசேகரன்" என்ற கதாநாயகன் பாத்திரத்தில் நடிக்கும் வி.சி.கணேசன் என்ற இளைஞனின் தோற்றம் முகவெட்டு போன்றன ஏவியெம் மெய்யப்பனுக்கு ஆரம்பத்திலேயே திருப்தியில்லாமல் இருந்தது. படம் சில ஆயிரம் அடிகள் வரை எடுத்த பின்னர், ஏவியெம் மெய்யப்பச்செட்டியார், நெஷனல் பிக்ஸர்ஸ் அதிபர் பி.ஏ.பெருமாள், படத்தின் இயக்குனர்களான கிருஷ்ணன்_பஞ்

வித்தார். கணேசன் இல்லாமல் "பராசக்தி "இல்லை என அவரும் தெளிவாக தன் முடிவை ஏவியெம்மிடம் கூறவே,

நல்ல சத்தான ஆகாரங்களை கணேசனுக்கு கொடுத்து ஏவியெம் ஸ்டுடியோவில் தங்குவதற்கு ஓர் அறையையும் வழங்கி, மூன்று மாதங்களில் நல்ல சதைப்பிடிப்புடன் வி . சி . க ணே சன் புஷ்டியான பின் மீண்டும் கணேசன் நடித்த காட்சிகளை படமாக்கினார்கள். படம் வெளியாகும் வரை நித்திரையை இழந்த கணேசனுக்கு 1952.10.17 தீபாவளி அன்று "பராசக்தி" ரிலீஸ் ஆன பின் தான் மனம் அமைதிக்கு

திரைக்கதை வசனம் புத்தகமாக பிரசுரமாகி அமோக விற்பனை கண்டது. இசைத் தட்டுகளில் இதன் வசனங்கள் பதிவு செய்யப்பட்டு விற்பனையில் பெரும் சாதனை படைத்தது. திருமணம் போன்ற சுப நிகழ்வுகளில்,கோவில் திருவிழாக்களில் "பராசக்தி"படவசனம் இசைத்தட்டுகளில் ஒலித்தது. புதிதாக சினிமாவில் நடிக்க வரும் கலைஞர்கள் "பராசக்தி"வசனத்தை இயக்குனர்களி



# "பராசக்தி"க்கு வயது 70...!



"பராசக்தி"படத்தின் வாயிலாக உலகளவில் ஒரே நாளில் ஒரே படத்தின் மூலம் புகழின் உச்சம் தொட்டவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மட்டுமே....!

1950 களில் பாவலர் பாலசுந்தரம் எழுதிய "பராசக்தி" மேடை நாடகமாக தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வெற்றிகரமாக பல நூறு மேடைகளில் அரங்கேறியது.

அப்போது இந்நாடகத்தை பல தடவைகள் பார்த்த திரைப்பட விநியோகஸ்தரான பி.ஏ.பெருமாள், குணசேகரனாக நடித்த கணேசனின் நடிப்பை உற்றுக் கவனித்தார். இக்கலைஞனுக்கு

சு,கலைஞர் கருணாநிதி,இசையமைப்பாளர்ஆர்.சுதர்சனம் ஆகியோர் படத்தினை கண்ணுற்ற போது ஏவியெம் செட்டியாருக்கு அப்போதும் புதுக் கதாநாயகனான

வி.சி. கணேசனின் ஒல்லியான தோற்றத்திலும், முக அமைப்பிலும் திருப்தி காணமுடியவில்லை. எனவே பி.ஏ.பெருமாளிடம், எதற்கு விஷப்பரீட்சை பேசாமல், அப்போது தமிழ் சினிமாவில் பிரபல்யமாக இருந்த நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமியை இப்பாத்திரத்திற்கு தேர்வு செய்து மீண்டும் படப்பிடிப்பை அரம்பிக்கலாம் என திட்டவட்டமாக கூறவே,பி.ஏ.பெருமாள் அதற்கு உடனே மறுப்பு தெரி

திரும்பியது. படம் வெளியாகி இமாலய வெற்றி கண்டபின் கணேசனின் புகழ் வானளவுக்கு உயர்ந்து இந்திய சினிமா வரலாற்றில் உச்ச நாயகன் என சிகரம் தொட்டார்.

"பராசக்தி"திரையிடப்பட்ட அனைத்து திரையரங்குகளிலும் 200, 250, 100, 150 நாட்களைக் கடந்து தென்னகத்தை வசீகரித்தது. பின்னாளில், எந்த கணேசனை ஏவியெம் மெய்யப்பச் செட்டியார் நிராகரித்தாரோ.. ..! அதே சிவாஜி கணேசனை வைத்து பல வெற்றிப் படங்களை தயாரித்தார் ஏவியெம் மெய்யப்பச் செட்டியார் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படத்தின்

டம் பேசிக்காட்டி வாய்ப்பு கேட்கும் அளவுக்கு தமிழ் சினிமாவின் அகராதியாக "பராசக்தி"யின் வசனங்கள் திகழ்ந்தது.

கலைஞர் கருணாநிதியின் வரிகளுக்கு தனது தூய தமிழால், உச்சரிப்பால், சிம்மக் குரலால் உயிர் கொடுத்து நடிப்பில் ஓர் புதிய பரிமானத்தை திரையில் தொட்டுக்காட்டினார் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# தூத்துக்குடியில் இலங்கைத் தமிழரின் பாரம்பரிய உணவகம்








திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது

தூத்துக்குடியில் ‘ஓலைப் புட்டு’ என்ற பெயரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் பாரம்பரிய உணவகத்தை தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும் தி.மு.க துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி திறந்த வைத்தார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 நவம்பர் மாதம் 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.